அறத்
அக

உண்மைமே

மூல
கழகத் தமி

வெளியீடு — இ

தொகு
விநாயகர் த
புலோலி மேற்கு —

சிக்கனம், சமத்து

எப்பொருள் யார்யார் வாய்க்
மெய்ப்பொருள் காண்பது அறி

ை

ந்தமிழ்
ராதி

ிய கடவுள்

கம்;

ழ் அகராதி

லக்கம் 27, உஎ.

★

ருப்பு ;

ரும நிதியம்

— பருத்தித்துறை.

ுவம், உடலுழைப்பு

கேட்பினும் — அப்பொருள்

ு.

— குறள்.

ஸ

உண்மை

அறத் தமி

(பொது நிறுவனங்களு

பிரதியின் முடிவு விலை

தனியாருக்கான தரும நி

தனியாருக்கான பிரதிய

பொது நிறுவனங்கள் அ
அகராதியை கீழ்க்காணும்
பெற்றுக்கொள்ளலாம்.

கலைச்சோலை,
வல்வெட்டித்துறை.

அன்னை மருந்தக
மருந்துச்சாலை,
பருத்தித்துறை.

அஷ்டலட்சுமி கலண்டர்
நிறுவனம்,
கண்டி றோட், கைதடி

அபிராமி மருந்தகம்,
நீர்வேலி.

பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

அறம் வளர்ந்து பெ
இறையருளை

விநாயகர் தரும நிதியம்,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை,
1-1-1993.

யே கடவுள்

ழ் அகராதி

க்கான இலவச வெளியீடு)

	ரூ	106/-
தியக் கழிவு	ரூ.	31/-
ின் விலை	ரூ.	75/-

ுத்தாட்சியை சமர்ப்பித்து இவ் இடங்களிலும் இலவசமாகப்

பாசையூர் மக்கள் முன்னேற்றச் சங்கம், யாழ்ப்பாணம்.

சின்னையா ஸ்ரோர்ஸ், கொடிகாமம்.

எஸ். கே. சாமி அன் கோ, நெல்லியடி.

சிவன் மருந்தகம், சாவகச்சேரி.

முத்தமிழ் மன்ற நூலகம், சுன்னாகம்.

சூரியா மருந்தகம், புத்தூர்.

ரி. வி. பாலா, இணுவில்.

ாதுச் சேவை பெருக வேண்டுகிறோம்.

நிறுவனர்.

உ

அறத் தமிழ்

தமிழுக்கும் அமுதென்று
தமிழ் எங்கள் உயிருக்

மூலம் : கழகத் தமிழ் அகராதி

முதற் பதிப்பு : தை 1993

வெளியீடு: 27, உஎ.

விநாயகர் தரும நிதியம்
புலோலி மேற்கு - பருத்தித்துறை

அச்சுப்

அ
மு

அகராதி

வ பேர் — அந்த
கு நேர்.

— *பாரதிதாசன்*

.

பதிப்பு :
ஸ்ரீ வாணி அச்சகம்,
உடுப்பிட்டி.

ச்சிட்ட பிரதிகள் — 1200
டிவு விலை — 106 /-



ச

இம் மாநிலம் உருவ
வாகத் தங்கள் சக்தியை எ
ருக்கும் ஐந்து பூதங்களா
ஆகாயம் இவற்றிற்கும், எ
தாய், குரு முதலானோரு
அளித்துக்கொண்டிருக்கும்
குலம் வரையான சகல ே
கத்தைச் செலுத்தி இவர்க
நூலைச் சமர்ப்பணம் செய்
அடைகின்றோம்.

விநாயகர் தரும நிதியம்

தமிழ்ச் சங்கம் தால
செந்தம
அமிழ்தான தேனொ
பெருமை
சீரோடும் சிறப்போடு
நிலைநி
பாரோடும் பாதையி
தொட

உ

சிவமயம்

...மர்ப்பணம்

...வாகி அதில் உயிரினங்கள் உரு
...ந்நேரமும் உதவிக் கொண்டி
...ன காற்று, தீ, நீர், நிலம்,
...ம்மை உருவாக்கிய தந்தை,
...க்கும், நாம் வாழ உணவு
... தாவர வர்க்கம் முதல் மனித
...ீவராசிகட்கும் எமது வணக்
...கள் பாதார கமலங்கட்கு இந்
...வதில் பூரண ஆத்ம திருப்தி

நிறுவனர்

...ாட்டி வளர்த்த
...ிழை
...த்த ஞானத் தமிழதனின்
...மதனை
...ம் சிந்தையிலே
...றுத்திப்
...லே எங்கள் பணி
...நகின்றோம்.

ஸ்-

பதிப்

தொன்மை மிக்க ஞானத்தமி
அணை கட்ட தன் வாலால் மண்
எம் மன நிலையில் தோன்றிய
கொடுக்கும் வகையிலே தமிழ் மொ
இவ் அறத் தமிழ் அகராதியைத் தொ
தோன்றியுள்ளன. பலகலை இ
இவை அனைத்தும் கால நீரோட்
அல்ல குறிப்பிடத்தக்க சில மொ
மைக்குரியன. அவ்வகையான பெரு
மொழியும் ஒன்றென்று கூறினால்
மற்றைய மொழிகள் தோன்றியகா
வரையறுக்கும்போது — எப
காலத்தை எவராலும் அறுதியிட
தொன்மை மிக்க மொழியாக வா
ஐம்பெரும் காப்பியங்களையும் வே
கியங்களையும் இணைந்து, பொலி
நாட்டவரையும் தன்மீது ஆர்வத்தே
கனதிமிக்க பெருமைகளை விருட்
உயர்ந்து நிற்கின்றது.

தமிழ் மொழியில் எண்ணற்ற
யிருந்தன. இவற்றிலே பல அழிந்
கூறுகின்றனர். ஆயினும் நாட்டுமக்க
இலக்கண இலக்கிய நூல் போதிய
றோம். தமிழராகிய நாம் மொழி
மேற்கொண்டு வையத்துள் வாழ்வ
ருப்பதே கடமையாகும்.

பண்டைக்கால நூல்கள் பலவும்
அமைக்கப்பெற்று உள்ளது. இவற்
அறிந்து கொள்வது என்பது சிரம

புரை

ழ் மொழிக்கு இராமபிரானுக்கு
குவித்த அணில்பிள்ளை போல
எண்ணக் கருவிற்கு வடிவம்
ழிக்கு ஆற்றும் நன்றிக்கடனாக
குத்துள்ளோம். பல மொழிகள்
லக்கியங்கள் தோன்றுகின்றன.
ட்டத்தில் நின்று நிலைப்பவை
ழிகளே இவ்வகையான பெரு
மைக்குரிய மொழிகளில் தமிழ்
மறுப்பதற்கு எவரும் இலர்.
லத்தை மொழி ஆய்வாளர்கள்
து ஞானத் தமிழ் தோன்றிய
ட்டுக் கூறமுடியாத அளவிற்கு
ழ்ந்து வளர்ந்து தன்னகத்தே
தாந்த சித்தாந்த கலை இலக்
வோடும் இளமையோடும் பல
தாடு ஆராயும் அளவிற்கு பல
சங்களாய் நிழல்பரப்பி ஓங்கி

நூல்கள் ஏட்டுச் சுவடிகளா
துவிட்டதாக ஆய்வாளர்கள்
ள் வாழ்விற்கு வழிகாட்டும்
ளவு இருப்பதைக் காணுகின்
வாழ எம்மாலான பணிகளை
ாங்கு வாழ்ந்து சிறப்புற்றி

செய்யுள் வடிவமாகவே
றின் பொருளை எளிதில்
மான ஒன்றாகும். எனவே

இவற்றின் பொருள்களை அற
நூலை ஞான மேதாவிகள் இய
கற்றுணர்ந்த பின்னரே இலக்க
தாக பண்டைக்கால எமது வர
வழித்தோன்றலின் அடியை
லாயின.

அகராதிக்கு வழிகோலியவா
முனிவர் ஆகும். அவரைத் தொ
வெளிவரலாயின, எமது அறத்
கத்தின் — வழக்கத்தில் நிற்கும்
களைத் தொகுத்து வெளியிட
மூலமாக நாம் எடுத்த கழகத்
ஒன்பது முறை துருவித் துருவி
வற்றை திரட்டி இருநூற்றி எண்
கின்றோம். நாம் தொடங்கிய
ஆயிரத்தி இருநூறு பிரதிகள் அ
இவ்அகராதியினை அழகுற அச்
அச்சகத்தாருக்கும், தொகுப்ப
நோக்கி உதவியும் புரிந்த விநா
ளர்களுக்கும், ஊழியர்களுக்கும்
தெரிவித்துக்கொள்கின்றேன்.

குமரி முதல் கடாரம் வ
ஞானத் தமிழ் மொழிக்கு – அ
பணிகளை எமது நிதியத்தின் சா
தொடர்ந்தும் செய்து வருவே
தெய்துகின்றோம். இப்பெரும்
கால் குற்றம் குறைகள் எம்
தோற்றலாம். இவற்றை பொ
நீக்கி நிறைவை ஏற்று எம்பணி
நிறைவோடு தங்கள் கரங்களில்

புலோலி மேற்கு,
1-12-1992

ிந்து கொள்ள '**நிகண்டு**' என்ற
ற்றி அருளினார்கள். இவற்றைக்
ண இலக்கியங்களை கற்றுணர்ந்த
லாறு கூறி நிற்கின்றது. நிகண்டின்
ஒற்றியே அகராதிகள் தோன்ற

் மேல்நாட்டினின்று வந்த வீரமா
டர்ந்தே தமிழில் பல அகராதிகள்
தமிழ் அகராதியில் எமது பிரயோ
பெரும் பெரும்பாலான சொற்
விளைகின்றோம். தொகுப்பிற்கு
தமிழ் அகராதியை ஒரு முறைக்கு
ஆராய்ந்து எமக்குத் தேவையான
பது பக்கத்தில் வெளியிட முனை
பணியை செவ்வனே நிறைவேற்றி
ச்சுப் பதிப்பித்துள்ளோம். மேலும்
சுப் பதித்து வழங்கிய ஸ்ரீ வாணி
தில் உதவியும், பிரதிகளை ஒப்பு
யகர் தரும நிதிய நிர்வாக உறுப்
எனது மனமார்ந்த நன்றியையும்

ர கொடிகட்டிப் பறந்த எமது
ன் சிறப்பிற்கு எம்மாலான பங்கு
ர்பாக நிறைவேற்றி வருகிறோம்.
பாம் என்று கூறுவதில் இறும்பூ
பணியை நிறைவேற்ற விழையுங்
சக்திக்கப்பாற்பட்ட நிலையில்
ிதெனக் கருதாமல் குறையை
யை வரவேற்பீர்கள் என்ற மன
காணிக்கையாக்குகின்றோம்.

நிறுவனர்,
விநாயகர் தரும நிதியம்.

அறத் தமிழ்

அ

அ – தமிழ்மொழி முதல் எழுத்து, அழகு, சிவன், திருமால், நான்முகன், எட்டு என்னும் எண்ணின் குறி, திப்பிலி.

அஃகம் – தானியம்; விலைப்பொருள்; முறைமை; ஊறுநீர்; சுருக்கம்.

அஃறிணை – பகுத்தறிவற்ற உயிர்களும் உயிரற்றனவும்; இழிதிணை.

அகக்கடவுள் – ஆன்மா; உயிர்க்குள் இறைவன்.

அகக்கண் – ஞானம்; உள்ளறிவு.

அகங்கரிப்பு – செருக்கு; அகங்கரித்தல்

அகங்காரம் – யான் எனல்; இறுமாப்பு; செருக்கு: ஆணவம்

அகங்கை – உள்ளங்கை

அகடவிகடம் – குறும்பு; தந்திரம்

அகதங்காரன் – மருத்துவன்

அகதி – போக்கற்றவர்; கதியிலி கல்லை மரம்; வேலமரம்

அகத்தார் – உள்ளிடத்திலிருப்பவர்; இல்வாழ்வார்; உறவினர்; முற்றப்பட்டார்.

அகத்தோர் – உள்ளிருப்போர்; ஊரார்; மனமொத்த நண்பர்

அகப்படுதல் – உட்படுதல்; பிடிக்கப்படுதல்; சிக்கிக்கொள்ளுதல்

அகப்பணி – மனத் தொழில்; வீட்டுவேலை

அகப்பத்தியம் – மனோவிரதம்; இணை விழைச்சிலாமை.

அகராதி

அகப்பரிவாரம்–வீட்டு வேலைக் காரர்கள்.

அகப்பாடு – உள் நிகழ்ச்சி; அகப்படுதல்; நெருங்கியிருக்கை

அகப்பு–ஆழம்; தாழ்வு; படுகுழி

அகப்பை –குழிந்த கரண்டி; சட்டுவம்; முகக்குங்கருவி; இஃது அகழ்ப்பை என்னுஞ் சொல்லின் மரூஉ.

அகப் பொருள் – அகத்திணையாகிய பொருள்.

அகமகிழ்ச்சி – உளக்களிப்பு.

அகமாட்சி – இல்லறத்திற்குரிய நற்செயல்கள்

அகமுடையாள் – வீட்டுக்குடையவள்; மனைவி

அகம் – உள்; மார்பு; மனம்; ஞானம்; பாவம்; வீடு; நிலம்; மருதம்; மலை; அகக்கூத்து; அகங்காரம்; ஒருநூல்; இருப்பிடம்; உடல்; உயிர்; விண்; ஆழம்; ஆன்மா; ஒரு மரம்; துக்கம்; நாள்; பள்ளம்; பாம்பு தீவினை; குளாகுணம்.

அகம்பாவம் – உள்நினைவு; செருக்கு; ஆணவம்.

அகரம் – முதல் எழுத்து; பாதரசம்; ஊர்; பார்ப்பனச்சேரி! இறையின்மை; கையின்மை; செயலின்மை; வீடு.

அகராதி – அகரவரிசைச் சொற்பொருள் நூல்.

அகல் – சட்டி; விளக்குத் தகழி; ஓரளவு; அல்குல்; வெள்வேல்.

அகவலன் – பாடும் பாணன்.

அகவல் – கூவுதல்; அழைத்தல்; மயில்க்குரல்; ஆடல்; ஆசிரியப் பா; பாடுதல்.

அகவுதல் – ஒலித்தல்; பாடுதல்; அழைத்தல்; ஆடல்.

அகவுவம் – பாடுவோம்.

அகவை – உட்பொருள்; வயது

அகழ் – அகழி; குளம்; கோட்டையைச் சூழ்ந்துள்ள கிடங்கு; அகழெனேவல்,

அகழ்தல் – தோண்டுதல்; கல்லுதல்; உழுதல்.

அகற்பன் – ஒப்பில்லாதவன்

அகி – பாம்பு; ஆவணி; இரும்பு; ஒருமரம்; கதிரவன்; பகைவன்; முகில்; இராகு; ஈயம்; ஒரு விண்மீன்; வஞ்சகன்; வச்சிரப் படை; விரித்திராசுரன்.

அகிம்சை – கொல்லாமை.

அகுளுதி – வேப்பமரம்

அகோரம் – அழகின்மை; மிகு கொடுமை; சிவனுடைய ஐம் முகங்களுள் ஒன்று.

அக்கசாலை – அணிகலஞ் செய்யும் இடம்.

அக்கம் – தானியம்; தானிய விலை; பொன்; கண்; உருத்திராக்கம்; சூதாடு கருவி; கயிறு; பாம்பு; அறுகு; ஒரு மரம்; கடலுப்பு; அறிவிந்திரியம்; தராசுக்கோல்; துரிசு; தேர்; தேர் உறுப்பு; பக்கம்; வண்டியச்சு; ஒரு நிறை.

அக்கரைப்பச்சை – பொய்த் தோற்றம்.

அக்கன் – குருடன்; கருடன்; நாய்.

அக்கிரகாரம் – பார்ப்பனச்சேரி.

அக்கிலு – நெருஞ்சி.

அக்கினி – நெருப்பு.

அக்கினிதிசை – தென்கிழக்கு; அக்கினிகோணம்.

அக்கினிப்பிரவேசம் – தீக்குதித்தல்; உடன்கட்டை ஏறுதல்.

அக்கை – தமக்கை; அக்காள்.

அங்கசங்கம் – பகட்டு; புணர்ச்சி

அங்கசாலைக்காரன் – கிராமப் பணி செய்வோன்.

அங்கணன் – சிவபெருமான்.

அங்கணி – பார்வதி; கற்றாழை; அழகிய கண்ணையுடையவள்.

அங்கதம் – மார்பு; தோளணி; பழிச்சொல்; பொய்; பாம்பு; யானையுணவு.

அங்கதி – கொடை; தீ; நோய்; பார்ப்பான்; நான்முகன், வாயு, திருமால், தீக்கடவுள்.

அங்கப் பிராயச்சித்தம் – தேக சுத்திக்காகச் செய்யும் ஒரு பிராயச்சித்தம்.

அங்கம் – உடல்; உறுப்பு; எலும்பு அடையாளம்; அரசாங்கம்; ஒரு நாடு; நாட்கவுறுப்பு; கட்டில்.

அங்கவிட்சேபம் – அபிநயம்; சாடை; குறி.

அங்கனை – பெண்.

அங்கன் – புதல்வன்.

அங்காடி – கடை; கடைத்தெரு.

அங்காரகன் – செவ்வாய்; செந்நீர்; முத்து; நெருப்பு.

அங்காரவல்லி – குறிஞ்சா; சிறு தேக்கு.

அங்கிதம் – அடையாளம்; உடற் தழும்பு.

அங்குசதாரி – விநாயகன்.

அங்குசம் – யானைத் தோட்டி, வாழை.

அங்குமிங்கும்பாடி – இரண்டு கட்சியையுஞ் சேர்ந்தவன்; நம்பமுடியாதவன்.

அங்குசோரி – அறுகம்புல்.

அங்குடம் – திறவுகோல்.

அங்குட்டம் – பெருவிரல்.

அங்கூடம் – அம்பு; கீரி; நகுலம்; அழகிய கூடம்.

அசங்கதம் – ஒழுங்கின்மை, பொய்.

அசங்கமம்–அசட்டை; இகழ்ச்சி; ஒவ்வாமை; கூடுதலின்மை; புலவி.

அசடு – கீழ்மை; பேதைமை; மறுவுடைமை.

அசடுதட்டுதல் –பொலிவழிதல்; அறியாமை, புலப்படுதல்.

அசட்டை – மதியாமை; பாராமுகம்.

அசதி – சடிதி; அயர்ச்சி; மறதி; கோவை பெற்ற இடையன்; கற்பில்லாதவள்; அசரீரி,

அசரீரி – வானொலி, உருவிலி வாக்கு.

அசம்பாவிதம் – பொருத்தமில்லாதது.

அசர்தல் – தாழ்த்தல்.

அசலகன்னிகை – உமாதேவி.

அசலக்கால் – தென்றல்

அசலம் – மலை; அசையாதது.

அசலன் – கடவுள்.

அசல் – அருகு; கொசுகு; சீலை; நிலம்; முதற்படி; மூலம்; வேறு

அசவாகனன் – அக்கினிதேவன்

அசற்சரக்கு – முதல் தரமான பண்டம்; கலப்பற்ற பண்டம்; இயற்கை மருந்துச் சரக்கு.

அசனம் – உணவு; சோறு; வெள்ளுள்ளி; வேங்கைமரம்; சிரிப்பு.

அசனியேறு – இடியேறு.

அசா – தளர்ச்சி; வருத்தம்.

அசாகசம் – அமைதி; பொய்.

அசாசி – கருஞ்சீரகம்.

அசாவிடுதல்–இளைப்பாறுதல்.

அசிதம் – கருமை.

அசிதன் – சிவன்; திருமால்; சனி, புத்தன்; சகரன் தந்தை.

அசித்தல்–உண்டல்; அழித்தல், நசித்தல், நகைத்தல், இழித்தல்.

அசித்தன்–அழிக்கப்படாதவன், கண்டிக்கப்படாதவன், அகண்டித வடிவமாயிருப்பவன்.

அசிந்தன் – மனத்துக்கெட்டாதவன்.

அசிப்பு–அவமதித்து நகைத்தல்.

அசிரவணம் – செவிடு, காது மந்தம், ஒலியின்மை.

அசிரி – ஆபாசமானவன்.

அசிதளம் – கற்பூரம்.

அசினம் – தோல்.

அசீரணம் – செரியாமை, சமியாமை.

அசீரியம் – அழியாதது, அழிவுபடாதது.

அசுக்காட்டுதல் – பரிகசித்தல்.
அசுப்பு – விரைவு.

அசுமம் – இடியேறு; கல், தீத் தட்டிக்கல், முகில், மணமற்ற மலர்.

அசுமரி – கல்லடைப்பு.

அசுமாற்றம் – ஐயம், சமுசயம், சமிக்கினை, சாடை.

அசும்பு – அசைவு, நீர்த்திவலை, ஊற்று, கிணறு, நீர்க்கசிவு, சேறு, வழுக்கு நிலம், ஒளிக் கசிவு, பற்று, குற்றம்.

அசுரகுஞ்சரம் – கயமுகாசுரன்.
அசுரசந்தி – இரணியவேளை, அந்திநேரம்.

அசுரம் – வீரச்செயல் புரிந்து பெண் கொள்ளல்.

அசுவதாட்டி – தங்குதடை யின்மை.

அசுவமேதம் – குதிரையைக் கொண்டு நடத்தும் வேள்வி.

அசுவம் – குதிரை, குதிரைப்பல், பாசாணம், தூய்மையற்றது, அமுக்கிராக்கிழங்கு.

அசுவவாரியர் – குதிரை செலுத் துவோர்

அசூயை – பொறாமை, அவ தூறு.

அசேதனம் –அழிவற்ற பொருள்

அசை – செய்யுளுறுப்புகளில் ஒன்று; மாடுகள் மீட்டு மெல் லும் இரை, தூக்குதல், செய லுறவு, மெல்லப்போ.

அசைதல் – ஆடுதல், தொடங்கு தல், தளர்தல், சோம்பல், இருத்தல், தங்கல், துவளல், வருந்தல்.

அசைத்தல் – கட்டுதல், இயக்குதல், சொல்லுதல்,

அசைந்த – தங்கிய.

அசைப்பு – சொல், இறுமாப்பு.

அசைவு – மடி, இளைப்பு, வருத்தம், தோல்வி, தப்பு, உண்கை

அசையும் பொருள் – சங்கமம்.

அசையாப் பொருள் – தாவரம்

அசையாமணி – ஆராய்ச்சிமணி

அசோகன் – அருகன், சோகமற்றவன், காமன், பீமன், தேர்ப்பாகன்.

அசோகு–அசோகமரம், அசோகவனம், மருது, வாழை, அரம்பை, கதலி.

அசோண்டி–குறட்டை. அசோகவனம்.

அச்சகம் – நீர்முள்ளி, அச்சுக்கூடம்.

அச்சகாரம் – முன்பணம், அச்வாரம்.

அச்சடி ஓலை – முத்திரையிட்ட ஓலைப்பத்திரம்.

அச்சடையாளம் – உடலுறுப்பு, ஒப்புமை. அடிமை என்பதைக் காட்டுங்குறி, முத்திரையச்சு.

அச்சந்தெளித்தல் – அறுகும் அரிசியும் இடல்.

அச்சம் – பயம், இலேசு, சரிசமானம், அகத்தி, ஈரப்புல், ஓர் அணி, அச்சத்தில் ஈயுங்கடைப்படுதானம், கரடி, கோரைப்புல், தகடு, பளிங்கு, முன்புறம்.

அச்சன் – தந்தை, கடவுள்.

அச்சாணி – கடையாணி.

அச்சாறு – ஊறுகாய்.

அச்சிரம் – முன்பனிக்காலம்.

அச்சு – உருள்கோத்த மரம், கட்டளைக் கருவி, எந்திரவச்சு, உடல், அச்சம், துன்பம், உயிர் எழுத்து வலி.

அச்சுதம் – அறுகும் அரிசியும்.

அச்சுதன் – அழிவில்லாதவன், திருமால்.

அச்சுத்தாலி – காசுமாலை.

அச்சுறுத்து – பயமுறுத்து.

அஞராட்டி – நோயுள்ளவன்.

அஞர் – சோம்பல், துன்பம், நோய், வழுக்கு நிலம், அறிவிலார்.

அஞ்சதி – காற்று.

அஞ்சலர் – பகைவர்.

அஞ்சலளித்தல் – அபயங் கொடுத்தல்.

அஞ்சலி – கும்பிடுகை, வெளவால், காட்டுப்பலா, மாவிலிங்கம்.

அஞ்சல் – பயப்படல், கலங்கல், தபால், நிறுத்துமிடம்.

அஞ்சனம் – கண்ணுக்கிடும் மை, கருமை, இருள், நீலக்கல், சூற்றம்.

அஞ்சிகம் – கண், நாணயம், விழி

அஞ்சுகம் – கிளி.

அஞ்சுதல் – பயப்படுதல்.

அஞ்செவி – உட்செவி.

அஞ்ஞாதம் – அறியப்படாதது.

அஞ்ஞானம் – அறியாமை.

அடங்கலர் – மனவடக்கம் அற்றவர், பகைவர்.

அடங்கல் – கருங்கல், விடுதல்,

அடங்குகை, முழுதும், தங்கு மிடம், சாகுபடிக் கணக்கு, நெருங்குதல்.

டங்கார் - பகைவர்.

டங்காவாரிதி – கடல்உப்பு, மூத்திரம்.

டசுதல் – செறித்தல், சிறிது விலகுதல்.

டஞ்சாதித்தல் – வன்மங்கொள் ளுதல்.

டம் – பிடிவாதம், வர்மம், பொல்லாங்கு, சஞ்சாரம்.

டம்பு – அடம்பங்கொடி.

டர்த்தி - நெருக்கம்.

அடலை – துன்பம், போர், நீறு, சுடுகாடு.

அடலைமுடலை – வீண்வார்த்தை

அடல் – வலிமை, வெற்றி, கொல் லுதல், மீன்வகை.

அடவி – காடு, மலைசேர்ந்தநாடு, மிகுதி.

அடவியன் – துடைப்ப வகை.

அடாதது – தகாதது, சமைக்கா தது.

அடாத்து–பலாத்காரம், அவமதி, தகாதது, பொருந்தாதது.

அடாப்பழி – தகாத நிந்தை.

அடாற்காரம் – பலாத்காரம்.

அடி – களவு, காலடி, ஆதி, தாக்கு, கீழ், செருப்பு, செய் யுள் உறுப்பில் ஒன்று.

அடிகாற்று – பெருங்காற்று, சண் டமாருதம்.

அடிகோலுதல் – தொடங்குதல், அடிப்படையிடுதல்.

அடிக்கடி – திரும்பத்திரும்ப.

அடிக்கணை – கணைக்கால்.

அடிக்கலம் – சிலம்பு, அடிக்கமாட்டோம், காலணி, கப்பற்தளம்.

அடிக்காயம் – அடியாலுண்டான ரணம்.

அடிக்குச்சி – அளவுகோல்.

அடிச்கொருக்கால் – அடிக்கடி, அடிக்கொருக்க.

அடிகோலுதல் – தொடங்குதல், அடிப்படையிடுதல், அடிகோலுதல்.

அடிசில் – உணவு.

அடிசிற்சாலை – அன்னசத்திரம்.

அடிச்சுவடு – காலடிச்சுவடு.

அடிஞானம் – அருள் ஞானம், சிவஞானம்.

அடிதடி – சண்டை, அடிதண்டம்.

அடிதலை தடுமாற்றம் – முதல் முடிவு தெரியாது தடுமாறுதல், முன்பின்னறியாது விழித்தல்.

அடித்தடம் – அடிச்சுவடு.

அடித்தலம் – கீழிடம், அத்திவாரம்

அடிபார்த்தல் – நிழல் அளந்து பொழுது குறித்தல்.

அடிபிடி – சண்டை.

அடிப்படுத்தல் – நிலைபெறச் செய்தல்.

அடிப்படை – சுவரின் அடித்தளம், ஆதாரம்.

அடிமண் - கீழ்மண், சூனியத்திற்கென்றெடுக்கும் காலில் ஒட்டிய மண்.

அடிமரம் – கிளைக்கும் வேருக்கும் இடைப்பட்ட மரத்தின்பாகம், கோழரை, பொருட்டரை, பொரியாரை, முன்னரை என நான்கு வகைப்படும்.

அடிமுடி – தலைமுதல் கால்வரை.

அடிமை – தொண்டுபடுந்தன்மை, தொண்டன்.

அடியடியாக – தலைமுறை தலைமுறையாக.

அடியார் – தொண்டர்.

அடிவானம் – கீழ்வானம்.

அடிவைத்தல் – தொடங்குதல், தலையிடல், நடக்கத் தொடங்குதல், நுழைதல், புகுதல்.

அடுக்கு – வரிசை, அடுக்குக்கலம், செழிப்புநிலை.

அடுப்பு – நெருப்பிடும் அடுப்பு, பரணிமீன்.

அடைகாத்தல் –கோழி அடைகாத்தல்,

அடைத்தல் – அமைக்கப்படுதல், சாத்துதல், சிறை வைத்தல், புகுத்தல்.

அடைப்பகம் – சிறைச்சாலை.

அடைமழை – விடாமழை

அடைமானம் – ஈடு

அடைமொழி – விசேடணம், சிறப்புச் சொல்

அடைவு – அடைதல், சேர்தல், முறை, ஏது, எல்லாம், ஈடாகக் கொடுக்கும் பொருள்.

அட்சயன் - கடவுள், இறைவன், பகவான், அமரன், அழிவற்றவன்.

அட்டமாசித்தி – அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிரார்த்தி, பிராகாமியம், ஈரத்துவம், வசித்துவம் என்ற எண்வகைச் சித்திகள்.

அட்டவணை – வரிசைக்குறிப்பு

அட்டாணி— கோட்டை மதில்மேல் மண்டபம்

அட்டாதுட்டி—தாறுமாறு, குறும்பு

அட்டாவதானம் – ஒரே காலத்தில் வேறு வேறான எட்டுப் பொருள்களிற் கவனஞ் செலுத்துகை.

அட்டுழியம் – தீம்பு

அணாப்புதல் – ஏய்த்தல்

அணி – அணிகலம், அலங்காரம், அழகு, வேடம், கோலம், அண்மை, படை வகுப்பு, கூட்டம், பெருமை, ஒழுங்கு (ஓர் உவம உருபு, ஓர் இலக்கணம்)

அணிகலம் – நகை, ஆபரணம்

அணிந்துரை – பாயிரம்

அணிவில் – பேரேடு

அணு – நுண்மை, உயிர், இனம், சிறுமை, ஒருவகைத் தானியம், சூக்கும சத்தி ரூபம், நுண்ணுடல், பேரணு, சிற்றணு, ஓர் அளவைப் பெயர்

அண்டபகிரண்டம்— நிலவுருண்டையும் அதன் புறத்த வானக் கோள்களும்

அண்டம் – முட்டை, தலையோடு, உலகம், வெளி, பீசம்

அண்ணன் – தமையன்

அண்ணா – அண்ணன், தகப்பன், உள்நாக்கு திருவண்ணாமலை

அண்ணாவி – ஆசிரியர்

அண்ணி – அண்ணன் மனைவி, தாய்

அண்ணை – பேய்

அதட்டுதல் – உறுக்குதல், வெருட்டுதல், ஒலித்து உரப்புதல்

அதரம் – கீழ் உதடு, உதடு

அதர்மம் – அறமில்லாத

அதலம்-கீழ் ஏழு உலகத்தொன்று, அத்திமரம், பள்ளம், பின்பு

அதலன்–சிவபெருமான், கடவுள், இறை.

அதிகம் – மிகுதி, உயர்ந்தது, இலாபம், குருக்கத்தி

அதிகாரம் – ஆட்சி, தலைமை, நூற் கூறுபாடு

அதிகாரி – தலைவன்

அதிசயம் – புதுமை, ஆச்சரியம், வியப்பு, மேம்பாடு

அதிட்டம் – நல்வினைப்பயன், எதிர்பாராத இலாபம், மிளகு, பார்க்கப்படாதது.

அதிதி – விருந்தினன்

அதிபதி – தலைவன், அரசன், சண்பகம்

அதிபன் – எப்பொருட்கும் இறைவன், மன்னன், தலைவன்

அதிர்வெடி – குழாய்வெடி

அதைரியம் – திட்பமின்மை, அச்சம்.

அதோகதி– தாழ்நிலை, பாதலம், நரகம்.

அதோமாயை – அசுத்தமாயை

அத்தசாமம் – நள்ளிரவு

அத்தன் – கடவுள், குரு, தந்தை, மூத்தோன், செல்வன், உயர்ந்தோன்.

அத்தி – ஒரு மரம், எலும்பு, கொலை, யானை, பாதி, கடல், இரப்போன், உள்ளது, அக்காள், அத்தினாபுரி, ஆணை வணங்கி, அதவு, அத்தன்மை

யன், கருவினை, திப்பிலி, செய் யென்னேவல், ஓர் அரசன், தெய்வயானை, ஓர் நாடி, பெண்பால் விகுதி, நிகண்ட வாத வழக்கு, ஆட்டனத்தி, சேரன் படைத் தலைவர்களில் ஒருவன்.

அத்தியாயம் – நூற்கூறுபாடு, படலம், சருக்கம்

அத்தியாவசியகம் – இன்றியமையாதது.

அத்துவிதம் – இரண்டன்மை, பரமான்மாவும் சீவன்மாவும் ஒன்றென்கை.

அத்தை – தலைவி மாமி, கற்றாழை, ஒரு முன்னிலையசைச் சொல், தந்தையுடன் பிறந்தாள்.

அநகன் – தீவினையற்றவன், இறைவன், கடவுள்

அநந்தம் : முடிவில்லது, பொன், ஓர் எண், கோளக பாடாணம், குப்பைமேனி, சிறுகாஞ்சோறி, தேகாதிப்பிரபஞ்சம்,

அநந்தன் : கடவுள், ஆதிசேடன், பலபத்திரன்

அநர்த்தம் : பயனில்லாச் சொல், கலகம்

அநல் – தீ; இடி; சூடு; கொடி; வேலி; பித்தம்; வன்னியிலை.

அநவரதம் – எப்போதும்.

அநாதி – தோற்றமின்மை; கடவுள் முன்.

அநாதை : திக்கற்றவன்

அநாமதேயன் : புகழற்றவன்

அநித்தம், அநித்தியம் – நிலையாமை.

அநியாயம் : முறையின்மை, ஒழுங்கின்மை, அக்கிரமம்

அநீசன் : ஆற்றலில்லாதவன், தலைவனில்லாதவன், நீசனல்லாதவன், தாழ்வில்லாதவன்

அநீதம் – நீதியின்மை

அநுகூலம் : காரியம் கைகூடல்.

அநுக்கிரகம் : கருணை (அருள்)

அநுசரணை – சார்பு; இசைவு

அநுசரித்தல் – பின்பற்றுதல்

அநுட்டானம் – ஒழுக்கம்; வழக்கம்.

அநுதாபம் – உடனிரங்கல்

அநுபவம் : நுகர்ச்சி, அழுந்தியறிவது.

அநுபானம் : உடன் உண்ணும் உணவு, மருந்துக்கு உபகரணமானது.

அநுபூதி : அனுபவ அறிவு

அந்தகன் : குருடன், இயமன்

அந்தகாரம் : இருள்

அந்தக்கரணம் : உட்கருவி, மனம் புத்தி, சித்தம், அகங்காரம்

அந்தஸ்து : நிலைமை, ஒழுங்கு, உயர்வு

அந்தணன் : குணசீலன், பெரியோன், செந்தண்மையுடையவன், நான்முகன், சிவன்

அந்தப்புரம் : அரசன், தேவி இருக்கை, மகளிர் உறைவிடம்

அந்தரங்கம்–உட்கருத்து, மறை

அந்தராத்மா – பரமான்மா.

அந்தி கூப்புதல் – மாலை வழிபாடு.

அந்திக்கடை – மாலைக் கடை.

அந்தி சந்தி – காலை மாலை

அந்தி மாலை – பகற்காலத்தின் முடிவில் வரும் மாலைக்காலம். மாலைக்கண்; ஒருவிதக் கண் நோய்.

அந்தியம் – ஓர் எண்; இறப்பு; முடிவு.

அந்தியேட்டி – ஈமக்கடன்

அந்திவண்ணன் –சிவபெருமான்

அந்து – நெல்வண்டு; யானைக் காற் சங்கிலி; எருது; கிணறு; கொலை; பாத கிண்கிணி; அப்படி, முடிவு.

அந்நியோந்நியம் – ஒற்றுமை

அபகரித்தல் - கவர்தல்

அபகீர்த்தி – இகழ்ச்சி

அபசகுணம் – தீக்குறி

அபசயம் – தோல்வி; பலவீனம்

அபசாரம் – குற்றம்; இழுக்கம்; தீயசெய்கை; பின்னீடு

அபத்தம் – பொய்; வீண்; தவறு

அபமிருத்தியு – அகால மரணம்

அபயம் – அடைக்கலம்

அபரக்கிரியை – பிணச்சடங்கு; பிரேதக் கருமம்

அபரபக்கம் – தேய்பிறை

அபராதம் – குற்றம்; தண்டம்; தண்டனை; பழி

அபராதி – தீங்கு செய்தோன்

அபரிமிதம் – அளவின்மை

அபலை – பெண்

அபவாதம் – பழிச்சொல்; ஒவ் வாப் பேச்சு; குற்றம் பேசுதல்

அபாண்டம் – பொய்க்குற்றம்

அபாயம் – ஆபத்து; கேடு; மோசம்; நட்டம்; சதிபண்ணு தல்; சேதம் பண்ணுதல்

அபானன் – ஒரு வாயு

அபிடேகம் – திருமுழுக்கு; திருமுடி.

அபிப்பிராயம் – உட்கருத்து

அபிமானம் – பற்று; விரும்புதல்; தனதென ஒன்றைநினைத்தல்; செருக்கு; பெருமை; அறிவு; மதிப்பு.

அபிமானித்தல் – அளவிடல்; கனம் பண்ணுதல்; மதித்தல்; புகழ்தல்; விருப்பம் பாராட்டுகல்.

அபிலாசை – விருப்பம்

அபிவிருத்தி – மேன்மேலும் பெருகுதல்

அபின் – கசகசாச்செடியின் பால்

அபுத்திபூர்வம் – அறியாமல் நிகழ்ந்தது

அபூர்வம் – அருமை; நூதனம்; புதுமையானது; பழவினையால் தோன்றுவது

அப்பர் – திருநாவுக்கரசர்; ஆண் ஆடு; ஆண் குரங்கு

அப்பியாசம் – பயிற்சி

அப்பு – நீர்; கடவுள்; பாதிரி; அப்பென்னேவல்; அம்பு; கடல்; துடை; கடன்; வீட்டு வேலைக்காரன்; தந்தை; பூராடநாள்; மழை.

அப்புதல் – பூசுதல்; ஒற்றுதல்; தாக்குதல்; கவ்வுதல்; திணித்தல்.

அமங்கலி–கைம்பெண்; விதவை

அமட்டுதல் – புரட்டுதல்; சிக்கவைத்தல்; அச்சுறுத்தல்

அமணம் – இருபதினாயிரம் கொட்டைப் பாக்கு; நிர்வாணம்; சமணமதம்

அமரம் – அபரம்; வடமொழி நிகண்டு; தோணியின் பின்பக்கம்; கண்ணோய்; அழிவின்மை பாதரசம்; பொன்

அமரர் - வானோர்

அமர்தல் – அடங்குதல், அமைதல், மனம் ஒன்றுதல், பொருந்துதல், விரும்புதல், வாய்த்தல்.

அமர் – போர்; விருப்பம்; மதில்; அமைதி

அமர்வு -சேர்க்கை; இருப்பிடம்; விருப்பம்

அமலன் – கடவுள்; அருகன்; சிவன்; மலமிலி; சீவன்முக்தன்

அமளி – படுக்கை; ஆரவாரம்; மிகுதி.

அமளி பண்ணுதல் – சச்சரவு உண்டாக்குதல்

அமிருதம், அமிர்தம், அமிர்து– பால்; தேவர் உணவு; உயிர் தரும் மருந்து; இனிப்பு; அழிவில்லாதது; இனிய பொருள்; சோமலதைச் சோறு; சோறு; நீர்; நெய்; மோர்; வீடுபேறு; வேள்விப் பொருள்களின் மிஞ்சியவை; உப்பு; திரிகடுகு.

அமுக்கன் – மறைவாகக் காரியஞ் செய்பவன்

அமுதம் – அமிர்தம்; ஆகமம்

அமுதவெழுத்து – மங்கலவெழுத்து (அ, இ, உ, எ, க், ச், த், ந், ப், ம், வ் என்பன)

அமுது – அமுதம்; சோறு; நீர்; பால்; இனிப்புப் பொருள்; நிவேதனம்; வீடுபேறு; உப்பு; சுதை; இனிப்புள்ள சாப்பாடு; பாயசம்.

அமுதுசெய்தல் – உண்டல்

அமைச்சன் – மந்திரி; வியாழன்
அமைச்சு – மந்திரித் தொழில்; மந்திரிமார்.
அமைதல் – அடங்கல்; பொருந்துதல்; தகுதியாதல்; போதியதாதல்; நிறைதல்; சிறத்தல்; உண்டாதல்; தங்குதல்; உடன்படுதல்; மேவுதல்; முடிதல்.
அமைதி – அடக்கம்; சமயம்; தன்மை.
அமைப்பு – ஊழ்; ஏற்பாடு; நிலை.
அமையாமை – மனநிறைவு கொள்ளாமை; கீழ்ப்படியாமை; கிடைத்தற்கருமை.
அமைவு – இயல்பு; நிறைவு; பெருமை; ஆறுதல்; அடக்கம்; சேர்த்தல்; பொருந்துகை; புலனடக்கம்; பொறுமை; மனவமைதி; ஒப்பு.
அமோகம் – பெருகும் தன்மை; மழுங்குதலின்மை; இலக்குத் தப்பாமை.
அம்பலம் – சபை; வெளி; சபை கூடுமிடம்; பொதுவிடம்; தில்லை,
அம்பறாத்தூணி – அம்புக்கூடு; அம்புப்புட்டில்.
அம்பாள் – உமை, துர்க்கை
அம்பிகை – பார்வதி; காளி; திருதராட்டிரன் தாய்; தரும தேவதை! தாய்
அம்பு – நீர், முகில், தளிர் எலுமிச்சை, மூங்கில், திப்பிலி. வளையல், உலகம், பாணம்.
அம்புலி – திங்கள்
அம்மாறு – பெருங்கயிறு, வடக்கயிறு, வடம்

அம்மான் - தந்தை, கடவுள், தாயுடன் பிறந்தான், மாமன்

அம்மை - தாய், பார்வதி, அமைதி, அழகு, முற்பிறப்பு, வருபிறப்பு, வைசூரி

அயர்தல் - உணர்வழிதல், இளைத்தல், செய்தல். சோர்தல், விரும்புதல், விளையாடுதல்.

அயர்வு - அகலம், உன்மத்தம், சோர்வு, மனக்கவர்ச்சி, வருத்தம், வெறுப்பு.

அயலவர் - பக்கத்தார்

அயல்-அருகிடம். பக்கம், வேறு, அயலார்.

அயன் - நான்முகன், அருகன், மகேசுவரன்

அயிர்ப்பு - சந்தேகம், மறதி, மந்தம், சோம்பல்

அயோநி - யோநியிற் பிறவாதது

அரக்கர் - இராக்கதர்

அரக்கு - செம்மெழுகு, சிவப்பு, சாதிலிங்கம், தேன், சாராயம்

அரங்கேற்றுதல் - சபையார் ஏற்கச் செய்தல்

அரசவை - அரசனுடைய அவை

அரசாட்சி - அரசு புரிதல்.

அரசாணி - அரசி, மணப்பந்தலில் அரசங்கால் நாட்டுதல்.

அரசியல் - அரசாட்சி முறை

அரசிறை - அரசர்க்கரசன், கப்பம்.

அரசு - அரசியல், அரசன், நாடு, அரசமரம், திருநாவுக்கரசுநாயனார்.

அரட்டி - அச்சுறுத்தி, நடுங்கச் செய்து, வெருட்டி

அரட்டு - செருக்கு, குறும்பு

அரப்பொடி - இரும்புத்தூள்

அரம் - அராவும் கருவி, பாதலம்

அரம்பு - குறும்பு, தீமை.

அரவணைத்தல் - தழுவுதல், ஆதரித்தல்

அரவம் - ஒலி, சிலம்பு, ஆரவாரம், பாம்பு, ஆயிலியம், கலக்கம், பதஞ்சலி முனிவர். பேரொலி, படையெழுச்சி

அரவிந்தம் - தாமரை, நாரைப் பறவை, செம்பு, காமன் கணைகளுள் ஒன்று.

அரவு - பாம்பு, ஒலி, ஒரு தொழிற் பெயர் விகுதி

அரன் - சிவன்

அராவல் - அராவுதல், உராய்தல்

அரி - அக்கினி, அடர்வு, அரிசி, அரித்தல், அழகு, அறுத்தல், ஆயுதம், ஆவணித் திங்கள், ஆறு, இடைவிடுகை, இந்திரன், இயமன் ஈர்வாள், உட்டுளைப் பொருள், உருளை, உவமை, ஐம்பை, ஒரு தாளம், ஒருகண்டம், ஒளி, ஓர் அரசன், கட்டில் கடல், கடுக்காய் கண்வரி கருங்காலி மரம், கருங்கிளி, கருஞ் சிலம்பு கள்ளு, காசம் காற்று, கிரணம், கீழ்க்காநெல்லி, குசைத்தீவிலுள்ள ஒரு மலை, குதிரை, குயில், குரங்கு, குற்றம், குன்மம், கூர்மை, கொடி வேல், சந்திரன் சிங்கம், சிலம்பு, சிலம்புப் பரல், சிவன் கரம், சூரியன், செம்மறியாட்டுக் கிடா, சோலை, தகட்டு வடிவம்,

தான்றிக்காய், திருமால், திருவோண நட்சத்திரம், துண்டம், துளசி தேர். நீர், நீர்த் தொட்டி, நெருக்கம். நெல் நெற்கதிர், பச்சை கலந்த மஞ்சள் நிறம், பச்சை, பருவம், பனைமட்டைக் கருக்கு, பறை. பன்றி, பாம்பு, பிரமன். புகை, பொடி, பொன், மஞ்சள்நிறம், மனிதன், மயில், மரகதம், மரவயிரம், மலை, மழைத்தூவல், மூங்கில், மென்மை, யாழின் நரம்பு. வண்டு, வரி.

அரிச்சுவடி – நெடுங் கணக்குச் சுவடி.

அரித்தல் – தினவெடுத்தல், மாபிரித்தல், தூசுபோக்கல், பசையறக் காய்தல், மேய்தல், வருத்துதல், அறுத்தல்

அரிப்பு – தினவு, சினம், குற்றம்

அரிப்புழுக்கல் – அரிசிச்சோறு

அரியேறு – ஆண்சிங்கம்

அரிவரி – அரிச்சுவடி

அரிவை – இருபத்தைந்து வயதுடைய பெண்.

அருகன் எண்குணம் – கடையிலா அறிவு, கடையிலாக் காட்சி, கடையிலா வீரியம், கடையிலா இன்பம், காமம் இன்மை, கோத்திரம் இன்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு.

அருகு–அடுத்த இடம், அண்மை, ஓரம்,

அருக்கம் – எருக்கு, சூரியன், பொன், அருமை, குறைவு, நீர்க் காக்கை, தாமிரம், தீய நிமித்தம், நெருப்பு, படிக்கல்,

சுருக்கம், சொற்பம், வெயில், ஒளி, செந்நிறம்.

அருக்குதல் - தவிர்தல், நீக்குதல், பாராட்டுதல், அச்சமுறுதல்.

அருங்கோடை - மிகுந்த வெப்பமுடைய கோடைக் காலம்

அருச்சனை - கோயிற் பூசை, ஆராதனை.

அருட்சோதி - கடவுள், கௌரி பாஷாணம்

அருத்தநாரீசுவரன்-உமையொருபாகன்.

அருநெல்லி - சிறுநெல்லி.

அருந்ததி காட்டுதல் - அருந்ததி போலக் கற்புடையவள் ஆகுக என்று அந் நட்சத்திரத்தை மணமகட்குக் காட்டுதல்.

அருந்தல் - உண்டல்.

அருந்தவர் - முனிவர்

அருந்திறல் - அரிய திறமையை உடையவர்.

அருமருந்து - தேவாமிர்தம்

அருமை - எளிதிற் கிடைக்கக் கூடாமை, பெருமை, இன்மை, சிறுமை, கொடுமை, ஆற்றாமை, முடியாதது, எளிதிற் கிடைக்காதது.

அரும்பதம் - அரிய செவ்வி, அரிய உணவு, விளங்கற்கரிய சொல்.

அரும்பு - முகை, இண்டை, பூவரும்பு போன்ற வேர், அணிகல ஒட்டு, மெல்லிய மயிர்.

அரும்பொருள் - முயன்று உணரும்படியாக அமைந்துள்ள சொல்.

அருவம் - உருவமில்லாதது

அருவெருப்பு – மிகு வெறுப்பு

அருவர் – தமிழர்

அருவி–மழை வீழாறு; சிற்றாறு, நீரோட்டம், ஒழுங்கு, தினைத் தாள், உருவமில்லாதது.

அருளல்–காத்தல், கொடுத்தல், படைத்தல் முதலிய கடவுளரின் தொழில்கள்.

அருளிச் செய்தல் – அருளுடன் உரைத்தல்.

அருள் – கருணை, சக்தி, ஆசிரியர் அறிவுரை, கடவுளின் அருட்பேறு, ஈயென்னேவல்.

அருள்வாக்கு – இறைவன் அருள் பெற்றவரின் வாக்கு.

அரூபம் - ஆகாயம், உருவமற்றது, குறைவு, வெறுமை, இல்லாதது.

அரை – பாதி, மரத்தின் அடிப் பக்கம் தண்டு, வயிறு, அடியிடம், மேகலை, உடம்பின் நடுவிடம், அரசியல், அரையென்னேவல்.

அரைகுறை– முற்றுப்பெறாமை

அரைக்கால் – எட்டில் ஒருபங்கு

அரைஞாண். **அரைநாண்** – இடுப்புக்கயிறு.

அரைத்தல் – தேய்த்தல், அழித்தல்.

அரைப்படிப்பு – நிரம்பாக்கல்வி

அரையலன் – சோம்பேறி.

அர்த்தபுஷ்டி –பொருட்பொலிவு

அர்ப்பணம் – ஒப்பித்தல், அடுதல், உரியதாக்கல்.

அர்ப்புதம் – ஆயிரங்கோடி,

மேகம், பாம்பு, ஊன் மொத்தை, புதம், விந்தை

அலகு - பறவை மூக்கு, அளவு, அளவு கருவி, அம்பிலை, ஆயுதம், ஆயுதத்தின் அலகு, ஆண் பனை, இலை வடிவம், இலகு வல்லாதது, இலட்சம் பாக்கு, எண், கதிர், கூர்மை, துடைப்பம். பொன்னாங்காணி, மின்மினி, விசாலம், மகிழம் விதை, வீட்டினுறுப்பு நுளம்பு, தாடை.

அலக்கழித்தல் - துன்புறுத்தல்

அலங்காரம் - அணி, சிறப்பு, அழகு, சிங்காரம், அணிகலன்' பெருமாள் கோவில்களில் படைக்கப்படும் சோறு குழம்பு முதலிய உணவுகள்

அலங்கை - துளசி.

அலங்கோலம் - ஒழுங்கின்மை' சீர்கேடு.

அலசுதல் - அலசல், சோர்தல்

அலட்டல் - அங்கலாய்த்தல்' வருந்துதல், துன்புறுத்தல், வறுமையடைதல்.

அலமாரி - பேராசையுள்ளவன், சாமான் வைக்குந் தட்டுள்ள சுவர்மாடம்.

அலம்பல் - கழுவல். ஒழுகல், ததும்பல், ஒலித்தல், கத்துதல், பல கிளைகளையுடைய மரக் கொப்பு, கொள்ளை நோய், அலக்குத்தடி, துன்பம்

அலம்பு - வறுமை.

அலரி - பூ, கண்வரி, ஞாயிறு, தேனீ, நீராவி, கோதுமை, அழகு; பூப்பொது.

அலர்தல் – மலர்தல்; விரிதல்; மகிழ்தல்

அலவல் – அலமரல்; கந்தைச் சீலை; அலைவலை: சந்தை; மனச்சஞ்சலம்; ஆராயாத செயல்; எண்ணாத காரியம்; அலவற்க; அலவுக.

அலவாங்கு - கடற்பாரை; குத்துப்பாரை.

அலறல் – கத்துதல்; அழுதல்; புலம்பல்; ஒலித்தல்.

அலற்றுதல் – இடைவிடாமலும் முறையில்லாமலும் பேசுதல்.

அலிக்கிரகம் – சனி; புதன் என்னுங் கிரகங்கள்

அலியெழுத்து – ஆய்தம் (ஃ)

அலுத்தன் – அவாவற்றிருப்பவன்

அலுப்பு – அயர்வு; சலிப்பு

அலுவல் – வேலை; பணி

அலை – நீரலை; கடல்; மிகுதி; வருத்துகை; அலையச் செய்தல்; அலைதல்; கொலை; திரையடித் தொதுக்கிய கருமணல்; நிலம்; மது; கண்டனம்

அலைக்கழித்தல் – அலைத்து வருத்துதல்.

அலைதல் – அசைதல்; திரிதல்; ஆடுதல்; சோம்பல்; துன்பம்; வருந்துதல்; அசைத்தல்

அலைத்தல் – அசைத்தல்; அடித்தல்; அலையச் செய்தல்; கெடுத்தல்; திரையடித்தல்; நீரைக் கலக்குதல்; வருத்துதல்

அல்குல் – பெண்குறி; பக்கம்; நிதம்பம்.

அல்லகண்டம் – துன்பம்; தொல்லை.

அல்லம் – இஞ்சி

அல்லல் – துன்பம்; முடைதல்.

அல்லது – அல்லாமல்.

அல்லி – அகவிதழ்; பூந்தாது; ஆம்பல்; அல்லியரசி; தாமரை, காயாமரம்.

அல்லிப்பிஞ்சு – பூவிழாத பிஞ்சு

அல்லியன் – குழுவைப் பிரிந்த யானை.

அல்லும் பகலும் – இரவும் பகலும்.

அல்லோலகல்லோலம் – ஆரவாரம்.

அவகாசம் – சமயம்; தக்கவிடம்; வீண்; இசைந்தகாலம்; இடம்; இடையேயிருக்கும் இடம்; ஓய்ந்திருக்கும் நேரம்; பரந்த இடம்.

அவகாலம் – வீண்காலம்.

அவகீர்த்தி – புகழ்க்கேடு, இழிவு

அவக்கொடை – வீண் கொடை, வெறுந் தருமம், பயனற்ற தருமம்.

அவசரக்குடுக்கை – பதற்றக்காரன்.

அவசரம் – விரைவு, மிகுதேவை, கோலம்.

அவசித்தாந்தம் – தவறான முடிவு

அவச்சாவு – துர் மரணம்

அவதந்திரம் – சதி யோசனை

அவதாரம்–பிறத்தல், இறங்குகை

அவதானம் – மறப்பின்மை, மேன்மைச் செயல், கவனம், நினைவுத் திறமைச் செயல், சாதுரியம்.

அவதானித்தல் - பிறத்தல், நினைப்பூட்டிக் கொள்ளுதல், மனத்தில் அமைத்தல்.

அவதானி - கருத்துள்ளவன், மறைகளில் தேர்ச்சியுள்ளவன், அவதானஞ் செய்வோன்.

அவதி - வருத்தம், எல்லை, முற்பிறப்பு, முக்காலம், அளவு, இறுதி, கணக்கு, கவனம், கிடங்கு, துன்பம்.

அவதூறு - பழிச்சொல்

அவத்தை - வேதனை, நிலை, துன்பம், தன்மை, ஆபத்து நிலை.

அவநீதன் - நீதியற்றவன்

அவநெறி—தீய வழி.

அவமதி—நிந்தனை, அவமானம் இழிவு.

அவமிருத்து— தீச்சாவு

அவயவம் — உடலின் உறுப்பு

அவரோதம் — அடைக்கப்பட்ட இடம்.

அவலம் —வருத்தம், கேடு, துன்பம், அழுகை, வறுமை, மாயை, குற்றம், நோய், பலவீனம், பயனின்மை

அவல் — ஒருவகைச் சிற்றுணவு, பள்ளம், விளைநிலம், குளம்

அவணி — உலகம்

அவன்—அவம், அவன் என்னுஞ் சுட்டுச்சொல்.

அவா — மிக்க ஆசை, புலன்வழி உள்ளம் ஓடுதல்; இறங்குகை

அவி-சோறு; தேவறுணவு; வேள்விப் பொருள்; நெய்; ஆடு, எலி, கம்பளிப்படாம், காற்று, கதிரவன், தலைவன், நீர்.

அவிசு — உப்பின்றிச் சமைத்த சோறு; தேவருணவு.

அவிச்சை — அவித்தை; அறியாமை; மாயை; பொய்ம்மையானது.

அவிட்டம் — இருபத்தி மூன்றாவது நாள் மீன்.

அவிதல் — பாகமாதல்; புழுங்குதல்; குறைத்தல்; ஒய்தல் ஒடுங்குதல், அழிதல்; அணைந்துபோதல்; இறத்தல்; கெடுதல்; தணிதல்; வருந்தல்.

அவிநயம் - அபிநயம்; ஒரு யாப்பிலக்கண நூல்

அவியல் - வேகவைத்த கறி; புழுக்கம்; பாகஞ் செய்கை; வாய்ப்புண்.

அவிவேகம் - அறிவுக் குறைவு; பகுத்தறிவின்மை; பேதைமை; மந்தம்

அவிவேகி - அறிவீனன்; மந்தன்

அவிழ்தல் - நெகிழ்தல்; பிரிதல்; மலர்தல்; உதிர்தல்.

அவுணர் - அசுரர்; ஊணர்.

அவையறிதல் - சபையின் இயல் புணர்தல்.

அவ்வவர் - அவரவர்; பொதுப் பாலுயர் திணை.

அவ்வாய் - அழகிய இடம்.

அவ்வை - தாய்; ஔவையார்; தவப்பெண்; கிழவி.

அழகி - அழகுடையவள்.

அழகு - சிறப்பு; நூல் வனப்புல் ஒன்று, கண்ட சருக்கரை; மனத்திற்கு இனிமையாகத் தோன்றுவது; தக்க செயல்.

அழம் – பிணம்

அழலல் – எரிதல்; சினத்தல்

அழலவன் – கதிரோன்; செவ்வாய்; தீக்கடவுள்

அழல் – நெருப்பு; வெப்பம்; வெயில்; ஒளி; விடம்; தீக்கொழுந்து; உறைப்பு; எரிவு; நஞ்சு; கார்த்திகை; செவ்வாய்; சினம்; அழுதல்; எருக்கள்ளி; கேட்டை; கொடிவேலிச்செடி; கொதிப்பு.

அழற்சி – எரிவு; அழுக்காறு; உறைப்பு; சினம்; வெப்பம்; கொதிப்பு

அழற்புண் – சிவந்து குருதி வடியும் புண்.

அழிகடை – மிகக் கெட்டது.

அழிசெய்தல் – கெடுத்தல்

அழிதல் – அழித்தல்; வருந்துதல்; ஒழிதல்; தடைப்படுதல்; இகழ்தல்; வறுமைப்படுதல்; இரங்குதல்; கலங்குதல்; குலைதல்; கெடுதல்; சிதறுதல்; தோல்வியடைதல்; நிலைகெடுதல்; மனங்கலங்கல்.

அழித்தல் – கெடுதல், ஒழித்தல், தடவுதல். வருந்துதல், இகழ்தல். வறுமைப்படுத்தல்.

அழிபசி – மிகுந்த பசி

அழிபடல் – வருந்தல், கலங்கல், சிதறல்.

அழிபாடு – அழிவு.

அழிப்பாளி – பொருள் வீணாக அழிப்பவன்.

அழிப்பு – மிகுந்த செலவு செய்தல், அழிவு செய்தல்.

அழிம்பன் – கடன் இறுக்காமல்

புரட்டுகிறவன், வீண் செலவு செய்வோன்.

அழிம்பு – அழிவு, சேதம், நட்டம், வம்பு.

அழியாமை – அழிவின்மை, கெடாமை, அழியாத்தன்மை.

அழிவு - கேடு, தீமை, செலவு, தோல்வி, மனவுறுதியின்மை, குருதி, வருத்தம், வறுமை, வைக்கோல்.

அழுகல் – பதனழிந்தது, அசுத்தம்.

அழுகள்ளன், தொழுகள்ளன் – பாசாங்கு செய்வோன்.

அழுக்கணவன் – ஓர் புழு, புழுக்கூடு.

அழுக்கறுத்தல் – பிறர் ஆக்கங் கண்டு பொறாமை கொள்ளு தல்.

அழுக்கறுப்பான் – பொறாமை கொள்பவன்.

அழுக்காறு – பொறாமை, பொய், தீயநெறி.

அழுக்கு – மலம், மாசு, பொறாமை; அவித்தை, ஆணவம் முதலிய பாசம், தீக்குணங்கள்.

அழுங்காமை – அஞ்சாமை, அலையாமை அழாமை, அழுந்தாமை, ஆரவாரியாமை, இரங்காமை, ஒலியாமை, ஒளிமழுங்காமை, கெடாமை, சோம்பாமை, வருத்தப்படாமை.

அழுத்தம் – இறுக்கம், பிடிமானம், பதிப்பு, உறுதி.

அழுமூஞ்சி – பொலிவற்ற முகமுள்ளவன்.

அழுவமாரி – பெருமழை

அழைத்தல் – கூப்பிடல், ஒலித்தல்.

அளத்தல் – அளவிடுதல், எட்டுதல், கருதுதல், கலத்தல், நுகர்தல், தீண்டுதல், எடுத்தல், முகத்தல், நீட்டல், என்னும் அளவைகள், நியதி செய்தல், பங்கிடல், பிரமாணத்தைக் கொண்டறிதல், மதித்தல், வரையறுத்தல்.

அளப்பறிதல் – உட்கருத்தைத் தந்திரமாக அறிதல்

அளப்பன் – வீணாகப் பேசுவோன் குதர்க்கம்பேசுவோன்.

அளவம் – ஒருவனைப்போல் நடித்துப் பரிகசித்தல்.

அளவளாவல் – கூடி மகிழ்தல் மனங்கலத்தல், கலந்துபேசுதல்

அளவின்மை – மிகுதி

அளவு – எல்லை வரையறை.

அளவுகோல் – நிலம் முதலியவைகளை அளக்கும் கருவி.

அளவுபடுத்துதல் – எல்லை செய்தல்.

அளவை – அளவு, மாத்திரை, தன்மை எல்லை. அளவுநூல், நாள், அளவு கருவி, தருக்கம், பிரமாணம், சமயம், அறிகுறி, ஆராய்ந்தறிதல், ஒரு தருக்க நூல், கால எல்லை.

அளிதல் – அன்புகனிதல், கலத்தல், வருந்தல், புண்படுதல், இகழ்தல், உருகுதல், கரையஅவிதல்.

அளித்தல் – ஈதல், அருளல், காத்தல், சொல்லுதல், தலை

யணி செய்தல்.

அளைதல் – துழாவுதல், கலத்தல், தழுவுதல், அருந்துதல், அனுபவித்தல், புரளுதல், வருடல், குழைதல், கூடியிருத்தல்

அள்ளல் – சேறு, நரகம், கொய்தல், அள்ளுதல், இசைக் கரணங்கள் எட்டில் ஒன்று, நெருக்கம்.

அள்ளியிறைத்தல் – அளவுக்கு மேற் செலவிடுதல்.

அள்ளுகொள்ளை – பெருங்கொள்ளை, மிகுதியான வரவு.

அள்ளுதல் – அள்ளியெடுத்தல், திரளாயெடுத்தல், வாரியெடுத்தல்.

அற – முற்ற, முழுவதும், மிக, தெளிவாக, செவ்வையாக

அறக்கடவுள் – நமன், தருமதேவதை.

அறக்கற்பு – அமைதி நிலை பொருந்திய கற்பு, மறந்தவிர்ந்த கற்பு.

அறக்காடு – சுடுகாடு

அறக்கூழ்ச்சாலை – அறத்தின் பொருட்டு உணவிடும் இடம்.

அறச்சாலை – தரும சத்திரம்.

அறச்சோறு – பிச்சைச்சோறு

அறத்துணைவி – மனைவி, தருமதேவதை.

அறத்துப்பால் – அறத்தைப் பற்றிக் கூறும் பகுப்பு

அறத்துறத்தல் – முற்றத்துறத்தல்.

அறத்துறை – அறவழி, புண்ணியவழி,

அறப்புறம் - அறச்சாலை.

அறம் - கடமை, நோன்பு, தருமம், கற்பு, இல்லறம், துறவறம், நல்வினை, அறநூல், அறக்கடவுள், தருமதேவதை, தீப் பயனுண்டாக்குஞ் சொல், பெரியோர் இயல்பு.

அறவர் - அறஞ் செய்தலைத் தொழிலாகவுடையவர், பெரியோர், முனிவர், அந்தணர், அறத்தைக் கூறுவோர்.

அறவன் - கடவுள், புத்தன், முனிவன், அறங்கூறுவோன்.

அறவாணன் - கடவுள்.

அறவாழி - தருமசக்கரம், அறக்கடல்.

அறவாழியந்தணன் - கடவுள், அருகன்.

அறவாளன் - அறச்செயலுடையவன்.

அறவி - அறத்தையுடையது, பெண்துறவி, அறம், நல்வினையோடு கூடியது, பொதுவிடம்.

அறவிருத்தம் : அறத்திற்கு மாறுபட்டது.

அறவுரை - நீதிநெறி புகலல்.

அறாவட்டி - அதிக வட்டி.

அறாவிலை - அளவுக்கு மேற்பட்ட விலை.

அறிகருவி - அறிதலுக்குரிய கருவிகளாகிய ஞானேந்திரியங்கள்.

அறிகிலாதார் - அறியத்தக்க அறிவில்லாதவர்கள்.

அறிகுறி - அடையாளம்.

அறிக்கை - விளம்பரம், பலரும் அறியுமாறு தெரியப்படுத்துதல்

அறிமடம் – அறிந்தும் அறியாது போன்றிருத்தல், விளையாடும் பருவத்து நிகழும் அறியாமை.

அறிமுகம் – பழக்கம், தெரிந்த முகம்.

அறியாமை – அறியாத தன்மை, ஆணவ மலம்.

அறிவது – அறிவு, அறியத்தக்கது, அறிக

அறிவன் – கம்மாளன், நல்லறிவுடையோன், இறைவன், சிவன், திருமால், அருகன், புத்தன், புதன், செவ்வாய்.

அறிவாளி – அறிஞன்.

அறிவு – ஞானம், உணர்வு, போதனை, அறியவேண்டியது, ஆன்மா, கல்வி, அறியவேண்டியவை.

அறிவுடைமை – உண்மையறிவு உடையனாதல்.

அறுகரிசி – அறுகம்புல்லோடு கூடிய மங்கலவரிசி.

அறுகிடுதல் – திருமணத்தில் அறுகிட்டு வாழ்த்துதல்.

அறுகு அறுகை – அறுகம்புல், சிங்கம்; யானை. யாளி, புலி, ஒரு குறுநில மன்னர்.

அறுசமயம் – சைவம், வைணவம். சாக்தம். சௌரம், காணாபத்தியம், கௌமாரம் ஆகிய ஆறு சமயங்கள்.

அறுசுவை – கைப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு.

அறுதலி – அமங்கலி, விதவை, கைம்பெண்.

அறுதல் - தீர்தல், பாழாதல், அறுந்தது, இல்லாமற்போதல், எதற்குங் கூடாததாதல், கைம் பெண், நூல் கயிறு முதலியன அறுதல், பயனற்றதாதல், அற்றுப்போதல், கொலையுண் டல், தங்கல், வகை செய்தல்.

அறுதி - முடிவு, வரையறை, அழிவு, இல்லாமை, உரிமை, உறுதி செய்தல், நீக்கம், விக் கிரயச் சீட்டு, விலை.

அறுதிச் சாசனம் - கிரயப்பத் திரம்.

அறுத்தல் - ஊடறுத்தல். அரி தல், இல்லாமற் செய்தல், இடை விடுதல், முடிவு செய் தல், வளை தோண்டல், வெட் டுதல்.

அறுத்துப் பேசுதல் - முடிவா கக் கூறுதல்.

அறுத்துமுறி - மனைவியைத் தள்ளிவிடுகை.

அறுந்தொகை - மிச்சமின்றிப் பிரிக்கப்படும் எண்.

அறுபொருள் - பரம்பொருள்.

அறுமீன் - கார்த்திகை மாதம், கார்த்திகை நாள்.

அறுவடை - கதிரறுப்பு.

அறுவை- சீலை, ஆடை, உடை, தோலிடும் உறி, சித்திரை நாள், இரண மருத்துவம்.

அறை - சொல், அற்றது, பாத்தி, அடி, திரை, சிற்றில், வீட்டின் ஒரு பகுதி. ஓசை, வஞ்சினம், வஞ்சனை, பாறை, குன்று, மலையுச்சி, விடை,

பெட்டியின் உட்பகுதி, வகுத்த இடம், பிள்ளைபெறும் அறை, சதுரங்கம் முதலியவற்றின் கட்டம், அம்மி, அறுகை, பாசறை.

அறைதல் – அடித்தல், அலை, காற்று முதலியன அறைதல், ஒலித்தல், துண்டித்தல், பறை முதலியன கொட்டுதல்.

அற்பம்–அணு, இழிவு, இலேசு, சிறுமை, நாய், பஞ்சு, புகை.

அற்புதம் – அதிசயம், அழகு, அறிவு, ஆயிரங்கோடி, வியப்பு, சிதம்பரம்.

அற்புதன் – கடவுள், கண்ணாளன்.

அற்றகாரியம் – முடிந்துபோன வேலை.

அற்றவன் – பற்றற்றவன், பொருளற்றவன்

அற்றார் – வறியோர், துறவிகள், இறந்தோர்; நீங்கப் பெற்றவர்.

அனகன் – அழகுள்ளவன், கடவுள்.

அனந்தஞானம் – கடையிலா அறிவு.

அனந்தம் – அளவின்மை, ஆகாயம், ஒரு பேரெண், பொன்.

அனலம் – தீ, கொடுவேலி,

அனலாடி – சிவன்.

அனலி – கதிரவன்.

அனலேறு – இடி.

அனல் – தீ.

அனவரதம் – எப்போதும்.

அனாதரவு – உதவியின்மை.

அனாதிசைவம் - சைவம் பதினாறுள் முப்பொருள் உண்மையை உறுதிப்படுத்துவது

அனிலம் - காற்று.

அனிவன் - வாயுதேவன்.

அனுகரணம் - ஒன்றன் செயல் போல் செய்கை, அனுகாரம்.

அனுகூலம் - உதவி, நன்மை, காரியசித்தி.

அனுக்கம் - வருத்தம், முணக்கம், அச்சம், நோய்.

அனுக்கிரகம் - அருள், பஞ்ச கிருத்தியத்தொன்று.

அனுங்கல் - அசைதல், இழுகல், ஒன்றோடொன்று முட்டுதல், கெடுதல், புலம்பல், வருந்தல், வாடல், முணுமுணுத்தல்.

அனுசரிப்பு : பின்பற்றுகை, இணக்கம்.

அனுசன் : தம்பி

அனுசை : தங்கை

அனுச்சை : விடை

அனுட்டானம் : அனுஷ்டானம், வழக்கம், தீட்சை பெற்றவர்கள் செய்யும் நாட்கிரியை, ஒழுக்கம்.

அனுபல்லவி : கீர்த்தனத்தில் இரண்டாம் உறுப்பு.

அனுபூதி : அனுபவ அறிவு

அனுபோகம் : இன்பநுகர்ச்சி, பழக்கம், கையாட்சி.

அனுமானம் : கருதலளவை, ஐயம், சமுசயம்.

அனுராகம் : ஒத்த காதல்.

அனைத்து : அத்தன்மையது, அவ்வளவு, எல்லாம்.

அனைத்தும் : எல்லாம்.

அன்பன் : கணவன், தோழன்

அன்பிலி : அன்பில்லாதவன்

அன்பு : தொடர்புடையாரிடம் உண்டாகும் பற்று, சிவம்

அன்புகூர்தல் : பற்றுக்கொள்ளுதல்.

அன்றில் : ஒரு பறவை, மூல நாள், கிரவுஞ்ச பட்சி, இணை பிரியாப் பறவை.

அன்று : முன்பு, முற்பிறப்பு, அந்நாள், மாறுபாடு, அசை நிலை.

அன்னபானம் - சோறுந் தண்ணீரும்.

அன்னப் பிராசனம் : சோறூட்டல்.

அன்னம் : அன்னப்புள், சோறு, கவரிமா.

அன்னியம் : வேறு.

அன்னை : தாய், தமக்கை, பார்வதி.

ஆ

ஆ - பசுப்பொது வகை, இரண்டாவது உயிர் எழுத்து, ஆச்சா மரம், ஆன்மா, வரை, அற்பம், மறுப்பு, நினைவு உடன்பாடு, நிந்தை, துன்பம், வியப்பு, இரக்கம், வினை முதலிய பொருள்களைக் குறிக்கும் ஓர் இடைச்சொல், வினாவிடைச் சொல், வினையெச்சவிகுதி.

ஆக - முழுவதும், ஆகட்டும்.

ஆகடியம்-பரிகாசம், கொடுமை

ஆகமப் பிரமாணம் — காட்சியாலும் அனுமானத்தினாலும் அறியப்படாத பொருளை அறிவிக்கும் ஆப்த வாக்கியமாகிய சாத்திரம்.

ஆகமம் : முதல்வன் வாக்கு, தருமநூல், சாட்சியாக வரும் உறுதிப்பத்திரம்.

ஆகாசக் கப்பல் : வானூர்தி, விமானம்.

ஆகாசக் கல் : விண்ணிற் பறக்கும் அணு.

ஆகாசக்கோட்டை, ஆகாசப் பந்தல் : மனோராச்சியம்.

ஆகாசத் தாமரை : ஒரு நீர்ப் பூண்டு, இல்பொருள், கொட்டைப்பாசி.

ஆகாசம் : வான், விண், வெளி

ஆகாசவாணி : அசரீரி, வானொலி.

ஆகாமியம் : இப்பிறப்பிற் செய்யும் புண்ணிய பாவங்கள்.

ஆகாரம் : உருவம், உடல், நெய், உணவு, அடையாளம், ஆ என்னும் எழுத்து, உள்ளத்தில் நிகழும் கருத்தை வெளிப்படுத்தும் முகத்தோற்றம்.

ஆகாறு : பொருள் வரும் வழி.

ஆகீசன் : ஆனைமுகன்.

ஆகுகன் : விநாயகன்.

ஆகுதல் : செல்வம் பெறுதல், பயன்படுதல், மேலாதல், விளைதல், உண்டாக்குதல், வளர்தல்.

ஆகுபெயர் : ஒன்று மற்றொன்றிற்குத் தொன்றுதொட்டு ஆகி வரும் பெயர்.

ஆகுவாகனன் : பிள்ளையார்.

ஆக்கங் கூறுதல் : ஆசி கூறுதல், வாழ்த்துதல்.

ஆக்கப்பாடு : பேறு.

ஆக்கம் : உண்டு பண்ணுகை, பெருக்கம், உயர்வு, நுகர் பொருள், செல்வம், பொன், பருவம், ஆசி, கொடிப்படை.

ஆக்கியோன் : செய்தோன், ஆசிரியன், இயற்றியோன்.

ஆக்கினை : கட்டளை, தண்டனை.

ஆக்கை : யாக்கை, உடம்பு; கழிகளைக் கட்டும் கயிறு.

ஆங்காரம் : அகங்காரம், செருக்கு.

ஆங்காரி : அகங்காரம் உள்ளவன், செருக்குள்ளவன்.

ஆசமநம் : மந்திரநீர் சிறுக உட்கொள்கை.

ஆசவம் : கள், விரைவு, ஆவேசம்.

ஆசறுதி : முடிவு, கடைசி.

ஆசனம் : இருக்கை, இருக்கை நிலை, எருவாய்.

ஆசாடபூதி : மோசஞ் செய்பவன்.

ஆசாபங்கம் : விரும்பியது பெறாமை.

ஆசாபாசம் : ஆசைவலை.

ஆசாரக் கள்ளன் : ஒழுக்கமுடையவன்போல் நடிக்குங் கள்ளன்.

ஆசாரம் : ஒழுக்கம், வழக்கம், தூய்மை, நன்னடை, வேட்டி, பெருமழை, அரசிருக்கை, கட்டளை, படைவளைப்பு, வழிபாடு, புருடார்த்தம், முறைமை.

ஆசாரியன் : குரு, சமயத் தலைவன், உபாத்தியாயன்.

ஆசான் : ஆசிரியன், வியாழன், புரோகிதன், மூத்தகோன், முருகன், ஒரு பண்.

ஆசி : வாழ்த்து, நன்மொழி, வாழ்த்தணி, சமநிலம், பாம்பின் பல், வேண்டல், போதல்.

ஆசித்தல் : விரும்புதல்.

ஆசியம் : சிரிப்பு, வாய், முகம், நவரசத்துள் ஒன்று, விகடம்.

ஆசிரமம் : முனிவருறைவிடம், பன்னசாலை, வாழ்க்கைநிலை

ஆசிரியப்பா : அகவற்பா.

ஆசிரிய வசனம் : மேற்கோள்.

ஆசிரியன் : ஆசான், குரு.

ஆசிவேடம் : ஆலிங்கனம், அணைப்பு, சார்பு, அணுக்கரின் சேர்க்கை.

ஆசீர்வாதம் : வாழ்த்து.

ஆசுகம் : அப்பு, காற்று, விரைவாய்ப் போதல், பறவை.

ஆசுகவி : 'பாடென'ப் பாடுவோன், கொடுத்த பொருளை அடுத்த கணத்திற் பாடும் பாட்டு.

ஆசுரபாவம் : அசுரத்தன்மை.

ஆசை : அன்பு, திக்கு, நீளம், பொன், விருப்பம்.

ஆசைக்கிழத்தி : வைப்பாட்டி.
ஆசைப்பாடு – விருப்பம்.

ஆசைவார்த்தை : விருப்பம் உண்டாகச் சொல்லும் சொல்.

ஆசௌசம் : அசூசம், தீட்டு, விலக்கு.

ஆச்சி : தாய், பாட்டி, சிறப்பு வாய்ந்த பெண்டிரைக் குறிக்

குஞ் சொல், மூத்த தமக்கை.

ஆசிரமம் : ஆச்சிரமம், ஆச்சி ரயம்.

ஆஸ்தானம் ; அரசவை, சபை.

ஆஸ்திகம் : கடவுளுண்டென் னுங் கொள்கை.

ஆஞ்ஞை : ஆணை, கட்டளை, ஆறு ஆதாரங்களுள் ஒன்று.

ஆடம்பரம் – அலங்காரமான தோற்றம், இடம்பம், இறு மாப்பு, இன்பம், ஒட்டோலக் கம்,

ஆடல் : அசைதல், அளைதல், ஆளுதல், கூத்தாடுதல், செய் தல், சொல்லுதல், நட்புரை யாடல், நீராடல், புணர்தல், பொருதல், விளையாட்டு, வீரம், வெற்றி.

ஆடவன் : ஆண்மகன், இளை ஞன்.

ஆடுதல் : அசைதல், அலைதல், அனுபவித்தல், கலத்தல், கொண்டாடுதல், செய்தல், சொல்லுதல், தோன்றுதல், நீராடல், நடனஞ் செய்தல், பிறத்தல், புணர்தல், முயலு தல், வழங்குதல், வழுவுதல், விளையாடுதல், வெல்லுதல்.

ஆடை : சீலை, தயிர், பாலேடு, சித்திரைமீன், கண்ணிற்படலம்

ஆட்காட்டி : சுட்டுவிரல், பறவை.

ஆட்கொல்லி : கொலைஞன், பணம் ஆட்கொள்ளுதல், அடிமை கொள்ளுதல்.

ஆட்சி : ஆண்மை, ஆளுகை, அனுபவம், ஆன்றோர்வழக்கு, உரிமை, ஒன்றினைத் தன்னுடையதாக அனுபவிக்கை, பழக்கம், முயற்சி, வழக்கம், கோள்நிலை, பயன்கோடல்.

ஆட்செய்தல் – தொண்டு செய்தல்.

ஆட்சேபம் : தடை, மறுத்துக் கூறுதல்.

ஆட்டம் – அசைவு; அலைவு; ஒத்ததன்மை; விளையாடுதல்; கூத்து; அதிகாரம்.

ஆட்டுதல் – அசைத்தல்.

ஆட்டுரல் – ஆட்டுக்கல்.

ஆட்படுதல் – தொண்டனாதல், உயர்நிலையடைதல்; உடல் நலமுறுதல்.

ஆட்பார்த்தல் – வேறாள் வராமற் பார்த்தல்; ஆள் தேடுதல்.

ஆணவம் – செருக்கு; அகங்காரம்; அதிகச் சிறுமை; ஒருவகை மருந்து; தான் பெரியவன் என்னும் எண்ணமுடைமை; மும்மலங்களுள் ஒன்று.

ஆணழகன் – அழகு வாய்ந்தவன்.

ஆணி – முதன்மை; மேன்மை; மேற்கோள்; ஆதாரம்; எல்லை; இரும்பாணி; அச்சாணி; எழுத்தாணி; உரையாணி; புண்ணாணி; மிகுதி காட்டும் விகுதி

ஆணித்தரம் – முதல் தரம்; உறுதி.

ஆணுடம்பு – ஆண்குறி.

ஆணெழுத்து – உயிரெழுத்து.

ஆணை – அடையாளம்; ஆஞ்ஞை; ஆட்சி; ஆளும் அதிகாரம்; ஆன்றோர் மரபு; இலாஞ்சனை; கட்டளை; சத்தியம்; சூளுரை; தடுத்தல்; நீதிமன்றம் முதலிய இடங்களில் கூறும் உறுதி மந்திரம்; மெய்; வஞ்சினம்.

ஆணையோலை – கட்டளையோலை.

ஆண்டவன் – கடவுள்; அரசன்; உடையவன்.

ஆண்டான் - ஆண்டவன்.

ஆண்டி – துறவி; பரதேசி; வரிக்கூத்து வகை.

ஆண்டு – அங்கு; வருடம்; அகவை; ஓர் அசைச்சொல்.

ஆண்பனை – காயாப்பனை.

ஆண்பாடு – ஆண்மக்களின் முயற்சி.

ஆண்பால் – ஆண்சாதி; ஐம்பாலுள் ஒன்று.

ஆண்பால் எழுத்து – அ; இ; உ; எ; ஒ என்னுங் குற்றெழுத்துக்கள்.

ஆண்பெண் – தம்பதி.

ஆண்மகன் – ஆணிற் சிறந்தோன்; கணவன்; மகன்; மனிதன்.

ஆண் மரம் – உள் வயிரமுள்ள மரம்; அழிஞ்சில்.

ஆண்மை – ஆண்மைத்தன்மை; ஆளுந்தன்மை; வீரம்; வெற்றி, மன முயற்சி; வாய்மை உடைமை.

ஆதபன் – கதிரோன்.

ஆதரவு – அன்பு; உதவி; அவா; தேற்றரவு; ஆசை; ஆரம்பம்; உபகாரம்; சிலம்பு; மரக்கலக் கூலிச் சங்கை.

ஆதரவுச் சீட்டு – பற்றுச்சீட்டு.

ஆதவன் – ஆதபன்; பார்ப்பான்; சூரியன்.

ஆதனம் – ஆசனம்; எண்வகை யோக உறுப்புகளில் ஒன்று; சேலை நீளம்; பார்வை; விரித்தல்; உள்ளதாகிய பொருள் நிலைமை.

ஆதாயம் – இலாபமாகிய பொருட்பேறு; வருவாய் இலக்கினத்திற்குப் பதினோராமிடம்; நன்மை.

ஆதாரம் – பற்றுக்கோடு; நிலை; உடல்; பிரமாணம்; மழை; ஆதரவு; இடம்; உடம்பிலுள்ள விசேடமான இடம்; காத்தல்; கொள்கலம்.

ஆதி – முதல்; காரணம்; பழைமை; தொடக்கம்; கடவுள்; குதிரையின் நேரோட்டம்; குதிரைக் கதியுள் ஒன்று; அடகு; அதிசயம்; அருகன்; ஆவாய் எனப் பொருள்படும் முன்னிலை வினைமுற்று இடமாக்கல்; இறைவன்; எசமான்; சூத்திரம்; சூரியன்: திரோதானசத்தி; தொன்மை; வனப்பு; பிரதானம்; புத்தன்; முதலியவை; முதன்மை; முதற்காலம்; முன்னுள்ள பொருள்; திருமால்.

ஆதிகாரணம் – முதற்காரணம்

ஆதிகாலம் – முதற்காலம்.

ஆதிக்கம், ஆதிக்கியம் — தலைமை; உரிமை; அதிகாரத்தன்மை.

ஆதிசைவம் — சைவம் பதினாறில் ஒன்று.

ஆதிதேவன் — சிவபெருமான்; கதிரவன், முதற்கடவுள், நாராயணன், பிரமசைதயன்.

ஆதித்தன் — கதிரவன்; ஆதிக்குரு, வானோன்.

ஆதிநாராயணன் — வச்சிரக்கல், திருமால்.

ஆதிபகவன் — கடவுள், ஆதிபரன்.

ஆதிபத்தியம் — தலைமை.

ஆதிபௌதிகம் — துன்பக் கூட்டங்கள் மூன்றனுள் ஒன்று; அஃது ஐம்பூதங்களால் வருவது

ஆதிமருந்து — சுக்கு; மிளகு; திப்பிலி.

ஆதிமலை — இமயமலை.

ஆதிமுதல் — எல்லாவற்றிற்கும் முன்; கடவுள்; தொடக்கம்; முதல், உலகந்தோன்றிய காலம்

ஆதிமூலம் — முதற்காரணம்; மூலக்காரணம்.

ஆதியந்தம் — முதல் தொடங்கி முடிவுவரை.

ஆதியெழுத்து — உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டுமாகிய முதலெழுத்துக்கள்.

ஆதிவாரம் — ஞாயிற்றுக்கிழமை.

ஆதீனகர்த்தர் — சைவமடாதிபதி

ஆதீனம் — உரிமை; ஆளுகை; சைவமடம்.

ஆத்தி — ஒரு மரவகை.

ஆத்திகன் – கடவுள் உண்டென்போன்; ஆஸ்திகன்.

ஆத்திரம் – பரபரப்பு; சினம்.

ஆத்துமம் – உயிர்.

ஆத்மசத்தி – ஆத்மாவுக்குரிய ஆற்றல்.

ஆத்மஞானம் – தன்னையறிகை

ஆத்மஞானி – தன்னையறிந்தோன்.

ஆத்மானுபவம் – தன்னைத் தான் அனுபவிக்கை.

ஆபத்சகாயன் – துன்பத்தில் உதவுவோன்.

ஆபத்து – இடையூறு; அவசரம்; இடுக்கண்; துன்பம்; பெருந் தேவை.

ஆபரணம் – அணிகலம்; நகை.

ஆபாசித்தல் – உண்மையான பொருளைப்போலத் தோன்றுதல்; அஃதாவது கயிறு பாம்பாகத் தோன்றுவதைப் போன்றது.

ஆப்பிடுதல் – அகப்படுதல்.

ஆப்பு – முனை; நொய்; கட்டப்படுவது; எட்டிமரம்; சரீரம்.

ஆமணக்கு – ஒருவகைச் செடி.

ஆமாம் – உடன்பாட்டுச் சொல்

ஆமிரம் – மாமரம்; புளிப்பு; மாம்பழம்.

ஆம் – ஆகும்; ஈரம்; ஓர் அசைச் சொல்; ஒரு சாரியை; உடன் பாட்டையுணர்த்துஞ் சொல்; நீர்.

ஆம்பல் – அடைவு; இசைக்குழல்; ஊதுகொம்பு; ஒரு பண்; ஓர் எண; கள்; குமுதக் கொடி;

திங்கள்; துதி; துன்பம்; நெல்லி மரம்; புளியாரைப் பூண்டு; மூங்கில்; யானை.

ஆயத்தம் – முன்னேற்றம்; சித்தம்.

ஆயந்தி – தமையன் மனைவி.

ஆயம் – இலாபம்; கவறு; கூட்டம்; திரள்; சுங்கம்; கடமை; சூதாடு தாயம், சூது, தாய், தேட்டம், தோழி, தோழியர் கூட்டம், நாணி, நீளம், பசுத் திரள், பேறு, மகளிர் கூட்டம், மல்லரிப்பறை, வருவாய்.

ஆயர்பாடி – இடையருர், இடைச்சேரி.

ஆயல் – ஆராய்தல், களைந்துவிடல், தியானித்தல், தெரிதல், தெளிதல், நுண்மை, பறித்தல்.

ஆயாசம் – சோர்வு, துன்பம், தளர்ச்சி.

ஆயிரங்காய்ச்சி – மிகுதியாகக் காய்க்குந் தென்னை, பலா, மா போன்ற மரங்கள்.

ஆயு, ஆயுசு – வாழ்நாள்.

ஆயுட்டானம் – சன்மலக்கினத்திலிருந்து எட்டாந்தானம்.

ஆயுட்பொருத்தம் – மணப் பொருத்தங்களுள் ஒன்று.

ஆயுதம் – கருவி, படைக்கலம்.

ஆயுர்வேதம், ஆயுள்வேதம் – மருத்துவக்கலை, அருள்மறை.

ஆயுள் - வாழ்நாள், அப்பொழுது

ஆய்தல் – நுணுகியறிதல், வருந்துதல், அழகமைதல், அசைதல், கொண்டாடுதல், குத்துதல், கொய்தல்.

ஆய்மை - ஆராயுந் தன்மை, நுண்ணிய பொருள்.

ஆய்வு - ஆராய்கை, அகலம், வருத்தம்.

ஆரணங்கு - அரிய தவப்பெண், அரிய தெய்வம், ஆறுதற்கரிய வருத்தம்.

ஆரணியம் - காடு.

ஆரதம் - சைவவுணவு.

ஆரம் - அஞ்சன பாடாணம், ஆட்டதர், ஆத்தி, ஆபரணம், ஒரு பாணம், கடப்பமரம், கண்ணீர், சந்தனக்குழம்பு, சந்தன மரம், சனி, செவ்வாய், நந்தவனம், நுனி, படப்பொறி, பித்தளை, மணிவடம், மாதர் அணிவடம், மாலை, முத்து, முத்துமாலை, போர், பூமாலை, பறவைக் கழுத்துவரி.

ஆரம்பம் - தொடக்கம், கொலை.

ஆரவாரம் - பேரொலி, துக்கம், ஆடம்பரம்.

ஆராட்டு - தாலாட்டு.

ஆராதனை - பூசை, வணக்கம்.

ஆராய்தல் - தேடல், விசாரணை செய்தல்.

ஆராய்ச்சி - சோதனை, துருவிப் பார்க்கை.

ஆராய்ச்சிமணி - முறைவேண்டுவோர் அசைக்க அரண்மனை வாயிலிற் கட்டும் மணி.

ஆராய்வு - நுண்ணறிவு, விசாரித்தல்.

ஆராவுணர்வு - சிற்றறிவு.

ஆரியர் - அறிவாளிகள், ஆசிரி

யர், மிலேச்சர், தொம்பர், உயர்குலத்தோர், தலைவர், ஐயனார், கழைக்கூத்தர், குரு, சிவன், சூரியன், நண்பர், வியாழன், மருத்துவன்.

ஆரோக்கியம் - நோயின்மை.

ஆர் - கூர்மை, அழகு, நிறைவு, நிலம், செவ்வாய், வண்டியகவாய், அச்சுமரம், ஆர்க்கு, ஆரங்கால், ஆத்தி, சரக்கொன்றை, யார் என்னும் வினா.

ஆர்ப்பரித்தல் - ஆரவாரஞ் செய்தல்.

ஆர்ப்பு - பேரொலி, நகைப்பு, மகிழ்ச்சி, போர், கட்டு, நுண்ணியது, ஓங்கவிசைத்தல்.

ஆர்வம் - அன்பு, ஒலி, பத்தி, விருப்பம், பற்றுள்ளம்.

ஆர்வலன் - அன்புடையவன், பரிசிலன், கணவன்.

ஆலயம் - தேவர் கோயில், தங்குமிடம், நகரம், யானைக்கூடம், வீடு.

ஆலவட்டம் - விசிறி.

ஆலாத்தி - ஆரத்தி.

ஆலாப்பறத்தல் - திண்டாடுதல்

ஆலிங்கனம் - தழுவுகை.

ஆலையம் - ஆலயம்.

ஆலோசித்தல் - எண்ணமிடுதல்.

ஆலோலம் - பறவை துரத்தும் ஒலிக்குறிப்பு, நீரொலி, கலக்குதல், பேரிரைச்சல், உரத்துக் கூவுதல்.

ஆவசியகம் - இன்றியமையாதது.

ஆவணம் – அடையாளம், கடைத்தெரு, முறிச்சீட்டு, அடிமைத்தனம், உரிமை.

ஆவணவோலை – உரிமைப் பத்திரம்.

ஆவணி – அவிட்ட நட்சத்திரம், ஆண்டுமுறை அல்லது பருவ வகையில் முதல் திங்கள்.

ஆவர்த்தம் – ஏழு முகில்களுள் நீர் பொழியும் ஒரு முகில், குடி நெருங்கிய இடம், சிந்தித்தல், சுழல் காற்று, சுழி, மயிர்முடி..

ஆவல் – அவா, ஆசை.

ஆவற்காலம் – இறுதி நாள்.

ஆவி – நீராவி, உயிர், நெட்டுயிர்ப்பு, கொட்டாவி, புகை. மணம், ஆன்மா, பரிசுத்த ஆவி, பிட்டு, வலி, பொய்கை, உயிர் எழுத்து, குளம், புகையிலை, வேளிர் தலைவருள் ஒருவன்.

ஆவிபறிதல் – நீராவியெழும்புதல், இறத்தல்.

ஆவேசநீர் – கள்.

ஆவேசம் – பேய், தெய்வமேறுகை, கோபம், உட்புகுதல்.

ஆவேதனம் – அறிக்கை, எச்சரிக்கை, விளம்பரம்.

ஆழம் – ஆழ்ந்திருக்கை, ஆழ்ந்த கருத்து, நுண்ணுணர்வால் அறிய வேண்டிய பொருளுடைமை, நிலப்பரப்பின் கீழ் அளவு.

ஆழம்பார்த்தல் – ஆழத்தையளந்தறிதல், ஒருவன் அறிவு முதலியவற்றை ஆராய்ந்தறிதல்.

ஆழி – கடற்கரை, கடல், சக்கரம், உருளை, வட்டம், மோதிரம், கட்டளை, கணவனைப் பிரிந்த மனைவி யிழைக்குங் கூடற்சுழி, பண்டி.

ஆழ்தல் – ஆழமாதல், அழுந்துதல், மூழ்குதல், வருந்துதல், சோம்புதல்.

ஆழ்வார் – திருமால் அடியார், பத்தியில் ஆழ்ந்தவர்.

ஆழ்வு – ஆழம், பள்ளம், படுகுழி, கிடங்கு, ஆழ்தல், பதிவு

ஆளடிமை – அடிமை.

ஆளல் – ஆளுதல், ஒருவகை மீன்

ஆளன் – ஆள்பவன், கணவன்.

ஆளாதல் – பெருமையடைதல், அடிமையாதல், பருவமடைதல்

ஆளி – ஆள்வோன், யாளி, சிங்கம், செடிவகை கிளிஞ்சல் வகை, ஒரு மரம், ஒழுங்கு, சிங்கராசி.

ஆளுகை – ஆட்சி.

ஆளுடைய பிள்ளையார் – திருஞானசம்பந்தர்.

ஆளுதல் – உடையராதல், பயன் படுத்தல், அரசு செய்தல், வழங்குதல், கைக்கொள்ளல், அடிமை கொள்ளுதல், ஓம்பல்.

ஆள் – ஆண்மகன், துணையாள், சமர்த்தன், வீரன், காலாள், ஊழியன், கணவன், வளர்ந்த ஆள் மட்டம், ஒரு விகுதி, அடிமை, ஆளென்னேவல்.

ஆள் வணங்கி – அரசமரம், தொட்டால்வாடி.

ஆள்வினை – முயற்சி, ஆட்சி, உற்சாகம், இடைவிடாதமெய் முயற்சி.

ஆறப்போடுதல் – காலந்தாழ்த்தல்.

ஆறல் பீறல் – பயனற்றது.

ஆறாடி – தெருத்தோறும் அலைந்து திரிவோன், தூர்த்தன், வஞ்சகன் காமுகன், நிலைகெட்டவன், சமயத்திற்கேற்றபடி பேசுபவன், உறுதியற்ற பேச்சுக்காரன்.

ஆறு – ஒரெண், நதி, ஒழுக்கம், பக்கம், சமயநெறி, விதம், நிலை, வழி, உபாயம், இயல்பு, தன்மை, நன்னெறி, படி.

ஆறுதல் – மனவமைதி, தணிவு, சூடு குறைதல், ஒழிதல்.

ஆறுமுகன் – முருகன்.

ஆற்றமாட்டாமை - முடியாமை, தாங்க முடியாமை.

ஆற்றல் – பொறை, வல்லமை, ஆண்மை, வெற்றி, வாய்மை ஞானம், மிகுதி, இன்னசொல் இன்ன பொருள் உணர்த்தும் என்னும் நியதி, கடைப்பிடி, அறிவு, ஒத்திருத்தல், செய்தல், தாங்குதல், நிலைபெறுதல், வல்லவராந்தன்மை, பெருமை

ஆற்றாமை – தாங்கமுடியாமை, தளர்ச்சி.

ஆற்றுதல் – செய்தல், பொறுத்தல், உய்தல், கூடியதாதல், போதியதாதல், வலியடைதல், தேடுதல், உதவுதல், சுமத்தல்' தணித்தல், உலர்த்தல், நீக்குதல்.

ஆற்றுபவர் – ஆற்றலுடையவர்.

ஆற்றுப்படுத்தல் – வழிப்படுத்தல், போக்குதல், வழிச்செலுத்தல்.

ஆனது — ஆகியது, அன்னது, நிகழ்ந்தது, பொருந்தியது.

ஆனந்தக்கண்ணீர் — மசிழ்ச்சி மிகுதியால் வருங் கண்ணீர்.

ஆனந்தக்களிப்பு மகிழ்ச்சிமிகுதியால் பாடும் ஒருவகைப் பாட்டு

ஆனந்த நித்திரை — யோக நித்திரை.

ஆனந்தமயம் — இன்பம் நிறைந்தது.

ஆனி — ஒரு திங்கள். எல்லை, கேட்டை, மூலநாள், கேடு.

ஆனிரை — பசுக்கூட்டம்

ஆனை — யானை, அத்திமரம்

ஆனைக்கொம்பன் — ஆறுதிங்களில் விளையும் ஒருவகை நெல், ஆனை வாழை.

ஆனைக்கொம்பு : யானைத்தந்தம்.

ஆனைச்சிரங்கு ; பெருஞ்சிரங்கு

ஆனைச்சீரகம் ; பெருஞ்சீரகம்.

ஆனைத்தொழில் : பெருங் காரியம், அரிய செயல், ஆனைபயிற்றுந் தொழில்.

ஆனைமுகன் : மூத்த பிள்ளையார்.

ஆன்மசுத்தி — தசகாரியத்தொன்று.

ஆன்மஞானம் : மெய்யறிவு, தன்னறிவு.

ஆன்மதரிசனம் : தன்னையுணரும் அறிவு.

ஆன்மதரிசனை : ஆத்துமநிலை அறிதல்.

ஆன்மலாபம் : உயிர்ப்பேறு.

ஆன்மா : உயிர், ஆன்மாச்சிரயம்

ஆன்மார்த்த பூசை : தன்பொருட்டுத் தானேசெய்யும் பூசை.

ஆன்றோர் : பெரியோர்

இ

இ – அண்மைச் சுட்டு; ஒருவிகுதி; மூன்றாவது உயிர் எழுத்து.

இஃது – இது.

இகபரம் – இம்மை, மறுமை.

இகபரசாதனம் – இம்மை மறுமைக்கேற்ற வழி.

இகல் – பகை, வலி, போர், சிக்கு, அளவு, புலவி, இகலென்னேவல் ஒப்பு, பெருங்காப்பிய உறுப்பு சுளுநல் ஒன்று. மூட்டு

இகவு – இகழ்ச்சி, இழிவு, கேவலம், தாழ்வு, இகழ்தல்.

இகழ்ச்சி – வெறுப்பு, அவமதிப்பு, குற்றம், ஈனம், நிந்தை.

இகழ்தல்–இழித்துரைத்தல், அவமதித்தல், சோர்தல், மறுத்தல், இழிவு, குறைவு, வெறுப்பு.

இக்கட்டு – நெருக்கடி, தடை, வறுமை, துன்பம், இடையூறு, வெல்லக்கட்டி.

இக்கணம் – இப்பொழுது

இங்கண் – இவ்விடம், ஈங்கு.

இங்கிதம் – இனிமை, குறிப்பு, கருத்து.

இங்கு – பெருங்காயம்

இங்குடுமம் – பெருங்காயம்

இங்குராமம் – பெருங்காயம்

இங்குளி – பெருங்காயம்

இசப்புதல் : ஏமாற்றுதல், வஞ்சித்தல்.

இசிவு - நரம்பிழுப்பு, வேதனை.

இசுப்பு : இழுப்பு

இசை : இசைப்பாட்டு, இசைப்பு இணக்கம், இனிமை, ஒலி, ஓசை, பண், கூடிநிற்றல், கொடை, பண்பு, பாட்டி னிசை, பொன், சொல், புகழ், முத்தமிழுள் ஒன்றாகிய இசைத் தமிழ்மொழி.

இசைகேடு – பழியுண்டாதல், இசை பாடுதல்ல் தவறுதல், சீர்கெட்ட நிலை.

இசைக்கருவி – இசைக்குரிய கரு விகள், அவை, தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி, மிடற்றுக் கருவி, கஞ்சக் கருவி என்பன.

இசைச் சுவை – பால், தேன், கிளான், நெய், ஏலம், வாழை, மாதுளங்கனி முதலியவற்றின் சுவைகள்.

இசைதல்-பொருந்துதல், உடன் படுதல், கிடைத்தல், இயலு தல், பண்ஓசை பொருந்துதல்.

இசைத் தமிழ் – முத்தமிழுள் ஒன்று.

இசைத்தல் - இசை பிறக்க ஒலித் தல், ஈதல், கட்ட, இசைபாடு தல், சொல்லுதல், பொருந்தப் பண்ணுதல், குறிப்பிடுதல்.

இசைப் பாட்டு - இராகவோசை யுடைய பாட்டு, சாகித்தியம்.

இசைப்புள் – அன்றிற் பறவை; குயில்; இசைமிழற்றும்பறவை; பூவை; அசுணம்; கின்னரம்.

இசைப்பொறி – செவி.

இசை மகள், இசை மடந்தை, இசைமாது – கலைமகள்.
இசை மரபு – ஓர் இசை நூல்.
இசை முறை – பண்ணிசைக்கும் முறை.
இசைமை – புகழ்; ஒலி; கீர்த்தி.
இசையாமை – பொருந்தாத் தன்மை.
இசையிலக்கணம் – இசைக்குரிய இலக்கணம்; அவை; ஆடல்; பாடல்; ஆதியிசை; முத்தமிழ்; பண், பாணி; தூக்கு; முடம்; தேசிகம் என்பன.
இசையுரிச்சொல் – ஓசையால் அறியப்படுங் குணச்சொல்.
இசையெச்சம் – எஞ்சிய பொருளுணர்த்துஞ் சொல்.
இசையெடுத்தல் – பாடுதல்.
இசைவுபிசகு – இணக்கமின்மை
இச்சாபத்தியம் – மருந்துண்ணுங் காலத்தில் புணர்ச்சியொழிந்திருத்தல்; கடுகு; நல்லெண்ணெய் முதலியவற்றை நீக்கியுண்ணும் பத்திய உணவு.
இச்சித்தல் – காமமுறல்; விரும்புதல்.
இச்சுக்கொட்டுதல் – புள் ஒலித்தல்; ஒலிக்குறிப்பினால் மறுமொழி கூறுதல்.
இச்சை – விருப்பம்; தொண்டு; வினா; அஞ்ஞானம், ஆசை; இச்சாசக்தி; இட்டம்; உறுதிச்சொல்; பிரியம்; பொய்.
இஞ்சல் – இறுகல்; சுவறல்; காய்தல்; வற்றல்
இஞ்சி – இஞ்சிக்கிழங்கு; பதில்; புறச்சுவர்; கோட்டை; கேடகம்; வாவி.

இஞ்சை – துன்பம்; தீங்கு.

இடக்கு – ஏமாறு; முரண்; எதிரிடை; இழிசொல்; தடை முரட்டுத்தனம்.

இடக்குதல் – விழுதல்; தடுமாறுதல்.

இடக்கு முடக்கு – தொல்லை; குதர்க்கம்; சங்கடம்.

இடங்கணிப்பொறி –கோட்டை மதிலில் வைக்கப்பெறும் இயந்திரங்களில் ஒன்று; இது பகைவர்களைத் தடுத்து நிறுத்தும்.

இடங்கம் – கல்லுளி; காசு; கொடுவாள்.

இடங்கெட்ட பாவி – சீரழிந்தவன்.

இடங்கொடுத்தல் – கண்டிப்பின்றி நடக்கவிடுதல்.

இடங்கோலுதல் – ஆயத்தம் பண்ணுதல்.

இடச்சாரி – இடப் பக்கமாக வரும் நடை.

இடஞ்சுழி - இடப்பக்கம் நோக்கி இருக்கும் சுழி.

இடத்தல் – தோண்டுதல்; குத்தியெடுத்தல்; பெயர்த்தல்; உரித்தல்; பிளவுபடுத்தல்; அகலப் பண்ணுதல்; விரிந்து நிற்றல்.

இடநாகம் – நல்ல பாம்பு.

இடநிலைப்பாலை – பண்வகை

இடந்துடித்தல் – இடக்கண்; இடந்தோள் முதலியன துடித்தல்.

இடபக்கொடியோன் – சிவன்.

இடபம் – எருது; இரண்டாம் இராசி; அரசர் சின்னத்துள்

ஒன்று; ஒரு மலை; கணேசுரர் எண்மரில் ஒருவர்; புல்லாங் குழல் துளைகளுள் ஒன்று.

இடப்பெயர் – இடத்தைக் குறிக்கும் பெயர்ச்சொல்.

இடப்பொருள் – ஏழாம் வேற்றுமைப் பொருள்.

இடம் – இருக்குமிடம்; வீடு; இடப்பக்கம்; அகலம்; ஏற்ற இடம்; காலம்; தொலை; செல்வம்; மிகுதி; விண்; இளக்காரம்; ஓர் இடைச் சொல்; சமயம்; தொலைவு; பெருமை; தானம்; சந்தர்ப்பம்; மூவகை இடம்; வலிமை

இடம்பம் – ஆடம்பரம்.

இடம்புதல் – விலகுதல்; வெறுத்தல்.

இடம்புரி – இடஞ்சுழி; இடைக்கயிறு; ஒரு பூடு; இடம்புரிச் சங்கு; சங்கு.

இடம்பூணி – நுகத்தின் இடப் பக்கத்து மாடு.

இடர் – இடையூறு; துன்பம்; இடைஞ்சல்; வருத்தம்; மிடி; நோய்.

இடர்ப்பாடு – இடர்ப்படுகை; இடர்.

இடலம் – பிரிவு; அகலம்.

இடலித்தல் – விரித்தல்; அகலமாக்கல்.

இடலை – மரவகை; துன்பம்.

இடவம் – நிலம்; உலகம்.

இடவாகுபெயர் – இடத்தின் பெயர் அவ்விடத்துவுள்ள பொருளுக்கு ஆவது.

இடறல் – கால் தடுக்கை; தடை; அபராதம்; இழித்துரைத்தல்.

இடறு – இடையூறு; தடை; ஆபத்து; இடறென்னேவல்.

இடறுகட்டை – தடையாயிருப்பது.

இடறுதல் – தடுக்குதல்; துன்பப்படுதல்; ஏற்றுதல்; மீறுதல்; ஊறுபடுத்துதல்; உழக்குதல்.

இடனறிதல் – வினை செய்தற்குரிய காலத்தை ஆராய்ந்துணர்தல்.

இடாகுபோடுதல் – கால்நடைக்குச் சூடு போடுதல்.

இடாப்பு – அட்டவணை.

இடி – இடியென்னேவல்; வானிடி; முழக்கம்; இந்திரன் கொடி; உறுதிச் சொல்; ஒலி; சிற்றுண்டி; சுண்ணம்; தாக்குகை; தினை முதலியவற்றின் மா; மயிர்ச் சாந்து; கழறுஞ் சொல்; குத்து நோவு.

இடிக்கொடியோன் – இந்திரன்

இடிசல் – நொறுங்கிய தானியம்

இடிதல் – தகர்தல்; அழிதல்; முனைமுறிதல்; வருந்துதல்; முறிதல்.

இடிதாங்கி – கட்டிடத்தின்மீது இடிவிழாதபடி பாதுகாப்பாக வைக்குங் காந்தக் கம்பி.

இடித்தல்-நெருங்கச் செல்லுதல்; கண்டித்துரைத்தல்; சினத்தல்; நோதல்; செல்லல்; துடித்தல்; நசுக்குதல்; பலாத்காரமாக முட்டுதல்; தகர்த்தல்; இடியேறு காலுதல்; மோதுதல்: தூளாக்குதல்; முட்டுதல்; இடியொலித்தல்.

இடித்துக்கூறல் – உறுதிச் சொல் லுரைத்தல்.

இடிபடல், இடிபடுதல் – இடி யுண்ணல்; நொறுங்குதல்; தாக்கப்படுதல்; வெடிபடுதல்; துன்பப்படுதல்.

இடிப்பு – ஒலி; இடி.

இடி மருந்து – சூரண வகை.

இடிமை – பூமி; உலகம்; யானை விழி.

இடிம்பு - அவமதிப்பு.

இடியப்பம், இடியாப்பம் – சிற் றுண்டிவகை.

இடுகாடு – பிணம் புதைக்குமி டம்; சுடுகாடு.

இடுகுதல் – ஒடுங்குதல்; சிறு குதல்.

இடுகுறி – பெயர்; இடுகுறிப் பெயர்.

இடுகுறியாக்கம்– இடுகுறியாக ஒருவன் கொடுத்த அல்லது ஆக்கிக் கொண்ட பெயர்.

இடுகை – கொடை.

இடுக்கண் – துன்பம்; ஒடுக்கம்; நெருக்கம்; வறுமை.

இடுக்கி – குறடு; உலோபி; இடுக்குவது; கொடிறு; எலிப் பொறி.

இடுக்கிப் பனை – கள்ளூறும் பனை.

இடுங்கலம் – கொல்கலம்; குதிர்

இடுதல் – வைத்தல்; போக்கடு தல்; பரிமாறுதல்; கொடுத் தல்; சொரிதல்; குத்துதல்; அணிவித்தல்.

இடுதி – அம்புக்கூடு; அம்பறாத் தூணி; பேழை.

இடுபெயர் – இடுகுறிப்பெயர்.

இடும்பர்– ஒருவகை இராக்கதர், ஒருவகைச் சாதியார், செருக்கர், துயர் செய்வோர்.

இடும்பு – அகந்தை, கொடுஞ் செயல், குறும்பு, துன்பம், வெறுப்பு, தீங்கு.

இடும்பை – துன்பம், தீமை, நோய், வறுமை, அச்சம்.

இடை – இடம், நடு, நுசுப்பு, துன்பம், பக்கம், வழி, இடையர், காலம், சமயம், அளவு, வேறுபாடு, இடையெழுத்து, ஓர் உருபு, நூறு பலம், புதன் மனைவி, மருங்குல், பூரணை

இடைகலை – இடமூக்கு மூச்சு, சந்திரகலை, பார்வதி.

இடைக்கிடை - விட்டு விட்டு.

இடைச்சங்கம் – இரண்டாந் தமிழ்ச் சங்கம்.

இடைச்சி - முல்லைநிலப்பெண், இடையையுடையவள்.

இடைச்சீலை – திரைச்சீலை.

இடைச்செருகல் – ஒருவர் செய்யுளிற் பிறர் சொற்களைச் சேர்க்கை.

இடைச்சொல் – பெயர் வினைகளோடு சார்ந்து வழங்குஞ் சொல்.

இடைஞ்சல் – இக்கட்டு, தடை, நெருக்கம், வருத்தம்.

இடைதெரிதல் – செவ்வியறிதல்

இடைநிலை – நடுவில் நிற்கை, பெயர் வினைகளின் பகுதி விகுதிகளுக்கு இடையில் நிற்றல், இருபுறத்தினுஞ் சாராமல் நிற்றல்.

இடையறா அன்பு -தொடர்ந்த அன்பு.

இடையினம் - இடையெழுத்து.

இடையீடு - தடை, குற்றம், நடுவே தோன்றுகை, நடுவே விடுகை, வேறுபாடு, இடையிட்டுக் கொண்டது.

இடையூறு - துன்பம், தடை.

இடைவிடாமல் - எப்பொழுதும்

இடைவு - தோல்வி, நீக்கம், வெளி, பின்னீடு.

இட்டசித்தி -விரும்பியதடைகை ஒரு பொய்கை.

இட்டம் - விருப்பம், அன்பு, ஆமணக்கு, அடிமை, விடுதலை, கோள் நிலையாலாகும் பலாபலன், தன் மனம்போல் நடக்குந் தன்மை, வேள்விப் பலி, வேள்வி.

இட்டலி - சிற்றுண்டி வகை.

இட்டளறு : யானையை வீழ்த்துங் குழி.

இட்டன் - நண்பன், விருப்பத்திற்கிடமானவன்.

இட்டிகை - செங்கல், இடுக்கு வழி, பலிபீடம்.

இட்டிடை - சிறுமை, துன்பம், சிறுகிய இடை.

இட்டிடைஞ்சல் - இட்டறுதி, முட்டு, துன்பம், வறுமை.

இட்டிது - சிறியது, அண்மை.

இட்டிய - குறுகிய, சிறிய.

இட்டிடு - விவாதம்

இட்டுக்கட்டுதல் - இல்லாததை ஏற்றிச் சொல்லுதல், கற்பனை.

இட்டுரை - சிறப்புரை

இட்டோட்டுதல் - அலைக்கழித்தல், தொந்தரை பண்ணுதல்.

இணக்கம் - இசைவு, ஒப்பு, உடன்பாடு. சேர்மானம், இணங்கு, பொருத்தம், நட்பு, திருத்தம்.

இணக்குதல் - உடன்படுத்தல்.

இணக்கோலை - உடன்படிக்கைப்பத்திரம், பொருந்தோலை

இணங்கல் - உடன்பாடு, பொருந்தல்.

இணங்குதல் - பொருந்துதல்.

இணர் - இதழ், மலர், பூந்தாது, பூங்கொத்து, காய்க்குலை, மதுகை, தொடர்ச்சி, மாமரம், கிச்சிலி மரம், தளிர், இளை ரென்னேவல், ஒழுங்கு.

இணறு - பூ.

இணாப்பல் - ஏய்த்தல்.

இணை - இரட்டை, இரண்டு, துணை, சேர்க்கை, ஒப்பு, எல்லை. இசைவு, கூந்தல், இச்சை, இசையென்னேவல், நால்வகை நரம்புகளுள் ஒரு வகை.

இணைக்கொடைப்பொருள் - திருமணக் காலத்தில் உறவினர் நண்பர் முதலியோர் கொடுக்கும் நன்கொடைப் பொருள்,

இணைதல் - சேர்தல், ஒத்தல். இசைதல், சையோகஞ் செய்தல், பொருந்துதல்.

இணைத்தல் - சேர்த்தல், கட்டுதல், இரண்டை ஒன்றாகச் சேர்த்தல், உவமித்தல், ஒப்பிடல், தொடுத்தல், பொருத்தல்.

இணைப்பு - இசைப்பு, சேர்க்கை.

இணையடி - ஓரலங்காரம், அஃது இரு சீரொன்றாய் வருதல்.

இணையிலின்பம் - ஒப்பற்ற இன்பம்.

இணையெழுத்து - போலியெழுத்து.

இணைவு - ஒன்றிப்பு, கலப்பு, புணர்ச்சி.

இண்டர் - இடையர், நண்பர், சுற்றம், இழமக்கள், சண்டாளர்.

இதக்கை - தோடு.

இதசத்துரு - வெளிநட்புக் காட்டும் பகைவன்.

இதம் - இனிமை, நன்மை, நெஞ்சம், அன்பு இன்பம், இனிய சொல், உயிர்க்கு உறுதியென வேதாகமங்களால் விதிக்கப் பெற்றவை, உரிமை, ஏற்ற தன்மை.

இதயம் - மனம், மார்பு, இருதயம்.

இதரர் - அந்நியர், கீழ்மக்கள்.

இதழவிழ்தல் - மலரல்.

இதழ் - பூவிதழ், உதடு, கண்ணிமை, இமை, கதவுநிலை, வகிர்ந்த ஓலை, புத்தகத்தின் தாள், பனை ஏடு, மாலை, பாளை, சாதிபத்திரி, இலை.

இதள் - பாதரசம், இரதம், சிறுதாறு.

இதிகாசம் - முற்கால வரலாறு, பழங்கதை.

இதி – அத்தாட்சிப் படுத்தல், காண்டல் அளவை, உறுதி, தீர்மானம் பண்ணுதல், காரணம், பி சா ச ம், பிரகாசம், முடிவு.

இத்தால் – இதனால்.

இத்தியாதி, இத்யாதி – இது முதலானவை.

இத்துணை - இவ்வளவு.

இந்தம் – புளி.

இந்தனம் – விறகு, காடு, நறும் புகை.

இந்தா – இதோ, இங்கே வா என்னுங் குறிப்பு மொழி.

இந்திர ஞாலம் – சூரபதுமனுடைய தேர், மாய வித்தை, வஞ்சகச் சொல்.

இந்திரதனு – வானவில்.

இந்திரதிசை – கிழக்கு.

இந்திரவல்லி – முடக்கொற்றான், பிரண்டை.

இந்திரவிகூடல் – அமாவாசை

இந்திரன் – தேவர்கோன் இறைவன், விநாயகன், கடவுள், கேட்டை, மிருகசீரிட நாள், தலைவன், அரசன், புலவன்.

இந்திரா – திருமகள்.

இந்திராபதி – திருமால்.

இந்து – மதி, சந்திரன், மிருகசீரிடம், கர்ப்பூரமரம், இந்துப்பு, எட்டி, கரடி, கரி, கௌரிபாசாணம், சிந்துநதி, இந்துசமயத்தான், வேள்வி.

இந்து புத்திரன் – புதன்.

இந்துப்பு – மருந்து உப்புவகை.

இந்துறு – இலந்தை.

இபங்கம் - புளிமா.

இபுனு - வழித்தோன்றல்.

இப்பாடு - இவ்விடம்,

இப்பால்- இப்பக்கம், இவ்விடம், இம்மை, பின்பு.

இப்பேர்ப்பட்ட - இத்தன்மையான.

இமம் - உறைபனி, குளிர்ந்தநீர்.

இமயம் - இமாலயம், மந்தர மலை, பொன், பொன்மலை, இமம்.

இமலம் - மரமஞ்சள்.

இமவாலுகை - பச்சைக் கற்பூரம்

இமிசித்தல் - துன்புறுத்தல்.

இமிசை -எளிமை, கொல்லுகை, சங்கையீனம், வருத்தம், தீங்கு, துன்பம், கஷ்டம்.

இமிர்தல் - ஒலித்தல், ஊறுதல், மொய்த்தல், முரிதல்.

இமிழல் - ஒலித்தல்.

இமை - கண்ணிமை, கண் விளிம்பு, இமை கொட்டுகை, ஒரு மாத்திரைப் பொழுது, கண்ணிமைப் பொழுது, கரடி, மயில், அற்பம், இமையென் னேவல்.

இமைகொட்டல் - இமைத்தல்.

இமைத்தல் - இமைகொட்டுதல், விட்டு விளங்கல், மின்னுதல், ஒளிவிடுதல், ஒளிசெய்தல், கண்களின் இதழ்கள் இரண்டி னையும் குவித்தல், தூங்குதல்.

இமைப்பு - விளக்கம், இமைப் பளவு, இமைப்பொழுது, ஒளி விளக்கம்.

இமைப்பொழுது - கணம்.

இமைப்போர் - மனிதர்.

இமையாடுதல் - கண்கொட்டுதல்

இம்மியளவு - தேய்த்துகள் எட்டுக் கொண்ட ஓர் அளவு.

இம்மி - பத்து லட்சத்து எழுபத்தையாயிரத்து இரு நூற்றில் ஒரு பங்கு, மத்தங்காய்ப் புல்லரிசி, அணு, ஒரு சிறு நிறை.

இம்மை - இப்பிறப்பு, இவ்வுலகு, இகபோகம்.

இயக்கம் - இயங்குகை, மலசலங்கள், குறிப்பு, வழி, இசைப் பாட்டுவகை, வடதிசை, அசைதல், இயக்க குலத்தினர், செய்தல், ஒலி, பெருமை, போதல், மிகுதி.

இயக்கு - போக்கு, செலவு, அசைவு, நடை, நடத்து, இயக்கென்னேவல்.

இயக்குதல் - செலுத்துதல், பழக்குதல், தொழிற்படுத்துதல், ஒளிப்பித்தல்,

இயங்குதல் - அசைதல், அலைதல், செல்லுதல், போதல், உலாவுதல்.

இயத்தல் - கடத்தல், நடத்தல், நிகழ்தல்.

இயந்திரம் - பொறி, சூத்திரம், தேர்.

இயந்திரி - இத்திமரம், இச்சி.

இயமம் - கொலை, களவு, முதலியன நீக்கிப் புலனடக்குதல், அட்டாங்க யோகத் தொன்று.

இயமன் - நமன், எமன், கூற்றுவன்.

இயம்பல் இயம்புதல் – ஒலித்தல் வாக்கியம் ஒலித்தல், சொல்லுதல், துதித்தல், முழக்குதல், பிதற்றல், பேசல், கதை, காதை, இயம்பல்.

இயலாமை – கூடாமை.

இயலுதல் – கூடியதாதல், பொருந்துதல், நேர்தல், தங்குதல், செய்யப்படுதல், அசைதல், நடத்தல், உலாவுதல், உடன்படுதல், ஒத்தல், இயற்றல்.

இயலொழுக்கம் – நல்லொழுக்கம்.

இயல் – ஆகமம், இயல், இயலென்னேவல், தெரிநிலை வினைப்பகுதி, இயற்கை, இயற்றமிழ், இலக்கணம், ஒழுக்கம், ஒழுங்கு. ஒத்து, குணம், கூறுபாடு, சாயல், தமிழ், தன்மை, நடை, நூற்பகுதி, பொருந்தல், விதி, இயல்பு, ஒப்பு, மென்மை, உழுவலன்பு, செலவு, மாறுபாடு, இசை, விதி, நட, கூடியதாயிரு, பொருந்து.

இயல்பாயிருத்தல் – செல்வாக்குடனிருத்தல்.

இயல்பு – இயற்கை வடிவம், ஒழுக்கம், ஒழுங்கு, குணம், சுபாவம், தகுதி, முறைமை, தன்மை, வரலாறு.

இயல்பு வழக்கு – எப்பொருளுக்கு எப்பெயர் இயல்பலமைந்ததோ அப்பெயரானலேயே அப்பொருளை கச கூறுகை,

இயல்வாணர் – புலவர்.

இயவாகு – கஞ்சி.

இயற்காட்சி – நற்காட்சி.

இயற்கை – இலக்கணம், பான்மை, சுபாவம், வழக்கம், நிலைமை, கொள்கை, இயல்பு, ஏது, குணம், தகுதி, திராணி, முறைமை.

இயற்கை ஞானம் – இயற்கையறிவு.

இயற்கைப் பொருள் – தோன்றியபோது தொடங்கி ஒரு நிலையாகிய பொருள்.

இயற்பெயர் – வழங்குவதற்கு இடப்பட்ட சிறப்புப் பெயர், எக்காரணமும் இன்றி இடப் பட்ட பெயர்.

இயற்றமிழ் – முத்தமிழுள் ஒன்று, செந்தமிழ், வழக்கத்தமிழ்.

இயற்றல் – புதிதாகச் செய்தல், முயற்சி, ஏவுதல், இபற்றுதல்.

இயற்றுதல் – செய்தல், உண்டாக்கல், ஈட்டுதல், நூலியற்றுதல், நடத்துதல்.

இயன்மகள் – கலைமகள்.

இயைதல் – இணங்கல், பொருந்தல், நிரம்பு, ஒத்தல்

இரகசியம் – மறைபொருள், அந்தரங்கம்.

இரகுவமிசம் – ஒரு நூல்.

இரகுவரன் – இராமன்.

இரக்கம் – அருள், மனவுருக்கம், மனவருத்தம், ஒலி, துன்பம், ஐயம்.

இரங்கல் – அழுகை, ஒலி, பிரிவு, வருத்தம், அருள் செய்தல, உள்ளம் உருகுதல், யாழ் நரம்போசை.

இரங்குதல் – மனமிளகுதல், அருள் செய்தல், கூறுதல்.

இரசகுளிகை – இரும்பைப் பொன்னாக்கும் மருந்து.

இரசம் – சுவை, இன்பம், சாறு, மிளகு, நீர், செய்யுட் சுவை, பாதரசம், இரதம், வாயூறு நீர், அனுபோகம், அன்பு, உடம்பிலுள்ள எழுவகைத் தாதுக்களுள் ஒன்று, சுக்கிலம், வாழைவகை, பூந்தாது, மா, அற்புதம், பயம்.

இரசவாதி – இரும்பு முதலிய பிற உலோகங்களைப் பொன்னாக்குபவன்.

இரசாபாசம் – சுவைக்கேடு, சீர்கேடு.

இரச்சு – கயிறு, முடிச்சு, நூல்.

இரட்சகன் – காப்பாற்றுபவன், உய்விப்பவன்.

இரட்சித்தல் – காப்பாற்றுதல், உய்வித்தல்.

இரட்சிப்பு – காப்பாற்றுகை.

இரட்டித்தல் – இருமடங்காக்குதல், திரும்பச் செய்தல், மீளவருதல், மாறுபடுதல், இரண்டுபடுதல்.

இரட்டித்துச் சொல்லுதல் – மீட்டுங் கூறுதல், மாறுபடச் சொல்லுதல்.

இரட்டுதல் – இரட்டித்தல், மாறி மாறியொலித்தல், அசைதல், வீசுதல், தெளித்தல், உச்சரித்தல்.

இரட்டை – சோடி, கணவன் மனைவியர், இரட்டைப் பிள்

ளைகள், இரட்டையெண், மிதுனராசி, ஆனி மாதம்.

இரட்டையர் - இரட்டையாகப் பிறந்தவர்கள்.

இரணகளம் - போர்க்களம்.

இரணங்கொல்லி - தும்பை, ஆடுதின்னாப்பாளை.

இரணதோரணம் - பகைவர்கள் தலையை வெட்டித் தோரணமாக் கட்டுதல்.

இரணம் - புண், போர், பொன், கடன், உப்பு, உணவு, இரை, உவர்நிலம், ஒலி, மாணிக்கம்.

இரணவைத்தியம் - அறுவை மருத்துவம்.

இரண்டுபடுதல் - பிரிவுபடுதல், ஐயுறுதல்.

இரதம் - தேர், சூதம், இனிமை, மாமரம், புணர்ச்சி, பல், சாறு, அன்னரசம், சுவை, வாயூறுநீர், உடல், வண்டல், சப்ததாதுக்களுள் ஒன்று

இரத்தக் கலப்பு : நெருங்கிய உறவு.

இரத்தப் புடையன் : ஒருவகைப் பாம்பு.

இரத்தமாடன் : ஒரு பேய்.

இரத்தம் : சிவப்பு, பவளம், செம்பு, குருதி, செந்நீர், உதிரம், புண்ணீர், குங்குமம்.

இரத்தாசயம் : இருதயம், இரத்தம் தங்குமிடம்.

இரத்தினச் சுருக்கம் : மகளிர் உறுப்பு உவமை முதலியன கூறும் ஒரு சிறிய நூல், ஒரு வைத்திய நூல், அழகுறச் சுருங்கிய செய்தி.

இரத்தினம் ; மணி.
இரப்பாளன் : ஐயமேற்போன்.
இரப்போன் : இரந்துண்ணி, பிச்சைக்காரன்.
இரமடம் : பெருங்காயம்.
இரம்பிலம் ; மிளகு.
இரவலர் : இரப்போர், ஏற்போர்.
இரவற்சோறு : பிறரைச் சார்ந்து பிழைக்கும் பிழைப்பு.
இரவன் : திங்கள்.
இரவி : ஞாயிறு, சூரியன், மலை, வாணிகத் தொழில்.
இரளி : கொன்றை மரம்.
இராகு : கோமேதகம், நவக்கிரகங்களுள் ஒன்று.
இராகு மண்டலம் - பூமியின் சாயை.
இராக்கதன் - அரக்கன்.
இராசகனி - எலுமிச்சம்பழம்.
இராசதந்திரம் - அரசியல், அரசியல் நூல்,
இராசதம் - முக்குணத்தொன்று, இரசோகுணம், அரசு பதவி.
இராசதாணி - தலைநகர்.
இராசபத்தினி - இராணி.
இராசயோகம் - யோகவிசேசம், அரசரது சுக அனுபவ நிலை, சகட யோகம்.
இராசனை - வெள்ளைப் பூண்டு.
இராசி - இணக்கம், ஒழுங்கு, கணக்கின் பொருட்டு எழுதிக் கொள்ளப்பெறும் இலக்கங்கள், குவியல், திரள், கூட்டம், நிரை, சூரியன் கடந்துவரும் இடங்கள், மொத்தம், அதிட்டம், தன்மை, பொருத்தம்.

இராச்சியம் - அரசாளுந் தேசம், உலகு.

இராச்சொல்லாதவன்-நாவிதன்

இராணுவம் - படை, படை வகுப்பு.

இராமராச்சியம் - நல்லரசாட்சி.

இராமவாசகம் - தவறாதவாக்கு

இராயிரம் - இரண்டாயிரம்.

இராவல் - அராவுதல், உராய்தல், தேய்த்தல்.

இருகண் - ஊனக்கண், ஞானக்கண்

இருக்கல் - இருத்தல்.

இருக்கை - இருக்குமிடம், ஆசனம், குடியிருப்பு, கோயில், ஊர்கோள்கள் இருக்கும் இராசி

இருசுடர் - சூரிய சந்திரர்.

இருசுழி - இரட்டைச் சுழி.

இருட்டல் - இருளச் செய்தல், இருளாதல், இருட்டுதல்.

இருட்டு - இருளுடைய காலம், இருட்டென்னேவல்.

இருதயம்-இரத்தாசயம், மனம், கருத்து, நடு

இருதய கமலம் - உள்ளத் தாமரை.

இருதலைக்கொல்லி - இரு பக்கத்தினுந் தீயுள்ள கட்டை, எப்பக்கத்தினுந் துன்பம் செய்வது

இருதலைப்புள் - இரண்டு தலைகளுள்ள பறவை.

இருதலைமணியம் - நண்பன் போல நடித்து இருவருக்குட் கலகம் விளைவிக்குந் தொழில்.

இருதிணை - உயர்திணை, அஃறிணை.

இருத்தல் - இருக்கையில் அமர்ந்திருத்தல், வாழ்ந்திருத்தல், தங்குதல், பொருந்தியிருத்தல், முல்லையுரிப் பொருள், ஒரு துணைவினை, இருக்கையிலிருத்தல்.

இருத்திப் பேசுதல் - அழுத்தமாகச் சொல்லுதல்.

இருத்துதல் - அழுத்தல், இருக்கச் செய்தல், உட்காரச் செய்தல், தாமதிக்கச் செய்தல், அடித்து உட்செலுத்துதல், நிலைபெறச் செய்தல்.

இருநிதி - சங்க பதும நிதிகள்.

இருநிலம் - பூமி.

இருபொருள் - கல்விப் பொருள், செல்வப் பொருள்.

இருப்பிடம் - வசிக்கும் இடம்.

இருப்பு - ஆசனம், இருப்பிடம், நிலை, கையிருப்பு, பொருண்முதல், இருக்கத்தக்கவிடம், மீந்திருப்பவை,

இருப்பு நெஞ்சு - வன்மனம், இரக்கமில்லாத மனம்.

இருப்புலக்கை - இரும்பாலாகிய உலக்கை.

இருமரபு - தாய்வழி தந்தைவழி

இருமருந்து - சோறுந் தண்ணீரும்.

இருமனம் - வஞ்சகம், துணிவின்மை.

இருமை - இம்மை மறுமை, பெருமை கருணை, இருதன்மை, இரண்டு, உள்ளும் புறம்பும், துக்கம்.

இரும்பு - கரும்பொன், ஆயுதம், ஆயுதப் பொது, கிம்புரி, கடி வாளம்.

இருவினையொப்பு - நல்வினை தீவினைப் பயன்களை ஒரே தன்மையாக எண்ணுதல்.

இருளல் – இருளாதல்.

இருளறை – ஆணவமலம்.

இருளி – பன்றி, கருஞ்சீரகம், முலையிலி, நாணம்.

இருளுதல் – இருளாதல், ஒளி மழுங்கல், கருநிற முடையதா தல், மருளல்.

இருள் – மயக்கம், துன்பம், பேதைமை, நரகம். அந்த காரம், இருள் மரம், ஆணவ மலம், மருள், இருட்டு, கறுப்பு, குற்றம், யானை, அறிவின்மை, அறியாமை.

இரேகை – வரி, கைகால் முதலி யவற்றிலுள்ள வரை, எழுத்து, சித்திரம், சந்திரகலை, தராசு படி முதலியவற்றின் அளவு கோடு.

இரைச்சல் – கூச்சல்.

இரைதல் – ஒலித்தல்.

இரைதேர்தல் – உணவு தேடுதல்

இரைதேறுதல் – உணவு செரி யாமல் தங்குதல்.

இரைப்பு – இரைச்சல், மூச்சு வாங்குகை, சுவாச காச நோய்

இரைப்பை – இரைக்குடல்.

இலகு - எளிது, இலேசு, சிறுமை, கால்வகை, அகில், குற்றெ ழுத்து, கனமின்மை, நுண்மை, ஒரு மரம், இலகென்னேவல்.

இலக்சண வழு – இலக்கணப் பிழை,

இலக்கணம் – அழகு, ஒழுங்கு, சிறப்பியல்பு, இயல்பு, அடையாளம், மொழியை அழகுபடுத்தும் நூல்.

இலக்கணி – இலக்கணமறிந்தவன், இலக்கணம் வல்லவன்.

இலக்கம் – எண், நூறாயிரம், குறிப்பொருள், ஒளி, இலக்கு, இலங்குதல், விளங்குதல், எண்ணைக் குறிக்கும் வடிவம், கணிதம், சங்கியை.

இலக்கியம் – இலக்கணம் அமைந்த நூல், எடுத்துக் காட்டும் குறி, இலக்கணம் அமையப்பெற்ற பொருள்.

இலக்கினம் – நன்முழுத்தம், இராசி உதயம்.

இலக்கு – குறிப்பொருள், அம்பெய்யும், இலட்சியம், சமயம், நாடிய பொருள்.

இலக்குதல் – விளங்கச் செய்தல்

இலக்குமி – திருமகள், செல்வம், மஞ்சள், அதிட்டம், அழகு, சீதேவி, திருமால் மனைவி, அமுதபதி மகளிரில் ஒருத்தி, தாரைவீரை என்பவர்களோடு கூடப் பிறந்தவள், இவளே பிறகு மணிமேகலையாகப் பிறந்தாள்,

இலங்கை – ஆற்றிடைக்குறை, ஊர், ஈழமண்டலம், இராவணன் ஊர்.

இலச்சினை – முத்திரை, முத்திரை மேரதிரம், முறி.

இலஞ்சம் –கைக்கூலி, கையுறை, பரிதானம்

இலட்சணம்-இலக்கணம், இடம் குறி, பார்வை, பேரழகு.

இலட்சம் - இலக்கம், அடையாளம், நூறாயிரம்.

இலட்சியம் - மதிப்பு, குறி, அடையாளம்.

இலம் - வறுமை, இல்லறம், இல்லாமை, அறியோம்.

இலவங்கப்பட்டை - ஒரு வாசனைப்பட்டை, கருவாப்பட்டை

இலவங்கப்பூ - கிராம்பு, காதணிவகை.

இலவங்கம் - கிராம்பு, கறுவாமரம், கிராம்பு உண்டாகும்மரம்

இலவசம் - விலையின்றிப் பெறுவது.

இலவம் - அற்பம், இலவங்கம், இலவமரம், அழிவு, கண்ணிமைப்பொழுதில், கிராம்பு, கால தசப் பிரமாணங்களுள் ஒன்று, சாதிக்காய், பசுவாலின் மயிர், பிழைநீக்கல், வணக்கம்.

இலாச்சி - செருகு பெட்டியின் அறை.

இலாடம் -நெற்றி, பரதகண்டத்திலுள்ள ஒருநாடு (வங்காளம்) புளிய மரம், லாடம்.

இலாபம் - ஊதியம், பயன்.

இலாவணியம் - பேரழகு.

இலி - இல்லாதது, இல்லாதவன், எலி.

இலிகம் : எலி.

இலிகிதம் : எழுதப்பட்டது, முடங்கல், கடிதம்.

இலிகிதன் - எழுதுவோன்.

இலிங்கம் – அடையாளம், சிவனுரு, சாதிலிங்கம், ஆண்குறி, ஏது, ஆத்மலிங்கம், இலிங்க புராணம், அனுமானம், உபநிடதம் முப்பத்திரண்டில் ஒன்று, கருவிழியின் நடுவிலிருக்கிற பாவை, கரை, நோய்க்குறி, பிரகிருதி.

இலை – செடிகொடிகளின் இலை, பூவிதழ், வெற்றிலை, ஆயுத வலகு, தகட்டு வடிவு.

இலைக்கறி – கீரை.

இல் – இடம், வீடு, மனைவி, மனை வாழ்க்கை, குடி, இல்லாமை, சாவு, தேற்றாமரம், இராசி, தலைவி, ஒரு விகுதியுருபு, எதிர்மறை இடைநிலை.

இல்லம் – வீடு, தோற்றாமரம், மனைவி, இல்வாழ்க்கை.

இல்லவள் – மனைவி.

இல்லவன் – கணவன்.

இல்லவை – இல்லாப் பொருள்.

இல்லறம் – இல்வாழ்க்கை.

இல்லாக்குடி – வறுமைக்குடும்பம்

இல்லாண்மை – குடும்பத்தை யாளுந்தன்மை,

இல்லாதவன் – வறியவன்.

இல்லாள் – மனைவி, வறுமையுடையவள்.

இல்லான் – வறியவன், கணவன், தலைவன்.

இல்லிடம் – வீடு, அகலம், ஊர்.

இவர் – இவர்கள், இவரென்னும் ஏவல், ஒருவரைக் குறிக்கும் பன்மைச் சொல்.

இவறல் – விருப்பம், பேரவா, ஈயாமை, மறதி, பொருள் கொடாமை, இவறண்மை.

இழத்தல் – தவறவிடுதல், சாகக் கொடுத்தல்.

இழந்த நாள் – பயனின்றிக் கழிந்த நாள்.

இழப்பாளி – பொருளை வீணாகச் செலவழிப்பவன்.

இழப்பு – இழக்கை, இழத்தல், பொருளழிவு.

இழவு – இழக்கை, கேடு, சாவு.

இழிசொல் – பழிச்சொல்.

இழிஞர் - இழிசினர், சண்டாளர், புலையர், கீழ்மக்கள்.

இழிந்தோர் – தாழ்ந்த நிலையில் இருக்கின்றவர்கள்.

இழுக்காறு – தீநெறி.

இழுக்கு –பொல்லாங்கு, நிந்தை, அவலம், குற்றம், தாழ்வு, மறதி, வழுக்குநிலம், உறுப்பு, இழிவு, கீழ்மை, தவறு, வழு, தளர்தல், பழிச்சொல், பொய், வருத்தம், ஈனம், கேடு.

இழுதை – அறிவின்மை, பேய், பொய், அறிவிலான், முட்டாள்

இழுத்தல் – உறிஞ்சல், காலம் நீடித்தல், சுரம்பாடுதல், கழித்து வாங்குதல், நீடித்துப் பேசுதல், நீளமுடையதாகச் செய்தல், பின் வாங்குதல், புறத்திலுள்ளாரின் குணாகுணங்களை வெளிப்படுத்தல், வசமாக்கல், வலித்தல், ஈர்த்தல், கவர்தல், ஒலியை நீட்டுதல், வலிந்து தொடர்பு படுத்துதல்.

இழுபறிப்படுதல் - தொல்லைப் படுத்தல்.

இழுபறி - போராட்டம், தொந் தரை, வாது.

இழுப்பு - இழுக்கை, கவர்ச்சி, இசிவு நோய், நீரிழப்பு, கால தாமதம், குறைவு.

இழுவல் - இழுக்கை, காலந் தாழ்த்தல், சுறுசுறுப்பில்லாத வன், வேலையை மெதுவாகச் செய்பவன்.

இழை - அணிகலன், நூற்கயிறு, பஞ்சுநூல், இழையென்னேவல்

இழைத்தல் - செய்தல், பதித் துசசெய்தல், நூற்றல், செதுக் குதல், வரைதல், மூச்சிரைத் தல், கலத்தல், சூழ்தல், நுண் ணியதாக ஆராய்தல், கூறுதல், விதித்தல், அமைத்தல், இழை யாக்குதல். மாத்திரை முதலி யன உரைத்தல்.

இளகுதல் - குழைதல், நெகிழ் தல், அசைதல், படுதல், களைத்தல், தழைத்தல், மிருது வாதல், தளர்தல்.

இளக்கம் - தளர்ச்சி நெகிழ்ச்சி, மென்மை, இளக்காரம், இள கிய தன்மை.

இளக்காரம் - மன நெகிழ்ச்சி, தாழ்நிலை, குறைவு.

இளங்கதிர் - ஞாயிற்றின் இளங் கதிர், முற்றாக்கதிர்-

இளங்காற்று - மந்தமாருதம்

இளங்கொடி - பெண், சிறு கொடி, நஞ்சுக்கொடி,

இளப்பம் - தாழ்வு, உறுதி யின்மை, மென்மை,

இளமழை - சிறுபெயருள்ள முகில், சிறுமழை, பயன்படும்மழை.

இளமை - சிறுபருவம், அறிவின்மை, மென்மை, இளைய தன்மை, குழவி, குழவு, மழவு, முருகு.

இளவல் - தம்பி, சிறுவன், குமரன், இளையோன், குழந்தை, முதிராதது.

இளவாடை - வடக்கிலிருந்து வரும் மெல்லிய இளங்காற்று.

இளவேனில்-சித்திரை, வைகாசி மாதங்கள்.

இளித்தல் - பல்லைக் காட்டுதல், எள்ளுதலை இகழ்தல்.

இளைத்தல் - மெலிதல், சோர்தல், பின்னடைதல், ஆற்றல் குறைதல், தளர்தல், வளங்குன்றுதல்.

இளைப்பாறுதல் - விடாய்நீங்குதல், வேலை விட்டிருத்தல்.

இளைப்பு - சோர்வு, வருத்தம்.

இளையபிள்ளையார் - முருகக் கடவுள்.

இளையர் - இளைஞர், சேவகர், வேலைக்காரர்.

இளையாள் - சிறியவள், சீதேவி, இளைய தாரம்.

இறக்கம் - சரிவு, இறங்குகை, இறங்கும் துறை, நிலை தவறுகை, இறப்பு.

இறக்குதுறை - பண்டம் இறக்கும் துறைமுகம்.

இறக்கை - சிறகு; இறத்தல்.

இறங்குதல் - நாணுதல்; இழிதல்; தாழ்தல்; நிலைகுலைதல்; தங்குதல்; கீழ்நோக்குதல்; கீழ்ப்படுதல்; வளைதல்; சரிதல்; தாழ்வடைதல்; அவரோகணம்.

இறங்குதுறை - இழியும் நீர்த்துறை.

இறத்தல் - சாதல், மிகுதல்; கடத்தல்; நீங்குதல்; கழலுதல்; வழக்கு வீழ்தல்.

இறந்த காலம் – சென்றகாலம்.

இறப்பு – மிகைச் செய்கை; வீட்டின் இறப்பு; சாவு; இறந்த காலம்; அதிக் கிரமம்; மிகுதி: உயர்ந்த பொருள், செயலின் முடிபு, அழிகை.

இறவு - சாவு; இறத்தல்; இழிவு, இயற்கை; தாழ்வுற்றசமயம்; எல்லை; செல்கை; மிகுதி; வீட்டிறப்பு; நீக்கம், தேன்கூடு; இறால்மீன்; இறுதல்.

இறாஞ்சுதல் – உராஞ்சுதல், தட்டியெடுத்தல், பட்சியறைதல், பருந்து இறாஞ்சல்.

இறுகிய – உறைந்த, சிக்கென்ற, இறுகின, இறுக

இறுகின கை - ஈயாத கை,

இறுகுதல் – கட்டியாதல், அழுத்தமாதல், உறைதல், நெருங்குதல், மூர்ச்சித்தல். நிலைபெறுதல், முடிச்சு முதலியன இறுகுதல்.

இறுக்கம் – கையழுத்தம், முட்டுப்பாடு, புழுக்கம், அழுத்தம், ஒடுக்கம், பிசினித்தனம்.

இறுக்குதல் – அழுந்தக் கட்டுதல், இறுக உடுத்தல், ஒடுக்குதல்.

இறுதி – முடிவு, சாவு, வரையறை, அழிவு, எல்லை, அளவு, மகாசங்காரம், முடிந்த காலம், முடிந்த இடம்.

இறுதி வேள்வி – அந்தியேட்டி.

இறுமாப்பு – பெருமை பாராட்டுகை, செருக்கு, நிமிர்ச்சி.

இறை – அணு, அரசன், அரசியல், அற்பம். இறகு, இறந்துபடுதல், இறைப் பொழுது, இறைமை, உடலுறுப்பின் மூட்டுவாய், உயர்ச்சி, உயர்ந்தோன், ஊழித்தீ, எப்பொருட்கும் இறைவன், கடமை, கடவுள், கடன், கணவன், காலவிரைவு, குடியிறை, கை, கையிலணியிந்தொடி, கையிறை, கைவிரல், சந்து, சிவன், சிறகு, சிறுமை, தங்கல், தமையன், தலை, தலைமையானது, நடுவுநிற்றல், நான்முகன், நீர் முதலியன இறைத்தல், நுட்பம், நோய், மறுமொழி, மாமரம், முன்கை, மூத்தோன், மூலை, வசித்தல், வருத்தம், விட்டுணு, விடை, விரல்வரை, வீட்டிறப்பு. வேற்றரசர், கொடுக்கும்திறை, இறையென்னேவல்.

இறைக்குடி – வரிகொடுப்போன்

இறைச்சி– ஊன், கருப்பொருள், முல்லை, விருப்பமானது, இறைச்சிப் பொருள்.

இறைஞானம் – சிவஞானம்.

இறைஞ்சல் – வணங்கல்.

இறைஞ்சுதல் – தாழ்தல், வணங்குதல், கவிழ்தல், வளைதல்.

இறைத்தல் – நிறைத்தல், மிகுதியாகச் செலவிடுதல், சிதறுதல், நீர் இறைத்தல்.

இறை புரிதல் – அரசாட்சி செய்தல்.

இறைமகன் – அரசன், விநாயகன், முருகன், அரசன் மகன்.

இறைமை – தலைமை, தெய்வத்தன்மை, அரசாட்சி.

இறையவன், இறையோன், இறைவன் – கடவுள், அரசன் சிவன், குரு, நான்முகன், மூத்தோன்.

இறையுணர்வு – பதிஞானம்.

இறைவன் – தலைவன்; கடவுள்; குரு; அரசன்; மூத்தோன்; எப்பொருளினுந் தங்குகிறவன்; சிவன்; சிவனார் வேம்பு; பிதா; பரமன்.

இறைவி – தலைவி; தாய்; அரசி; உமை.

இனத்தார் – சுற்றத்தார்.

இனபந்து – சுற்றம்

இனம் – அரசர்க்குறுதிச் சுற்றம்; இன்னம்; குலம்; கூட்டம்; தொடர்பு; சுற்றம்; நிறை; பசுக்கூட்டம்; அமைச்சர்கள்; வர்க்கம்.

இனாம் – பயன் நோக்காக் கொடை; நன்கொடை.

இனி – இனிமேல்; இப்போது; இப்பால்; பின்பு; இதுமுதல்

இனிது–இன்பந்தருவது; நன்மையானது; நன்றாக, இனிமையுடையது.

இனிப்பு – தித்திப்பு; மகிழ்ச்சி.

இனிமை – தித்திப்பு;இன்பம்

இன்சொல் – பிரிய வசனம்.

இன்பதுன்பம் – சுகதுக்கம்.

இன்பம் – அகமகிழ்ச்சி; ஆனந்தம்; இனிமை; சிற்றின்பம்; நவரசத்துள் ஒன்று; நால்வகை நூற்பயன்களுள்ஒன்று; காமம்; கலியாணம்.

இன்புறவு - மகிழ்கை.

இன்மை - இல்லாமை; உடைமைக்கு மறுதலை; வறுமை; அறுவகை வழக்கினுள் ஒன்று.

இன்றியமையாமை - இல்லாமல் நிறையாமை; இல்லாமல் முடியாமை

இன்று – இந்தநாள்: இப்பொழுது; அசைச்சொல்.

இன்னல் - துன்பம்; குற்றம்; தீமை.

இன்னா – துன்பம்; தீங்கு தருபவை; ஆகாமை; இகழ்ச்சி; கீழ்மை; தீமை; வெறுப்பு; துன்பம் தருபவை.

இன்னாச்சொல் – கடுஞ்சொல்.

இன்னாமை – ஆகாமை; தவறு; தீமை; துயரம்; வேண்டாமை; துன்பம்; இன்னாப்பு.

ஈ

ஈ – நான்காவது உயிரெழுத்து; அம்பு; அழிவு; இந்திரவில்; ஈயென்னும் சிறுபறவை; ஈயென்னேவல்; ஒரு முன்னிலையசைச்சொல்; குகை; கொசுகு; தாமரையிதழ்; திருமகள்; நாமகள்; தேன்வண்டு; தேனீ; நரி; பாம்பு, பார்வதி, வண்டு.

ஈகை - இண்டங்கொடி; கற்பக மரம்; காடை; கொடை; பொன்; முகில்; வண்மை.

ஈகையன் - கொடையாளன்.

ஈசல் - சிறகு முளைத்த கறையான்; சீழ்க்கை; ஈயல்.

ஈசன் - அரசன்; ஆள்பவன்; உருத்திரமூர்த்தி; எப்பொருட்கும் இறைவன்; கடவுள்; கணவன்; குரு; கௌரிபாசாணம்; திருமால்; சிவன்; நான்முகன்; மகேசுவரன்; மூத்தோன்; பச்சைக் கற்பூரம்.

ஈசானம் - வடகீழ்த்திசை; சிவன் ஐம்முகத் தொன்று.

ஈசானியம் - வடகீழ்த்திசை.

ஈசுவை - பொறாமை.

ஈடு - உவமை; ஒரு மருந்து; குழைவு; கடன் பெறுதற்கு வைத்த அடகு; பெருமை; பதில்: வலி; இடுகை; இடுதல்; பிறர்பால் ஒப்புவித்தல்; மணமக்களின் பொருத்தங்கள்; தகுதி; பிணை; கைம்மாறு; மனக்கனிவு;

ஈடுகட்டுதல் - பிணைகொடுத்தல்; பிணையாதல்; பொருள் இழப்பிற்கு ஈடுகட்டுதல்.

ஈடேறுதல் - உய்யப் பெறுதல்; கடைத் தேறுதல்; வாழ்வடைதல்.

ஈட்டம் - கூட்டம்; பொருளீட்டுகை; தேட்டம்; மிகுதி; வலிமை; திரள்.

ஈட்டல் - தேடுதல்; தொகுத்தல்; செய்தல்.

ஈதல் - கொடுத்தல்; அருளல்; இடுதல்; உதவல்; படிப்பித்தல்.

ஈரப்பற்று-அன்புப்பற்று; நன்றி

ஈரம் – அருள்; அழகு; அறிவு; அன்பு; இறை; கரும்பு; குங்குமப்பூ; குங்குமம்; குளிர்ச்சி: நனைவு; பண்பு; வெள்ளரிப் பழம்.

ஈரல் – ஈருள்; (கல்லீரல், மண்ணீரல்) வருந்துகை; சுருள்; வருத்துதல்; மார்பிலுள்ள ஊன்.

ஈரவன் – சந்திரன்.

ஈராட்டி – இரண்டு மனைவி; காற்று மாறி அடிக்கை; காற்றின் அமைதி; நிலையின்மை.

ஈவிரக்கம் – கொடையும் இரக்கமும், மனக்கசிவு.

ஈவோன் – கொடையாளி; கொடுப்பவன்; கற்பிப்பவன்.

ஈழநாடு – இலங்கை.

ஈளை - காசநோய்; கோழை, இளைப்பிருமல் நோய்.

ஈனம் – அழிவு; இழிவு, கள்ளி, குறைபாடு; கேடு; தள்ளல்; அடம்; இகழ்ச்சி; இழுக்கு; கீழ்மை, குறைவு, தாழ்வு, புன்மை, பொல்லாங்கு.

ஈன்றார் – தாய் தந்தையர்.

ஈன்றாள் – தாய், பார்வதி

ஈன்றான் – தந்தை, நான்முகன்

உ

உ – ஐந்தாவது உயிர் எழுத்து, சிவபிரான், நான்முகன், உமையவள், ஒரு வினையெச்சவிகுதி, ஒரு சாரியை, ஓர் இடைச்சொல், ஒரு தொழிற் பெயர் விகுதி, ஒரு பண்புப் பெயர் விகுதி, சுட்டெழுத்து.

உகத்தல்–விரும்புதல், மகிழ்தல், உயர்தல், உயரப் பறத்தல், மனநிறைவடைதல், விழைதல்

உகந்தது – ஒப்புக்கொள்ளப் பட்டது.

உகந்தார் – நண்பர்.

உகப்பிரளயம் – ஊழி முடிவு. யுகமுடிவு

உகாந்தம் – ஊழி முடிவு.

உக்கிரமம் – மூர்க்கம், ஆங்காரம், சினம்.

உக்கிரம் - கொடுமை கோபம், மூர்க்கம், வேகம். தலைக்காவல், இலாமிச்சை.

உக்குதல் – மக்கிப்போதல், இற்றுப்போதல்.

உசாவுதல் – கேட்டல், ஆராய்தல், கலந்து எண்ணுதல்.

உச்சம் – தலைக்கு நேரிடம், உயர்ந்த நிலை, உச்சந் தலை, வல்லிசை, சிறப்பு.

உச்சரித்தல் – எழுத்துக்களைப் பிறப்பித்தல், உருவிடல்.

உச்சல் –அபகரித்தல், பறித்தல், எறிதல்.

உச்சி – தலை, உச்சந் தலை, நடுப்பகல், வான் முகடு, முதன்மை, எல்லை, முகட்டிடம், நாய், நுனி, சூழி, ஆண் மயிர், நடுத்தலை, புல்லுருவி.

உச்சிகுளிர்தல்– மகிழ்வடைதல்

உச்சிக்காலம் – நண்பகல், உச்சப் பொழுது.

உச்சுக்காட்டல் – நாயைத் தூண்டிவிடுதல்.

உடம்படிக்கை – பொருத்தச் சீட்டு.

உடம்பு — இருப்பிடம், மெய் பிறப்பு, மெய்யெழுத்து.

உடம்பெடுத்தல் — பிறத்தல்.

உடலெழுத்து — மெய்யெழுத்து

உடல் — உடம்பு, பொருள், மெய் யெழுத்து, பொன், காரணம், மாறுபாடு, ஆடையின் கரை யொழிந்த பகுதி, அங்கம், அவ யவம், ஆகம், ஆதாரம், உயிர் நிலை, உரு, உறுப்பு, மேனி வடிவம், உடலென்னேவல்.

உடல்வாசகம் — உறுதிப்பத்தி ரத்தின் நடுச் செய்தி.

உடன் — உடனே, அப்பொழுதே, மூன்றாம் வேற்றுமையின் சொல்லுருபு.

உடன்கட்டை — கணவனுடன் மனைவியும் சிதையேறி எரிந்து இறத்தல்.

உடன்கூட்டு — பங்காளியாயி ருத்தல்.

உடன்படல் — இணங்குதல், சேருதல், நூன்மதங்கள் ஏழி னுள் ஒன்று.

உடன்படிக்கை — ஒப்பந்தம், உறுதிப்பாடு.

உடன்படுதல் — இசைதல்.

உடன்பாடு — மனப்பொருத்தம், இசைவு.

உடன்பிறந்தார் — கூடப்பிறந் தவர்.

உடன்பிறப்பு — ஒரு வயிற்றில் பிறத்தல்.

உடுக்கை — உடை, ஆடை, இடை, சுருங்கிய பறை.

உடுப்பு — ஆடை, அங்கி முதலி யன.

உடும்பு - ஒரு விலங்கு வகை, இஃது இரட்டை நாக்குடையது

உடை - உடுப்பு, உடைமை, செல்வம், வேலமரம், மரம், நெகிழு, தளரு, கெடு, கட்டையைப் பிள, முறுக்கவிழு, தோற்கச்செய், வெளியிடு.

உடைதல் - சாதல், தகர்தல், பிளத்தல், கெடுதல், தோற்றல், உலைதல், நெகிழ்தல், குலைதல், தளர்தல், மலர்தல், முறுக்கவிழ்தல், மனங்கலங்கல், எளிமைப்படுதல், சாய்தல்.

உடைத்தல் - இரித்தல், கெடுத்தல், தகர்த்தல், தளர்த்தல், வருந்துதல், தோற்கச்செய்தல்

உடைப்பெடுத்தல் - வெள்ளத்தாற் கரையழிதல்.

உடைமை - செல்வம், உடைய பொருள், உடையனாந்தன்மை, அணிகலன், உரிமை, உரியவை

உடைவு - தகர்க்கை, உடைப்பு, தோற்றோடுகை, தளர்வு, களவு, இரிவு, கலக்கம், கேடு, மனநெகிழ்ச்சி.

உடையவன் - செல்வன்,

உட்கண் - அறிவு

உட்கரு - உள்ளே அடங்கியிருக்கும் பொருள்.

உட்கருவி - அந்தக்கரணம்.

உட்கருத்து - ஆழ்ந்த கருத்து, உள்நோக்கம்.

உட்படுதல் - உள்ளாதல், கீழாதல், அகப்படுதல், உடன்படுதல், சேர்தல்.

உட்பொருள் - உண்மைக் கருத்து, மறைபொருள்.

உணத்தல் - காயவைத்தல்.

உணராமை - அறியாமை, மயக்கம்.

உணருதல் - உணர்தல்.

உணர்ச்சி - அறிவு, மனம், உணர்கை.

உணர்தல் - அறிதல், கருதுதல், ஆராய்தல்.

உணர்த்தல், உணர்த்துதல் - அறிவித்தல், ஊடல் தீர்த்தல், கற்பித்தல், துயிலெழுப்புதல், நினைப்பூட்டுதல்.

உணர்ந்தோர் - அறிவுடையோர், கற்றுணர்ந்தோர்.

உணர்வு - உணர்ச்சி, ஒழிவு, ஆன்மா, ஊடலும் துயிலும் நீங்கல், தெளிவு, உணர்கை.

உண்டி - உணவு, மாற்றுச்சீட்டு, காணிக்கைக்கலம், இரை, உண்டிகை, உண், நுகர்ச்சி, கொட்டைக் கரந்தை, உண்டியென்னேவல்.

உண்ணா - தொண்டையிலுள்ள சிறு நாக்கு.

உண்ணாக்கு - மேல்நாக்கு, உண்ணா.

உண்ணி - இரத்தம் உண்ணும் பூச்சி, உண்பவன், பாலுண்ணி

உண்ணீர்மை - உள்ளத்தின் தன்மை.

உண்ணுதல் - உணவு கொள்ளுதல், நுகருதல், பொருந்துதல், இசைவாதல்

உண்மலம் - மனமாசு, உள்மாசு

உண்மூலம் - உட்பக்கமாக உண்டாகும் மூலநோய்.

உண்மை – உள்ளது, இயல்பு, அறிவு, மெய். உளதாகை உள்ளதன்மை, மெய்ம்மை, ஊழ்.

உண்மைஞானம் – மெய்யுணர்வு

உதடு – வாயிதழ், அதரம், விளிம்பு, வெட்டுவாய், இதழ், துடி, பாலிகை, முத்தம்.

உதயம் – விடியல், தோற்றம், பிறப்பு, ஊதியம், எழும்புதல், ஒல், சீர்பேறு, புவரி, வைகறை, தோன்றுகை.

உதயசுரம் – ஒருவகைக்காய்ச்சல்

உதயராகம் – காலைப்பண்.

உதயவன் – கதிரவன்.

உதரம் – வயிறு, கருப்பை, யுத்தம், கருப்பம், கீழ் வயிறு.

உதவல் - ஈகை, துணைசெய்கை

உதவாக்கட்டை, உதவாக்கரை – பயனற்றவன், உதவாக்கடை

உதாசீனம் – விருப்பு வெறுப்பின்மை, இகழ்வு, நிந்தை நொதுமல், அலட்சியம்.

உதாரணம் – மேற்கோள். இலக்கியம் எடுத்துக்காட்டல், எதிர் நியாயம்

உதாரன் - கொடையாளி, பேச்சுத் திறமையுள்ளவன்.

உதித்தல் – தோன்றுதல், பருத்தல், உதயமாதல், பிறத்தல், அவதரித்தல்.

உதிப்பு – தோற்றம், ஞானம்.

உதிரக்கட்டு – பூப்புப்படாமை, இரத்தத்தை நிறுத்துகை.

உதிரம் – செந்நீர், குருதி, இரத்தம்.

உதிரன் – செவ்வாய்.

உதிர்த்தல் – வீழ்த்துதல், உடுத்தல், உதிரச்செய்தல், பொடியாக்குதல்.

உதைதல் – உதைத்தல், செலுத்துதல்.

உதைத்தல் – காலின் அடிப்புறத்தாலே தாக்குதல், காலால் எற்றுதல், இழிவுபடுத்தல், அடித்தல், மாறுபடுதல்.

உத்தமம் – முதன்மை, நன்மை.

உத்தமன் – நல்லவன்.

உத்தமாங்கம் – தலை, ஆண்குறி, பெண்குறி.

உத்தமி, உத்தமை · சிறந்தவள்.

உத்தமோத்தமம் : மிகுநன்மை.

உத்தரவாதம் : பொறுப்பு, பிணை, ஈடு, எதிர்வாதம், உத்தரஞ்சொல்லல்.

உத்தரவு : கட்டளை, மறுமொழி, விடுதலை, விடை, அனுமதி, தெய்வ சம்மதம், உத்தரம்.

உத்தரவு கொடுத்தல் : போகச் சொல்லல், விடைதரல், அனுமதியளித்தல், கட்டளை கொடுத்தல், ஏவல்.

உத்தரன் : சிவன், திருமால், விராடன் மகன்,

உத்தரித்தல் : அழுந்தல், அறுப்பித்தல், ஈடு செய்தல், கடன் செலுத்தல், பொறுத்தல், உடன்படல், சாதித்தல், சொற்போரிடல், மறுமொழி சொல்லுதல்.

உத்தாரம் – மறுமொழி, கட்டளை, அனுமதி, அடுப்பு, விடை,

உத்தி : யுக்தி, தந்திரம், கருதல ளவை, பாம்பின் படப்பொறி, தேமல், சேர்க்கை, இசைவு, இணக்கம், தக்கதன்மை, பேச் சறிவு,

உத்தியோகம்-முயற்சி, வேலை.

உத்தேசித்தல் - மதித்தல்

உத்தேசம் - மதிப்பு, நோக்கம், ஏறக்குறைய.

உத்தேசி - மதிப்பிடுவோன்.

உந்தல் - உயர்ச்சி, யாழ் நரம்பு தடவுகை, அசைந்து போகச் செய்தல், தள்ளுதல், அனுப்பு தல், எழும்புதல், எறிதல், ஏறு தல், உயர்தல், செலுத்துதல்

உந்திக்கமலம் -தாமரைமலரை ஒத்த கொப்பூழ்.

உந்திச்சுழி - கொப்பூழ்ச் சுழி

உந்துதல்- ஏறுதல், செலுத்துதல் வீழ்வித்தல், நகர்தல், ஒளிவீ சல், வீசியெறிதல், தெறித்தல், நீங்குதல், பொருந்துதல், எழும் புதல், தள்ளுதல், கொழித்தல்.

உந்துரம் - எலி.

உந்துரு - பெருச்சாளி, எலி.

உபகரணம் - துணைக்கருவி, உதவி, துணைக் காரணம்.

உபகாரம் - ஈகை, உதவி, கா ணிக்கை, வேளாண்மை, கொ டை, பிறருக்கு உதவிசெய்தல்.

உபகரிப்பு - ஆதரிப்பு, ஈகை, உதவி, மலர்ந்த பூ.

உபக்கிரகம் - பெருங் கிரகத் தைச் சுற்றியோடும் சிறுகிரகம்.

உபசரணை - உபசாரம், வழிபாடு.

உபசரித்தல் வழிபாடு செய்தல்.

உபசரிப்பு - உபசரித்தல்.

உபசாரம் - ஒன்றின் தன்மையை மற்றதின்மேல் ஏற்றிக் கூறுவது, முகமன், மரியாதை, உபசார வழக்கு, ஊழியம், வழிபாடு, வாழ்த்து.

உபதேசம் - மதபோதனை, மந்திரபோதனை, கடவுளின் தன்மையைக் கூறுதல், நல்லறிவு கூறுதல், போதித்தல்,

உபதேசியார் - உபபோதகர்

உபதேந்திரியம் - ஆண் பெண் குறிகள்.

உபத்திரவம்-பலாத்காரம், துன்பம், தொந்தரவு, இடுக்கண், கொடுமை, வலுக்கட்டாயம்

உபநயனம் - பூணூற் சடங்கு' மூக்குக் கண்ணாடி.

உபநிடதம் : வேதசார நூல், வேதத்தின் ஞானகாண்டம்.

உபநியாசம் : சொற்பொழிவு.

உபயம் : இரண்டு, கோயிற் காணிக்கை.

உபயோகம் : விரும்பியதை முடித்தற்கு உதவியாக இருப்பது, உதவி, பயன்.

உபரி : மிகுதி, ஒரு மீன், மேல், மேல் விருத்தி.

உபரிகை : மேல் வீடு.

உபவாசம் : உணவொழிதல், உண்ணா நோன்பு.

உபாசனை : வழிபாடு.

உபாதி : வேதனை, கடமை, நோய், காரியம், தடை, தியானம், உடம்பு; தேகசம்பந்தங்களிலே ஐயம்வந்தால் அவற்றுள் மனம் செல்லாமல் நிறுத்தல்; உபாதை; மாரிசம்;வருத்தம்; இடையூறு; துயர்.

உபாத்தி, உபாத்தியாயன் : ஆசிரியன்.

உபாயம் : தந்திரம்; வகை; சூழ்ச்சி; கிட்டவருதல்; சிறிது; நான்கு; சித்தியடையும் வழி.

உப்பங்காற்று : கடற்காற்று

உப்பரிகை : உபரிகை; மேல்வீடு;

உப்பிலாப் பேச்சு : பயனற்ற பேச்சு.

உப்பு : உப்பு; எல்லை, உவர்க்கடல்; அராகம்; இலவணம்; உருசி; உவர்த்தல்; கடல்; மகளிர்; விளையாட்டு; இன்பம்; உப்பங்கழி; ஊது; பொருமு.

உப்புசம் : வயிற்று வீக்கம்; வயிற்றுப் பொருமல்; வயிற்றில் வாயு நிரம்பல்.

உப்புதல் : பருத்தல்; பொங்குதல்

உப்புத்திரி : மலங்கழிக்க ஏற்றுந் திரி.

உமாபதி : சிவபெருமான்

உமிச்சிரங்கு : சிறுசிரங்கு

உமிதல் : கொப்புளித்து உமிழ்தல்; துப்புதல்.

உமிழ்தல் : காறுதல்; கொப்புளித்தல்; சொரிதல்; தெவிட்டல்; வெளிப்படுதல்.

உமேதுவார் : சம்பளமின்றி வேலை பழகுவோன்.

உமையவள், உமையாள் : சவுக்காரம்; பார்வதி; மயிலிறகு

உம்கொட்டுதல் : உடன்படல்; ஒப்புக்கொள்ளல்.

உயர் : உயர்ச்சி; குன்று; மேலேறு; மேன்மையுறு; உயரென்னேவல்.

உயர்குடி : மேலான குலம்.

உயர்சிறப்பு : வீடுபேறு.
உயர் சொல் : மேன்மைப்படுத்துஞ் சொல்.
உயர்ச்சி : உயரம்; மேன்மை; ஏற்றம்; உயர்த்தி; உயர்; உயர்வு; மேல்.
உயர்தல் : மேலெழுதல்; உன்னதமாதல்: வளர்தல்; மேன்மையுறுதல்; நீங்குதல்; நிமிர்தல்; இறுமாப்பு அடைதல்.
உயர்திணை : உயர்ந்தகுணம், மேற்குலம்.
உயர்த்தி : உயர்ச்சி, மேன்மை, உச்சம், உயரச்செய்து; உயரம்.
உயர்த்துதல் : அதிகப்படுத்தல்; கிளர்த்தல்; சுமையெடுத்தல்; உயரச் செய்தல்; மேனிலைக்குக் கொண்டு வருதல்; கனப்படுத்துதல்; இசையெடுத்தல்; தூக்குதல்; மேலாகச் செய்தல்.
உயர்வு : உயர்ச்சி; மிகுதியாதல்; உயரம்; மேன்மை; வருத்தம்; உயர்வு நவிற்சியணி.
உயிரடங்குதல் : மூச்சடங்குதல்
உயிருண்ணுதல் : உயிர் போக்குதல்; பரவசப்படுத்துதல்.
உயிருதவி : பெருந் துன்பமடைந்த பொழுது செய்யுஞ் உதவி.
உயிரொழிதல் : சாதல்.
உயிர் : உயிர்ப்பு, மூச்சு, ஓசை, அழகு, ஆன்மா, பிராணி, உடலை இயக்குவது, உயிர் போல் அருமையானவள், உயிர்க்காற்று, ஒரு நாழிகையில்4320 – ல் ஒரு கூறு.

உயிர்க்கிழவன் : கணவன்

உயிர்த்துணை : இடுக்கணில் உதவுவோன், கணவன், மனைவி.

உயிர்ப்பலி : வீரன் தன் தலையைக் கொற்றவைக்குக் கொடுக்கும்பலி, உயிர்ப்பிச்சை, சீவ பலி.

உயிர்ப்பழி : உயிர்க் கொலை செய்த குற்றம், கொலைசெய்தவனைத் தொடரும் பழி.

உயிர்ப்பித்தல்-பிழைப்பித்தல்.

உயிர்விடுதல் : மிகப் பாடு படுதல், இறத்தல்.

உயில் -- மரண சாசனம், சாவு முறி.

உயுத்தம் : போர்.

உய் – சீவி, உயிர்வாழ், ஈடேறு, தப்பு, தழை, செலுத்து, ஓட்டு, நடத்து, கொடு, உய்யென்னேவல்.

உய்தல் : உயிர்வாழ்தல், ஈடேறுதல், தப்பிப்பிழைத்தல், நீங்குதல், கழிதல், இடுக்கண்களினின்றும் நீங்குதல்.

உய்த்துணர்தல் – ஆராய்ந்தறிதல்.

உய்வனவு – ஈடேற்றம், சீவனம், தழைவு, வாழ்வு.

உய்விடம் – உயிர் கொண்டு பிழைப்பதோரிடம்.

உய்வித்தல் – உய்யச் செய்தல், ஈடேற்றுதல், பிழைப்பித்தல்.

உய்வு – உயிர் சீவித்தல், இடுக்கண்களினின்றும் நீங்கும்வாயில், ஈடேற்றம், பிழைப்பு, தப்புகை.

உய்வை – காடு.

உரசுதல் – உரிஞ்சல், உராய்தல்

உரத்தல் – இறுகுதல், முரடா தல், வலுத்தல், கொந்தளித் தல், மிகுதல்.

உரப்பம் – பெருங்காயம்.

உரப்பு – பேரொலி, முரடு, மனத்திண்மை, அதட்டுகை, உரத்தொலி.

உரப்புதல் – அதட்டுதல், திரண் டொலித்தல், அச்சுறுத்தல்.

உரம் – ஊக்கம், திண்மை, வெற்றி, ஞானம், பாதுகாப்பு, மார்பு, வலி, எரு, சிறப்பு, மனம், மதில், சுளுக்கு, மரவ யிரம், வியூகத்தின் முன்னணி, உள்ளத்தின் மிகுதித் தன்மை, அறிவு, திண்ணிய அறிவு, விரைவு.

உரிதல் – சுழலுதல், கலைதல், முளைத்தல், சீலையைக் களை தல்,

உரித்தல் – கழற்றுதல்.

உரித்தாளி – உரித்தானவன்‘ சொத்துக்குரியவன்.

உரித்திரம் - மரமஞ்சள், மஞ்சள்

உரிமை – நட்புப்பற்றிய சுதந் திரம், உரித்தானது, சுவாதீ னம், அடிமை, தகுதி, மனைவி, இனம், ஒருவனுடைய பொருளை அவனுக்குப் பின் அடைதற்கு ஆகுந் தன்மை, கடமை விருப்பம், பொருள், சிறப்பான குணம்.

உரிமை செப்புதல் – மணம் பேசுதல்,

உரிமைப்பாடு : உரித்து; உரிய கடமை.

உரிமைப்பிள்ளை : சுவீகார புத்திரன்.

உருகுதல் : மனங்கரைதல்; இளகுதல்; ஒழுகுதல்; மெலிதல். உருகல்.

உருகை : புல்லூரி, அறுகம்புல்;

உருக்கம் : இரக்கம்; அன்பு, மனநெகிழ்ச்சி.

உருக்குதல் : இளகிவிழச்செய்தல், மனநெகிழ்த்துதல், மெலியச்செய்தல், அழித்தல், வருத்துதல்.

உருட்டல் உருட்டுதல் : உருளச்செய்தல், வருத்துதல், வெல்லுதல், மருட்டுதல், இசைக்கரணங்கள் எட்டினுள் ஒன்று, உருண்டைசெய்தல், கவறெறிதல், தருக்கம்பேசி பிதற்றல், புரட்டித் தள்ளல், மத்தளத்தை விரைவாக அடித்தல்.

உருட்டிப்பார்த்தல் : சினத்துடன் பார்த்தல்.

உருட்டிப்போடுதல் : பேச்சால் மருட்டி வெல்லுதல், அழித்து விடுதல்.

உருட்டு : உருட்டுகை, சக்கரம், திரட்சி, வெருட்டு.

உருட்டுப் புரட்டு : வஞ்சகச் செயல்.

உருண்டை : உண்டை, திரட்சி.

உருத்தல் : கடுஞ்சினங் கொள்ளுதல், வெப்பமுறச்செய்தல், அழலுதல், முதிர்தல், ஒத்தல், தோன்றுதல், நினைத்தல், அரத்தல்.

உருத்திரகணம் : சிவகணம், சிவனடியார்.

உருத்திரசடை : திருநீற்றுப் பச்சை.

உருத்திரபூமி : சுடுகாடு, மயானம்.

உருத்திரம் : பெருஞ்சினம், அச்சுறுத்தல், ஒருமறை, சுவையலங்காரவகைகளுள் ஒன்று, மஞ்சள்

உருத்திரன் : சிவன், தீக்கடவுள், சிவகணத்தோன், ஆன்மாக்களினது துன்பத்தை போக்குவோன் சிவசாரூபம் பெற்றவன், பெருஞ் சினத்தையுடையவன்.

உருபு : உருவம், வேற்றுமை உருபு முதலிய இடைச்சொல், நிறம், வடிவம்.

உருப்படி - உருவுடைப் பொருளின் தொகை, கணக்கிடக் கூடிய பொருள்.

உருப்படியாதல் - உருவாதல்

உருப்படுதல் : சீர்படுதல் உருவாதல், உருவேறல், சன்னதங் கொள்ளல்.

உருப்படுத்தல் : உருவாக்கல்

உருப்பம் : வெப்பம், சினம்.

உருவம் : வடிவம், உடல், சிலை, மந்திரஉரு' அழகு, நிறம்.

உருவுதல் : உறைகழித்தல், தடவிவிடுதல், ஊடுறுவுதல்.

உருளரிசி : கொத்தமல்லி.

உருளல் : உருளுதல்.

உருளாயம் : சூதாட்டம், சூதாட்ட ஆதாயம், உருள்கவறு.

உருளி : உருளை, வட்டம், உருள்வது, எலும்புமூட்டு, உரோகிணி நாள், ஒருவகை வெண்கலஏனம்

உருளுதல் : அழிதல், உருண்டையாகத் திரளுதல், கீழ்மேலாக வருதல்.

உருளை ; சக்கரம், உருண்டை, உரோகிணி நாள், வண்டி, முட்டை, வட்டம், வெள்ளைப் பாசாணம், தேர் முதலியவற்றின் சில்.

உரூபம் - உருவம், அடையாளம், இனம், சுபாவம்.

உரை - சொல், சொற்பொருள், அறிவுரை, பழிப்புரை, பொன், நூல், புகழ், மாற்று, எழுத்தின் ஒலி, புகழுரை, விரிவுரை, விடை, ஆசிரிய வசனம், ஆகமப் பிரமாணம், உரையென்னேவல்.

உரைகலங்குதல் – பேச்சுத் தடுமாறுதல்,

உரைகல் – பொன்னுரைக்குங்கல்

உரைதல் - தேய்தல், வீணாதல்.

உரைத்தல் – சொல்லுதல், ஒலித்தல், தடவல், தேய்த்தல், பூசுதல், மெருகிடுதல், மாற்றறிய உரைத்தல்.

உரைநடை – பேச்சுநடை,

உரையாடல் - பேசுதல்.

உரோமம் – மயிர், புறமயிர்.

உலகஞானம் - உலகத்தைப் பற்றிய அறிவு, கருவி நூலறிவு.

உலகத்தார் - உலகிலுள்ளார், உயர்ந்தோர், உலகப்பற்றுடையார், மாந்தர், மனிதர், மக்கள்

உலகப்புரட்டன் – மிகுபுரளிக்காரன்.

உலகம் - உலகு, உலகப்பொது, நிலப் பகுதி, உலகுயிர்கள், நாடு, ஒழுக்கம், உயர்ந்தோர்,

உலகவழக்கம் – உலகநீதி, உலகாசாரம், உலகமுறை.

உலகாசாரம் – உலக வழக்கம்.

உலகியல் – உலக நடை, உலக வழக்கம், உலகியற்கை,

உலக்கை - அழிவு, நெல்குற்றுங் கருவி, திருவோணம், வெருகன் கிழங்கு.

உலக்கைக்கொழுந்து – அறிவு குறைந்தவன்.

உலரல் – காய்தல்.

உலவுதல் - உலாவல்.

உலாத்துதல் – உலாவுதல். உலாவச் செய்தல், பரவச் செய்தல்.

உலாவுதல் - சஞ்சரித்தல், பவனி வருதல், இயங்குதல், ஓடிப்பரவுதல், சூழ்தல், நிறைதல்.

உலுக்கல் – உலுக்குதல்.

உலுக்குதல் - குலுக்குதல், நடுங்குதல்

உலுத்தன் – உலோபி.

உலுப்புதல் - உதிர்த்தல்.

உலுவம் - வெந்தயம்.

உலுவா - பெருஞ்சீரகம்,

உலை - கொல்லன் உலை, நீருலை, உலைச்சாலை, நடுக்கம், நெருப்பு மூடப்பட்ட அடுப்பு, அரிசியிடுவதற்கு அடுப்பில் வைத்துள்ள நீர், உலையென்னேவல்.

உலைக்களம் – கொல்லன் உலைக்களம், உலோகங்கள் உருக்குமிடம்.

உலைதல் – நிலைகுலைதல், வருந்துதல், அஞ்சுதல், அழிதல், அலைதல், கலைந்துபோ

தல், கெடுதல், சீரழிதல், பலங் குறைதல், மனங் கலங்கல், வருந்தித் திரிதல்.

உலைத்தல் - கெடுத்தல், கலைத் தல், வருத்துதல், முறியடித் தல், அழித்தல், மனங்கலங்கச் செய்தல், அலைத்தல்.

உலைப்பு - அலைப்பு, அழித் தல், வருந்துதல், முறியடிக்கை

உலைமூக்கு - கொல்லன் உலை யில் துருத்தி வைக்கும் துவாரம்

உலோகம் - பொன் முதலிய தாதுப் பொருள்கள், ஊலம், கனிப்பொருள், அகில் மரம், ஆயுதம், குருதி, இரும்பு, உருக்கு, உலகத்திற்கு அடுத்த தன்மை, கூட்டம்.

உலோகாதீதம் - உலகத்திற்கு எட்டாதது, மேற்பட்டது, எல் லாங் கடந்தது, கடவுள் மயம்.

உவத்தல் - மகிழ்தல், அவாவல், விரும்பல்

உவப்பு - உயரம், விருப்பம், பொலிவு, மகிழ்வு, விளை யாட்டு.

உவமானம் - உபமானம்.

உவமித்தல் - ஒப்புமை காட்டிக் கூறல்.

உவர் - உப்புத்தன்மை, களர் நிலம், உழமண், வெறுப்பு, உடல், இனிமை, ஒரு சுட்டுப் பெயர்.

உவர்நிலம் - உவர் சேர்ந்தநிலம்

உவர்ப்பு - உப்புச்சுவை, துவர்ப்பு, இகழ்ச்சி, வெறுப்பு, அவாவின்மை, வெறுக்கப்படத் தக்க குணங்கள்.

உவர்மண் - உப்புச்சேர்ந்தமண்

உவாதை - வேதனை.

உவாத்தி - கற்பிப்போன்.

உவாந்தம் - பௌர்ணிமை, அமாவாசை.

உவாமதி - நிறைநிலா, முழுத் திங்கள்.

உழக்குதல் - கலக்குதல், உழுதல், வெல்லல், விளையாடுதல், மிதித்தல்.

உழக்குருட்டுதல் - சூதாடுதல்,

உழப்பாளி - முயற்சியுள்ளவன், கள்ள நியாயம் பேசுவோன்.

உழப்புதல் - மழுப்புதல், போலிவாதஞ் செய்தல், காலங்கடத்துதல், பழகுதல், குழப்பிப் பேசுதல்.

உழவன் - உழவுமாடு, உழுபவன், வீரன்,

உழவாரம் - புற்செதுக்குங்கருவி

உழவு - உழவுதொழில்.

உழவு சாட்டல் - உழுதல்.

உழவுமழை - உழுதற்கு வேண்டிய மழை.

உழற்றுதல் - உழலச் செய்தல், அலையச்செய்தல், சுழற்றுதல், உடம்பு நோயாற் புரளுதல்.

உழு - பிள்ளைப் பூச்சி, உழுவான், உழுவென்னேவல்.

உழுதல் - நிலத்தைக் கிளைத்தல், கிண்டுதல்.

உழுதுண்போர் - வேளாளர்.

உழுதூண் - பயிர்த் தொழில் செய்து வாழ்தல்.

உழுவை - புலி, மீன்வகை,

உழைத்தல் - பாடுபடுதல், வருந்துதல்.

உழைப்பு - முயற்சி, ஈட்டம்.

உளது - மெய்மை.

உளப்பாடு - உட்படுத்துகை, எண்ணம், உள்ள தன்மை, மனத்துயர், இணக்கம்.

உளமை - உண்மை.

உளம் - ஆன்மா, கருத்து, மனம், மார்பு. முயற்சி, உள்ளிடம், உள்ளோம்.

உளர்தல் - கோதுதல், கிண்டுதல், தலைமயிராற்றுதல், அசைத்தல், சிதறுதல். பரப்புதல், பூசல், தடவுதல், யாழ் முதலியன வாசித்தல், தாமதித்தல், சுழலுதல், உறுதியற்று ஆடுதல்.

உளவு - மறை நிகழ்ச்சி, ஒற்றன், வேவு, உபாயம், உண்மைத் தன்மை,

உளறல் உளறுதல் - குழறுபடியான மொழி, தடுமாறிப் பேசுதல், ஆரவாரித்தல்.

உளி - தச்சுக் கருவிகளில் ஒன்று, ஓரிடைச் சொல், பகுதிப் பொருள் விகுதி, கணிச்சி, இடங்கம்,

உளுத்தல் -மரம் முதலியன புழுவால் அரிக்கப்பட்டுக் கெடுதல்

உளைச்சல் - உளைவு.

உளைதல் - மிக வருந்துதல், குடைச்சல், நோயடைதல், விடுபடுதல், சிதறிப் போதல், அழிதல், தோற்றம், ஊளையிடுதல்.

உளைந்து பேசுதல் - மனம் நொந்து பேசுதல்.

உளைவு - உடல் வருத்தம், மன வருத்தம், வலி, குடைவு, வலிப்பு, வயிற்றுளைவு.

உள் - உள்ளம், உள்ளிடம், மறை, மழை, மனவெழுச்சி, ஒரு குறிப்பு வினைப் பகுதி, தொழிற்பெயர் விகுதி, ஏழின் உருபு, உள்ளென்னேவல்.

உள்படுதல் - மனமொப்ப நடத்தல், அறிதல்.

உள்வணக்கம் - மன வணக்கம், அந்தரங்க வழிபாடு.

உள்வழி கடந்தோன் - கடவுள்

உள்வாசல் - முற்றம்.

உள்ளகம் - நெஞ்சு.

உள்ளது - உடையது, உண்மை, ஆன்மா,

உள்ளத்துறைவோன் - கடவுள்

உள்ளந்தாள் - உள்ளங்கால்.

உள்ளமிகுதி - ஊக்கம், உள்ளக் கிளர்ச்சி.

உள்ளம் - மனம், கருத்து, ஊக்கம், அகச்சான்று, ஆன்மா, ஆன்மரூப ஞானம்.

உள்ளரங்கம் - அந்தரங்கம்.

உள்ளறிவு - விஞ்ஞானம்.

உள்ளவன் : பொருளுடையவன்

உள்ளார் : உடையவர், வாழ்ந்திருப்போர், நினையார், பகைவர்.

உள்ளி : வெங்காயம், வெள்ளைப்பூண்டு, தேடி, எண்ணி, கருதி, உள்ளிவிழா.

உள்ளிந்திரியம் : மனம்

உள்ளிருப்பு : வைப்புநிதி

உள்ளீடு : அறிவு, சத்துப்பொருள், உட்கருத்து, உள்ளே இடப்பட்டது.

உள்ளுடை : கோவணம்

உள்ளுயிர் : கடவுள்

உள்ளுருகல் : மனங்கரைதல்

உள்ளெரிச்சல் : பொறாமை

உறவன் : உறவுடையவன்

உறவாடுதல் : உறவு கொண்டாடுதல், நட்புச் செய்தல்.

உறவாளி : உறவு கொண்டவன்

உறவி ; உயிர், எறும்பு, உறவு, கிணறு நீரூற்று, உலைக்களம், பொருத்தம், சுற்றம், நட்பு, உறுகை, விருப்பம், ஊறுபுணல், ஒரு புழு, மலைமுருங்கை.

உறவு : உற்றசமயம், எறும்பு, நண்பு, சேர்க்கை.

உறவோர் : சுற்றத்தார். நண்பர், அடைந்தோர், இனத்தார், தக்கார், நட்டோர், தாயம்.

உறழல் : ஒத்தல், எண்கூட்டிப் பெருக்கல்.

உறிஞ்சுதல் : உள்ளிழுத்தல்.

உறுகணாளன் : வறிஞன், தீவினையாளன்,

உறுகண் ; துன்பம், வறுமை. நோய்.

உறுக்கல் : உறுக்குதல், அதட்டல், கடத்தல், சினத்தல், அச்சுறுத்தல்.

உறுக்குதல் : அதட்டுதல், சினத்தல், தண்டித்தல், தாண்டுதல்.

உறுதி – அங்கம், அறிவு, ஆகாரம், ஆற்றல், ஆன்மலாபம், உள்ளகாரியம், உற்றதொழில், சம்பவிப்பது, கல்வி, உபதேசம், தளராநிலை. திடவாக்கு, நம்பப்படுந்தன்மை, நல்லகாரி

யம், நன்மை. நிச்சயம், பயன், வல்லமை, புருடார்த்தம், செய்யத்தக்கது, மந்திரம், இலாபம், ஆட்சிப் பத்திரம், விடாப்பிடி, முறிச்சீட்டு, வலிமை, சத்தியம், அடைவாய்.

உறுதிப்பாடு : திடப்படுத்தல்.

உறுதிப்பொருள் : கடவுள், அறிவு, உண்மைப்பொருள்.

உறுதுணை ; உற்றதுணை.

உறுத்துதல் – உண்டாக்குதல், அமைத்தல், அடைவித்தல். ஒற்றுதல், பதித்தல், அழுத்துதல், வருத்துதல், மிகுத்தல், விரித்தல், செலுத்துதல், உண்பித்தல், சீறுதல், நாட்டுதல்.

உறுபொருள் – உடையவன் இன்மையால் தானே வந்ததையும் பொருள்.

உறுப்பு – அவயவம், உடல், உடலழகு, பயனுறுங் கருவிகள், பிரிவு, மரக்கொம்பு, மெய்யெழுத்து, அங்கம், அடுக்கு, அடையாளம், உறுதி, காணியாட்சிப்பத்திரம், துறுவல் நெருக்கம், பங்கு, மிகுதி, மேல்வரிச் சட்டம், பாலையாழ்த்திறம், அங்கவழகு.

உறுப்புள்ளவன் – திறமுடையவன்.

உறுமுதல் – உறுமென்று ஒலித்தல், குமுறுதல், எழும்புதல்.

உறுவல் - துன்பம், உறுவேன்,

உறை - இடம், இருப்பிடம், இரை, இலக்கக் குறிப்புள் ஒன்று, உயர்ச்சி, உவர் நீர்,

காரம், கிணற்றுறை, கௌசனை, துளி, நீளம், படைக்கூடு, பண்டம் பெய்யுறை, பாம்பின் நஞ்சுப்பை, பாலிடு பிரை, பொருள், மருந்து, மழை, மழைத்துளி, வாழ்நாள், விலங்குணவு, வெண்கலம், பெருமை, உயரம், மிகக் குறைவானது, ஓரளவு, துன்பம், ஆயுதக்கூடு, ஒழுகல், காணிக்கைப்பொருள், மழைக்காலம், உறைமோர், ஆடையழுக்கு அகற்றும் உவர்நீர், உணவு, உறைப்பு. கூடு, இறை, இலக்கக் குறி; வாசஞ் செய், இரு, சஞ்சரி. இறுகு, செறி, உறையென்னேவல்.

உறைகோடல் - பெய்ய வேண்டுங் காலத்துப் பெய்யாமழை

உறைகோடுதல் - பருவமழை கெடுதல்.

உறைதல் - தோய்தல், தங்குதல், வசித்தல், இறுகுதல், ஒழுகுதல், செறிதல், உறுதியாதல்.

உறைத்தல் - உதிர்த்தல், நீர் சொரிதல், துளித்தல், பெய்தல், உறுதியடைதல், தாக்கிப் பயன்விளைத்தல், மோதுதல், மிகுதல், அதட்டுதல், அமுக்குதல், ஒத்தல், அழுந்தல், எரிதல், தாக்கல், உறுத்தல், சுவையுறைத்தல்.

உறைபனி - இறுகிய பனி.

உறைப்பு - சுவைக்கூர்மை, காரம், ஊற்றம், வாய்ப்பு, கொடுமை, அழுத்தம், வேதனை, மழை பெய்கை, தாக்குகை.

உறைமோர் - பாலில் இடும் பிரை மோர்.

உறையிடம் - இருக்கும் இடம், உள்வீடு, தங்குமிடம்.

உறையுள் - ஆயுள், உறைகை, தங்குமிடம், துயிலிடம், வீடு, நாடு, யுகம்.

உறைவிடம் - இருக்கும் இடம்.

உற்சவமூர்த்தி - திருவுலாவரும் விக்கிரகம்.

உற்சவம் - திருவிழா, உயர்ச்சி, களிப்பு, விருப்பம், கொண்டாட்டம், சாறு, சேறு; முருகு; விழா.

உத்பத்தி - பிறப்பு தோற்றம்.

உற்பவம் - பிறப்பு.

உற்றது - நேரிட்டது; நடந்த உண்மை, இடுக்கண்.

உற்றபடி : நிகழ்ந்தவாறு.

உற்றவன் : உறவன், சேர்ந்தவன்

உற்றளவு ; உள்ளளவு, சரியளவு

உற்றறிதல் ; தொட்டறிதல், பயின்றறிதல், ஆராய்ந்தறிதல், சேர்ந்தறிதல்.

உற்றுணர்தல் ; ஆராய்ந்தறிதல்

உற்றோர் : உற்றார்

உன்மத்தம் : பைத்தியம், மனமயக்கம், வெறி.

உன்னதம் : உயர்ச்சி, மேன்மை

உன்னித்தல் : உயர்தல், தியானித்தல்.

உன்னிப்பு : கவனிப்பு, ஊகிப்பு, குறிப்பு, அறிவுக்கூர்மை.

ஊ

ஊ – தமிழ்மொழியின் நெடுங்கணக்கில் வரும் ஆறாம்எழுத்து, உணவு, இறைச்சி, திங்கள், சிவன், ஊன், தசை, சதை, ஓரெழுத்து, ஓர் ஒலிக்குறிப்பு.

ஊகம் – ஊமத்தை, கருத்து, எண்ணம், ஞானம், ஊகித்தறிகை, எண்ணுகை, யுக்தி, அறிவு, யூகம், உட்பொருளை ஆராய்ந்துணர்தல், நினைவு, படைவகுப்பு, அவா நிலையால் வரற்பாலனவற்றை வருவித்தல்.

ஊகி : ஊகிப்பவன், நுண்ணறிவுடையோன், எண்ணு.

ஊகித்தல் : திட்டமாக எண்ணுதல், அறஞ் சொல்லுதல், மட்டுக் கட்டுதல், தர்க்கித்து ஆராய்தல்.

ஊக்கப்பாடு : ஊக்கங்கொள்கை

ஊக்கம் – உண்மை, மேற்கொண்ட எண்ணம், உள்ளத்தின் மிகுதி, மனக்கிளர்ச்சி, உள்ள மிகுதி, வலி, முயற்சி, கருத்து, ஊகித்தறிகை குறிக்கோள்.

ஊக்கு : ஊக்கம், முயற்சி, கொக்கி, முயல், எழுப்பு, ஏறு

ஊசலாடல் : அடிக்கடி போக்குவரத்தாயிருத்தல். ஊஞ்சலாடுதல், ஊஞ்சல்போல் ஆடி இருதலைப்பட்டு நிற்றல்.

ஊசாடுதல் – ஊடாடுதல், ஊசலாடுதல், உலாவித் திரிதல்.

ஊசாட்டம் – உலாத்து, களவு,

விரைவு, ஊசலாட்டம், வரத்துப்போக்கு.

ஊசி – இழைவாங்கி, எழுத்தாணி, சூசி, நிரைக்குழு, கடிகாரத்தின் முள், நிறைகோலின் முள், வடக்கு, சிறுமை, ஊசிப்பொறி.

ஊசிமிளகாய் – கொச்சிமிளகாய்.

ஊஞ்சல் – ஊசல், ஊசற்பாட்டு, உஞ்சல்.

ஊஞ்சற்பாட்டு – ஊஞ்சலாடும் போது பாடும் பாட்டு.

ஊடல் – தலைவன் தலைவிக்குள் உண்டாகும் பிணக்கு, புலவி, துனி, கலவியிற் பிணங்கல், பிரிவு, பகைத்தல், வெறுத்தல், ஊடுதல்.

ஊடறுத்தல் – நடுவறுத்தல், வழக்குத்தீர்த்தல், ஊடுறுவுதல்

ஊடாடல், ஊடாடுதல் – கல்வி பயிலுதல், நடமாடுதல், பழகுதல், நடுவே திரிதல், பலகாற் பயிலுதல், கலந்து பழகுதல், கலத்தல், சஞ்சரித்தல், பெருமுயற்சி செய்தல்.

ஊடாடிப்பார்த்தல் – ஆராய்ந்து பார்த்தல்,

ஊடுருவல், ஊடுருவுதல் : தட்டுருவல், நுழைதல், பீறுதல், துளைத்தல், புதைத்தல், இடையுருவிச் செல்லுதல்.

ஊடுவெளி – இடைவெளி.

ஊட்டம் – உணவு, உண்டி, செழிப்பு.

ஊட்டல் - உண்பிக்கை, ஊட்டுதல், விலங்கின் கன்றுண்ணல்.

ஊட்டுதல்-புகட்டுதல், உண்ணச் செய்தல், விருந்திடல், நுகரச் செய்தல். கன்று அல்லது குட்டி பால் குடித்தல், நினைப்பூட்டுதல்.

ஊண் - உணவு, இரை, சோறு, உண்கை, ஆன்மாவின் இன்ப துன்ப நுகர்வு.

ஊதாரி - வீண் செலவுக்காரன், வீண் கொடையாளன்.

ஊதியம் - ஆதாயம், கல்வி, பயன், பலன், பேறு, ஆக்கம், நன்மை.

ஊது - ஊதுகுழல், வீசு, வீங்கு.

ஊதுகுழல் - ஒரு வாச்சியம், நெருப்பூதும் குழல், ஊதும் இசைக்குழல்

ஊதுதல் - குழலூதுதல், தீ எரிய ஊதல், துளைத்தல், புடமிடுதல், நுகர்தல், ஒலித்தல், வீங்குதல், அரித்தல். காற்று நொய்தாய் வீசுதல்.

ஊதுமா - ஓர் இனிப்புக் கூழ்.

ஊதுலைக்குருகு - துருத்தி.

ஊதுவத்தி - வாசனைச் சரக்குப் பூசிய குச்சி.

ஊத்தை -அழுக்கு. ஊண், சுரோணிதம், புலால் நாற்றம்.

ஊமச்சி -ஊமைப்பெண், நத்தை மட்டி.

ஊமணாமூஞ்சி - பொலிவற்ற முகமுள்ளவர், பேசுந்திறமில்லாதவர். ஊமணையன்.

ஊமை – உறுப்புக்குறை எட்டி னுள் ஒன்று, அது மூங்கைத் தன்மை, குன், வாயிலி, ஒலியி ன்மை, ஒலிக்குறைவு, மூகம், கிரி, வாய்பேசாமை.

ஊமைக்காயம் - முரட்டடியால் வெளியில் காயம் தெரியாது உண்டான உள்வீக்கம்.

ஊமையன் – பேசத் தெரியாத வன்.

ஊமைக்காய் – பருப்பற்ற காய்.

ஊமையெழுத்து – ஒலியற்ற எழுத்து, மெய்யெழுத்து, பிர ணவம்.

ஊராண்மை – ஊரை ஆழுந் தன்மை, மிக்கசெயல்,ஒப்புரவு, உபகாரியாந் தன்மை, ஊரின் கண் மேம்பாடுடைமை, பகை மேற் செல்லுகை.

ஊரார் – ஊரவர், பிறர்.

ஊருணி – ஊரார் அனைவரும் நீரெடுத்துண்ணுங் குளம், நீர் நிலை. கிணறு.

ஊரேரச்சம் – ஊரெல்லாம் பேசத்தக்கதாயிருத்தல்.

ஊர் – நாடு, பரிவேடம், நகர், தேசத்தின் உட்பிரிவு, ஊர்கை, வசிக்கும் ஊர், இடம், ஊரிலுள் ளார், ஞாயிறு திங்களைச் சூழும் பரிவேடம், பதி, புரம், அருப்பம், இருக்கை. உறையுள், எயில், ஒக்கம், காடு, காண்ட கம், குண்டம், குடி, குடிக்காடு, குப்பம், சேரி, நத்தம்,பக்கணம், பட்டினம், பதி, பாக்கம், பாடி, பாழிபுரி, பூக்கம். பூண்டி, பூரி யம், பேடு, மேடுவாசம், வாழ் க்கை, வேலி, வைப்பு, நொச்சி.

பட்டி, பள்ளி, நூறு குடியுள்ள இடத்தின் பெயர்.

ஊர்காவல் – தலையாரி.

ஊர்க்குருவி – அடைக்கலக் குருவி, கடலகம், கலிங்கம், கல்வி, குணிங்கரி, சகடம், புலிங்கம்.

ஊர்தல் - ஊருதல், தவழ்தல், செல்லுதல், பரவுதல், ஏறிச் செல்லுதல், தினவுறுதல், தடவுதல், சஞ்சரித்தல், மேற்கொள்ளுதல், நெருங்குதல், மறைத்தல், வடிதல், மிகுதல்.

ஊர்தி : ஊரப்படுவது, தேர், வாகனம், ஆருடம்.

ஊர்த்தலைமை, நாட்டாண்மை

ஊர்ப்புரட்டு - பெரும்பொய்.

ஊர்மன்றம் – ஊரிலேயுள்ள பொது இடம்.

ஊழலித்தல் – அருவருத்தல், இளைத்தல், மெலிதல், சோர்தல், பதனழிதல், நாற்றமடைந்து கெடுதல்.

ஊழல் – ஆகாதது, ஊத்தை, கெட்டது, பழுதானது, ஆபாசமுள்ளது, நிரயம், நாற்றம், தாறுமாறு.

ஊழி – உலகமுடிவுகாலம், யுகம், வாழ்நாள், உலகம், விதி, முறைமை, நிலம், மடங்கல், நெடுங்காலம்.

ஊழிக்காய்ச்சல் – தொற்றுக் காய்ச்சல்.

ஊழிநாயகன் – உலகைச் சங்கரிக்கும் கடவுள்.

ஊழிநாள் – முடிவுநாள்.

ஊழிநோய் – தொற்றுநோய்.

ஊழிமுதல்வன் - கடவுள்.

ஊழியமறியல் - கடுங்காவல்

ஊழியம் - தொண்டு

ஊழியான் - நெடுங்கால வாழ்க்கையை உடையான், கடவுள்.

ஊழ் - உலகமுடிவு, குணம், நியமம், பகை, பழவினை, பழைமை பூர்வகன்மம், முடிவு, முறை, விதி, வெயில், முதிர், வாடு, பதனழி, மலர், நினை, முதிர்வு, முதிர்ச்சி, தடவை, மலர்ச்சி, கதிரவன்.

ஊழ்த்துணை - மனைவி.

ஊழ்முறை - நியதி, பூருவ நியாயம், வினைப்பயன் முறை.

ஊழ்வினை - பழவினை, உழுவலன்பு.

ஊழ்வினைப்பயன் -கருமபலன்

ஊறணி - ஊறல், ஊற்றுக்கசிவு, நிலம், சேற்றுநிலம், வருவாய்.

ஊறல் - ஊறுதல், ஊற்று, நீரூற்று, காய்ந்த பச்சை, தோலின் மேல் உண்டாகும் ஒரு நோய், தினவு. வருவாய், ஊறுகை' மருந்தின் சாரம்; நீர்வற்றும் பசுமை.

ஊறு - இடையூறு, காயம், கொலை, தழும்பு, தீண்டல், தீமை, பரிசம், துன்பம், மெலிந்தவுடல், உடம்பு, வல்லூறு, குற்றம், வெம்மை, தன்மை, மென்மை. வன்மை; திண்மை.

ஊறுகறி - ஊறுகாய்.

ஊறுநீர் - ஊற்றுநீர்.

ஊறுபாடு-இடையூறு, இரணம், காயம், சேதம், தீமை, துன்பம். றிதல், எய்தல், குத்தல், வெட்டல்.

ஊறுபுண் - ஆறிவரும் புண்.

ஊற்றங்கோல் - ஊன்றுகோல்.

ஊற்று - ஈரம், ஊன்றுகோல், நீரூற்று, சுரக்கை, கசிவு, ஊறல், மணற்கேணி.

ஊற்றுதல் - வார்த்தல். வடித்தல், வெளியே விடுதல்.

ஊனக்கண் - கட்பொறி, குருட்டுவிழி, பசுஞானம்.

ஊனம் - ஈனம், குறைபாடு, குறைவு, உடலுறுப்புக்குறைவு, கேடு, தீமை. அழிவு, பிணம்

ஊனுருக்கி - இருமல்நோய்

ஊன் - தசை, நிணம், கொழுப்பு, புலால், இறைச்சி, உடல்.

ஊன்றிச் சொல்லல் - தெளிவாய்ப் பேசுதல்.

ஊன்றிப்படித்தல் - படிப்பதில் கருத்துப் பதியுமாறு மனதை ஒருவழிப்படுத்திப் படித்தல்.

ஊன்றிப் பெய்தல் - விடாது ஓங்கிப் பெய்தல்.

ஊன்றுகோல் - பற்றுக்கோல், தடி

ஊன்றுதல் - அமர்த்தல், நடுதல், நிலைப் படுத்தல், பதித்தல், பலப்பித்தல், வேர்வைத்தல், நிலைபெறுதல், சென்று தங்குதல், அழுந்தவைத்தல், நிலைநிறுத்தல், துணையாகப் பற்றுதல், தாங்குதல், தீர்மானித்தல், அமுக்குதல், தள்ளுதல், இறுகப்பிடித்தல், உறுதியாய் நிற்றல்.

எ

எ – ஏழென்னும் எண்ணின் குறி, வினா எழுத்து.

எஃகு – உருக்கு, கூர்மை, வேல், கத்தி, ஆயுதப்பொது, மனவொடுக்கம், எதிர்த்தாக்கு, எட்டு, உதைந்தேறு, நெகிழு, ஆராய்.

எஃகுதல் – அவிழ்தல், உதைந்தேறுதல், எட்டுதல், எதிர்க்குதல், தாழ்ந்தெழும்பல், நீளல், நெகிழ்தல், நொய்தாக்கல், பஞ்சுகொட்டல், பஞ்சுபறித்தல்

எக்களிப்பு - மிகு மகிழ்ச்சி.

எக்கனம் – அன்னம், கவரிமா, நாய், நீர்நாய்.

எக்கியம் - வேள்வி, துவாபரயுகம்.

எக்குதல் – குவிதல், மிகைச்செல்லுதல், ஊடுருவிச் செல்லுதல், உள்ளிழுத்தல், மேலே செல்லவீசுதல், எட்டுதல்.

எசமாட்டி – குடும்பத்தலைவி.

எசமானன் – தலைவன், கணவன்

எச்சமிடுதல் – மலங்கழித்தல்.

எச்சம் – மிச்சம், எச்சில், பறவை, மலம், மக்கள், பிள்ளைப்பேறு, குறைவு, செல்வம், எக்கியம், தொக்கு நிற்பது, முன்னோர் வைப்பு, ஒரு வாசனைப் பண்டம், உறுப்புக் குறை, பெயர் வினையெச்சங்கள்.

எச்சரிக்கை, எச்சரிப்பு - முன்னறிவிப்பு, எச்சரித்தல், ஒருவகைப் பாட்டு.

எச்சில் - உமிழ் நீர், உண்டு கழிந்த மிச்சம்,

எஞ்சாமை - குறைபடாமை.

எஞ்சிநிற்றல் - குறைந்து நிற்றல், தொக்குநிற்றல்.

எஞ்சுதல் - எஞ்சல், மிஞ்சுதல், குறைதல், கெடுதல், ஒழிதல், தொக்கு நிற்றல், கடத்தல், செய்யாதொழிதல்.

எஞ்ஞான்றும் - எப்போதும்,

எடுத்தலளவை - நிறுத்தலளவை

எடுத்தல் - இடங்குறித்தல், ஈட்டுதல், உடைத்தாதல், உயர்த்திச் சொல்லுதல், உயர்த்துதல், எழுப்பிக்கட்டுதல், எழுப்புதல், கைக்கொள்ளுதல், கொள்ளல், சுமத்துதல், தாங்குதல், தூக்குதல், தெரிந்துகொள்ளுதல், தொடங்குதல், குரலெடுத்துப்பாடுதல், மேம்படுத்திச் சொல்லுதல், தெரிந்தெடுத்தல்.

எடுத்தாளுதல் - கைக்கொண்டு வழங்குதல்.

எடுத்துக்காட்டு - உதாரணம், மேற்கோள், திருட்டாந்தம்,

எடுத்துக்கைநீட்டுதல் - கைத்தொண்டு செய்தல்.

எடுத்துக்கொள்ளல் - ஏற்றுக்கொள்ளல், தனதாக்கிக்கொள்ளல், சுவீகாரங் கொள்ளுதல், தூக்கிக்கொள்ளுதல், மரணத்தால் கடவுள் தம்மிடம் அழைத்துக்கொள்ளுதல்.

எடுத்துச்சொல்லுதல் - சிறப்பித்துக் கூறுதல், விளக்கமாகக் கூறுதல்.

எடுத்துமொழிதல் – விளங்கச் சொல்லுதல்.

எடுத்தெறிதல் - பொருட்படுத்தாதிருத்தல், மதிப்பின்றிநடத்தல்.

எடுத்தேத்து – எடுத்துப் புகழ்தல், புகழ்ச்சி.

எடுபடுதல் – நீக்கப்படுதல், நிலை பெயர்தல், அதிர்தல், விற்றழித்தல், கெடுதல்.

எடுபிடி – முயற்சி, விருது,

எடுப்பார்கைப்பிள்ளை – யாவருக்கும் வசப்படக் கூடியவன், சூதறியாதவன்.

எடுப்புச்சாய்ப்பு – உயர்வு தாழ்வு, ஆடம்பரம்.

எட்டல் – எட்டுதல், தொடுதல்.

எட்டன் – எட்டமன், மூடன், அறிவிலான்.

எட்டி – காஞ்சிமரம், வைசியர் பெறுஞ் சிறப்புப் பெயர், எட்டிப்பட்டை, ஒரு வினையெச்சம்.

எட்டிநோக்குதல்- அண்ணாந்து பார்த்தல்.

எட்டி விரியன் – ஒரு பாம்பு.

எட்டு– ஆசை, இறந்த எட்டாம் நாளில் பிதிர்களுக்கு உணவூட்டுதல், எட்டெண்ணேவல்.

எட்டுணை – எள்ளளவு.

எட்டுதல் - கிட்டுதல், நெருங்குதல், புலப்படுதல், தாவிப்பாய்தல், விலகுதல், அகப்படுதல், தாவியுயர்தல், பொருந்தல்.

எட்டுத்தொகை – சங்ககாலத்தில் தொகுக்கப்பட்ட எட்டு

நூல், நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறுநூறு, பதிற் றுப்பத்து, பரிபாடல், கலித் தொகை, அகநானூறு, புற நானூறு.

எட்பாகு - எள்ளுப்பாகு.

எண் - அம்போதரங்கம், அறிவு, ஆலோசனை, இலேசு, எண் ணம், எண்ணெய், எள்ளு, எளிமை, ஒன்று முதலிய எண் கள், கணக்கிடுதல், கணிதம், கவலை, சோதிடம், தர்க்கம், தாழிசை, நினைவு, மதிப்பு, மனம், வரையறை, வலி, கரு மச்சூழ்ச்சி, எண்ணென்னேவல்

எண்குணத்தான் - அருகன், கடவுள், சிவன்.

எண்கோணம்- எட்டு மூலையை யுடைய உருவம்.

எண்சுவடி - பெருக்கல் வாய் பாடு, கணக்குநூல்.

எண்ணப்படல் - கணிக்கப்படு தல், நினைவில் தோற்றல், மதிக்கப்படுதல்.

எண்ணம் - நினைப்பு, இறு மாப்பு, கனம், கருத்து, மனத் தளர்வு, குறிப்பு, நம்பிக்கை, மதிப்பு, கவலை, சூழ்ச்சி.

எண்ணலளவை - இலக்கத்தால் எண்ணும் அளவு.

எண்ணல் - நினைத்தல், இறு மாத்தல், எண்ணுதல், களாக் கிடுதல், கணிதம், கவலைப் படல், குறித்தல், தேர்ச்சி, நிலைத்தல், மதித்தல்.

எண்ணாதவன் - எதனையும் ஆராய்ந்து பாராதவன், துணிந்

தவன், கவலையற்றவன், கரு தாதவன், யோசனையற்றவன்.

எண்ணாமை - கணக்கிடாமை, மதியாமை, பொருட்படுத் தாமை.

எண்ணுதல் - எண்ணல் நினைத் தல், முடிவு செய்தல், மதித் தல், கணக்கிடுதல்.

எண்ணுறுத்தல் - உறுதிப்படுத் துதல்

எண்ணூல் - கணிதநூல்.

எண்ணெய் - எள்ளின் நெய், நல்லெண்ணெய்,

எண்ணெய்க்காப்பு - எண் ணெய் முழுக்கு, சாத்தும் எண் ணெய்.

எண்ணெய் வடித்தல் - எண் ணெய் ஊற்றுதல்.

எண்ணெழுத்து - இலக்கம்.

எண்பித்தல் - மெய்ப்பித்தல்.

எண்பொருள் - எளிதில் அடை யும் பொருள்.

எண்மயம் - பிறப்பு, குலம், கல்வி, செல்வம், வனப்பு, சிறப்பு, தவம், உணர்வு ஆகிய எண்வகைச் செருக்கு.

எண்மர் - எட்டுப்பேர்.

எதார்த்தம் - உண்மை, உறுதி,

எதிராளி - எதிர்வழக்காளி, சம மாயிருப்பவன், பகைஞன், எதிரி, போட்டிபோடுபவன், நேரிடும் யாளி என்னும் மிரு கம். பகைவனையும் ஆள்பவன்

எதிரி - எதிராளி.

எத்ரொலி - மாறொலி.

எதிர்-எதிர்காலம், எதிர்மொழி, எதிரிடை, ஒப்பு, தடை, மாறு, முரண், முன், முன்னிலை, போர், மறுமொழி, இலக்கு.

எதிர்காலம் – வருங்காலம்.

எதிர்கொள்ளல் – வருபவர்க்கு முன்னே செல்லுதல்.

எதிர்சோழகம் – நேர் தெற்கிலிருந்து வீசும் காற்று.

எதிர்த்தல் – சந்தித்தல், மாறுபடுதல், தடுத்தல்.

எதிர்நடை – மூலப்பிரதி, மாறுபட்ட ஒழுக்கம்.

எதிர்நிலை – எதிர்நிற்றல், கண்ணாடி.

எதிர்நிற்றல் – மாறாக நிற்றல், போர் செய்தல்.

எதிர் நூல் – தன் கொள்கையை நிலை நாட்டிப் பிறன் கொள்கையை மறுக்கும் நூல்.

எதிர்பார்த்தல் – காத்திருத்தல், வரவு பார்த்தல், பிறருதவியை நோக்குதல்.

எதிர்ப்படுதல் – முன்தோன்றுதல், சந்தித்தல், நேரே வருதல்.

எதிர்ப்பு – அலைப்பு, இலக்கு, எதிர்மொழி, மாறாகத்தாக்கல்.

எதிர்ப்பை – வாங்கியவளவு எதிர் கொடுத்தல்.

எதிர்முகம் – நேரெதிர், முன்னிலை, மாறுபாடு.

எதிர்மொழி – மறுமொழி, மறுப்பு.

எதிர்வாதம்-மாறுபடக்கூறுகை, பிரதிவாதியின் வாதம்.

எத்தர் – ஏமாற்றுபவர்.

எத்தனம் - முயற்சி, கருவி, ஆயத்தம்.

எத்தனித்தல் - முயலுதல்.

எத்தன் - ஏமாற்றுவோன், விரகுள்ளவன், கபடன்.

எத்தி - ஏமாற்றுபவன்.

எத்துணை - எவ்வளவு.

எத்துதல் - வஞ்சித்தல்,

எத்துவாதம் - எதிர்ப்பேச்சு.

எந்திரக்கிணறு - நீர் நிறைத்தற்கும் போக்குதற்கும், உரிய பொறியை உடைய கிணறு.

எந்திரம் - ஆலை, செக்கு, பஞ்சு கொட்டும் யந்திரம், திக்கடை கோல், குயவன் திரிகை, சூத்திரம், தேர், தேர்ச்சில்லு, மதிலுறுப்பு.

எந்திரவூர்தி - சூத்திரத்தால் தானே இயங்கும் ஊர்தி.

எந்தை - என் தந்தை, என்குரு, எம் அடிகள், எம் தலைவன்.

எந்தையான் - என் தந்தையின் பெயர்தாங்கிய என்மகன்.

எப்பொருட்கும் இறைவன் - கடவுள்.

எமதருமன் - இயமன்.

எமதூதன் - நமனுடையதூதன், நல்ல பாம்பின் பற்களில் ஒன்று.

எம்பிரான் - எம் தலைவன்.

எம்மட்டு - எவ்வளவு.

எம்மாத்திரம் - எவ்வளவு.

எம்மை - எங்களை, எப்பிறப்பு, எம் தலைவன்.

எய் - முட்பன்றி, அம்பு, துன்பம், ஓர் உவமை உருபு, அம்பு செலுத்து.

எய்தல் – அம்பெய்தல், விடுதல்.

எய்துதல் – அணுகுதல், அடைதல். சேர்தல், பணிதல், நீங்குதல், பொருந்துதல், போதியதாதல்.

எய்யாமை – அறியாமை. வருந்தாமை.

எரிகரும்பு – அடுப்பு விறகு.

எரிகுடல் – எரிவயிறு, மிகுபசி.

எரிகொள்ளி – கொள்ளிக் கட்டை, கடைக்கொள்ளி.

எரிக்கொடி – நெருப்பின் கொழுந்து, சோதிக் கொடி, முடக்கொற்றான்.

எரிசினம் – கடுங்கோபம்.

எரிசுடர் – மிகுந்தவொளி, தீ, விளக்கு.

எரிச்சல் – எரிகை, அழற்சி, சினம், பொறாமை, உறைப்பு, பெருங்காயம்.

எரிதயிலம் – எரித்தெடுக்குந் தைலம்.

எரிதல் – அழற்றல், சினங்கொள்ளல், சுவாசித்தல், நெருப்பிலே வேகுதல், ஒளிவிடுதல்.

எரித்தோன் – தீயாற் கொளுத்தியவன்.

எரிந்துவிழுதல் – சினமாகப் பேசுதல்.

எரிபொழுது – மாலைவேளை, செவ்வானப்பொழுது.

எரியூட்டுதல்– தீக்கொளுத்துதல்

எரிவந்தம் – எரிச்சல் நோய், சினம்.

எரிவனம் – சுடுகாடு.

எரிவு – எரிகை, உடல் எரிச்சல், பொறாமை, சினம்.

எரு - உரம், மலம், பசளை, சாணி.

எருக்கம் - எருக்கம்பூமாலை, எருக்குச்செடி.

எருக்கலை - எருக்கஞ்செடி.

எருக்களம் - எருவிடுமிடம்.

எருக்கு - செடிவகை, வெள்ளெருக்கு, எருக்கென்னேவல்.

எருச்சாட்டி - எருப்பட்ட நிலம்

எருதடித்தல் - உழுதல், சூடடித்தல்.

எருது - காளை மாடு, இடபராசி.

எருத்துமாடு - காளை, பொதிமா .

எருந்து - உரல்.

எருமை - எருமைமாடு.

எருமைக் குழவி - எருமைக் கன்று.

எருமைச்சுறா - ஒருவகை மீன்.

எருவிடுதல் - எருப்போடுதல்.

எலி**ப்**பயல் - சிறு பையன்.

எலும்புருக்கி - கயரோகம், கருப்பமேகம்.

எல்லவன் - திங்கள், கதிரவன்.

எல்லை - இடம், பகல்வேளை, கதிரவன், பொழுது, வரம்பு, தறுவாய், அளவை முடிவு, இறப்புக்காலம், கூப்பிடு தொலை, முடிந்தவிடம், முடிவு.

எல்லை கடத்தல் - அளவைத் தாண்டுதல்.

எல்லைக் குறிப்பு - எல்லை அடையாளவழி அளவைக் காட்டுங்குறி.

எல்லையின்மை - அளவின்மை
எல்லோமும் - நாம் எல்லோரும்
எல்லோரும் - அனைவர்களும்.
எல்வளி - பெருங்காற்று.
எவை - யாவை.
எவ்வளவு - எம்மட்டு.
எவ்வாறு - எப்படி, எவ்வழி.
எவ்வெவர் - எவரெவர்.
எழால் - புல்லூறு, வல்லூறு, யாழ். யாழிசை, மக்கள், மிடற்றிசை.
எழில் - அழகு, பொலிவு, இளமை, எழுச்சி, உயர்ச்சி, வண்ணம், வளர்ச்சி, வெளிப் பட்டுத் தோன்றுதல்.
எழில்படுத்தல் - அழகு செய்தல்
எழுகடல் - உப்புக்கடல், பாற் கடல், தயிர்க்கடல், நெய்க் கடல், கருப்பஞ்சாற்றுக் கடல், தேன் கடல், நன்னீர்க் கடல் ஆகிய ஏழு.
எழுச்சி - இறுமாப்பு, எழுந்து போதல், எழும்புதல், ஏறிச் செல்லுதல், ஒருவகைக் கண் ணோய், ஓங்கியெழும் புகை, காதில் உண்டாகும் ஒருநோய், பள்ளியெழுச்சி, பிறத்தல், மன முயற்சி. தோற்றம்.
எழுஞாயிறு : கதிரவன் தோற் றம், ஒரு நோய்.
எழுதல் : அழுத்துதல், அழுந்தல், இடம்விட்டுப் பெயர்தல், உயர் தல், உயிர் பெற்றெழும்புதல், ஊக்கங்கொள்ளல், எழுதுதல், தலைமைப்படுதல், வருதல், புறப்படுதல், மிகுதல், தோன் றுதல், மேற்பட்டு.

எழுதுகோல் : தூரியக்கோல்

எழுதுதல் : எழுத்து வரைதல், இயற்றுதல், ஓவியம் வரைதல்.

எழுத்தாளர் : அறிஞர், எழுதுவோர்.

எழுத்து - இலக்கணநூல், இலக்கியநூல், கல்வி, கடிதம், மந்திரம், எழுதப்பட்ட தாள், மொழி மொழி முதற்காரணமாகிய அணுத்திரளின் அறிகுறி.

எழுத்துக்கிறுக்கு : உடன்படிக்கை எழுதுகை.

எழுத்துச்சுருக்கம் : சொல்லின் எழுத்து சுருங்குவதற்காக இடையிற் சிறுகோடிட்டு முதல் இறுதி எழுத்துக்களை மட்டும் எழுதுவது: எ-டு. இதன் பொருள் (இ-ள்)

எழுத்துப்படிதல்; கையெழுத்து ஒரு நிலைப்படுதல்.

எழுத்தூசி : எழுத்தாணி.

எழுத்தெண்ணிப் படித்தல் - ஒன்றும் விடாது படித்தல், நன்றாகப் படித்தல்.

எழுந்திருத்தல் : இருக்கையை விட்டு எழுதல்.

எழுபோது : விடியற்காலம்.

எழுப்பிவிடுதல் : முயற்சியுண்டாக்கல்.

எழுப்புதல் : எழும்பச்செய்தல், துயில் எழுப்புதல், உயிர்பெற்றெழச் செய்தல், ஒலியெழுப்புதல், ஊக்கம் உண்டாக்குதல், கலகம் முதலியன மூட்டுதல்.

எழுவகை அளவை ; நிறுத்தளத்தல், பெய்தளத்தல், சார்த்தியளத்தல், நீட்டியளத்தல்,

தெறித்தளத்தல், தேங்கமுகத் தளத்தல், எண்ணியளத்தல்.

எழுவாய் : தோற்றம். முதல், கருத்தா, முதலாம்வேற்றுமை.

எழுவான் - கிழக்குத் திக்கு,

எளிது : அருமையற்றது, எளியது.

எளிமை : இகழப்படுந்தன்மை, வறுமை, தளர்வு, தனிமை, தாழ்வு, அறிவில்லாமை

எளியர் : வறுமையாளர், வலியிலார், அறிவில்லார், பெறுதற்கெளியார்.

எள்ளளவும் : சிறிதளவும்.

எறிதல் : அடித்தல், அறுத்தல், உதைத்தல், ஊறுபடுத்தல், கல் முதலியவற்றை எறிதல், குத்தல், தட்டல், தள்ளல், திரையெறிதல், நீக்கல், நுகர்வித்தல், முறித்தல், மோதுதல், வெட்டல், வீசல், வெல்லுதல், எற்றல், துள்ளுதல், இட்டமைத்தல், கொள்ளையிடுதல்.

எறிவேல் : எறியீட்டி.

எற்றுதல்- அடித்தல், இரங்குதல்

என : என்று, ஓர் உவமை உருபு.

எனது : என்னுடையது.

எனல் : என்று சொல்லப்படுதல், என்று சொல்லற்க, என்று சொல்லுக.

எனினும் ; ஆனாலும்,

எனின் – என்கையினால், என்று சொல்லின்.

என் : என்ன, என்றும், யாதொன்றும், யாது, ஓர் அசைச்சொல்.

என்ப - என்று சொல்லப்பெறு வன, என்று சொல்வர், ஓர் அசைச் சொல்,

என்பிலி : புழு.

என்பு : எலும்பு, எலும்புக்கூடு, உடம்பு, என்று கூறுதல்.

என்றல் : என்று சொல்லுதல்.

என்று : எப்போது, ஓர் இடைச் சொல்.

என்றும் : எந்நாளும், என்று சொல்லுவோம்.

என்ன : எத்தன்மைய, என்று சொல்ல, போல, யாது.

என்னத்தை : யாதினை,

என்னல் : என்று சொல்லுதல்.

என்னும் : சிறிதும், யாவும், எல்லாம், என்று சொல்லுகின்றது, எப்படியாயினும், என்று சொல்லப்படும்.

என்னே : ஒரு வியப்பு இரக்கக் குறிப்புச் சொல்.

என்னை - என்ன, யாது, என் தந்தை, என் இறைவன். ஓர் ஐயச் சொல், ஓர் இகழ்ச்சிக் குறிப்பு.

ஏ

ஏ – தமிழ் மொழியில் எட்டாவது உயிர் எழுத்து, இகழ்ச்சிப் பொருளில் வரும் ஓர் இடைச் சொல், இசை நிறைந்து நிற்கும் ஓர் இடைச்சொல், ஈற்றசைச்சொல், எண்ணுப் பொருளைத்தரும் ஓர் இடைச்சொல், எதிர்மறைப் பொருளிலேவரும் ஓர் இடைச்சொல், எய்யுந்

தொழில், குறிப்பு மொழி, சிவன், செலுத்துதல், சொல்லின் இறுதியிலே ஓர் அசையாக வரும் ஓர் இடைச்சொல், மேல் நோக்குதல், திருமால், இறுமாப்பு, அம்பு, விளிக் குறிப்பு.

ஏஏ – சாமவேதம், இரக்கக் குறிப்பு.

ஏக சக்ராதிபதி – தனியாணை செலுத்தும் அரசன், கடவுள்.

ஏகசுபாவம் – ஒத்த தன்மை, ஒரே தன்மை.

ஏகதந்தன் – யானைமுகக் கடவுள்.

ஏகதேச அறிவு – சிற்றுணர்வு.

ஏகபத்திரிகை – வெண்துளசி.

ஏகபோகம் – தனக்கே உரிய அனுபவம், ஒரு போகம்.

ஏகப் பிழை – முழுதும் பிழை.

ஏகப்பெரு வெள்ளம் – ஒருங்கு மூடிய பெருவெள்ளம்.

ஏகம் – ஒன்று, தனிமை, முழுமை, அபேதம், வீடு, மிகுதி, திப்பிலி, உடன்பாடு, அக்குரோணி, எட்டுப் பங்கு கொண்டது

ஏசல் - கடத்தல் ,போகல், கண்ட இடம் செல்லல், உயர்ச்சி, ஓங்கிய கற்கள்.

ஏகவசனம் - ஒருமைச் சொல், ஒரேமொழி, மெய், ஒருமை, அவர் நீர் என்று பேசாது அவன் நீ என்று பேசுதல்.

ஏகவெளி – பெருவெளி.

ஏகாக்கிர சித்தம் - ஒன்றிலே ஊன்றிய மனம்.

ஏகாதிபத்தியம் - தனியரசாட்சி

ஏகாந்தம் - தனிமை, மறைவு, தகுதி, உறுதி, தனித்திருக்கும் இடம்.

ஏகாலி - வண்ணான், சவர்க்காரம்.

ஏகுதல் - போதல், கடத்தல், கழலுதல்.

ஏகோபித்தல் - ஒன்றுபடுத்தல்.

ஏக்கம் - கவலை, அச்சம், பேரவா, விரும்பியது பெறாமையால் உண்டாகும் துன்பம்.

ஏக்கர் - 43560 சதுர அடி கொண்ட நிலப்பரபு அளவை.

ஏங்கல், ஏங்குதல் - அஞ்சல், அழுதல், இரங்கல், ஒலித்தல், கவலைப்படல், திகில், உறல், மயிற்குரல், வாடல், வாய் விடல், ஆரவாரித்தல், குழந்தைகளுக்கு வரும் காசநோய்.

ஏசல் - இகழ்தல், வைதல், பழமொழி, பாட்டுவகை.

ஏசாதவர் - இகழ்ச்சி செய்யாதவர், தேவர், குற்றம் இல்லாதவர்.

ஏசு - இயேசுகிறித்து, இகழ்ச்சி, குற்றம்.

ஏசுகை - ஏசல்.

ஏசுதல் - இகழ்தல்.

ஏச்சு - வைவு, பழிப்பு.

ஏச்சுரை - பழிப்புரை.

ஏடு - பனையேடு, பாலாடை, மென்மை, பூவிதழ், புத்தகவிதழ், வாழையிலைத் துண்டு, உடல், மேன்மை, குற்றம்.

ஏட்டிக்குப் போட்டி – எதிருக்கெதிர், ஒவ்வாமை, விதண்டாவாதம்.

ஏட்டுக் கல்வி – குருவில்லாக் கல்வி, உலக அனுபவம் இல்லாத கல்வி.

ஏட்டுச்சுரைக்காய் – அனுபவத்தோடு கூடாத கல்வியறிவு.

ஏட்டுப் படிப்பு – உலக அனுபவம் இல்லாத கல்வி.

ஏட்டுப்பொறி – ஓலைப் பத்திரத்தில் பதித்த முத்திரை.

ஏணல்கோணல் – ஒழுங்கின்மை

ஏணாப்பு – இறுமாப்பு, செருக்கு

ஏணி – எல்லை, ஏறுதற்கருவி, எண், அடுக்கு, பாசறை, நாடு, மான்.

ஏணை – புடவைத் தொட்டில், நிலை, ஆடு, மஞ்சம், எண், வலி, நிலை, பேறு.

ஏண்கோண் – திருக்கு, நேரின்மை.

ஏண்டாப்பு – இறுமாப்பு.

ஏதடை – எதிரிடை, போட்டி, பகைமை.

ஏதம் – குற்றம், துன்பம், கேடு, நோய்.

ஏதன் – மூலகாரணன், ஆதிகாரணன், முதல்வன், கடவுள்.

ஏது – யாது, காரணம், ஏதம், ஏன், குற்றம், திராணி, மூலம், நித்தம், எங்கிருந்து, எப்படி, முதற்காரணம், துணைக்காரணம், ஏது, நிகழ்ச்சி.

ஏத்தல் – துதித்தல், வணங்கல்.

ஏத்து - புகழ்கை, தேக்கம், ஆழம், இனிமை, ஏத்தென்னே வல்.

ஏத்துதல் – துதித்தல், வணங்கல், புகழ்தல், வாழ்த்துதல், உயர்த்திக்கூறுதல்.

ஏந்தல் – கையேந்துகை; தாங்குகை; தேக்கம்; ஆழம் இன்மை, உயர்ச்சி, அரசன், பெருமை, பெருமையிற் சிறந்தோன், ஏந்துதல், நீட்டல், மலைமேடு, ஏரி.

ஏந்தானம்-ஏந்துதல், சிறாம்பி, பொருளைத் தாங்குமாறு தொங்கும் தட்டுப் பலகை.

ஏந்தி - ஏந்துபவன், தரித்திரன், வறியவன்.

ஏந்திழை – பெண், அழகிய அணிகலம்.

ஏந்திழையார் – பெண்கள்.

ஏந்துதல் – பூணுதல், சிறத்தல், மிகுதல், தாண்டுதல், கை நீட்டுதல், சுமத்தல்.

ஏப்பம் - தேக்கெறிவு, எதிரெடுத்தல்.

ஏமம் - ஏம், இன்பம், களிப்பு, காவல், பள்ளியறை, பாது காப்பு, இரா, பொன், உறுதி, ஐயம், மயக்கம், பைத்தியம், இடுதிரை, திருநீறு, புதையல்.

ஏமாத்தல் – அவாவுறல், களித்தல், செருக்குறுதல், அறிவு மயங்கச் செய்தல், இன்புறுதல், உறுதி செய்தல்.

ஏமாப்பு – அரணாதல், இறுமாப்பு, உதவுதல், கருத்து,

கலக்கமுறல், செருக்கு, சேமம், மிருகளிப்பு, மயக்கம், ஆணவம்

ஏமாறுதல் - மோசம் போதல்.

ஏமாற்றுதல் - வஞ்சித்தல். ஏமஞ்செய்தல்.

ஏமிலாந்துதல் - திகைத்து நிற்றல், மனந்தடுமாறுதல்,

ஏய்த்தல் - இசையப்பண்ணுதல், ஒப்பாதல், தழுவல், வஞ்சித்தல், பொருந்தச் சொல்லுதல்.

ஏய்ப்பு - வஞ்சகம்.

ஏரம்பன் - ஆனைமுகக் கடவுள்

ஏராளம் - மிகுதி.

ஏரி - நீர்நிலை, இமில், புநர்பூசம், பெரியகுளம், எருத்துத் திமில், கொழுத்துள்ள பிடர், புரை குழல்.

ஏர் - உழவுமாடு, கலப்பை, உழவு, அழகு, எழுச்சி, நன்மை, ஒப்பு, பொருந்திய, ஓர் உவமை உருபு, தோற்றப் பொலிவு.

ஏர்க்களம் - நெற்களம், போர்க் களம்.

ஏர்க்கால் - கலப்பை, வண்டி இவற்றின் நுகம் கொழுவும் உறுப்பு.

ஏர்மங்கலம் - பொன்னேர்ப் பாட்டு.

ஏலப்பாட்டு - கப்பற்பாட்டு.

ஏலம் - மயிர்ச் சாந்து, ஏலக் காய்ச் செடி, முதிரை, வாசனைப் பண்டம், போட்டியில் பலர் முன் கேள்வு விலை.

ஏலல் - ஒப்புக்கொள்ளல், இசைவாயிருத்தல், கையிடல், பிச்சையிடல்.

ஏலாதது - இயலாதது, பொருந்தாதது.

ஏலாதார் - இயலார், பகைவர்.

ஏலாமை - இணங்காமை, கூடாமை, துன்பம்.

ஏலுதல் - இயலுதல், தகுதியாதல்

ஏலேலோ - படகு முதலியன தள்ளுவோர் பாடும் ஏலப் பாட்டில் வரும் ஒரு சொல்.

ஏவல் தூண்டுகை, பணிவிடை, கட்டளை, ஏவலால், வறுமை.

ஏவுதல் - கட்டளையிடுதல், தூண்டிவிடுதல், செலுத்துதல், சொல்லுதல்.

ஏழமை - எளிகை.

ஏழை - வறியோன், அறிவிலி, பெண்.

ஏழைக்குறும்பு - பேதைபோலக் காட்டிச் செய்யுங் குறும்பு.

ஏழைத் தன்மை - அறியாமை யாகிய குணம்.

ஏழைமை - அறியாமை, ஏழைத் தன்மை, சிறியனாந்தன்மை, வறுமை.

ஏளனம், ஏளிதம் - இகழ்ச்சிச் சிரிப்பு, இகழ்ச்சி, எளிகை,

ஏறப்பறத்தல் - உயரப்பறத்தல்.

ஏறவாங்குதல் - முழுதும் விலைக் குப் பெறுதல், நயமாக வாங் குதல், விலகியிருத்தல்.

ஏறாங்கடைசி - அறமுடிவு.

ஏறிடுதல் - ஏற்றுதல், நாணேற் றுதல், உயர்த்துதல்.

ஏறு - உயரம், இடபம், விலங் கேற்றின்பொது, ஆண்சிங்கம்,

இடியேறு, எறிகை, அடிக்கை; மிகுதி, ஏறென்னேவல்,

ஏறுகோள் – ஒரு பெண்ணை மணஞ்செய்தற் பொருட்டு ஏறு தழுவுதல்.

ஏறுதல் – உயர்தல், மேலேறுதல், முற்றுப் பெறுதல், மிகுதல், பரவுதல், செல்லுதல், ஆவேசித்தல், குடியேறுதல், ஏற்றிவைக்கப்படுதல், கடத்தல், புகுதல், மோதுதல்.

ஏறுபெட்டி-மரமேறிக் கள் இறக்குவதற்கு அரையிற் கட்டிக் கொள்ளும் பெட்டி.

ஏறுமாறு - குழப்பம், தாறுமாறு, இகலுகை,

ஏறுவெயில்– முற்பகல் வெய்யில்

ஏறூர்ந்தோன் : சிவன்.

ஏற்குதல் : இணங்குதல், இரத்தல், எதிர்த்தல், ஒப்புக்கொள்ளல், பொருந்தல், வாங்கல்.

ஏற்கெனவே : முன்னமே.

ஏற்பது ; இரப்பது.

ஏற்பாடு ; ஒழுங்கு, நியமனம். உடன்படிக்கை, முறை.

ஏற்பு : இரப்பு, பொருத்தம் தகுதி.

ஏற்போர் : இரப்போர்.

ஏற்ற : தகுதியான, பக்குவமான, ஒப்பான, வாங்கிய, கையேற்ற, உயர்ந்த.

ஏற்றத்தாழ்வு : பெருமை சிறுமை.

ஏற்றது – இயன்றது, பொருந்தியது, தக்கது.

ஏற்றம் ; நினைவு, துணிவு, ஏற்கை, உயர்வு, புகழ், அதி

கப்படி, மேன்மை, நீர்ப்பெருக்கம், நீர் இறைக்கும் கருவி.

ஏற்றம்போடுதல் - துலாமரம் அமைத்தல், தோப்புக்கரணம் போடுதல்.

ஏற்றல் - இசைவாதல், இணங்கல், இரத்தல், உணர்த்தல், எதிர்த்தல், எழுப்பல், ஏற்றுதல். எறிதல், ஏந்தல், நடத்தல், பொருந்தச் செய்தல்.

ஏற்றுதல் : தூக்குதல், மிகுதிப்படுத்துதல், சுமத்துதல், ஏறச்செய்தல், அடுக்குதல், மேம்படுத்துதல், உட்செலுத்துதல், ஏற்றுமதி செய்தல்.

ஏற்றுத்துறை : ஏற்றிவிடுந்துறை, துறைமுகம்,

ஏற்றுமதி – கப்பலில் பண்டம் ஏற்றுகை, ஏற்றுமதிப்பண்டம்,

ஏனையவை : மற்றவை.

ஏனென்னுதல் ; துன்பத்திற்கு உதவ வினாவுதல்.

ஏனைய : ஒழிந்த.

ஏனையர் : மற்றோர்.

ஏனோர் : மற்றோர்.

ஐ

ஐ : ஒன்பதாவது உயிர் எழுத்து, அசை நிலை, அரசன், அழகு, இருமல், ஒரு சாரியை, ஒரு தொழிற் பெயர் விகுதி, ஒரு பண்புப்பெயர் விகுதி, கடவுள், கடுகு, கருவிப்பொருளிலே வரும் ஒரு பெயர், விகுதி, குரு, கோழை, சிலேத்துமம், சர்க்கரை, சிவன், கன்னி, செயப்படு பொருளிலே வரும் ஒரு பெயர் விகுதி,

தலைவன், தும்பை; துர்க்கை, நுண்மை, தந்தை, பெருநோய், யானையைப் பாகன் அதட்டும் ஓசை. வினைமுதற் பெயரிலே வரும் ஒரு பெயர், வியப்பு. ஐந்து, ஐயம், ஓரிடைச்சொல், வியப்பு.

ஐக்கம் - ஐக்கியம்.

ஐக்கியநாணய சங்கம் - கூட்டுறவால் நிதி பெருக்கும் சபை

ஐக்கிய பாவம் : ஒற்றுமைத் தன்மை.

ஐக்கியம் : ஒன்றிப்பு, ஒற்றுமை, ஒன்றாந்தன்மை.

ஐங்கணை ; காமனது ஐந்து கணைகள், அவை. தாமரை, மா, அசோகம், முல்லை, கருங்குவளை என்பன.

ஐங்குரவர்- அரசன், ஆசிரியன், தாய், தந்தை, தமயன்.

ஐசுவரியம் - செல்வம், மேன்மை, ஆற்றல், கடவுட் தன்மை.

ஐஞ்சந்தி - ஐந்து தெருக்கள் கூடும் இடம்.

ஐந்தடக்குதல் -ஐம்பொறிகளையும் அடக்குதல்.

ஐந்திணை - அன்புடைக்காமம் பற்றிக் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தலாகிய ஐவகை நிலத்திலும் ஆடவர் மகளிர் ஆகிய இரு திறத்தார்க்குள்ளும் நிகழும் ஒழுக்கம்

ஐந்து - ஐம்புலன், ஐம்பொறி, பஞ்சாங்கம், ஐந்து என்னும் எண்.

ஐந்துகாவியம் - சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை.

வளையாபதி, குண்டலகேசி என்பன

ஐந்துண்டி - ஐந்துணவு, கடித்தல், நக்கல், பருகல், மெல்லல், விழுங்கல்.

ஐந்துபா - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா எனும் பாக்கள்.

ஐந்து பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி.

ஐந்து புலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன.

ஐந்துபூதம்-மண், நீர், நெருப்பு காற்று, விண் என்பன.

ஐந்துமுகன் - சிவபெருமான்

ஐந்தொகை - விடுமுதல், வரவு, செலவு, ஆதாயம், இருப்பு.

ஐம்பால் - ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால், ஐவகையாகப் புனைதலுடைய மகளிர் கூந்தல்.

ஐம்பால்முடி : கொண்டை, குழல், பனிச்சை, சுருள், முடி என ஐவகையாக முடிக்கப்படுகின்ற பெண்களுடைய கூந்தல் முடி.

ஐம்புல நுகர்ச்சியால் இறப்பன : சுவையாலிறப்பன மீன்: நாற்றத்தால்இறப்பன வண்டு: பரிசத்தால் பிடிபடுவன யானை; ஓசையால் இறப்பன அசுணம்; ஒளியாலிறப்பன விட்டில்.

ஐம்புலம்வென்றோர் : முனிவர்

ஐம்பெருங்காப்பியம் : சிலப்பதிகாரம்; மணிமேகலை; சீவக சிந்தாமணி; வளையாபதி; குண்டலகேசி.

ஐம்பெருங்குழு : அமைச்சர்; புரோகிதர்; படைத்தலைவர்; தூதுவர்; சாரணர் என்று சொல்லப்பெறும் அரசர்க்குரிய ஐவகைக் கூட்டத்தார்.

ஐமுகன் – சிவன்.

ஐம்பொன் : பொன்; வெள்ளி; செம்பு; இரும்பு; ஈயம்.

ஐயங்காய்ச்சி : ஒரு பெண்பேய்

ஐயப்பாடு : ஐயம்.

ஐயம் : ஐயுறவு; சந்தேகம்; மயக்கவுணர்ச்சி; பிச்சை; இரப்போர் கலம்; சிறுபொழுது.

ஐயம்புகுதல் : இரத்தல்.

ஐயர் ; பெரியோர்; முனிவர்; தேவர்; பார்ப்பார்; வீரசைவரின் பட்டப் பெயர்; பாதிரிமார் பட்டப்பெயர்; பெருமையிற் சிறந்தோர்.

ஐயவுணர்வு : உறுதியில்லாத அறிவு.

ஐயன் : அரசன்: அரிகரபுத்திரன்; அருகன்; அழகுடையவன்; ஆசிரியன்; உயர்ந்தோன்; கடவுள்; குரு; சிவன்; தந்தை, தமையன்; தலைவன்; மூத்தோன்.

ஐயா : தலைவன்; ஐயன்; ஒரு உயர்ச்சிப் பெயர்; ஓர் இரக்கக் குறிப்புச் சொல்.

ஐயுணர்வு : ஐம்புலவறிவு.

புறவு : ஐயப்பாடு; சந்தேகம்.

புறுதல் : ஐயப்படல்

யே ; ஒரு விளிப்புக் குறிப்பு.

ராவதி : ஓர் ஆறு, மின்னல், பமன் மனைவி.

ராவதம் : இந்திரன் யானை, பட்டத்து யானை, சிவபிரான் யானை.

வகைவினை – பஞ்சபாதகம்.

வகை வேள்வி – கடவுள் வேள்வி, பிரமவேள்வி, பூத வேள்வி, மானிட வேள்வி, தென்புலத்தார் வேள்வி.

ஒ

– உயிரெழுத்து, குறில்.

கரம் – 'ஒ' என்னும் எழுத்து, மயில்.

க்கப்பாடுதல் – பிறன் கூற்றுக்கு ஒத்துக்கூறுதல்.

டிதல் – முறிதல், கெடுதல்.

டித்தல் – முறித்தல், அழித்தல், ஒலிசெய்தல்.

டியல்மா – பனங்கிழங்கின் மா.

டிவு – முறிவு, கெடுகை, குறைவு' தவிர்தல்.

டுக்கம் – குறுக்கம், அடக்கம், சுருங்குகை, பதுக்கம், மறைவிடம், முடிவு, வழிபாடு, அமைவு, நெருக்கமான இடம், நெருக்கம் ஒன்றில் அடங்குகை.

டுக்கிடம் – மறைவிடம், சுருக்கமான இடம்.

டுக்கு – அடக்கம், இடுக்கு, மூலை, நெளிவு, ஒடுக்கமாயிருப்பது, ஒடுக்கென்னேவல்.

ஒடுக்குதல் - அடக்குதல், இறை யிறுத்தல், உடம்பை யொடுக் கல், குறைத்தல், சுருங்கப்பண் ணுதல்.

ஒடுக்கெடுத்தல் - நெளிவெடுத் தல்.

ஒடுங்கல் - அடங்கல், அமை தல், ஒதுங்கல், ஒளி மழுங்கல், கீழ்ப்படிதல், சுருங்கல், குவி தல், செறிதல், சோர்தல், பதுங்கல், முடிதல், தடை.

ஒடுங்குதல் - தங்குதல், அடங் குதல், குறைதல், கீழ்ப்படிதல், பதுங்கல்

ஒட்டல் - ஒட்டுதல், சேர்க்கை உள்ளொடுங்குகை, இடங் கொடுத்தல், உடன் படல், ஒளித்தல், குறுகல், சேர்த்தல், வற்றல், தாக்குதல், பந்தயம் வைத்தல், கிடைத்தல்.

ஒட்டறை - புகைப்பற்று.

ஒட்டிக்கிரட்டி - ஒன்றுக்கு இரண்டு பங்கு.

ஒட்டியம் - ஒருநாடு, ஒரு மந்திர வித்தை.

ஒட்டியாணம் - மாதர் இடை யணிகளுள் ஒன்று.

ஒட்டு - புட்படுக்குங் கருவி நட்பு, இணைப்பு, சார்பு ஆணை, ஒப்பு, ஒரம், மரப பட்டை, மரவொட்டு மறைவு அருகு, இகலாட்டம். ஒளிப பிடம், ஒன்றிப்பு, கதிர்கொய்த தாள், சூள்மொழி, சிறுகடுக் கன், தோல், படைவகுப்பு பதிவிருக்கை, பொருந்துதல், வாய்ப்பு, புல்லுருவி, ஒட்ட

வைத்து உண்டாக்கிய செடி, ஒட்டென்னேவல், தொகை நிலை, பிறிது மொழிதல் என்னும் அணி.

ஒட்டுக்கேட்டல் – பிறர் பேசு தலை ஒழித்துநின்று கேட்டல்.

ஒட்டுதல் – உடன்படுதல், அடை கொடுத்தல், வற்றல், சார்தல், கூட்டுதல், கிட்டுதல், பதுங்கி நிற்றல், சுருங்கல், சேர்த்தல், பொருத்துதல்.

ஒட்டுப்பழம் – ஒட்டு மரத்தின் பழம்.

ஒட்டுப்பார்த்தல்– உளவு பார்த்தல்.

ஒட்டொட்டி - ஒரு செடி.

ஒண்டுதல் – சார்தல், பதுங்குதல், சரண்புகுதல்.

ஒண்டொடி– ஒள்ளிய வளையல், பெண்.

ஒண்ணுதல் – இயலுதல், கூடுதல், ஒள்ளிய நெற்றியையுடைய பெண்.

ஒண்மை – அழகு, ஒழுங்கு, ஒளி, அறிவு, நன்மை, மிகுதி, விளக்கம், கூரிய அறிவு, இயற்கையழகு, அறநெறி.

ஒதுக்கம் – ஒதுங்கியிருக்கை, ஒழுக்கம், தீட்டு, நடை, பதுங்குகை, பின்னிடுகை, மறைவு, மறைப்பிடம், தனிமை.

ஒதுக்கல் – ஒதுங்கச் செய்தல், கணக்கு வழக்கு தீர்த்தல்.

ஒதுக்கிடம் – ஒதுங்கும் இடம், துச்சில், புகலிடம், மறைவிடம்

ஒதுக்குதல் – ஒதுங்கச்செய்தல், மறைத்தல், தனியாகச்செய்தல்

ஒதுக்குப்புறம் - ஒதுங்கும் மறைவிடம், தனித்த இடம், ஒதுப்புறம்.

ஒதுங்குதல் - விலகுதல், கரையிற்சார்தல், சரணம் புகுதல், பின்னடைதல், நடத்தல், தோல்வியடைதல்.

ஒத்தாசை - உதவி.

ஒத்திசை - ஒத்திருக்கை, ஒப்பு, சரிபார்க்கை, உதவி.

ஒத்துக்கொடுத்தல் - பொறுப்பேற்றல், கணக்குகட்டு வகை சொல்லுதல்.

ஒத்துக்கொள்ளுதல் - உடன்படுதல், ஏற்றுக் கொள்ளுதல்.

ஒத்துதல் - விலகுதல், ஒற்றுதல், தாக்குதல், தாளம்போடுதல்.

ஒத்துப்பாடுதல்-உடன்படுதல், ஏற்றுக்கொள்ளுதல்,

ஒத்துழையாமை - இணங்கி நடவாமை.

ஒப்படை - ஒப்புக் கொடுக்கை, கட்டளையை நிறைவேற்றுகை

ஒப்பந்தம் - உடன்படிக்கை, சமன், கட்டுப்பாடு, இசைவு.

ஒப்பமிடுதல் - சமமாக்குதல், அழகு செய்தல், கையெழுத்துப் போடுதல், மணி முதலியன துலக்குதல்.

ஒப்பம் - ஒப்பு, ஒரு தன்மை, மெருகு, அலங்காரம், கையொப்பம், கட்டளை.

ஒப்பரவு - ஒப்பம், ஒழுங்கு, சமாதானம், ஒப்புரவு, ஒற்றுமை, முறைமை.

ஒப்பனை - உவமை, அழகு, பாவனை, சமம், செவ்வை,

திருட்டாந்தம். மண்ணல், வனைதல், வேய்தல், அலங்கரித்தல்.

ஒப்பாரி - அழுகைப்பாட்டு, போலி, ஒப்பு, ஒத்தபாவனை, அழுகையில் ஒப்பனையிடுகை, ஒப்புச்சொல்லியழுதல்.

ஒப்பித்தல் - அலங்கரித்தல், விழுக்காடிடுதல், ஒத்துக்கொள்ளச்செய்தல், உவமித்தல், ஏற்கச்செய்தல்.

ஒப்பின்மை - நிகரின்மை.

ஒப்புக்கழுதல் - போலியாக அழுதல்.

ஒப்புக்கு - மனத்தோடு பொருந்தாமல் போல்யாக.

ஒப்புமை - உவமானம், சமானம்

ஒப்புமொழி - உடன்படிக்கை.

ஒப்புவித்தல் - அத்தாட்சி பண்ணல், ஒப்புக்கொடுத்தல், ஏற்கும்படி சேர்த்தல். மெய்ப்பித்தல், திருட்டாந்தங் காட்டுதல். கடன் சாட்டுதல், பாடம் ஒப்புவித்தல்.

ஒப்புரவறிதல் - உலக நடையினை அறிந்து செய்தல்.

ஒப்புரவு - உலகநடை, உலக ஒழுக்கம், சமம், ஒற்றுமை, வேளாண்மை.

ஒய்யாரம் - ஒயில், ஆடம்பரம், அலங்காரம், செருவம், சாயல்.

ஒரு - ஒன்று, ஒப்பற்ற, ஆடு.

ஒருகலை - ஒருகூறு.

ஒருகால் - ஒருமுறை, ஒருவேளை, சிலவேளை.

ஒருகூட்டு - ஒருசேர்மானம்.

ஒருகை பார்த்தல் - வெல்லமுயலுதல்.

ஒருக்கால் - ஒருமுறை, ஒரு தரம். ஒருகால், கோபிக்காதே, அடங்காதே.

ஒருங்கு - முழுமை, அடக்கம், முழுதும், ஒருகாலத்தில், அழிவு, எல்லாம், ஒருங்கென்னேவல்.

ஒருங்குதல் - ஒருங்கல், அடங்குதல், அழிதல், ஒருவழிப்படல், ஒன்றுகூடுதல். ஒதுங்குதல்

ஒருங்குபடல் - ஒருசேரத் தோன்றுதல்,

ஒருங்கே - முழுதும், ஒருசேர.

ஒருசாரார் - ஒரு பக்கத்தவர்.

ஒருசார் - ஒருபக்கம்.

ஒருசிறிது - மிகச்சிறிது.

ஒருசீரானவன் - ஒரே தன்மையாக இருப்பவன்.

ஒருசொல் - உறுதிச்சொல், பல சொல்லாயிருந்தும் ஒரு சொன்னீர்மைப்பட்டது.

ஒருசொல்வாசகன் - சொன்ன சொல் தவறாதவன்.

ஒருதலை வழக்கு - பட்சபாதமான தீர்ப்பு.

ஒருதன்மை - மாறாத்தன்மை.

ஒருத்தன் - ஒப்பற்றவன்.

ஒருபிடி - உறுதி, ஒரே பற்று, கைப்பிடியளவு, பிடிவாதம்.

ஒரு பிறப்பு - ஒருமை.

ஒருபொருட் பன்மொழி - ஒரு பொருளைத்தரும் பல சொற்கள், மீமிசைச் சொல்.

ஒருபொருள்-கடவுள், உண்மை

ஒருபோது ஒருபொழுது, ஒரு சமயம், ஒருமுறை உண்டு விரதமிருக்குங் காலம்.

ஒருப்படல் - ஒரு தன்மையாயிருத்தல், ஒருநினைவாதல், ஒன்றித்தல், உடன்படுதல், துணிதல், முயலுதல், ஒன்றுகூடுதல்.

ஒருப்படுதல் - ஒருப்படல், பிறர் கருத்துக்கு உடன்படுதல்

ஒருப்படுத்துதல் - வழிவிடுதல், முடிவு செய்தல், உடன்படச் செய்தல், ஒன்று கூட்டுதல்.

ஒருப்பாடு - முயற்சி, சம்மதம், மனத்திண்மை, ஒன்றிநிற்கை.

ஒருமனப்பாடு - மனவடக்கம், மன இணக்கம்.

ஒருமித்தல் - ஒன்றுசேர்தல், ஒன்றுபடல், உடன்படல்.

ஒருமிப்பு - ஒன்றிப்பு, ஒற்றுமைப்படுகை, மனத்தை ஒன்றிற் செலுத்துகை.

ஒருமுகமாய்ப் பேசுதல் - எல்லாரும் ஒரேபடியாகப் பேசுதல்

ஒருமுகம் - நேர்வழி, ஒற்றுமை, ஒரு கூட்டம், ஒருபுறம், ஒரு கட்சி.

ஒருமை - ஒப்பற்ற தன்மை, ஒரு தன்மை, ஒரு பிறப்பு, ஒற்றுமை, தனிமை, பிளவுபடாத மனம்.

ஒருமைப்பாடு - ஒன்றிப்பு, ஒற்றுமைப்படுகை.

ஒருமைமகளிர் - பிற ஆடவர்பால் செல்லாத மனமுடைய மாதர்.

ஒருமொழி - ஆணை, பலசொற்களாய்ப் பிரிக்க முடியாத மொழி.

ஒருவண்ணம் - ஒருவாறு.

ஒருவந்தம் - உறுதி, நிலைபேறு, தனியிடம், ஒற்றுமை, சம்பந்தம், நிச்சயம், ஒருதலை, ஒருமுடிவு.

ஒருவழிப்படுதல் - ஒற்றுமைப் படுதல்.

ஒருவன் - ஒருத்தன், ஒப்பற்றவன், கடவுள்.

ஒருவாமை - பிறழாமை, நீங்காமை.

ஒரு வியாழ வட்டம் - பன்னிரண்டு ஆண்டு.

ஒரோவழி - சிறுபான்மை.

ஒலி - ஓசை, காற்று, இடி, சொல், அமலை, அரவம், தொனி, நாதம், ஒலியென்னேவல்.

ஒலித்தல் - தழைத்தல், ஆடை அழுக்கு அகற்றல், விளக்குதல், ஒலிசெய்தல், ஒலி செய்தலைக் குறித்துவரும் பிற பொருள் மொழிகள்.

ஒலிப்பு - பேரொலி.

ஒல்லாதவர் - பகைவர்.

ஒல்லாமை - இகழ்ச்சி, இல்லாமை, அவாவின்மை.

ஒல்லார் - பகைவர், நேரார்.

ஒல்லித்தேங்காய் - உள்ளீடில்லாத தேங்காய்.

ஒல்லுதல் - இயலுதல், ஆற்றுதல், உடன்படுதல், தகுதல், பொருந்துதல், பொறுத்தல்,

ஒலித்தல், விரைதல், அடைதல், இணங்குதல்.

ஒவ்வாப்பக்கம் – தருக்கத்தில் பொருந்தாத பக்கம்.

ஒவ்வாமை – இசையாமை, இயலாமை, தகுதியீனம், பொருந்தாமை.

ஒவ்வுதல் – இணங்குதல், பொருந்துதல்.

ஒழிகடை – பெரும்பான்மை, முடிந்தநிலை.

ஒழிதல் – எஞ்சுதல், தங்குதல், அழிதல், சாதல், நீங்கல், வெறுமையாதல், ஓய்தல்.

ஒழித்தல்–அழித்தல், கொல்லல், ஒதுக்குதல், குறைத்தல், தவிர்த்தல், தீர்த்தல், துறத்தல், முடித்தல்.

ஒழிபு – எஞ்சியது, மற்றது, முன்சொன்னது, பிரிந்தது.

ஒழிப்பு - விலக்கு, தவிர்ப்பு.

ஒழிய – தவிர, நீங்க, கெட.

ஒழியவைத்தல் – ஒழித்து வைத்தல், ஒழிவுபார்த்தல், முடிந்தல், ஒழித்தல்.

ஒழியாமை – நீங்காமை,

ஒழிவித்தல் – அழித்தல், ஒழியவைத்தல், கொல்வித்தல், நீங்குவித்தல், முடித்தல்.

ஒழிவு – இன்மை, ஒழிகை, மறைவு, முடிவு, குறைவு.

ஒழுகல் – ஒழுக்கு, நடக்கை, உயரம், நீளம், உயர்ச்சி, ஒழுக்கம், நீர் முதலியன ஒழுகுதல்.

ஒழுகு -உயரம், ஒழுங்கு, நீளம், ஓழுகென்னேவல்.

ஒழுகுதல் - ஓடுதல், ஒழுங்குபடுதல், நடத்தல், நீளுதல், பெருகியோடுதல், போதல், வளர்தல்.

ஒழுக்கமின்மை - கையறல், தீயநடத்தை.

ஒழுக்கம் - சீலம், நன்னடத்தை, வழி, செல்லுகை, உயர்ச்சி, தன்மை, முறை, மேன்மை, உலகம் ஓம்பிய நெறி, நற்கடமைகளில் நின்றும் தவறாது நடத்தல்.

ஒழுங்கு - கட்டளை, விதி, நன்னடை, வரிசை. ஒழுங்கென்னேவல், முறை, நேர்மை, திரள்.

ஒழுங்கை - ஒடுங்கியவழி, இடுக்குவழி.

ஒளி - அறிவு, ஒளித்தல், மறைதல், ஒளிப்பிடம், ஒளியென்னேவல், கடவுள், கண்மணி, கேட்டைநாள், திங்கள், சிவசக்தி, சுவாலை, புகழ், கதிரவன், விண்மீன், வெயில், காந்தி, விளக்கு, தலைமை, பெருமை, மதிப்பு, தோற்றம், புகழ், அழகு, செயற்கையழகு, அரசனது கடவுள் தன்மை, மின்னல்.

ஒளிக்சுடல் - பற்கள்.

ஒளிக்களம் - மறைவிடம், ஒளித்துறைவு

ஒளிதல் - மறைதல், தவிர்தல்.

ஒளித்தல் - மறைதல், மனத்தில் அடக்குதல்.

ஒளிநாடு - செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்த பன்னிரு நாடுகளுள் ஒன்று.

ஒளிப்பு – மறைவு, பதுங்கி மறைகை, அடங்குகை.

ஒளிமறைவு – ஒளித்துத்திரிகை.

ஒளியவன் – கதிரவன்.

ஒளியோன் – கதிரவன்.

ஒளிர்தல் – ஒளிசெய்தல்.

ஒள் – ஒளி, அழகு, மேன்மை, உண்மை, அறிவு.

ஒள்ளியன் – அறிவுடையோன், மேன்மையுடையோன்.

ஒறுத்தல் – தண்டித்தல், கடிதல், இகழ்தல், அழித்தல், துன்புறுத்தல், நீக்கல், குறைத்தல், நோய்செய்தல், ஒடுக்குதல்.

ஒறுப்பு – தண்டனை, கடிந்து பேசுகை, வெறுப்பு, விலை அதிகம்.

ஒற்றித்தல் – ஒற்றையாயிருத்தல், ஒற்றுமையாய் இருத்தல்.

ஒற்றிப்போடுதல் – தவணை தள்ளி வைத்தல்.

ஒற்று – ஒற்றன், ஒற்றடம், தூதன், உளவு, மெய்யெழுத்து

ஒற்றுக்கேட்டல் – பிறர்பேச்சை மறைந்து கேட்டல்.

ஒற்றுதல் – ஒன்றிற்படும்படி சேர்த்தல், முத்திரையிடுதல், உளவறிதல், தாளம்போடுதல், அடித்தல், அமுக்குதல், தாங்குதல், தீண்டுதல், தழுவுதல், துடைத்தல், உய்த்துணர்தல், தள்ளுதல், வீழ்த்துதல், கட்டுதல், வலித்தல், அடுத்தல், எய்தல், தீர்மானித்தல், காற்று வீசுதல், மெய்யெழுத்தாய் நிற்றல், தத்துதல், ஒட்டிக்கொள்ளுதல், ஒற்றடம் போடுதல், நினைதல், மறைதல்.

ஒற்றுமை - ஒன்றாயிருக்குந் தன்மை, ஒருநிலைப்படுகை, உரிமை, ஒருமை, கலப்புக் குறிப்பு, செல்வம், தகுதி, மன மொன்றுகை, ஒற்றரின் தன்மை

ஒற்றுமைகோடல் - பிறரோடு ஒன்றித்து வாழ்தல்.

ஒற்றுமைநயம் - ஒருமித்த தன்மை, ஒற்றுமைத் தன்மை.

ஒற்றெழுத்து - மெய்யெழுத்து.

ஒற்றை - ஒன்று, தனிமை, ஒப் பின்மை.

ஒற்றைக்கண்ணன் - சுக்கிரன், குபேரன், ஒருகண் தெரிந்தவன்

ஒன்று - எண், மதிப்புக்குரிய பொருள், வாய்மை, அறம், செல்வம், தனிமை, வீடுபேறு, உண்மை.

ஒன்றுகூடுதல் - ஒன்றாய்ச் சேர்தல், ஒற்றுமைப்படுதல்.

ஒன்றுதல் - பொருந்துதல், கூடு தல், நிலைபெறுதல், கலத்தல், இடைவிடாதிருத்தல்.

ஒன்றுபடுதல் - பொருந்துதல்.

ஒன்றுமற்றவன் - வறியவன்.

ஒன்னாமை - பொருந்தாமை.

ஒன்னார் - பகைவர்.

ஒன்னுதல் - பொருந்துதல், பொருத்தல்.

ஓ

ஓ - ஒழிவு; சென்றுதங்குகை, மதகுநீர் தாங்கும் பலகை, உயர்வு, இழிவு, கழிவு, இரக்கம், மகிழ்ச்சி, வியப்பு, நினைவு; அழைத்தல்; வினா, எதிர்மறை, தெரிநிலை, பிரி நிலை, ஐயம், அசை நிலை

இவற்றைக் காட்டும் ஓர் இடைச் சொல்; கொன்றை; நான்முகன்; மகிழ்ச்சிக் குறிப்பு

ஓகாரம் – 'ஓ' என்னும் உயிர் எழுத்து; மயில்.

ஓகாரவுரு - கடவுள்.

ஓங்கல் – தலைவன்; வலியோன், உயர்ச்சி, மேடு, மலை, மரம், மூங்கில்; சாதகப்புள்; யானை; மரக்கலம்; வழித்தோன்றல், ஒருவகை நீர்ப்பறவை.

ஓங்காரம் – பிரணவம் (ஓம்)

ஓங்காரவுரு - கடவுள்; கவுரி பாசாணம்.

ஓங்காரி – சக்தி; ஓம்.

ஓங்குதல் – மிகுதிப்படல்; உயர்த்துதல், தேறுதல், பெருமையுறல், வளர்தல், பெருகுதல், மேலெபறிதல்.

ஓங்குவித்தல் – உயரச்செய்தல்

ஓசி– இரவல், ஆசிரியன் மனைவி

ஓசை – இசை; ஒலி; கீர்த்தி; ஆகாசம் என்னும் பூதம் தோன்றுவதற்குக் காரணமாகிய சப்த தன்மாத்திரை; எழுத்தோசை,செய்யுளோசை, நாதம்; இரைச்சல்; அரவம்; சொல்; பேச்சு; கீர்த்தி.

ஓசையூட்டல் – செய்யுள் ஒசையை இசையச் செய்தல்.

ஓச்சுதல் - எறிதல்; ஓங்குதல்; ஓட்டுதல்; உயர்த்துதல்.

ஓடம்–செங்கருங்காலி; தோணி; நெய்வோர் கருவியில் ஒன்று; ஒருவகைப் பாட்டு; அம்பி; பகடு; பஃறி; நாவாய்.

ஓடல் – ஓடுமை; கெடுகை, குலைவு, ஒரு மரம்; அச்சத்தி னால் ஓடுகை.

ஓடவைத்தல் – புடமிடுதல், உறுதிப்படுத்தல்.

ஓடாணி – அணிகலக் கடைட் பூட்டாணி.

ஓடாவி – ஓவியக்காரன்; தச்சன், பரக்கலஞ் செய்வோன்.

ஓடு – வீடு வேயும் ஓடு; பானை யோடு, விரைந்தோடல், ஓடெ ன்னேவல், கபாலம், ஓர் உருபு.

ஓடுகாலி – வீட்டில் தங்காத பெண்.

ஓடுதல் – ஓட்டமாய்ச் செல்லு தல், செல்லுதல், மனம் பற்று தல், நீளுதல், வருந்துதல், நேரி டுதல், கழலுதல், பொருந்து தல், குலைதல், விரைதல், பரத் தல், எண்ணஞ் செல்லுதல்.

ஓடை – நீரோடை, குணம், உல வைமரம், சந்தனம் வைக்கும் மடல், யானை நெற்றிப் பட் டம், மலைவழி, அகழி, ஒரு படர் கொடி.

ஓட்டம் – உதடு, ஓடுதல், தோ ல்வி, மேலுதடு, நீரோட்டம், விலைமதிப்பு ஏறுகை.

ஓட்டம்பிடித்தல் –தப்பிஓடுதல்

ஓட்டாண்டி -இரந்து உண்பவன்

ஓட்டுதல் –செலுத்துதல், நீங்கச் செய்தல், புகுத்துதல், கலத்தல், காலந்தாழ்த்துதல்.

ஓட்டுவீடு – ஓடுவேய்ந்த வீடு.

ஓட்டெடுத்தல் - விரைந்தோடு தல்.

ஓட்டெழுத்து – தலையெழுத்து

ஒட்டை – துளை, துவாரம், சில்லி சிதைவு, உடைந்தது.

ஒட்டைச்செவி – கேள்வி தரிக்காத செவி.

ஒட்டை நெஞ்சு – அறைபோன மனம்.

ஒட்டையுடைசல் – சிதைந்த பண்டங்கள்.

ஒட்டைவாயன் – மறையினை வெளியிடுபவன்.

ஓதம் – ஈரம், கடல், கடற்றிரை, நீர்ப் பெருக்கம், அண்டவாத நோய்.

ஓதல் – கல்வி பயிலுகை, படித்தல், ஒழிதல், செல்லல், போதித்தல்; மந்திரஞ் செபித்தல்.

ஓதி – ஓதுபவன், அறிவு, செறிவு, ஞானம், கூந்தல், பெண்மயிர், ஒந்தி, அன்னம் அவதிஞானம், கல்வி, நெருங்கித் தாக்குகை.

ஓது – பூனை, படி, சொல், அறிவுரைகூறு, ஓதென்னேவல்.

ஓதுதல் – படித்தல், சொல்லுதல், பாடுதல், செபஞ்செய்தல்

ஓதுவான் – ஆசான், படிப்பவன்

ஓநாய் – கோநாய், ஓனாய், ஒரு வித நாய், தொண்டான்.

ஓமப்பொடி – தின்பண்டவகை, ஓமமருந்து, திருநீறு.

ஓமம் – ஒருபூடு, வேள்வி, தாளகம், பலி, வேள்வித்தீயில் நெய் முதலியன பெய்கை.

ஓமி – வேள்வி செய்கிறவன், தீ, நீர், நெய், ஓமியென்னேவல்.

ஓமியம் – வேள்வி.

ஓமை – ஒருமரம், மாமரம்.

ஓம் – பிரணவம், அயன், அரன், அரி, உடன்பாட்டை உணர்த்தும் ஓர் இடைச்சொல்.

ஓம்படல் – உடன்படல்.

ஓம்படுத்தல் – பாதுகாத்தல்.

ஓயல் – ஓய்தல், முடிவுறுதல், மாறுதல், ஒழிதல்.

ஓயாமை – இடைவிடாமை.

ஓய்தல் – ஒழிதல், தளர்தல், முடிதல், முற்றுந் தேய்தல், சோர்தல், விட்டு நீங்குதல், இளைப்பாறல், அழிந்தொழிதல்.

ஓய்வு – தளர்வு, ஒழிவு, முடிவு.

ஓரக்காரன் – பட்சபாதம் உடையவன்.

ஓரம் – விளிம்பு, பக்கம், ஒருபக்கம், சார்தல், சத்திசாரம், பெண்குறி.

ஓராட்டு – தாலாட்டு

ஓரி – குதிரைப்பிடரி மயிர்; ஆண் மயிர்; ஆண்முசு; கடையெழு வள்ளல்களில் ஒருவன்; நரி; விலங்கின் படுக்கை; கிழநரி.

ஓரை – இராசி; முகூர்த்தம், நேரம்: இரண்டரை நாளிகை; மகளிர் விளையாட்டு: விளையாட்டிடம், சித்திரான்மை; கூகை; மகளிர் கூட்டம்; மகளிர் விளையாடும் கருவிகள்.

ஓரொருவர் – ஒவ்வொருவர்.

ஓர்த்தல் – ஆராய்தல்; தெரிந்தெடுத்தல்; நினைத்தல்; கேட்டல்.

ஓர்ப்பு – கருமம் முடிக்குந் துணிவு; பொறுமை; தெளிவு; ஆராய்துணர்கை;

ஓர்மம் – மனத்திடன்.

ஓர்மிப்பு – ஓர்மம்.

ஓர்மை – ஒற்றுமை; துணிவு; ஒருமை; ஆடம்பரம்.

ஓர்வு – ஆராய்வு; அறிதல்.

ஓலம் – ஓசை; கடல்; பாம்பு; அபயமிட்டழைத்தல்.

ஓலாட்டு – தாலாட்டு.

ஓலை – ஆவண ஓலை; பனை தென்னை முதலியவற்றின் ஓலை; திருமுகம்; ஓலைக் குடை; காதணி; ஒலி; ஓலைச் சுருள்; ஓலைப் படல்; பேய் முன்னை; நமனோலை; முடங் கல்.

ஓலைக்கண் – ஓலைச்சட்டம்.

ஓலைதீட்டும்படை – எழுத் தாணி.

ஓவியகாயம் – புலி,

ஓவியப் பேச்சு – இனியமொழி

ஓவியம் – சித்திரம், அழகு, பிர திமை; ஓவியத்தொழில், ஓவி யக்குடி.

ஔ

ஔ – அநந்தன் என்னும் பாம்பு, நிலம்; விளித்தல், அழைத்தல், வியப்பு; தடை இவற்றைக் காட்டும் ஓர் உபசருக்கம்; கடி தல்; ஔவென்னேவல்.

ஔகாரம்–ஔ என்னும் எழுத்து

ஔஷதம், ஔடதம் – மருந்து

ஔடனம் – மிளகு ரசம்.

ஔவியம் – பொறாமை; தீவினை.

ஔவை – தவப்பெண்; தாய்; ஆரியாங்கனை; ஔவையார்.

ஔவைநோன்பு : செவ்வாய் நோன்பு.

ஔனம் : மிளகுரசம், காயரசம், மிளகுநீர்.

ஃ

ஃ – ஆய்த எழுத்து.

க

க – அரசன், சிவபெருமான், தீ, ஒன்று என்னும் எண்ணின் குறி, ஒருவியங்கோள் விகுதி, ஆன்மா, உடல், ஓர் எழுத்து, கந்தர்வ சாதி, காமன், கதிரவன், செல்வன், தொனி, மனம், மயில், காந்தாரமாகிய கைக்கிளை இசையின் எழுத்து, அடிக்கும் மணி, ஒரு கந்தருவன், நலம், சூனியச் சொல், தலை, திரவியம், பொருத்து, முகில்; வல்லவன், பறவை, ஒளி, முதல் உயிர்மெய் எழுத்து.

ககோளசாத்திரம் – வானநூல்.

ககோளம் : வான மண்டலம், மண்டலவடிவமான விண்.

ககோற்கண் – கதிரவர்களுள் ஒருவன்.

கக்கல் ; வாந்தியெடுத்தல், வெளிப்படுத்தல்.

கக்கவைத்தல் : நெருக்கி வாங்குதல்.

கக்குவான் : கக்கிருமல்.

கங்கணங் கட்டுதல் : ஒரு செயலை முடித்தற்கு முனைந்து நிற்றல்.

கங்கணம் : மஞ்சட்காப்பு, கை வளை, நீர்த் துளி, ஒரு நீர் வாழும் பறவை, முடி, முகிற் கூட்டம், தொடி.

கங்கபத்திரம் : பருந்தின் இறகு, அம்பு உமி.

கங்காதரன் : சிவபெருமான்.

கங்காளன் : சிவன்.

கங்குல் : இரா, இருள், பரணி நாள் இரவு.

கசகசத்தல் : உடம்புவியர்த்தல்

கசகுதல் : பின்வாங்குதல், தளர்தல்.

கசங்குதல் : நிலைகெடுதல், தளர்தல்.

கசடன் : கீழ்மகன், குற்றமுள் ளவன்.

கசடு : அடிமண்டி, ஐயம், கீழ்மை, குறைவு, குற்றம், தழும்பு, மாசு, வடு, அழுக்குக் கறை.

கசத்தல் : கைத்தல், வெறுத்தல்

கசதை : யானைக் கூட்டம்.

கசப்பி ; வேம்பு, மயிர்ச் சிகைப் பூடு, காசித்தும்பை, பேய்த் தும்பை.

கசம் : இரண்டுமுழ அளவு, மிகுதி, குளம், யானை, தலை மயிர், தாமரை, நீரூற்று, முகில், இருமல் நோய்.

கசாது எழுதுதல் – திருமணப் பதிவு செய்தல்.

கசாப்புக் கிடங்கு : ஆடு மாடு கள் வெட்டுமிடம்.

கசானனன் ; ஆனைமுகக் கட வுள்.

கசி : ஈரம், வியர்வை, நீரொழுகல், அழு, ஊறு, கசியென்னேவல்.

கசிதல் : அழுதல், இரங்கல், உருகல், ஊறுதல், கரைதல், ஈரமுறுதல், வியர்த்தல், உப்பு முதலியன இளகுதல், நெகிழ்தல்.

கசிவு : ஊறுகை, ஈரம், மனநெகிழ்ச்சி, வருத்தம்.

கசுகசுப்பு ; ஈரத்தன்மை.

கசை : அடிக்குஞ் சவுக்கு, பசை, கவசம், குதிரைச் சம்மட்டி, சவுக்கு, பின்னற்கயிறு, கச்சை, முறுக்கினகம்பி, மயிர்மாட்டி.

கச்சடா : இழிவு, போலித்தன்மை.

கச்சம் : ஆமை, இலக்கம் என்னும் எண், ஒரு மீன், ஒருவகை அளவு, கடன், கவசம், குதிரையின் அங்கவடி, உறுதி, மரக்கால், கச்சு, முந்தானை, வார், ஊற்று, யானைக் கழுத்தில் இடுங் கயிறு, ஒப்பந்தம், தானைச் செருக்கு.

கச்சலம் ; முகில்.

கச்சான் : மேற்குக்காற்று, மேல் திசை.

கச்சு : அரைப்பட்டிகை, நூற்கயிறு, மகளிர் மார்புக்கச்சு, கச்சைப் பட்டை, பிணிக்கை, வம்பு, வார், சிவிகை, இடைக் கட்டு.

கச்சுரு ; நெருப்பு, அக்கினி, தீ, கனல், அனல்.

கச்சேரி : அலுவற்கூடம், ஆடல் பாடல் முதலியவற்றிற்காகக் கூடும் கூட்டம்.

கச்சை ; அரைக்கச்சு, கயிறு, கவசம், கீழ் வயிற்றிற்கச்சை, கௌபீனம், முழுப் புடவை, வார், யானைக் கழுத்திடுகயிறு

கச்சைகட்டுதல் - ஆடையை இறுக்கிக் கட்டுதல், ஒன்றைச் செய்ய மூண்டு நிற்றல்.

கஞ்சம் : தாமரை, நீர், வெண் கலம், வஞ்சனை, அப்பவருக் கம், கயிறு, கவசம், கீழ்வயிற் றிற் கச்சை, கௌபீனம், அமு தம், ஒரு வாத்தியம், ஓர் ஊர், கஞ்சா, கிண்ணம், கைத்தா ளம், துளசி, நொண்டுதல், வஞ்சம், மோசம்.

கஞ்சல் ; பயனற்றது, குப்பை கூளம், அழுக்கு, எளியது.

கஞ்சனம் : கண்ணாடி, கைத் தாளம், கரிக்குருவி.

கஞ்சாகம் : தவிடு.

கஞ்சி - காஞ்சிபுரம், சோற்றின் வடிநீர், நீர் கலந்த உணவு.

கஞ்சிப்பொழுது : உச்சி வேளை, நடுப்பகல்.

கடகடத்தல் : கழன்று போதல், தளர்ந்து போதல், நெகிழ்வ டைதல், ஆட்டங்கொடுத்தல்.

கடகம் - ஆயுதவருக்கம், இராச தானி, உருள், ஓராறு, ஓர் ஊர், ஓர் எண், இணையா இணைக்கை முப்பத்தி மூன் றுள் ஒன்று. கங்கணம், கற் கடக ராசி, கேடகம், கை வளை, படை, நாடு, மதில், மலையின் நடு, மலைப்பக்கம், யானைக் கூட்டம், வட்டம், வீடு, தோளணி, பனையோ லைப் பெட்டி, ஆடி.

கடகன் : காரியத்தை நடத்துப வன், வல்லவன், நட்டுவன், கடகராசியிற் பிறந்தவன்.

கடத்தல் – அளவிறத்தல், கடந்துபோதல், வெல்லுதல், செலுத்துதல், தாண்டுதல், நீங்குதல், நெடுகவிடுதல், பாய் தல், மீறுதல், நாட்போக்குதல்

கடத்துதல் : செலுத்துதல், கடப்பித்தல், காலம் போக்கு தல், கழப்புதல்.

கடந்தஞானம் – முற்றத்துறந்த அறிவு, மெய்யறிவு,

கடந்தநிலை - மேலான நிலை.

கடந்தபொருள் : கடவுள், போனபொருள்.

கடப்பாடு : கடமை, முறைமை, கொடை, ஒப்புரவு, மிகுதல், நடை, நேர்மை, செய்யவேண் டுவது.

கடமை ; கடப்பாடு, குடியிறை, காட்டுப்பசு, பெண் ஆடு, ஒரு வகை மான்.

கடம் : அருநெறி, உடம்பு, ஒரு மந்திரம், ஓரளவு, கடமை, கடன், கயிறு, காக்கை, காடு, குடம், குடமுழுவு, கும்பராசி, கோழை, சாரல், கடலை, தோட்டம், நண்டு, நீதி, மர மஞ்சல், யசுர் வேதத்தின் ஒரு பகுதி, யானை மதம், வாச்சி யத்தில் ஒன்று, வானம், தீவினை, ஈமம்.

கடம்பன் : ஒரு குடி, கந்தன், முருகன், முரடன்.

கடம்பு : ஒருமரம், தீங்கு, கடும்பு, நீபம், கடம்புப் பால், இந்து ளம், கதம்பம், மராமரம்.

கடலடி : இலவங்கம்.

கடலுப்பு – கறியுப்பு

கடலெல்லை : உலகம்.

கடல் : இராகசின்னத்தொன்று, ஒரெண், சமுத்திரம், பசு, சதய நாள், மிகுதி, உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன், அகதி, அப்பு, அம்பரம், அம்புராசி, அரி, அம்போதி, அருணவம், அலை, அளக்கர், ஆர்கலி, ஊழி, உந்தி, உப்பு, உவரி, உவர், ஓதம், கலி, கார்வேள், குரவை, சக்கரம், சலநிதி, சலராசி, சாகரம், சிந்து, தெண்டிரை, நதிபதி, நரலை, நீராழி, பரப்பு, பரவை, புணரி, பெருநீர், முந்நீர், வாரம், வாரணம், வாராதி, வாரி, வாருணம், வீ, வெள்ளம், வேலை.

கடல்மரம் – கப்பல்.

கடல்வண்ணன் – திருமால்.

கடவது – செய்ய வேண்டியது.

கடவன் – கடமைப்பட்டவன், தலைவன்.

கடவுட்பணி : ஆதிசேடன், தேவர்தொண்டு, தெய்வகைங்கரியம்.

கடவுள் – குரு, தெய்வம், நன்மை, முனிவன், வானவன், மேன்மை, இறைவன், தெய்வத்தன்மை, அத்தன், உள்வழி கடந்தோன், சீபதி, வேதாதி, அகநிலை, அசலன், அச்சயன், அச்சுதன், அடிகள், அதிகுணன், அதுலன், அந்தாதி, அபயன், அமலன், அருட்குடையோன், அருளாழி, வேந்தன், அருபி,

அறக்கொடியோன், அறவாழி மன்னன், அறுகுணன், அனகன், அநந்தஞானி, அநந்தலோசன், அநந்தன், அநாதி, ஆதி, ஆதி புங்கவன், இறையோன், ஈசன், ஈசுவரன், ஈறிலி, உள்ளத் துறைவோன், எண்குணத் தோன், ஏகதேவன், ஏகன், ஐ, ஐம்புலத்தடங்கான், கருணாலயன், கருத்தா, குணநிதி, குண பத்ரன், சகநாதன், சகல வியாபி, சச்சிதானந்தன், சுயம்பு, சருவேச்சுரன், சாமி, சோதி, தற்பரன், தனிக்கோலான், தாபரன், தேவன், தேவாதி நாயகன். நிதானன், நித்தன், நிமலன், நிரஞ்சன், நிரந்தன், நிரம்பன், நிராமயன், நிருநாமன், நிருமலன், நிருபன், நீதிபரன், பகவன், பகாப்பொருள், பரஞ்சோதி, பரப்பிரமம், பரம், பரமேசுவரன், பராபரம், தந்தை, பிரமம், பிரான், பிறப்பில்லான், புங்கவன், பூரணன், மயேச்சுரன், மாசேனன், முக்குற்றம் கடிந்தோன், முதலோன், முத்தொழிற்பகவன், முழுதொருங் குணர்ந்தோன், முன்னூற்கேள்வன், முன்னோன், மூவுலகாதாரன், மூவுலகாளி, மூவுலகேந்தி, விதித்தோன், விமலன், விளைவிநாசன், வேதன்.

கடவுள் எழுதுதல் - தெய்வ வடிவை ஏற்படுத்துதல்.

கடன் - அந்திய கருமம். அளத்தல், இயல், ஒருவன் மற்றொருவனிடத்திலே பின்னர் தருவேனென்று வாங்கிய பொருள்,

கடப்பாடு, காரணம், கிரியை, குடியிறை, செய்தற்குரியது, தகுவது, மாறம், முறை, விருந்தோம்பல்.

டன்கட்டாய்ப்பேசுதல் - கடுமையாகப் பேசுதல்.

டன்படுதல் - கடன்வாங்குதல்

டன்முறி - கடன்சீட்டு.

டன்முறை - பெரியோர் வழிபாடு.

டா - ஆடு, எருமை முதலிய விலங்கின் ஆண், யானைமதம், வினா, தடை, சர்க்கரை காய்ச்சும் ஏனம்.

கடாக்கன்று - ஆண் எருமைக் கன்று

கடாக்குட்டி - ஆண் ஆட்டுக் குட்டி.

கடாசலம் - யானை.

கடாட்சம்-கடைக்கண்பார்வை, அருள்.

கடாவுதல் - ஆணி முதலியன கடாவுதல், குட்டுதல், செலுத்துதல், வினவுதல்.

கடாவுவட்டி - வட்டிக்குவட்டி.

கடி - அச்சம்; வியப்பு; அரை; இரப்போர் கலம்; இன்பம், கடுமை; ஐயம்; ஒளி; ஓசை; கரிப்பு; களிப்பு; காலநுட்பம்; காலம்; காவல்; குறுந்தடி; கூர்மை; சிறப்பு; சிறுகொடி; விரைவு; மலர்ப்பொழில்; நிதம்பம்; பேய்; பிணம்; புதுமை; மிகுதி; திருமணம்; நீக்கம்; கடியென்னேவல்.

கடிகாரம் - நேரங்காட்டுங்கருவி.

கடிதல் – அழித்தல்; அறுத்தல்; ஓட்டுதல்; கடிந்து கொள்ளுதல்; சொல்லுதல்; சினத்தல்; தடைசெய்தல்; ஒறுத்தல்; நீக்குதல்; வெட்டுதல்.

கடிது – கடியது; விரைவு; சீக்கிரம்; கடிதில்; மிக; கடுமையானது.

கடித்தல் – கறித்தல்; துண்டாக்கல்; கயிறு முதலியன இறுக்கிப் பிடித்தல்: பல்லாற் கடித்தல்.

கடியது – கடுமையானது; வேகமானது; முரடானது.

கடியர் – கடியவர்.

கடினம் – வன்மை; கொடுமை; கடுமை; மிகுதி; முறைப்பு: வருத்தம்.

கடு – வெறுப்பு; உறைப்பு: கசப்பு; கடுக்காய்; கடுகு; கடுமரம்; கடுகுரோகிணிப்பூண்டு; கடுவென்னேவல்; கார்த்தல்; கூர்மை; கடன்; தகாத செயல்; வைவு; நஞ்சு; பாம்பு: மாவிலங்கு; முதலை; முள்; விரைவு தவணை; முள்ளி

கடுகடுப்பு – சினக்குறிப்பு; மிக்க உறைப்பு.

கடுகடுத்தல் – உவர்த்தல்; உறைத்தல்; கசத்தல்; சினக்குறிப்புக்காட்டுதல்; விருவிருத்தல்.

கடுகு – கடுகென்னேவல்; கடுகுப்பூண்டு; சிறுகடுகு; வெண்கடுகு; நாய்க்கடுகு; மலைக்கடுகு முதலியன.

கடுங்காலம் – கொடிய காலம்; பஞ்ச காலம்; வெப்பமான காலம்.

கடுஞ்செட்டு – கொடிய வியாபாரம்; நியாயமல்லாதசெட்டு; பெருஞ் சிக்கனம்.

கடுஞ்சொல் – இழிசொல்.

கடுத்தல்– நோவெடுத்தல்; வெம்மையாதல்: உறைத்தல்; மிகுதல்; சினத்தல்; வெறுத்தல்; ஐயுறுதல்; ஒத்தல்; குறித்தல்; விரைதல்; விறுவிறுத்தல்.

கடுநகை– எள்ளல் பற்றிய பெருநகை.

கடுநட்பு – மிகுநட்பு.

கடுப்பு – நோவு; வேகம்; வெகுளி: ஒப்பு; ஆணவம்; ஊமத்தை.

கடுமுடுத்தல் – விரைதல்.

கடுமை – கொடுமை; கண்டிப்பு; வேகம்; மிகுதி; வெம்மை; கடினம்; வன்மை; விரைவு; மூர்க்கம்.

கடும்பு – சுற்றம்; சும்மாடு; பாற்கடும்பு.

கடுவளி – பெருங்காற்று; சூறாவளி.

கடுவன் – குரங்கு, நாய், பூனை முதலியவற்றின் ஆண்; படைநோய்.

கடுவினை – தீவினை; கொடிய துன்பம்; கொடுவினை; பெருங்கொலை; கொடுந்தொழில்.

கடூரம் – கடினம்; கொடுமை.

கடை – அங்காடி; அற்பம்; இடம்; இழுக்கு; இறந்துபடுங் காலம்; ஒரு வினையெச்சவிகுதி

கடையென்னேவல்; கீழ்; பக்கம்; புறவாயில்; பூண்களின் கடைப் புணர்வு; பெண் குறி; மயிரின் கடை; முடிவு; வழி; வாயில்; காம்பு; பின்; தாழ்ந்தோன்.

கடைகழிமகளிர் - பொதுமகளிர்

கடைக்கணித்தல் - கடைக்கண்ணாற் பார்த்தல்; புறக்கணித்தல்.

கடைக்கண் - கடாட்சம்; நுனியிடம்; வெட்கம் முதலிய காரணங்களால் பார்க்கும் சிறு பார்வை.

கடைசி - கடையப்பெண்; முடிவு

கடைச்சங்கம் - முடத்திருமாறனாலே மதுரையில் ஏற்படுத்தப்பெற்ற சங்கம்.

கடைச்சன் - கடைசிப் பிள்ளை

கடைச்சி - மருதநிலப் பெண்; இளையபெண்.

கடைதல் - மத்தாற் கடைதல்; மிகுதல்: கலக்குதல்; மசித்தல்; மரம் முதலியன கடைதல்.

கடைதிறப்பு - கதவு திறத்தல்; பரணி என்னும் பிரபந்த உறுப்புகளுள் ஒன்று.

கடைத்தேறுதல் - ஈடேறுதல்.

கடைநாள் - இறுதிநாள்; ஊழிக்காலம்; இரேவதி.

கடைப்பிடி - உறுதி; கடைப்பிடியென்னேவல்; கருமம் முடிக்குந்துணிபு; சித்தாந்தம்; தேற்றம்; மறவாமை; உறுதியான கொள்கை.

கடைப்பிடித்தல் - உறுதியாய்ப் பிடித்தல்: தெளிவாய் அறிதல்; தேர்தல்.

கடையர் - இழிந்தோர், சுண்ணாம்பு சுடுவோர், மருதநிலத்தவர், வாயில் காப்போர்.

கடையல் -அலைத்தல்,கடையும் வேலை, கடைகை, அலைக்கை

கடையனல் - ஊழித்தீ, ஊழித்தீயாவது சர்வசங்கார காலத்தில் உண்டாகுந் தீ, வடவைத்தீ, தட்சிணாக்கினி, இஃது இறந்தவனுக்கிடும் நெருப்பு.

கடையாணி - அச்சாணி.

கடையிலா அறிவு - அருகன் எண்குணங்களுள் முடிவில்லாத அறிவுடைமை.

கடையிலா இன்பம் - அருகன் எண்குணங்களுள் முடிவில்லாத ஆனந்தமுடைமை.

கடையுகம் - இறுதி யுகம்.

கடையெழுத்து -கையொப்பம்.

கடைவழி - இறப்பின் பிறகு உயிர் செல்லும் வழி.

கடைவள்ளல்கள் - பாரி, ஆய், எழினி, நள்ளி, மலையன், பேகன், ஓரி என்பவர்கள். கேட்டபின் கொடுப்பவர்கள்.

கடைவாசல், கடைவாயில் - தலைவாயில்.

கட்சி - காடு, உடல், சேர்க்கை, பக்கம், பங்கு, புகழிடம், மனிதர் படுக்கை, முனையிடம்; வழி, பிரிவு, போர்க்களம்.

கட்சிகட்டுதல் - ஒன்றன் பொருட்டு முரணிநிற்றல்.

கட்செவி - பாம்பு, ஆயிலிய நட்சத்திரம்.

கட்டக்கடுமை - மிகக் கடுமை.

கட்டசீவி - ஆயக்காரன், கஷ்டப்பட்டுச் சீவனஞ் செய்பவன்.

கட்டப்படுதல் - சம்பந்தத்திற் குள்ளாதல், பிணிக்கப்படுதல், வருத்தப்படுதல், வருந்தல்.

கட்டமுது - கட்டுச்சோறு.

கட்டம் - காடு, தாடி, துறைமுகம், பீடை, மலம், மிகு வருத்தம், கவறாட்டத்துறை, நீராடும் இடம், துன்பம்.

கட்டழகு - பேரழகு.

கட்டழிதல் - நிலைகெடுதல்.

கட்டளை - அளவு, உத்தரவு, உருவங்கள் வார்க்குங் கருவி, உரைகள், உவகை, ஒழுங்கு, கற்பனை, செங்கல் அறுக்கும் கருவி, தடை, துலாராசி, நிறையறிகருவி, முறை, முறைமை, கோயில் தருமம், விதி, குதிரைக்குப் பூட்டும் பூண், கட்டுப்பாடு, சமய மூல தத்துவம் உணர்த்தும் நூல், பிறநாட்டார்களுக்கு கோவிலில் ஏற்பட்ட கட்டளை.

கட்டளைக்கோள் - நியாயப் பிரமாணம்.

கட்டாணி - உலோபி, கடைப் பூட்டாணி, பலசாலி, பேரவா உடையோன்.

கட்டாண்மை - பேராண்மை, பெருவீரம்.

கட்டாயம் - கட்டுப்பாடு, கடுமை, நெருக்கம், பலாத்காரம், வெறுப்பு, உறுதியாக, குறுக்காகச் செங்கல்அடுக்குகை

சட்டி - அகமகிழ்ச்சி, இடப்பு, ஒருபுள், கருப்பிண்டம், கருப்புக்கட்டி, சருக்கரை, திரண்ட மாத்திரளை, பாடை, இறுகின பொருள், கற்கண்டு, சிலந்திப் புண், சுரக் கட்டி, பொன் வளையல் செய்யும் அரக்கு, மண் கட்டி, பரு, பிளவை, திரளை, பிண்டம், பொன், கலிங்க நாட்டுத் தலைவன்.

கட்டிக்காத்தல் - கவனித்துப் பாதுகாத்தல்.

கட்டிக்கொள்ளுதல் - அடிப்படுத்தல், தழுவுதல், திருமணஞ் செய்து கொள்ளல், பற்றுதல், வசமாதல், ஏற்றுக் கொள்ளுதல், உடுத்தல், அபகரித்தல், இலஞ்சங் கொடுத்து வசப்படுத்தல், சமாதானஞ் செய்தல்.

கட்டிமேய்த்தல் - அடக்கி நடத்துதல்.

கட்டியங்கூறல் - எழுச்சி கூறல், புகழ்ச்சி கூறல்.

கட்டியம் - ஒரு கூத்து, புகழ்ந்து பேசுதல், புகழ்மொழி.

கட்டிவருதல் - ஊதியங் கூடி வருதல்.

கட்டு - அரண், ஆணை, உறுதி, ஒருவகைக் குறி, கட்டென்னேவல், காவல், கிளை, தொடர்பு, சிலந்திப்பரு, தளை, பொய், மலைப்பக்கம், மிகுதி, மூட்டை, வரம்பு, கட்டடம், தடை, புண் கட்டி, பந்தம், கட்டுப்பாடு, உறவின்கட்டு. வகுப்பு, மூடை,

காலஞ்செல்லுதல் –நாள்கடத்தல்
காலடி – உள்ளங்கால், கரடு, ஓர் ஊர்.
காலதர் – சாளரம், பலகணி.
காலமலலாக்காலம் – அகாலம்.
காலம் – சமயம், பருவம், பொழுது, முடிவு, யுகம்; தக்கசமயம், காலக்கடவுள், முடிவுகாலம்.
காலவிரயம்–வீண்காலம்போகை
காலன் – சனி, நமன், நமன் மந்திரி, யமகிங்கரன், யமன், கரந்துறை கோள்களுள் ஒன்று.
காலாகாலம் – சிற்சில சமயம், உரிய காலம்.
காலாணி – உள்ளங்காலில் உண்டாகும் தடிப்புத் தோல், முளைக் கட்டை.
காலாவதி – காலவரையறை.
காலி – கழிவுநாள், கள், பசுக்கூட்டம், பசு, பயனற்றவன், காலையுடையது, காலி மனை.
காலித்தல் – உதித்தல், கிரகங்கள் தோன்றுதல்
காலிலி - அருணன், முடவன், காற்று, பாம்பு, மீன்.
காலு - கால், வீடு, கொப்பளி, சொறி, வடி.
காலுதல் – கக்குதல், வெளிப்படுத்தல், உமிழ்தல்.
காலூன்றுதல் – நிலைபெறுதல்.

காலை – சமயம், பொழுது, தொழுவம், விடியற்காலம், கதிரவன், முடிவு, துடி, பகல்.

காலை முரசம் – பள்ளியெழுச்சி முரசு.

கால் –அடிப்பக்கம்; அளவுஇடம், இருள், ஏழனுருபு, ஒரு வினையெச்ச விகுதி, காலம், காலன், காற்பங்கு, காற்று, குறுந்தறி, ஊன்றுகோல், நாலில் ஒன்று, வளி, பூந்தாள், பொழுது, வழி மகன், மரக்கால், முறை, வாதம், வாய்க்கால், எழுத்தின் கால், மரக்கன்று, வமிசம், இனமுறை, பிரிவு, நடை, தடவை, இயமன், கருநிறம், காம்பு, அடிகழல், சரன், தாள்.

கால்கட்டு – தடை, தளை.

கால்கொள்ளுதல் – தொடங்குதல், இடங்கொள்ளுதல்,

கால்கோள் – விழாவின் தொடக்கம், போரில் இறந்த வீரனுருவைக் கல்லில் வடிக்கத் தொடங்குதலைக் கூறும் புறத்துறை.

கால்சாய்தல் –அடியோடழிதல்

கால்தாழ்தல் – தாமதித்தல், ஈடுபடுதல், மூழ்கிவிடுதல்.

கால்நடை –காலால் நடக்குதல், ஆடு மாடுகள்.

கால்மரத்தல் – பாதம் உணர்ச்சி அற்றுக் கட்டை போலாதல்.

கால்மிதி – அடிவைப்பு, அடிச்சுவடு.

கால்வடம் – காலணி வகை.

கால்வாய்–நீரோடும் வாய்க்கால்.

காவடி – கா, காவுதடி, காத்தண்டு, தோட்சுமை.

காவலர் -அரசர், கணவர், காவற்காரர், மெய்க்காப்பாளர், ஆடவர், தலைவர், கடவுள்.

காவலன் –பாதுகாப்போன்; அரசன்

காவல் –அரண், கவசம், காத்தல், சிறைச்சாலை, மதில், வேலி, காவற்கூடம், பாதுகாப்பு, காவ

லாள், சிறை; பரண்; ஏமம், ஓம் படை, கடி, கட்டு, கதவு, கழுது, காப்பு, சேமம், சேவல்.
காவற்கடவுள் - திருமால்.
காவற் கணிகையர் - களத்தாடுங் கூத்திகள்.
காவற்கலி - வாழை; வாழைமரம்
காவற்கூடம் - சிறைச்சாலை.
காவற்சோலை - அரசர் விளை யாடுதற்குரிய உத்தியானவனம்.
காவற்றெய்வம் - காக்குந்தெய்வம்
காவன் - சிலந்திப் பூச்சி.
காவாலி - இளமை, வஞ்சகன், வீண்பிதற்றன், சிவன், மனம் போனபடி நடப்பவன்.
காவி - அவுரி, மருந்துருண்டை, கருங்குவளை, கருநொச்சி, கள், காவிக்கல், காவிமண், செம்மண், பற்காவி, மிதப்பு, ஆடையிலே றும் பழுப்பு, செங்கழுநீர்.
காவியம் - காப்பியம், பழைய தொரு கதைபற்றிய தொடர் நிலைச் செய்யுள், கலம்பகம், பரணி முதலிய சிறு காப்பியம்.
காவிரிபுதல்வர் - வேளாளர்.
காவிரிப்பூம்பட்டினம் - புகார்.
காவுதடி - காவடித் தண்டு.
காவுதல் - சுமத்தல், தோட் சுமையெடுத்தல்.
காவுவோர் - பல்லக்குச் சுமப் போர்,
காவேரி - காவிரியாறு.
காவோலை - முற்றின ஓலை.
காழ்கொள்ளுதல் - உறுதி கொள்ளுதல், முதிர்தல்.
காழ்ப்பு - காரம், மரவயிரம், வயிரம், உறைப்பு, மனவைரம், தழும்பு, சாரம்.
காளவாய் - ஒரு விளையாட்டு, கழுதை, சுண்ணாம்பு சுடும் சூளை, பெருங்குரல் வாய்.
காளாஞ்சி - எச்சிற் படிக்கம், காளாஞ்சி, வாதநோய் வகை.

காளாமுகன் – அகப்புறச் சமயிகளில் ஒருவன்.

காளான் – ஆம்பி, புற்றிற்பூ, நாய்க்குடை, காளாம்பி.

காளி – துர்க்கை, எட்டிமரம், கக்கரி, கரியவள், சிங்கம், சூலம், நஞ்சு, பத்திரை, பரிமளகந்தி, பார்வதி, பாம்பின் நச்சுப் பல்லில் ஒன்று, மணித்தக்காளி, சிவசக்தி, பத்திரகாளி, ஐயை, கரியள், இகழ்ச்சி, கார்முகம், எண்டோளி, கங்காளி, கவுரி, குண்டலி, குமரி, சாமுண்டி, சூரி, சூலி, நீலி, பதுமை, மாதரி, மாதங்கி, மாயை, மாலினி, முக்கண்ணி, யோகினி, வேதாளி.

காளை – ஆண்மகன், இளவெருது, இளையோன், கட்டிளமையோன், பதினாறு ஆண்டிற்கு உட்பட்டவன், வீரன், ஏறு, எருது, காளைக்கன்று.

காற்கடுப்பு – கால் உளைச்சல்.

காற்கட்டு - புடைவை விளிம்பு, தடை, தளை, கலியாணம்.

காற்கவசம் – மிதியடி.

காற்சிராய் – காற்சட்டை.

காற்படுதல் – அழிதல்.

காற்பாதை – ஒற்றையடிப் பாதை.

காற்றாடி – சுழல், கறங்கு, காற்றிற் பறக்கும் படம், நிலையிலி, காற்றாடிப் பட்டம் நிலையில்லாதவன் சவுக்கு மரவகை.

காற்றாய்ப் பறத்தல் – விரைவாகச் செல்தல்

காற்று – வாயு, சோதிநாள், பேய், அநிலம் உயிர், உயிர்ப்பு, உலவை, ஊதல், ஊதை, மாருதம், வாடை, கூதிர், கூதை, காற்றின் வகைகள், அறிவுப் பொருள்.

காற்று வாக்கு – காற்றடிக்கும் திசை.

காற்று வாட்டம் – காற்றுக்கு

எதிர்மேகம்.

கானகக்கூத்து - கூத்து வகை.

கானகம் - காடு, கருஞ்சீரகம், காலின் நகம், குறிஞ்சி நிலம்.

கானமெளவல் - காட்டுமல்லிகை

கானம் - இசைப்பாட்டு, இராகம், காடு, கீதம், குறிஞ்சி நிலம், சோலை, பாடுதல், முல்லைநிலம், வனம், வாசனை, தேர், வானம்பாடி, நந்தவனம், தொகுதி, பேதை, இசை, மிகுதி, நந்தவனம்.

கானலடித்தல் - வெக்கையடித்தல்.

கானல் - உப்பளம், ஒளி, கடற்கரைச் சோலை, கழி, காங்கை, காடு, சூரியன், கிரணம், வாசனை, உவர் நிலம், மலைசார்ந்த சோலை, வெப்பம், சூடு.

கானல்வரி - இசைப்பா வகையுள் ஒன்று, கழிக்கரைப்பாடல்

கானீனன் - கன்னன். கன்னி பெற்ற பிள்ளை

கான்மா-பன்றி, காட்டுப்பன்றி.

இ

கி - தமிழ் நெடுங் கணக்கில் மூன்றாவதாக வரும் உயிர்மெய் எழுத்து.

கிங்கிணி - ஒருமரம்; கிலுகிலுப்பைச் செடி; காலணி வகையுள் ஒன்று; அரைச் சதங்கை.

கிச்சிலி - ஒரு நாரத்தை; பூலாங் கிழங்கு.

கிச்சு - நெருப்பு.

கிட - ஒரு நிகழ்கால இடைநிலை; படு; இரு

கிடக்கை - கிடத்தல்; நிலைமரம்; பூமி; மக்கட் படுக்கை; மஞ்சம்; பரப்பு; இடம்; உள்ளுறு பொருள்; உலகம்.

கிடங்கு - அகழி; குழி; குளம்;

சிறைச்சாலை; பொருளறை; மறியல் வீடு; அகழ்; பண்ட சாலை.

கிடத்தல் - படுத்தல்; உறங்குதல்; படுத்தபடியேயிருத்தல்.

கிடத்துதல் - படுக்கச் செய்தல்.

கிடா, கிடாய் - கடா; ஆட்டின் ஆண்.

கிடாசுதல் - ஆணி முதலியன அறைதல்: விட்டெறிதல்.

கிடுகிடுத்தல் - அசைதல்; ஒலித்தல்; நடுங்குதல்.

கிடுகு - வட்டவடிவுப் பறை; கேடகம்; சட்டப்பலகை; தேரின் மரச்சுற்று; முடைந்த ஓலைக் கீற்று.

கிடுகோலை - கீற்றுக்குரிய தென்னோலை.

கிடைத்தல் - அடைதல்; பெறுதல்; வாய்த்தல்.

கிட்டங்கி - பண்டகசாலை.

கிட்டத்தட்ட கிட்டமுட்ட - ஏறக்குறைய

கிட்டல் - இறுக்குதல்; எதிர்த்தல்: கிடைத்தல்; கிட்டுதல்; அடுத்தல்; அணுகுதல்; அண்டல்; சிவணல்; சேரல்: துன்னல்; நண்ணல்.

கிட்டி - இடுக்குத்தடி; கைத்தாளம்; சிறுவர் விளையாட்டுக் கருவியில் ஒன்று; தலையீற்றுப் பசு; தேய்ந்த கலப்பை; நாழிகை வட்டில்; நுகக்கிட்டி; பன்றி இறுக்குங்கோல்; கொல்லர் கருவி வகை; நுகமுளை; சின்னி; ஒரு தண்டனைக் கருவி; குறுங்கோல்; கிட்டிக்கோல்.

கிணறு - அசும்பு; உறவி; குழி; கூபம்; கூவல்; பூவல்; கேணி.

கிண்கிணி - சதங்கை; காலணி; சதங்கைச் சிலம்பு; தண்டை; நூபுரம்; பரிபுரம்; மாலை: கைத்தாளம்.

கிண்டல் - ஆராய்தல்; தோண்

டல்; கிளைத்தல்; தூண்டி விடுகை.

கிண்டுதல் – அகழ்ந்தெடுத்தல்; அரித்தல்; ஆராய்தல்; கிளறு தல்; தோண்டுதல்.

கிண்ணம் – சிறுவட்டில்; நாழிகை வட்டில்; கிண்ணி.

கிண்ணி – கத்தியின் கைப்பிடி யுறை; கிண்ணம்; குதிரைமேற் குளம்பு; உண்கலம்;சிறுவட்டில்

கியாதி – புகழ்; மேன்மை: பிரு குவின் மனைவி.

கிரகசாரம் – கிரகநடை; தீக் கோளின் பலன்; கிரகநிலைக் குறிப்பு.

கிரகணம் – கிரகித்தல்; இராகு, கேதுக்களால் உண்டாகும் பீடை; நினைத்தல்: பற்றுகை; கிரகிப்பு.

கிரகபதி – கதிரவன்.

கிரகபுடம் – சாதகத்தில் கிரகங் களின் நிலையை வரைய றுக்கை,

கிரகம் – கோள்; பற்றுதல்; வீடு; தாளப் பிரமாணத்தொன்று; நவக்கிரகம்; ஆதித்தன்; சோமன்; அங்காரகன்: புதன்; வியாழன்; சுக்கிரன்; சனி; இராகு; கேது; பேய்.

கிரகவகை – ஆண்; பெண்; அலி

கிரகவக்கிரம் - கிரகம்; பின் நோக்கிச் செல்லும் கதி.

கிரகவாகனம் - மயில்; முத்து; விமானம்; அன்னம்; குதிரை; யானை; கருடன்; காகம்; ஆடு; சிங்கம்,

கிரகித்தல் – உணர்ந்து கொள் ளல்; ஏற்றுக்கொள்ளல்; நுண் மையாக உணர்ந்து கொள்ளு தல்; துப்பறிதல்; சாரம் வாங் குதல்.

கிரணன் - கதிரவன்.

கிரமம் - ஒழுங்கு; முறைமை; நன்னெறியில் செல்கை.

கிரயம் - விலைத் தொகை; விற்பனை.

கிராமம் - குறிச்சி; நீர்வாழ் பறவை; மருதநிலத்தூர்; சிறிய ஊர்.

கிராமியம் - சிற்றூர் வழக்கம்; இழிவானது; இழிசினரது கொச்சைப் பேச்சு.

கிராம்பு - இலவங்கம்.

கிரி-பன்றி; பிணையாளி; மலை; இலக்கினம்.

கிரியை - செய்கை; வினை; தொழில்.

கிரகப்பிரவேசம் - புதுமனை புகுதல்.

கிருட்டிணபட்சம் - தேய்பிறை; அமரபட்சம்.

கிருட்டினமூலி - துளசி.

கிருட்டினவல்லி - நன்னாரி.

கிருட்டின சருப்பம் - கரும் பாம்பு.

கிருமி - புழு.

கிலி - அச்சம்; பயம்.

கிலேசம் - துக்கம்; கவலை.

கிழக்கு - கீழ்த்திசை; கீழிடம்; இழிவு.

கிழடு - முதுமை.

கிழத்தி - உரியவள்; தலைவி; மருதநிலத் தலைவி; பெண்.

கிழமை - உரிமை, கடமை; குணம்; மாட்சிமை; மூப்பு; வாரம்; உறவு, நட்பு, ஆறாம் வேற்றுமைப் பொருள்; வார நாள்; முதுமை; நாள்; கிழம்.

கிழமைவட்டம் - ஏழுநாள் கொண்ட அளவு.

கிழம் - கிழத்தன்மை; முதுமை; முதுமையடைந்தவர்.

கிழலை - சுற்றுப்புறம்; மரக்கலத்தின் சாய்வுப் பக்கம்.

கிழவர் - உரியோர்; மூப்புடையோர்.

கிழவன் – உரியோன்; கணவன்; தலைவன்; பரணி நாள்; மருத நிலத் தலைவன்: மூப்புடையோன்.

கிழவி - முதியவள்; தலைவி.

கிழவு – கிழத்தன்மை.

கிழி – எழுதுபடம்; கிழிந்த துண்டு; கிழியென்னேவல்: கீழுடை; கீற்று; பொட்டணி; கிழிபட்ட துகில்; கீறு; சீலையில் எழுதிய ஓவியப்படம்; வெற்றி; பொற்கிழி; பொருள் மூட்டை.

கிழித்தல் – துண்டித்தல்; கிழியச் செய்தல்; மறைதல்; தின்னுதல்; பேர்த்தல்; கீறுதல்; சாதித்தல்.

கிளப்பிவிடுதல் – தூண்டி விடுதல்; நீக்குதல்.

கிளம்பு – எழும்பு; மேலோங்கு.

கிளர்ச்சி - இறுமாப்பு; எழுச்சி: நிறைவு; ஒலி; மேலெழும்புகை: மிகுதல்.

கிளர்தல் – உயர்தல்; எழுதல்; நிறைதல்: மிகுதல்; இறுமாப்புக் கொள்ளுதல்.

கிளர்த்துதல் – எழுப்புதல்: நிறைத்தல்.

கிளர்வு – உள்ளக் கிளர்ச்சி; எழுச்சி; பெருக்கம்; வளர்ச்சி.

கிளறிப் பார்த்தல் – ஆராய்ந்து பார்த்தல்.

கிளறுதல்–கிண்டுதல்; கலத்தல்.

கிளி - ஒரு மீன்; கிள்ளை; பறவை வகை; கிளிவகை; வெட்டுக் கிளி: கிள்மீன்; அரி: சுகம்; சுவாகதம்; தத்தை; வன்னி; கின்னரம்; கிளிப்பூச்சி; கிளிப் பிள்ளை.

கிளுகிளுத்தல் – மகிழ்தல்.

கிளை - உறவு; ஒளி; ஒரு பண்; கிளையென்னேவல்; கூட்டம்; கைக்கிளையென்னும் இசை;

தளிர்; மந்தை: மரக்கிளை; மூங்கில், வீணையின் ஒரு நரம்பு, கப்பு, பூங்கொத்து, சுற்றம், வகுப்பு, இனம், ஓர் இசைக்கருவி, ஓர் இசை, யாழின் ஒரு நரம்பு, உறவினர், வமிசம், புல்லாங்குழல்வகை, மரக்கொம்பு, கிளறு, களை, வீடு, பெருகு, நெருங்கு, கிண்டு.

கிளைமை – உறவு, நட்பு,

கிளையார் – கிளைஞர், நண்பர், உறவினர்.

கிள்ளுதல் - நகத்தால் வருத்தல், சிறிதளவு எடுத்தல்.

கிறுகிறுத்தல் – தலை சுழற்றுதல், அஞ்சுதல், தடுமாறுதல், கிறுகிறுப்பு, மயக்கமாதல்.

கிறுக்கல் – எழுதல், கீறித்தள்ளல், தாறுமாறாக எழுதுகை, எழுத்தின் அடிப்பு, கிறுக்குதல்

கிறுக்கு – பித்துக்கொண்டவன், உரித்தெரியாத எழுத்து, செருக்கு, ஆணவம், தலைச்சுற்று, மிக்க ஆசை.

கிறுக்குதல் - கிறுக்கல்.

கின்னரம் – கின்னரப் பறவை, இசை எழுப்பும் பறவை வகை, நீர்வாழ் பறவை, ஒரு வகை யாழ், ஆந்தை.

கீ

கீசா – பொய்.

கீச்சுக்கீச்செனல் – ஒலிக்குறிப்பு

கீதம் – இசை, இசைப் பாட்டு, மூங்கில், வண்டு.

கீதை – பாட்டு, பாடுகை, கருங்காலி, தெய்வப் பாடல், பகவத்கீதை, பிரமகீதை, ரிபுகீதை முதலிய நூல்கள்.

கீரி – நகுலம், கீரிப்பிள்ளை, கருவாலி, மரவகை, கள்ளிமரம், தீர்வை, குட்டி, பறழ், பிள்ளை.

கீரை – இலைகளுக்குப் பொதுப் பெயர்.

கீரைப்பாம்பு - வயிற்றில் உண்டாகும் நாகப்பூச்சி, கீரைப் பூச்சி.

கீர்த்தனை - ஒருவகை இசைப் பாட்டு.

கீர்த்தி - புகழ், சீர்த்தி.

கீர்த்தித்தானம் – சென்ம லக்கினம்.

கீலம் – ஆணி, கிழிவு, கீல், கீற்று, சுவாலை, பிசின், பொல்லம், வெட்டு, சுடர்க்கொழுந்து, கிழிதுண்டம், பூசுந்தார், ஆப்பு, தூண், ஆயுதம், சலாகை, சிறுமை.

கீல்வாதம் – கீல்வாயு.

கீல்வீக்கம் – உடற் சந்துகள் வீங்குதல்.

கீழறுத்தல் – நிலத்தில் சுரங்கம் செய்தல், சூழ்ச்சி செய்தல்.

கீழறுப்பான் – சூழ்ச்சியாற் பிறரைக் கெடுப்பவன்.

கீழுலகம். கீழுலகு – நரகம், பாதலம், கீழேழுலகம், நாகலோகம், அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதலம்.

கீழோர் – கீழ்மக்கள், இழிந்தவர், சண்டாளர், தாழ்ந்தோர்

கீழ்க்காற்று – கிழக்கிலிருந்து வீசும் காற்று, கொண்டல்.

கீழ்க்கணக்கு – அடி நிமிர்வில்லாச் செய்யுள் பலவற்றால் அறம் பொருள் இன்பங்களைப் பற்றிக் கூறும் நூல்வகை, உதவிக் கணக்கன், கீழ்வாய் இலக்கம்.

கீழ்நோக்குதல் – தாழ்ந்த நிலைக்குப் போதல்.

கீழ்மக்கள் – சண்டாளர், இழிந்தோர், அசடர், அநீதர், அற்

பர், கயவர், கல்லார், கனிட்டர், கையர், சிறியர், சிறுமையர், தீயோர், நெறியிலார், புல்லர், பூரியர், பேதையர், முசுடர்.

கீழ்மை – ஈனம், தாழ்மை, இழிவு, பணிவு, இழிவான செய்கை.

கீறல் – எழுதல், கிழித்தல், கீறுதல், கோடிடுதல், கையெழுத்திடத் தெரியாதவன்.

கீறு – அடையாளம், கிழி, பிள, வெட்டு, கிறுக்கு, பிளப்பு, தென்னோலை அல்லது பனங்கிழங்கின் பாதி, கீறென்னேவல்

கீறுதல் – வரிகீறுதல், எழுதுதல், பறண்டுதல், அறுத்தல், வகிர்தல்.

கு

கு – இருதிணைப்பால் ஒருமைத் தன்மை வினைவிகுதி, இன்மைக்கும் எதிர்மறைக்கும் வரும் ஓர் உபசருக்கம், ஓர் எழுத்து, குற்றம், சாரியை, சிறுமை, தடை, தொனி, நிந்தை, பண்புப்பெயர் விகுதி, நான்காம் வேற்றுமை உருபு, பாவம், பிறவினைவிகுதி, பூமி, இகழ்ச்சி, நீக்குதல், இன்மை, நீக்கம் நிறம்.

குகன் – முருகன், இராமரிடம் நட்புக்கொண்ட ஓர் ஓடக்காரன்

குகு – அமாவாசை, குய்யத்தைப் பற்றியிருக்கும் ஒரு நரம்பு, கூகையொலி, தச நாடியுள் ஒன்று, அங்கிரா முனிவர்மகன்.

குகை – அளை, சமாதியறை, மலைமுழை, சிமிழ், முனிவர் வாசம், ஐவகை உலோகங்களை உருக்கும் ஏனம்.

குக்கல் – இருமல், குக்கன், கக்குவான், குக்கர், நாய்.

குங்குமம் – செடிவகை, செஞ்சாந்து, குரங்கு, மஞ்சள்நாறி,

குங்குமப் பொடி, சாம்பிரா விரை.

குசபலம் - மாதுளை மரம்.

குசலம் - ஆற்றல், நலம், மிகுந்த கல்வி, நற்குணம், மாட்சிமை.

குசன் - செவ்வாய்.

குசினி - சிறியது, சிறுபயிர், சமயலறை.

குச்சி - கூர்ச்சு, மயிர்ச்சிகைப் பூட்டு, மயிர்க் குச்சு, குச்சு, சுற்றி, உச்சி, அருவரு, மரக் குச்சி, ஒருவகைச் செடி, சிறு கம்பு.

குச்சில் - சிறுகுடில், குச்சுப்புல்,

குச்சு - அடைப்பு, குஞ்சம், குடில், குற்றி, கூர், சிறு கம்பு, சிற்றில், நுதி, பாவாற்றி, பயிர் வேர் முதலிய முடிச்சு, கொய் சகம், புற்குச்சு, மரக்குச்சு' கடாவுமுளை, கொண்டையூசி, சிறுகுடில், சிற்றறை, ஒரு காதணி, கழுத்தணிவகை, நெச வுக் கருவி.

குஞ்சம் - ஈயோட்டி, குச்சு, குச்சுப்புல், குறள், குன்றிக் கொடி, கூன், கொத்து, கோள் சொல்லல், பூங்கொத்து, மருள் வீசுங் குஞ்சம், பாவாற்றி, நாழி.

குஞ்சரக்கன்று - யானைக்குட்டி

குஞ்சரம் - உற்சிதம், கருங் குவளை, மருள், யானை.

குஞ்சிரிப்பு - குறுநகை, புன் னகை.

குஞ்சு - பறவை, எலி, **அணில்** முதலியவற்றின் பிள்ளை.

குட - வளைந்த, தட, குடத்தி லுள்ள, மேற்கிலுள்ள.

குடகாற்று - மேல் காற்று.

குடக்கு - மேற்கு.

குடங்குதல் - வளைதல்,

குடதிசை - மேற்குத்திசை.

குடதேவர் - அகத்தியர்.

குடமுடைத்தல் - கொள்ளி வைப்பவன் பிணத்தைச் சுற்றி வந்து நீர்க்குடம் உடைக்கும் சாவுச் சடங்கு.

குடம்பை - உடம்பு, நீர்நிலை, பறவைக்கூடு, முட்டை, கூடு, உடல், ஓர் ஊர்.

குடர் - குடல்.

குடலேறுதல் - குடல் இடம் மாறி மேலேறுதல்.

குடல் - குடர், வயிற்றுள் இரைப்பையைத் தொடர்ந்துள்ள குழாய், பெருங்குடல், சிறுகுடல்.

குடவர் - கோக்குவர், இடையர், குடநாட்டில் உள்ளோர்.

குடவிளக்கு - திருமண விளக்கு, மணவறையில் அக்கினி மூலையில் குடத்தின்மேல் வைக்கும் விளக்கு.

குடாக்கடல் - மூன்று பக்கம் தரை சூழ்ந்த கடல்.

குடாசல் - சூழ்ச்சி செய்தல்

குடிசெய்தல் - பிறந்த குடியை உயர்த்துதல், வசித்தல்.

குடிசை-சிறுவீடு, குடில், சிற்றில்

குடிதாங்கி - குடும்பத்தைத் தாங்குபவன்.

குடித்தனப் பாங்கு - இல் வாழ்க்கை ஒழுங்கு.

குடித்தனம் - இல்வாழ்க்கை.

குடிநீர் - குடிக்கும் நீர், கியாழ மருந்து.

குடிப்பிறப்பு - உயர்ந்த குடியிற் பிறத்தல்.

குடிமகன் - நாவிதன், ஏவல் செய்வோன், நற்குடிப் பிறந்தவன், பரம்பரை அடிமை, படியாள்.

குடிமூழ்கிப்போதல் - முற்றும் அழிதல்.

குடிமை - உயர்குலத்தாரது ஒழுக்கம், பிறந்த குடியை உயரச் செய்யுந் தன்மை, குடிப் பிறப்பு, குடிமக்கள் செய்யும் ஏவல்தொழில், குலனுடைமை, வரி.

குடியரசு - குடிகளால் நடத்தப் படும் அரசாங்கம்

குடியானவன் - பயிரிடுவோன்.

குடியிருப்பு - சிற்றூர், குடியிருக்கை.

குடியேற்றம் - புதுநாட்டிற் குடி புகுதல்.

குடில் - வீண், உடம்பு, குடிசை, குச்சு, சிற்றில்.

குடிவெறி - கள்குடி மயக்கம்.

குடுகுடுக்கை - கொப்பரைத் தேங்காய்.

குடுகுடுப்பை - குடுகுடுப் பாண்டி ஆட்டி ஒலிக்கும் சிறிய உடுக்கை, அவசரப்படுபவன், வறட்சி, கஞ்சாக் குடுக்கை.

குடுக்கை - கமண்டலம், இடக்கையென்னும் தோற் கருவி, வீணையின் உறுப்பு, ஒரு வாத்தியம்.

குடுமி - ஆண் மயிர், உச்சி, கதவிற் குடுமி, சிகை, நுதி, பாம்பு பிடிப்பவன், மயிர் முடி, மலையுச்சி, வில்லு, வெற்றி, சிக்கம், சிமிலி, மூடி, சுழி, பாம்பாட்டி, தலையுச்சி, ஒரு பாண்டியன்.

குடும்பம் - உறவு, ஒரு குடியில் உள்ளார், மனைவி, வீடு, சமுசாரம், உறவினர், குலம், குடி, இனத்தர், ஒரு குடிசையிலுள்ளோர்.

குடும்பன் - குடும்பத்தலைவன், சமுசாரி.

குடும்பி - சமுசாரி, பள்ளிகளின் தலைவி, குடும்பத் தலைவன்.

குடை - அரசச்சின்னத்தொன்று, உடைவேல், உட்டுளைப்பொருள்,

கவிகை, குடையென்னேவல், குமரனாடல், மிதியடி முதலியவற்றின் குமிழ், அரசாட்சி, குடைக்கூத்து, வேல், குமிழ், அரி, கடை, துளை, வதை, மனதை வருத்து, துருவு, உட்புகு. வேலமரம்.

குடைச்சல் – குடைவு, வருத்தம், உளைவு.

குடைதல் – அரிதல், கடைதல், கவிதல், துளைத்தல், தோண்டல், நீராடுதல், மனதைவருத்தல், கிண்டுதல், உளைவு, நோவெடுத்தல்.

குடைநிழற்றல் - உலகத்தைப் பாதுகாத்தல், குடைபிடித்தல்

குடைவு – பொந்து, குகை.

குட்டி – ஆடு, கழுதை, குதிரை, நரி, நாய், பன்றி முதலியவற்றின் குட்டி, சிறு பெண், காக்கைப் பலா, கடிச்சை.

குட்டிச்சாத்தான் – ஒரு பேய், குறள்த் தேவதை.

குட்டிவைத்தல் – விளையாட்டில் தவறான காயை அடித்தல், சூதில் பந்தயம் இழத்தல்.

குட்டு – குட்டுதல், குட்டென்னேவல், மானம், கைமுட்டியால் தலையில் இடிக்கை, மறைவு, குட்டநோய்.

குட்டை – ஒரு நோய், கட்டையாயிருப்பது, குள்ளம், கைத்துண்டு, சிறு குளம், தொழுமரம், குறுகிய உருவம், குறுணி

குணகர் – கணக்கர்.

குணகல் – வளைதல், கோணல், குவிதல், முடங்கல், தளர்தல், சோம்புதல்.

குணக்குன்று – கடவுள், பெருங்குணம், குணம் உள்ளவன், நற்குணம் மிகுந்தவன்.

குணக்கேடு–நற்குணம் இன்மை

குணங்குறி – தன்மையும் வடிவமும்.

குணசாலி – நற்குணமுள்ளவன்

குணசீலி – நற்குண நற்செயல் உடையவள்.

குணதிசை – கிழக்குத்திக்கு.

குணநிதி – கடவுள், குணம் நிறைந்தவன்.

குணபேதம் –ஆங்காரம், குணம் மாறுதல்.

குணப்படுதல் – சீர்ப்படுதல், நோய் குறைதல்.

குணப்பண்பு – குணத்தாலாய பண்பு; தன்மை குறிக்கும் பண்புச் சொல்.

குணப்பெயர் – பண்புப்பெயர்.

குணம்-இயல், இயல்பு, உரிமை, உழுவல்; ஊழ், கிழமை, கொள்கை; கோள்; சால்பு; சீலம்; தகவு; தகுதி; தகை: தகைமை; திறன்; நிலை; நிறம்; நீர்; நீர்மை; நுனித்தல்; படி; பண்பு; பரிசு; பாடு; பால்; பான்மை; மரபு; பிரகிருதி; முறை; வண்ணம்; விதி; இலட்சணம்; கயிறு; சூடம்; சத்து; சுகம்: சீர்மை; தத்துவம்; தன்மை; நாணி; மேன்மை; பொருளின் தன்மை; ஒழுக்கத் தன்மை; நூலைச் சிறப்பிக்கும் செறிவு தெளிவு முதலிய தன்மை; அறிவுத் தெளிவு; நூல்; வில்லின் நாண்; நிறை; ஓர்ப்பு; கடைப் பிடி நாணம்; மடம்; அச்சம்; பயிர்ப்பு.

குணன் – நற்குணம் உடையவன்

குணாதீதன் – கடவுள்; சீவன் முத்தன்.

குணாலயன் – கடவுள்; நற்குண முள்ளவன்.

குணு – புழு.

குணுக்கம் – வருத்தம்: துன்பம்

குணுக்கன் – மூக்காற் பேசு வோன்.

குனுங்கல் - அனுங்கல்; வருந்தல்; குணங்குதல்; வளைதல்.

குண்டக்கம் - கோள்; வஞ்சனை

குண்டம்-ஓமக்கிடங்கு; கிடங்கு; கிணறு; குடுவை; குண்டான், குழி; குளம்; குட்டை; பானை; கற்பழிந்து வேசையானவள்.

குண்டர் - அருகர்.

குண்டலம் – பலராமன், பலபத்திரன்; குண்டலம் அணிந்தவன்

குண்டலி – இசங்கு; ஒரு வாயு; காளி; சீந்தில்; தாளகம்: பாம்பு; மயில்; மான்; மூலாதாரம்; நாபித்தானம்; குய்யத்திற்கும் குதத்திற்கும் நடுவிலிருப்பதாகக் கருதும் மூலாதாரம்; சங்கச்செடி; சுத்தமாயை; நாபித்தானத்திலிருக்கும் நாடி; ஒரு நாடி; ஓம்; சீந்திற்கொடி; இசங்குச் செடி.

குண்டலிநி – சுத்தமாயை; மகாமாயை; மூலாதாரத்திலுள்ள பாம்பின் வடிவமைந்த ஒரு சக்தி.

குண்டிக்காய் – மூத்திரப்பை.

குண்டியம்-பழிச்சொல்; பொய்; நிந்தனை: குறளை; மறைவை வெளிப்படுத்துகை.

குண்டு – ஆண்; ஆண் குதிரை; ஆழம்: உருண்டை; குளம்; தாழ்வு; திரண்டகல்: நிறைகல்; பந்துபோல் உருண்டு கனப்பது; நிறைகல் வகை; துலாக்கோல்; உருண்டை வடிவான ஒருவகைப் பாத்திரம்; பீரங்கிக் குண்டு; உருண்டையான பொன் மணி; உரற்குழி; குதிரை; குழி; குதிரை கழுதை இவற்றின் ஆண்.

குண்டுக்கல்– தராசின் நிறைகல்; வேலை செய்து செப்பனிடப் படாத கல்

குண்டுணி – கோட்சொல்லுவோன்; கோட்சொல்.

குண்டுநீர் - கடல்.

குண்டுநூல் – நுனியில் ஈயக் குண்டு கட்டப்பட்டிருக்கும் அளவு நூல் கயிறு.

குண்டுமல்லிகை – குடமல்லிகை

குண்டூசி – தலை திரண்ட ஊசி.

குதப்புதல் – மெல்லுதல்.

குதம் – கிடங்கு; தருப்பை: மல வாயில்; மிகுதி; வெங்காயம்; ஓமம்; தும்மல்.

குதம்புதல் – அலசுதல்; கொதித்தல், சினத்தல்.

குதர்க்கம் – முறைகெட்ட சொற்போர் விதண்டாவாதம்

குதறுதல் – உதறுதல்; சிதறுதல்; கிண்டுதல்; நெறி தவறுதல்; குலைதல்.

குதனைக்கேடு – அசட்டை; துப்புரவின்மை; சாதுரியமின்மை.

குதி – அடிப்புறத்து மூலை; அடிமிதி; கால்கைக் குதி; குதிப்பு; குதியென்னேவல்; முயற்சி; குதிக்கால்; காற்குதி; கடந்து போ.

குதிகொள்ளல் – குதித்தல்.

குதித்தல் – கடத்தல்; பாய்தல்: வெல்லுதல்.

குதிரைக்கலணை – குதிரைச் சேணம்.

குதிரைக்குழம்பு – நீர்க்குளிரி; குதிரையின் குரம்; குதிரைக் குளம்படி; குரவம்.

குதிரைப்பாகர் – பண்ணுவர் பரிமாவடிப்போர்; மாவலர்; வதுவர்; வாதுவர்.

குதிரைமரம்– கால்வாய் அடைக்குங் கதவு; தேகப்பயிற்சிக்குரிய தாண்டுமரம்; குதிரைத் தறி; மதகுக் கதவு; நெசவிற் பாவு தாங்குதற்குரிய மரச் சட்டம்.

குதிரைமறம் – போர்க் குதிரையின் திறப்பாட்டைக் கூறும் புறத்துரை.

குதிரைவலி – பெண்களுக்குப் பேறுகாலத்திலுண்டாகும் பெருவலி.

குதுகலம் – அகக்களிப்பு.

குதுகலித்தல் – களித்தல்.

குதூகலம் – குதுகலம்.

குத்தல் – அடித்தல்; உறைக்கச் சொல்லுதல்; குத்துகல்; வீட்டு அமைவுக்குற்றம்; நெல் குத்துதல்: தின்னல்; ஊன்றல்.

குத்தி – அடக்கம்; குற்றி: சிறு குடுவை; மண்; கோணிமூட்டை முதலியவற்றைக் குத்துங் கருவி; கலப்பைக் கூர்; திரிகரண அடக்கம்; மாறுபாடு.

குத்து - உலக்கை முதலியவற்றால் குத்தல்; குத்தென்னேவல்; ஈட்டி முதலியவற்றால் தாக்குதல்; கையைப் புதைத்துத் தள்ளல்; சணல்; தைத்தல்; நிறு; திட்டமானது: நேர்; வாயுக் குத்து; புள்ளி; செங்குத்து.

குத்துக்கு நிற்றல் – வாதாடுதல்

குத்துதல் – குத்தல், ஊசி முதலியவற்றால் துளையிடுதல், படைக்கலங்களால் குத்துதல், சுடுசொற் சொல்லுதல், வருத்துதல், அகழ்தல்.

குத்துப்புரை – நெற்குற்றும் இடம்.

குத்துமதிப்பு – சுமார்.

குத்துவாள் – உடைவாள், சுரிகை.

குத்தூசி - குத்தித்தைக்கும் ஊசி, கூரைவேயும் ஊசி.

குந்தகம் – தடை.

குத்தாணி – குந்தநோய், நெற் குத்துங் கருவி, பருவுரல். பேரூரல் உரலின் வாய்க்கூடு, கண்நோய் வகை.

குந்துதல் – குந்தியிருத்தல், நொண்டி நடத்தல், தவறுதல், இருத்தல், வளைதல்.

குபேரன் - சந்திரன், தனதன், வடக்கு, வடக்குத் திசைப்பாலன், பணக்காரன், அளகையாளி, இயக்கர்கோமான், நரவாகனன், நிதிக்கிழவன், மரகதன், வடதிசைத் தலைவன்.

குப்பம்-சிற்றூர், குப்பல், திடர், ஊர், செம்படவர் முதலியோர் வாழுஞ் சிற்றூர், காடு, கூட்டம், குவியல், கடற்கரையூர்.

குப்பாமணி - குப்பைமேனி.

குப்பி - ஒரு பாண்டம், மாதர் தலையணியுள் ஒன்று, வீணையுள் முறுக்காணி, ஒரு வகைக் குடுவை, மாட்டுக் கொம்பு முதலியவற்றிற் செருகும் பூண், சங்கங் குப்பி, ஒரு பாத்திரம், மருந்துக் குடுவை, சிமிழ், பூண், சடைக்குச்சு.

குப்பை - கஞ்சல், குலிவு, கூட்டம், மேடு, குவியல், தானியக் குவியல், செத்தை, சதகுப்பை, குப்பைமேடு, பொலி.

குமட்டுதல் - அருவருத்தல், தெவிட்டுதல், வாந்திக்கு வருதல், கக்குதல்.

குமரகோட்டம்- கச்சியில் உள்ள ஒரு முருகக்கடவுள் திருக்கோயில்.

குமரவேள் - முருகக் கடவுள்.

குமரன் - ஆண்மகன், இளையோன், கபிலபுரத்தரசன், மகன், முருகன், வயிரவன், இளைஞன், புதல்வன், பதினாறு ஆண்டு முதல் முப்பத்திரண்டு ஆண்டுக்குட்பட்டவன்.

குமரி - அழிவின்மை, அழுகண்ணி, ஒரு கண்டம், கற்றாழை, கன்னி, காணி, ஏழு ஆறுகளுள் ஒன்று, பருவம் உடையவள், புதல்வி, மகள், பருவம் அடைந்த பெண், துர்க்கை, குமரியாறு, குமரி

முனை, கன்னியா குமரி, உமா தேவி.

குமரிப்படை – அழியாப்படை.

குமரிப்போர் – முதற்போர்.

குமரிருத்தல் – வீணேகழிதல்.

குமர் – கன்னியழியாமை, மணம் இல்லாத பெண், கன்னி அழி யாத் தன்மை.

குமாரத்தி – மகள்.

குமாரன் – மகன், முருகன், விடலை, புதல்வன், இளை ஞன், வாலிபன், குமரன்,

குமாரி – குமரி.

குமிண்சிரிப்பு – புன்சிரிப்பு.

குமிழாணி – வட்ட வடிவமான தலையை உடைய ஆணி.

குமிழி – குமிழிப்பு வடிவுள்ளது, நீர்க்குமிழி, பாதக் குறட்டின் குமிழி, ஊற்றுவாய், குமிழ், திமில், கொப்புழ், நுரை, புற் புகம், பௌவம், மொக்குள்.

குமிழ் – எருத்துத்திமில், ஒரு மரம், குமிழ்ப்பு, நாண் ஒலிக் கச் செய், நாணற்புல், பெருங் குமிழ், உள்ளங்காற் கட்டி.

குமிறுதல் – ஒலித்தல்.

குமுதம்– அடுப்பு, ஆம்பல், கருப் பூரம், கூட்டம், செவ்வாம்பல், தருப்பை, படையினோர் தொகை, பேரொலி, வெள்ளாம் பல், மிகுதி, நெய்தல், கருவிழி யில் உண்டாகும் ஒருவகை நோய், அல்லி.

குமுறல் – பேரொலி.

குமுறுதல் – ஒலித்தல், முழக் கஞ் செய்தல், மனத்தினுள் ளேயே வருந்தல், பீறிடுதல்.

குமைத்தல் – அழித்தல், குழை யப் பண்ணுதல், உரலில் வைத்து இடித்தல், குத்தல்.

குழையல் – குழைவானது, குழைவு, மெலிவு.

கும்பகாரி, கும்பகாரிகை — குயத்தி.

கும்பம் - ஒரு பாசாணம், குடம், குவியல், சிவதை, நெற்றி, யானை, மத்தகம், கும்பகலசம், கும்பராசி, மாசிமாதம், நூறுகோடி, கரகம், தாலம்பம், பாண்டம், கலசம், தூபி.

கும்பல் – குவியல், கூட்டம், திரள்.

கும்பிடல் – கைகூப்பி வணங்குதல்.

கும்பிடு – வணக்கம்.

கும்பிடுகள்ளன் - வணக்கங்காட்டும் வஞ்சகன்.

கும்மட்டி - ஒரு கூத்து, ஆற்றுக்கும்மட்டி, குதித்து விளையாடுதல்

கும்மலித்தல் – விளையாடுதல்,

கும்மல் – அடித்தல், அரிவாள், கும்முதல்.

கும்மாளம் - குதித்து விளையாடுகை.

கும்மி - ஒரு பிரபந்தம், கும்மிப்பாட்டு, மகளிர் கூத்து, ஒரு விளையாட்டு.

கும்மியடித்தல் - பாடிக்கொண்டு கைகொட்டியாடுதல்.

கும்முதல் – குத்துதல், அடித்தல், மெல்லியதாக்குதல்.

குயலன் – தேர்ந்தவன்.

குயவரி – புலி.

குயிலன் – தேவேந்திரன்.

குயில் – இசைக்குழல், ஒரு புள், குயிலென்னேவல், சொல், துளை, கோகிலம், மேகம், குயிலு, கூப்பிடு, செய், கட்டு, நெய். இரத்தினம் பதி.

குய்மனத்தார் – வஞ்சகர்.

குய்யம் – அபானவாயில், ஆண்குறி, பெண்குறி, பொய், மறைவு, வஞ்சகம், கபடம், உபத்தம், ஆமை.

குரக்கன் - கேழ்வரகு.

குரக்கு – குரங்கு.

குரங்கு – குரங்கென்னேவல், கொளுக்கி, தொடை, மந்தி, முசுமுசுக்கை, விலங்கின் பொது, வளைவு, வானரம், கொக்கி, விலங்கு, கோணல், காரூகம், யூகம், தாள், இரங்கு, தொங்கு, தங்கு, அரி, கச்சகம், கடுவன், கள்வன். கானவன், கீசகம், கோகுலம், கோடரம், தோரணம், நாகம், நிரந்தரம், பிலவங்கம், மர்க்கடம், வலீமுகம், கருங் குரங்கு, பெண் குரங்கு, மந்தி, யூகம்.

குரங்குப்பிடி – பிடிவாதம்.

குரம்பை - உடல், சிறுகுடில், பறவைக்கூடு, முட்டை, தானியக்கூட்டு, சிறிய மனை, நெற்கூடு; குடிசை.

குரல் - இறகு, இன்னிசை, ஏழிசையின் ஒன்று, ஒலி, ஓசை, கதிர், தினை, பாதிரிமரம், பெண்மயிர், மயிர்ச்சுருள், மிடறு, மிடற்றாற்பிறக்கும் இசை, யாழ் நரம்பு, பூங்கொத்து, பயிர்க் கதிர், குழல், ஒன்றோடொன்றற் குள்ள சேர்க்கை.

குரல்வளை – மிடற்றின் உறுப்பு

குரவர் – அரசர், உவாத்தி, குரு, தந்தை, மூத்தோர், ஆசிரியர், வழிபடத்தக்க பெரியோர்கள்,

குரவை ஒலி, ஒரு மீன், கடல், கூத்து, கைகோத்தாடல், பேரொலி, மகளிர் மகிழ்ச்சியொலி.

குரவைக்கூத்து – எழுவரேனும் ஒன்பதின்மரேனும் கைகோத்தாடும் ஒருவகைக் கூத்து.

குரவையிடுதல் – கூப்பிடுதல், ஒலி செய்தல். மங்கலவொலி செய்தல், நாவால் குழறி மகிழ்ச்சியொலி செய்தல்.

குரிசில் – ஆண்மகன், அரசன்,

தலைவர், பெருமையிற் சிறந்தோன், உதவியாளன்.

குரு - ஆசான், இருமாத்திரை, இரும்பு செம்பு ஈயம் முதலிய உலோகங்களைப் பொன் வெள்ளியாகப் பேதிக்கும் சிந்தூரம், உவாத்தி. ஓர் அரசன், காத்திரம், சுத்தசலம், சோறு, நிறம், துரோணன், நாடு ஐம்பத்தாறில் ஒன்று, பாரம், தந்தை, பிரகாசம், பிரகஸ்பதி, பெருமை, மேன்மை, வருத்தம், வியாழம், சினங்கொள்ளுதல், கொட்டை, துரிசி, ஞானாசாரியன், உபாத்தியாயன். புரோகிதன், பூசநாள், கனம், பருமன், நெடில், குருகுலத் தலைவன், குருவருடம், குருநாடு, குருபூமி, தேர், சிவன், திவ்வியம், நேரசை, அடிகள், அத்தன், ஆரியன் இறைவன், ஈசன், ஐ, ஐயன் கடவுள், குரவன், கோளான் சாமி, தேசிகன், பகவன், பதி, புங்கவன், பெருமான்.

குருகு - இடைச்சங்க நூல்களுள் ஒன்று, இளமை, உலைமூக்கு, குருக்கத்தி, கைவளை, கோழி, நீர்ப் பறவை, பறவைப் பொது, மூலநாள், யானையின் மூளை, வட்டுக்குட் குருத்து, வெண்மை, விலங்கு முதலியவற்றின் இளமை, குட்டி, பறவை, அன்றில், கொக்கு, துருத்தி வைத்தூதும் கொல்லுலை மூக்கு.

குருகுமணல் - வெண்மணல், வெண்பொடி மணல்.

குருகுலம் - பாரதர் குலம், குருவின் வாழ்விடம், சீவகன் பிறந்த குலம், குருவம்சம்.

குருகுலவாசம் - மாணாக்கர் ஆசிரியருடன் வசித்தல்.

குருக்கள் - கோவில் பூசாரி, கௌரவர், பார்ப்பனர் அல்லாத சைவர்க்குக் கிரியை செய்விக்கும் சைவவேளாளர்.

குருக்கேத்திரம் - பாரதப்போர் நடந்த இடம்.

குருசந்திரயோகம் - வியாழனும் சந்திரனும் ஓர் இராசியிற் கூடுவது.

குருடன் - கண்ணிலான், சுக்கிரன்.

குருடு - அறிவின்மை, பார்வையின்மை, காதின் வெளிப்புறத்துள்ள செவுள்.

குருட்டுநாள் - செவ்வாயும் சனியும்.

குருதி - இரத்தம், சிவப்பு, செவ்வாய், மூளை.

குருதிப்புனல் - உதிர நீர்.

குருத்து - இளமை, முருந்து, இளசு, மரம் முதலியவற்றின் குருத்து

குருத்துமணல் - பொடிமணல்

குருத்துவம் - ஆசாரியத்தன்மை, பெருமை, கனமுடைமை.

குருநாதன் - முருகக் கடவுள், பரமகுரு.

குருநாள் - பூசநாள், வியாழக்கிழமை.

குருபூசை - சமாதியடைந்த குருவின் (பெரியாரின்) வருட நட்சத்திரந் தோறும் மடங்களில் மகேசுவர பூசையுடன் அக்குருவிற்குச் செய்யும் ஆராதனை.

குருப்பூச்சி - குருவண்டு, புள்ளிக்குளவி.

குருமி - ஒலி.

குருமித்தல் - ஒலித்தல், முழங்கல்.

குரும்பை - காதுக்குரும்பை, தென்னை பனை முதலியவற்றின் இளங்காய், இளநீர், பெருங்குரும்பை.

குருவாரம் - வியாழக்கிழமை.

குருவிக்கல் - ஒருவகைச் செம்மண்.

குரூரம் – கொடுமை, கடுமை.
குரூவதை – சித்திரவதை.
குரை – அசைச்சொல், ஒலி, குதிரை, குளம்பு, பெருமை, பரப்பு, அசைநிலை, இசை, நிறை, ஆரவாரம், குலை, நாய் குரைத்தல்.
குரைத்தல் – ஆரவாரித்தல்.
குரைப்பு – ஓசை, முழக்கம்,
குரோதம் – உட்பகையாறுள் ஒன்று, சினம், செற்றம், ஒரு முகில்.
குலக்கொடி – நற்குலப்பெண்.
குலநாசம் – ஒட்டகம்.
குலப்பரத்தை – ஒருவற்கே உரிமை பூண்ட கணிகை.
குலமுறை – வமிச வரலாறு, குலவழக்கம்.
குலம் – அரண்மனை, இரேவதி, இனம், கற்கண்டு, கூட்டம், சாதி, மனை, விலங்கின் கூட்டம், விழுப்பம், உயர்குலம், மகன், குழு, வீடு, கோயில், நன்மை, அழகு, மலை, மூங்கில், குடி, குவலயம், ஒழுக்கம், உம்பல், திணை.
குலவுதல் – அளவளாவுதல், நட்புறுதல், நெருங்கியுறவாடுதல், விளங்குதல், மகிழ்ச்சி கொள்ளுதல்.
குலா – ஆடம்பரம், குலாவென்னேவல், கொண்டாடல், மகிழ்ச்சி, குலவு.
குலாவல் – அளவளாவுதல், நட்புப் பாராட்டல்.
குலுக்கல் – அசைத்தல்.
குலுக்கு – அசைப்பு, பிலுக்கு.
குலுங்குதல் – அசைதல், நடுங்குதல்.
குலை – அம்பின்குதை, ஈரக்குலை, குதை, கொத்து, செய்கரை, நடுக்கம், பூங்கொத்து, மரம் முதலியவற்றின் குலை, விற்

குதை, மணல்மேடு, குறை, கட்டவிழ், அழி, பாலம், மனந்தடுமாறு.

குலைதல் – அச்சக்குறிப்பு, அவிழ்தல், அழிதல், ஒருங்குகெடுதல், கலைதல், குன்றல், நடுங்கல், பதறுதல், நிறைகெடுதல், மனங்குழைதல், சினக் குறிப்புக் காட்டுதல்.

குலைத்தல் – ஒழுங்கறச் செய்தல், நாய் குலைத்தல், அவிழ்த்தல், கலைத்தல், பிரித்தல், அழித்தல்.

குலைப்பண் – கக்குவான், குளிர் காய்ச்சல்.

குலைவு – அழிதல்.

குவலயம் – குவளை, நெய்தல், பூமி, கருங்குவளை, செங்குவளை

குவளை – ஒரு நீர்ப்பூக்கொடி, ஒருவகை ஏனம், கடுக்கனில் வைக்கும் இதழ், கண், கண்ணிற் கோளை, பாண்டங்களின் கழுத்து, பொக்கணி, காமன் கணையுள் ஒன்று, செங்கழுநீர்.

குவிதல் – ஒடுங்குதல், சேருதல், திரளுதல், நெருங்குதல், கூம்புதல்.

குவித்தல் – கூட்டுவித்தல்.

குவிப்பு – சேர்க்கை.

குவியல் – கும்பம்.

குவிவு – குப்பை, குவிதல், சேர்ப்பு, கூட்டம், கும்பவடிவு.

குடி – இளமை.

குழப்படி குழப்பம் – கலகம், கலக்கம், கொந்தளிப்பு, தாறுமாறு.

குழப்படிகாரன் – சண்டை செய்வோன், கலகம் செய்வோன், குறும்பன்.

குழப்புதல் – கலத்தல், குழப்பம் பண்ணுதல்.

குழம்பல் – கலங்கல்.

ழம்பு - ஒருவிதக் கறி, கஞ்சி, குழம்பென்னேவல், குழை சேறு, சந்தனக் குழம்பு முதலியன.

ழல் - இசைப்பாட்டு, ஊதிடு குழல், ஐம்பாலின் ஒன்று, கொண்டை, தொளையுடைப் பொருள், பெண் மயிர், குழல் மீன், ஒருவகைக் கழுத்தணி.

ழவி - அம்மிக்குழவி, இளமை, குழந்தை, பெருமை, மரக்கன்று, ஒட்டகம், கடமை, காட்டா, பன்றி, மான், முசு முதலியவற்றின் குட்டி.

ழவிகொள்பவர் - குழந்தையை வளர்ப்பவர்.

ழவு - இளமை.

ழறுதல் - பேச்சுத் தடுமாறுதல், கலத்தல், பறவை கூவுகை, கேடுறுதல்.

ழறுபடை - தடுமாற்றம், தாறுமாறு.

ழாம் - கூட்டம், திரள், சபை

ழி - ஒரு கோல் நீளமும் ஒரு கோல் அகலமும் கொண்ட தரை, கிடங்கு, கிணறு, குளம், பள்ளம், வயிறு, குழியென்னேவல், பன்னீரடி சதுரக்குழி.

ழுக்காலி - கட்டுக்கு அகப்படாத மாடு

ழை - காடு, காது, குண்டலம், குழைசோறு, குழையென்னேவல், சேறு, தளிர், நெய்தல், துளையுடைப் பொருள்.

ழைச்சு - ஆயுதங்களின் கழுத்து, ஆயுதம் முதலியவற்றின் சுரை, கழுத்து, கைகால் முதலியவற்றின் பொருத்து, முடிச்சு.

ழைதல் - கலங்குதல், வளைதல, வாடல், இளகுபதமாதல், மனம் இளகுதல், நெருங்கி உறவாடல், தளர்தல். வருந்துதல், சோறு அழிதல்.

குழைத்தல் - இளக்குவித்தல், ஒன்றாய்க் கலத்தல், தளிர்த்தல், வளைத்தல்.

குழைமறைவு - ஒளிப்பு.

குழையடித்தல் - ஆளை வசப்படுத்துதல்.

குழையற்பனாட்டு - பனம்பழச் சாற்றின் இறுகல்.

குழைவு - அணைதல், இளக்கம், உருக்கம், கலப்பு, சேர்மானம், வளைவு, வாடல்.

குளப்படி - குளப்புச் சுவடு.

குளம் - ஏரி, சருக்கரை, தடாகம், நெற்றி, வெல்லம்.

குளவி–ஒருவகை வண்டு, காட்டு மல்லிகை, மலைப்பச்சை, மலை மல்லிகை.

குழறுபடை - குழப்பம்.

குளாம்பல் - குளத்தில் உண்டாகும் ஆம்பல்.

குளிகை - மாத்திரை.

குளித்தல் - நீராடல், அழுந்துதல்.

குளிப்பாட்டுதல் - நீராட்டுதல்.

குளிர் - அச்சக்குறிப்பு, இலைமூக்கரி கத்தி, கவண், கற்கடக இராசி, குளிர்ச்சி, கூதல் சூலம், நண்டு, பனிக்காற்று, மழு, மீனொழுங்கு, குடமுழவு, வெண்குடை, வெற்றிலை, மூக்கரிகத்தி, அரிவாள் தங்குகை, கிளிகடி கருவி.

குளிர்தல் - குளிருதல், சாதல், விறைத்தல்.

குளிர்ந்தபேச்சு - இனியமொழி

குளிர்ந்தமுகம் - அருள் விளங்கும் முகம்.

குளிர்ந்துபோதல் - இறத்தல்.

குன்ளம் - குறுமை, கொடுமை, வஞ்சகம்.

குறஞ்சி - செம்முள்ளி, ஈந்து, மருதோன்றி.

குறடு - அடைகல், ஒட்டுத் திண்ணை, ஒரு கருவி, நண்டு, பலகை. புடைப்பு, மரத்துண்டு, மிதியடி, பற்றுக்குறடு, அச்சுக் கோக்கும் இடம்.

குறட்டை - உறக்கத்தில் விடும் மூச்சொலி, எலிவகை, சவரிக் கொடி.

குறட்பா - சிறுவெண்பா, அரை வெண்பா.

குறத்தி - குறிஞ்சிப்பெண், நிலப் பனை, குறச்சாதிப் பெண்.

குறம்பார்த்தல் - குறிபார்த்தல்

குறவர் - குறிஞ்சி நில மக்கள், வேடர்.

குறவன்-இரதம், ஒருசாதியான், குறிஞ்சிநில மகன், பாலைநில மகன், வலைதைத்தல், பாம்பு பிடித்தல், கூடை முடைதல், குறி சொல்லுதல் முதலிய தொழில் செய்யுந் சாதியினம், பாசாங்கு பண்ணுகிறவன், பாதரசம்.

குறவி - குறத்தி,

குறளி - ஒரு பிசாசு, வசவி, குறு கியவள், கற்பழிந்தவள்.

குறள் - இருசீரடி, உறுப்புக் குறை எட்டினுள் ஒன்று, ஒருபா, குறுமை, சிறுமை, திருக்குறள், பூதகணம், ஈரடி உயரமுள்ள குள்ளன்.

குறி - அடையாளம், ஆண்பெண் குறி, எண்ணம். ஒருவகைச் சாத்திரம் சொல்லுதல், குணம், குறிப்பு, குறியென்னேவல், சகுனம், தோற்றம், நன்னடத்தை, நிமித்தம், பயில், புடைவை, முறை.

குறிகெட்டவன்- நெறியற்றவன்

குறிக்கோள்– ஒற்றுமை, கணித்தல் கருமமுடிக்குந் துணிவு, மன ஒருமை, ஞாபகத்தில் வைக்கை,

அறியும் திறம்; உயர்ந்த இலட்சியம்; நல்லுணர்வு; மேன்மைப்பாடு

குறிஞ்சி - குறிஞ்சி நிலத்தூர்; சிற்றூர்.

குறிஞ்சா - ஒரு கொடி.

குறிஞ்சி - ஈந்து; ஐந்நிலத்தொன்று; அது மலைச் சார்பு; ஓர்இசை; ஒருகொடி; ஒருசிமிள்; ஒரு பண்; குறிஞ்சி நிலத்திராகம்; குறிஞ்சிமரம்; செம்முள்ளி; மருதயாழ்த்திறம்; மருதோன்றி மரம்; புணர்தலாகிய உரிப்பொருள்.

குறிஞ்சிக்கிழவன் - முருகன்.

குறிஞ்சித்தெய்வம் - முருகன்.

குறித்தல் - அடையாளப் படுத்தல்; கருதல்; சுட்டுதல்; நியமித்தல்; மதித்தல்; வரைதல்.

குறிப்பானவன் - மதிப்புக்குரியவனாகக் குறிக்கப்பட்டுள்ளவன்.

குறிப்பு - அடையாளம்; எழுத்துப் பழக்குங் குறிப்பு; ஒருமை; கருத்து; சைகை; நினைப்புக்கு எழுதின எழுத்து: விருப்பம்; உள்ளக் கருத்து; வெளிப்படையல்லாதது.

குறிப்புச்சொல் - குறிப்பினாற் பொருள் உணர்த்துஞ் சொல்.

குறிப்புப்பொருள் - குறிப்புச் சொல்லால் உணர்த்தப்படும் பொருள்.

குறிப்புரிச்சொல் - மனத்தாற் குறித்தறியப்படும் உரிச்சொல்.

குறிப்பெழுத்து- சுருக்கெழுத்து

குறில் - குற்றெழுத்து நீட்டற்றது

குறுகினம் - அணுகினோம்.

குறுகுறுத்தல் - விருப்பமின்மை தோன்ற, முறுமுறுக்கை, சுறுசுறுப்பு.

குறுக்கிடுதல் -பிறர்காரியத்தில் தலையிடுதல்.

குறுக்கும் நெடுக்கும், குறுக்கும் மறுக்கும் – இங்குமங்கும்.

குறுக்குவழி – குறுக்குப்பாதை; கோணல் வழி.

குறுக்கே மடக்குதல் – இடையிற் பேசி, வாயடக்குதல்.

குறுங்கண் – சாளரம், பலகணி, பலகறை, சன்னல்.

குறுஞ்சிரிப்பு – புன்னகை.

குறுணல் – சிறியது.

குறுநகை – புன்னகை.

குறுநடை – தளர்நடை.

குறுந்தொகை – ஒரு தொகுப்பு நூல், எட்டுத் தொகையுள் ஒன்று.

குறுமகள் – இளம்பெண், மனைவி, குமரி.

குறும்படை – கோட்டை; சிறு படை.

குறும்பயிர் – இளம் பயிர்.

குறும்பார்வை – கொடிய பார்வை.

குறும்பு–அரணிருக்கை, சிறுமை, பொல்லாங்கு, பாலை நிலத் தூர், போர், குறும்பாடு, குறும்புத்தனம்.

குறுவாழ்க்கை – தரித்திரம், அற்பகால இன்பம்.

குறுவிழி விழித்தல் – சினம் பயம் முதலியவற்றால் வெறுத் துப் பார்த்தல்.

குறை – அரசிறை, குறைந்திருப் பது, குறையென்னேவல், குற்றம், சேடம், வறுமை, தவறு, நிறை வற்றது, மன்றாட்டு, மிச்சம், வெறுப்பு, தசை, இன்றியமை யாப்பொருள், ஆற்றிடைக்குறை

குறைதல் – கெடுதல், சிறுகல், இடம் பொருள் ஏவல் முதலிய வற்றால் தாழ்தல், பற்றாமற் போதல், அரைகுறையாதல், விலையேறும்படி பண்டம் அருகு

தல், எழுத்துக்கெடுதல், வருந்தி உயிரொடுங்குதல், குறைவுற்று வருந்துதல், தைரியங்குன்றுதல், தோல்வியுறுதல், அழிதல், பின்னடைதல்.

குறைத்தல் - சுருக்குதல்.

குறைநிறை - ஏற்றத்தாழ்ச்சி.

குறைப்படுதல் - துணிபடுதல்.

குறைபாடு - ஈனம், குறைவு, வறுமை.

குறையளவு - மனக்குறை கொண்டிருக்கை.

குறையுயிர் - சிற்றுயிர்

குறையோர் - வறியோர்.

குறைவிலி - கடவுள், குறையில்லாதவன்.

குறைவு - ஈனம், வறுமை

குற்றச்சாட்டு - குற்றப்பத்திரிகை.

குற்றமிலான் - அருகன், கடவுள், மாசிலான்.

குற்றம் - அபராதம், குறை, தவறு, நோய், பழுது, பிழை, துன்பம்.

குற்றவீடு - குற்றம் நீங்குகை.

குற்றி - மரக்கட்டை.

குற்றுடைவாள் - சுரிகை.

குற்றுதல் - இடித்தல், தாக்குதல், நெரித்தல், ஊடுருவக் குற்றுதல்.

குற்றுயிர் - குறையுயிர், சாகுந்தறுவாய்.

குற்றேவல் - அடித்தொண்டு, பணிவிடை.

குனி - அசை, வளை, குனியென்னேவல்.

குனிதல் - இரங்குதல், தலைதாழ்தல், துக்கப்படுதல், வளைதல், கூனுதல், வீழ்தல்.

குனிவு - வளைவு, முடங்கல், மடங்கல், கோணல்.

குன்மப்புரட்டு - குன்மத்தால் வாந்தியுண்டாக்கும் வயிற்று நோய் வகை.

குன்மம் - ஒருவகை நோய், செமியாமை, வலி முதலிய காணும் வயிற்று நோய்.

குன்றாவாழ்வு - குறையாத செல்வம்.

குன்றிவேர் - அதிமதுரம்.

குன்று - குன்றென்னேவல், சதய நாள், சிறுமலை, மலை.

குன்றுதல் - குறைதல், கெடுதல் மெலிதல், வாடல்.

குன்றுபயன் - களவொழுக்கம்.

குன்றெறிந்தோன் - முருகன்.

கூ

கூ - ஓர் எழுத்து, கூவென்னேவல், பூமி, நிலம்.

கூகம் - ஆந்தை, கூகை, மறைவு.

கூக்குரல் - கூப்பிடும் ஒலி, முறையீடு, பேரொலி.

கூசல் - அச்சக்குறிப்பு, அச்சம், கூக்குரல், கூசுதல், நாணுதல்.

கூசுதல் - நாணுதல் அஞ்சுதல்.

கூச்சம் - அச்சம், நாணம், நடுக்கம்.

கூச்சலிடுதல் - இரைதல், கூக்குரலிடுதல்.

கூடம் - அண்டம், அறை, இந்திரசாலம், இரகசியம், உறையறி கருவி, ஏகாந்தம், கலப்பை, கூட்டம், கொழு, தானியக் குவியல், சம்மட்டி, தீங்கு, புதையல், பொய், மலையின்உச்சி, மறைவு, மாயம், யானைப்பந்தி, வஞ்சகம், வீடு, தாழ்வாரம், வீட்டின்கூடம்

கூடலர் - பகைவர், கூடார்.

கூடல் - அடுத்தல், இயலல், ஒரு விளையாட்டு, கழிமுகம், கூடுதல், சேர்தல், புணர்தல், மதுரை,

மரம் முதலியவற்றின் செறிவு, முகம், பொருத்துகை.

கூடற்குறி - தலைமகன் பிரிந்துழித் தலைவி பார்க்குங் குறி.

கூடற்பற்றை - காடு, வனம்.

கூடாகாரம் - மேல்வீடு, நிலவறை, கூடல்.

கூடாதது - இயலாதது, தகாதது, பொருந்தாதது.

கூடாமை - இயலாமை, பொருந்தாமை.

கூடாரம் - படாம்வீடு, பெருங்காயம், படக்கிருகம், வண்டிக்கூடு.

கூடார் - பகைவர்.

கூடாவொழுக்கம் - கள்ளவேடம், தகாவொழுக்கம்.

கூடு - அடைப்பு, உடம்பு, உறை, சிமிழ், நெற்கூடு, மைக்கூடு, கூடென்னேவல்.

கூடுதல் - இயலுதல், சேருதல், திரளுதல், நேரிடுதல், இணங்குதல், சினேகித்தல், அடைதல்.

கூடுவிடுதல் - இறத்தல், எலும்பு தோன்ற இளைத்தல்.

கூடை - கூத்தின் விகற்பம், கோரியை, பூக்கூடை முதலியன.

கூட்டநாட்டம் - பொதுமக்கள் கூடும் நிலைமை.

கூட்டம் - இனம், சங்கம், நட்பு, திரள், தொகுதி, பிண்ணாக்கு, புணர்ச்சி, போர், மிகுதி, மலையுச்சி.

கூட்டல் - அதிகப்படுத்தல், சேர்த்தல்.

கூட்டாமை - காய் சேர்க்காமை.

கூட்டாளி - கூடி நடக்கிறவன், பங்காளி, தோழன், உடன் ஒத்தவன்.

கூட்டு - கொள்ளை, உறவு, கலப்பு, கறிக்கூட்டு, தொடர்பு,

சேர்மானம், நட்பு, துணை, திரள், துகிலாகிய அரைஞாண், கூட்டெண்ணேவல்.

கூட்டுறவு – இணைந்த உறவு, நெருங்கிய தொடர்பு, நட்பு.

கூட்டோடு – அடியோடு.

கூண்டடுப்பு - அனலடுப்பு.

கூதல் – குளிர், ஊதை. காய்ச்சற்குளிர்.

கூதிர்காலம் - குளிர்காலம், சரற்காலம், பனிக்காலம்.

கூத்தன் – உயிர், கடவுள், சிவன், நாடகன். சீவான்மா, ஒட்டக்கூத்தன், நடன், கூத்தாடி.

கூத்தாடுதல் – நடனம் பண்ணுதல், பெருமை காட்டுதல், செழித்திருத்தல்.

கூத்தி – நாடகக்கணிகை, வைப்பாட்டி.

கூத்து – நடனம், நாடகம்; அதிசயம், கேலி.

கூந்தல் – கமுகோலை, குதிரை மயிர், கூந்தற்கமுகு, கூந்தற்பனை, கூந்தல்தெங்கு, பனையோலை, பெண்ணின் தலைமயிர், மயிர், மயிற்றோகை, யானைக் கழுத்தடி மயிர்.

கூந்தற்கோடு – மயிர்முடி.

கூபம் – கிணறு.

கூப்பாடு – கூப்பீடு, முறையீடு.

கூப்பிடல் – அழைத்தல், வரவழைத்தல், கத்தல்.

கூப்பிடுதூரம் – குரோசம்.

கூப்புதல் – குவியச் செய்தல், சுருக்குதல், கைகுவித்தல்.

கூரியது – கூர்மையுள்ளது.

கூரை – சிற்றில், வீட்டின் மேற்கூரை

கூரைதட்டல் – ஆண்பிள்ளைப் பிறப்புக்குச் செய்யுமொரு மகிழ்ச்சிக்குறி.

கூரைவீடு – ஓலையாலேனும் புல்லாலேனும் வேய்ந்த வீடு.

கூர் – இலையின் நரம்பு, காரம், கூர்மை, நுனி, மிகுதி, கூரென்னேவல், கதவுக்குடுமி, குத்துப்பாடான பேச்சு, குயவன், சக்கர உறுப்பு.

கூர்ங்கண் – ஊடுருவிப் பார்க்குங் கண்.

கூர்ச்சம் – எத்து, தருப்பை, தலை, தாடி, புருவமத்தி, மாய்மாலம், வயிரிப்பு, வீண்புகழ்ச்சி.

கூர்ந்தபுத்தி – நுண்ணுணர்வு.

கூர்ப்பு – உள்ளது சிறத்தல், கூர்மை, அறிவுநுட்பம், உவர்ப்பு

கூர்மம் – ஆமை, திருமால் அவதாரத்துள் ஒன்று, ஒரு புராணம்.

கூர்மை – அறிவு, கல்லுப்பு, கூர், நுண்மை, நுனி, சிறப்பு, வெடியுப்பு.

கூலி – ஊதியம்.

கூவம் – கிணறு, கூகைநீறு, ஓர் ஊர், ஓர் ஆறு.

கூவல் – அழைத்தல், கிணறு, பள்ளம், கொல்லுதல்.

கூவிளம் – வில்வம்.

கூவுதல் – அழைத்தல், சேவல் முதலியன கூவுதல், பறவை கூவுதல், சத்தமிடுதல்.

கூழன் – தெளிந்த அறிவிலான், பலாவகை

கூழாங்கல் – வழுவழுப்பான ஒரு வகைச் சிறுகல்.

கூழுக்குப்பாடி – அங்கிடுதத்தி, ஔவை.

கூழை – இறகு, கடையின்மை, கவியுறுப்புள் ஒன்று, சேறு. நடு நீளங் குறைந்தது, படைவகுப்பு, பாம்பு, பிற்படை, பெண்டிர் தலைமயிர், பொன், மந்தம், மயிற்றோகை, குட்டையானது, கூழத்தொடை.

கூழைக்கும்பிடு - போலி வணக்கம்.

கூழைத்தனம் - போலிக்குழைவு

கூழைத்தொடை - செய்யுளின் ஓர் உறுப்பு.

கூழைப்பார்வை - வஞ்சகப் பார்வை.

கூழை முட்டை - அழுகின முட்டை.

கூழையன் -குள்ளன், முழுமடையன்.

கூழ்படுதல் -கலக்கமுண்டாதல்.

கூளம் - குப்பை, கஞ்சல், திப்பிலி, சண்டு.

கூறு - அறிவிக்கை, எள்ளு, காரணம், கூறென்னேவல். பங்கு, தன்மை, பிரிவு, பாதி, வகை, கூறுபாடு, பிளவுபட்ட துண்டு.

கூறுதல் - சொல்லுதல்; விளக்கிச் சொல்லுதல்; விற்றல்.

கூறுபாடு - கூறு; பாகுபாடு; பகுதி; தன்மை; வகை.

கூறை - சீலை; புத்தாடை, மணவாட்டியுடுக்கும் புதுப் புடைவை.

கூற்றம் - பகுதி; கொடும்பகை; சொல்; நமன்; நாட்டின்பகுதி; அழிவுண்டாக்குவது.

கூற்றன் - நமன்; இயமன்.

கூற்று - காலன், சொல், நமன்.

கூற்றுவன் - நமன்; கொடிய பகைவன்.

கூனல் - கோணல்; சங்கு; நத்தை

கூனன் - ஆமை; கூனுள்ளோன்: சங்கு; நத்தை.

கூனன்முதுகு - ஆமையோடு

கூனி - குசினி; கூனுள்ளோன்: கோணியது; சிற்றால், மந்தரை; வசவி; பங்குனி; கொலை.

கூனுதல் - ஒடுங்குதல், வளைதல்

கூன் - ஆந்தை; உறுப்புக்குறை

எட்டினுளொன்று; கூனன்; கூனென்னேவல்; நத்தை; வளைவு; வெண்பா முதலிய செய்யுள்களின் முதலடியின் ஒரேவிடத்துப் பொருள்படத் தனித்து நிற்பது.

கெ

கெக்கட்டம் - அட்டகாசம்; மிக நகைத்தல்.

கெஞ்சுதல் - மன்றாடுதல்; இரந்து பலமுறை வேண்டுதல்.

கெடு - கெடுவென்னேவல்; கேடு; தவணை; தறுவாய்; வறுமை.

கெடுகுறி - கேட்டிற்கு அறிகுறி.

கெடுதலை - அழிவு, இழிவு; கேடு.

கெடுதல் - சாதல், சாய்தல், பதனழிதல், பழுதாதல்.

கெடுதல் விகாரம் - எழுத்துக் கெடும் மாறுபாடு.

கெடுதி - அழிவு; இடர்; கெட்டுப்போன பொருள்; கேடு; நட்டம்.

கெடுத்தல் - அழித்தல், கெடச் செய்தல்; பழுதாக்குதல்; கைதவற விடுதல்; அவமாக்குதல்; தொலைத்தல்; காரியத்தடை செய்தல்; நீக்குதல்; நஞ்சு முதலியவற்றை முறியச்செய்தல்; காணாமற் போக்குதல்.

கெடுமதி - அழிதற்காம் அறிவு.

கெட்டதனம் - கெட்டநடத்தை; தீயொழுக்கம்.

கெட்டி - உச்சிதம்; உலோபகுணம்; உறுதி; நேர்த்தி; அழுத்தம்; ஆற்றல்; சாமர்த்தியம்.

கெண்டி - கெண்டிகை, கெண்டியென்னேவல், தறித்தல், தறிவாய்.

கெண்டிச்செம்பு - மூக்குள்ள செம்புவகை.

கெண்டை – கயல், சரிகைத் தலைப்பு, சேழ், முழந்தாளின் கீழ்க்கால், கண்டை, கணைக் கால், புயத்தின் முன்பக்கத்துச் சதை

கெந்தகற்பம் – வில்வம்

கெந்தகம்–கந்தகம். கேரகண்ட பாஷாணம், நாய்வேளை.

கெம்பீரம் – ஆழம், பரிமளிப்பு, மேன்மை, வீரம்.

கெம்புதல் – கிளர்தல், கொந்தளித்தல்.

கெலி – ஆசை, கெலியென்னேவல், அச்சம், பெருவயிறு.

கெலித்தல் - அஞ்சுதல், ஆசைப்படல், வெல்லல்.

கெலிப்பு – அச்சம், ஆசை, வெற்றி, மகிழ்ச்சி.

கெல்லுதல் – கிண்டல், தோண்டல், வயிற்றை அரிந்துவிடுதல்

கெவுளி – சிவந்த சங்கு, சிவந்த முகிழுள்ள தேங்காய், பல்லி.

கே

கேசமுட்டி – வேம்பு.

கேசம் – குதிரை மயிர், துவக்கம், மயிர்ப்பொது, மக்கள் தலைமயிர், விலங்கின் மயிர், புறமயிர்.

கேசரி – அங்கயோகாதனத் தொன்று, குதிரை, சிங்கம், பெருங்காயம், கேசரியாசனம், கொம்மட்டி, மாதுளை, விண்ணில் இயங்குவோன், ஒரு சிற்றுண்டி.

கேசரை – பருத்திச் செடி.

கேசவம் – நறுமணம், நிறைமயிர், பெண்வண்டு, பைசாசம், வண்டு, ஓர் அறநூல்.

கேசவன் – சோழன், நிறைமயிருள்ளோன், திருமால், சிவன், நல்லமயிருள்ளோன்.

கேசன் - ஓர் அசுரன், கேசமுடையவன், தண்ணீரில் இருப்பவன், வருணன், திருமால்.

கேடகம் - ஒரு ஆறு, ஒருவகை ஊர்தி, பரிசை, பாசறை, புறாமுட்டி, மலைகளையடுத்துள்ள ஊர், ஒரு விமானம், கேடம், பலகை, மரவட்டம், கடகம், கிடுகு, தட்டு, வட்டணம், வட்டம், வேதிகை.

கேடயம் - பரிசை, கேடகம்.

கேடு - அந்தக்கேடு, அழிவு, குறைவு, கெடுதல், சிதைவு, பொல்லாங்கு, வறுமை, தீமை, இறப்பு, விகாரம், அழகின்மை, நட்டம், நீக்கம், கெடுதி, ஆனி, இழிவு, இழுக்கு, ஏதம், கயம், சேதம், பாடு, மடி, மிகை, வழுவு.

கேட்குதல் - ஆராய்தல், கேட்டல், வினாவல்.

கேட்டல் - இரத்தல், செவிகொடுத்தல், வினாவல், வேண்டுதல், செய்தல், உட்கோடல், செவியாற் கேட்குதல்.

கேட்டை - பதினெட்டாவது நாள், மீன், மூதேவி.

கேட்டைநாள் - இந்திரநாள், எரி, செந்தழல், கேட்டை, வல்லாரை, வேதி.

கேண்மை - உறவு, கண்ணோட்டம், நட்பு, வழக்கு, அன்பு, உரிமை.

கேதாரம்- இமயமலையில் உள்ள ஒரு சிவப்பதி, ஒரு நகரம், மயில், மலை, விளைநிலம், ஓர் இராகம், ஓர் பண்.

கேது-அடையாளம், ஒருகோள், நோய், விருதுக்கொடி, வெளிச்சம், செம்பாம்பு, மதிப்பகை, மதியுணி, ஒன்பது கிரகங்களுள் ஒன்று, கொடி, சுடர், ஒளி, விளைநிலம், தூமகேது.

கேதுதல் - அழைத்தல், கதறியழைத்தல்.

கேத்திரம் -கொடித்தலம்; பூமி; விளைநிலம்; கோவில்; கோட்டம்.

கேந்திரம் - வட்டத்தின் மத்தியம்.

கேலி - இகழ்ச்சி, நையாண்டி, விகடம், விளையாட்டுப்பேச்சு, மகளிர் விளையாட்டு, பறவை, நிந்தை.

கேவலப்படுத்தல் - அவமதிப்புச் செய்தல்.

கேவலம் - அற்பம், இட்டம், இன்மை, உறுதி, ஒழுங்கு, ஒரவத்தை, தனிமை, துன்பம், பெருக்கம், மரணத் தறுவாய், முடிவிடம், மெலிவு, மோக்கம், விடுதல், இணையற்றது, தாழ்நிலை, அவமானம், ஆணவமலம், ஒன்றாயிருத்தல்.

கேவலாவத்தை-கீழாலவத்தை, காரணகேவலம், சர்வசங்கார காலத்தில் ஆன்மாக்கள் சுத்தமாயா காரணத்தி லொடுங்கிச் சிருட்டி காலமளவும் ஆணவமலத்தால் மறைப்புண்டு கலையாதி தத்துவங்களுடன் கூடாமல் யாதொரு நினைவுமின்றியிருப்பது இது கண் இருளிலே தன் ஒளி கெடாமல் விழித்திருப்பது போலுமுள்ள ஒரவத்தை.

கேளார் - பகைவர், செவிடர்.

கேளி தெங்கு, மகளிர் விளையாட்டு.

கேளிக்கை - மகளிர் நடனம்.

கேளிர் - கணவர், நண்பர், சுற்றம், நாட்டார், தோழர், தலைவர், உறவினர்.

கேள் - அன்பு, உறவு, கேளென்னேவல், நட்பு, சுற்றம், மதிப்பு, கணவன், இனத்தார், வினாவு, கொடுக்கச் சொல்

கேள்வி - கல்வி, இராசத குணத்தொன்று, காது, பேச்சு, கேட்கை, வினா, நூற்பொருள்

முதலியவை கேட்கை, இசைச் சுருதி, யாழ், கேள்விப் பயிற்சி, கற்கை, கீழ்ப்படிவு, வழக்கு, கேட்டல், ஏலம்.

கேள்வித்தானம் - சாதகன் பிறந்த இலக்கினத்திற்கு இரண்டு அல்லது மூன்றாம் இடம்.

கேள்வு - கூலி, தோணிக் கூலி, கேவு, கேழ்வு, கப்பல் கூலி.

கை

கை - இடம், உடனே, ஒப்பனை, ஒழுக்கம், ஒரெழுத்து, ஒருவிகுதி, சட்டையின் கை, காம்பு, கிரணம், செங்கல் முதலியவற்றை எண்ணும் ஓர் அளவு, அபிநயக் கை, கட்சி, கைமரம், புகை வண்டிக் கைகாட்டி, கைப்பிடி, விசிறிக்காம்பு, படையுறுப்பு, சேனை, செய்யத்தக்கது, கைப் பொருள், ஆற்றல், ஆள், உலக ஒழுக்கம், ஒழுங்கு, ஒரு தமிழ் உபசருக்கம். உடன், காந்தட்பூ, கைத்தொழில், கையாந்தகரை; திங்கள், செய்கை, செயல், தொனி, பகுதி, பிடிப்பு, மர வட்டை, முறை, வரிசை, அத்தம், கரம், கைத்தலம், சயம், தோள், பாணி, வழக்கம், தங்கை, ஊட்டு, அலங்கரி, பதாகை, கத்தரிகை, தெரிநிலை, மெய்ந் நிலை, உன்னம், சதுரம், சங்கு, வண்டு, அஞ்சலி.

கைகடத்தல் - கையைவிட்டுப் போதல்.

கைகண்டது - சிந்தியுள்ளது, தேறினது,

கைகலத்தல் - ஒன்றாய்க் கலத்தல், பொருதல்; கூடுதல்.

கைகழிதல் - எல்லை கடத்தல்

கைகாட்டுதல் - குறிப்புக் காட்டுதல், சைகை காட்டுதல், அபிநயம் பிடித்தல், சிறிதுகொடுத்தல், திறமை காட்டுதல்.

கைகாவல் - சமயத்திற்கு உதவுவது,

கைகுவித்தல் - கும்பிடல், வணங்கல்.

கைகூடுதல் - சித்தியாதல், கிட்டுதல்.

கைகூப்பல் - கை குவித்தல்.

கைகொடுத்தல் - உதவி செய்தல்

கைகோலுதல் - முயலுதல், தொடங்குதல், சங்கற்பித்தல்.

கைக்கடன் - கைம்மாற்றுக் கடன்.

கைக்குறிப்பு - நினைவுக் குறிப்பு

கைக்குன்று - யானை,

கைக்கூலி - பரிதானம், அற்றைக் கூலி, இலஞ்சம், கையிலே கொடுக்கும் விலைப் பொருள், கைக்காணிக்கை,

கைங்கரியம் - தொண்டு.

கைச்சரக்கு - கற்பனையாகக் கூறுஞ் சொல்.

கைச்சாத்து - கையெழுத்து, கையெழுத்துத் துண்டு.

கைச்சுருள் - மணமக்களுக்குத் தாம்பூலத்துடன் கொடுக்கும் பணம்.

கைச்செலவு - சொந்தச்செலவு, சில்லறைச் செலவு.

கைதவறுதல் - தொலைந்து போதல். இறத்தல்.

கைதி - சிறைப்பட்ட குற்றவாளி

கைது - சிறைக்காவல்

கைதேர்தல் - திறமையடைதல்.

கைத்தலம் - கை.

கைத்தாளம் - சிறுதாளம், கஞ்சம், கிட்டி, கிணி, பாண்டில்.

கைத்தாள் - திறவுகோல்.

கைத்தொண்டு - குற்றேவல், கோயிற்பணிவிடை.

கைநாட்டு - கைக்கீறல், தற்குறிக்கீறல்.

கைநீட்டுதல் - களவு செய்தல்.
கைநீவுதல் - அவமதித்துக் கடத்தல்.
கைபிடித்தல் - மணம் புரிதல்.
கைபுனைதல் - அழகு செய்தல்
கைபோதல் - முற்றும் வல்லவனாதல், கடந்து செல்லுதல்.
கைப்பணம் - கையிலுள்ள தொகை; சொந்தப் பணம்; வியாபாரத்தில் கடன் இன்றிக் கைமேல் கொடுக்கும் பணம்; ரொக்கப் பணம்,
கைப்பண்டம் - கைப்பொருள்.
கைப்பரிசு -- சிறு தெப்பம்; இலஞ்சம், கையுறை.
கைப்பற்றல் - திருமணம்; கைப்பற்றுகை.
கைப்பற்று - கையில் பெற்றுக் கொண்ட தொகை.
கைப்பாடு - கைவேலை; உழைப்பு, கையிழப்பு.
கைப்பிடி - உலக்கை, திருமணம்
கைப்பு - அறுசுவையில் ஒன்று; அது கசப்பு; ஒரு சரக்கு; வெறுப்பு; ஆடுதின்னாப்பாளை.
கைமரம் - வீட்டுக்கூரையின் கை
கைமருந்து - மருத்துவன் இன்றித் தாமே செய்யும் மருந்து.
கைமாற்று - கைக்கடன்.
கைமுடக்கம் - பணமுட்டுப்பாடு
கைம்பெண் - விதவை.
கைம்மலை - யானை.
கைம்மறித்தல் - தடுத்தல்.
கைம்மாச்சி - கைவிலங்கு.
கைம்மாறு -- எதிர் உதவி.
கைம்மாறுதல் - விற்றல்.
கைம்முடக்கம் - பொருள்முட்டு
கைம்முதல் - வாணிக முதற் பணம்.
கையடக்கம் - கைக்குள் அடங்குகை: சேமித்து வைக்கப்பட்ட

பொருள்; ஒழித்து வைக்கப் பட்ட பொருள்

கையடித்தல் – உறுதிதருதல்.

கையமர்த்துதல் – அடக்கியாளுதல்.

கையயர்தல் – கை சோர்தல்.

கையளித்தல் – ஒப்புக் கொடுத்தல்.

கையறிதல் – பழகுதல்; செய்யும் முறைமையறிதல்.

கையறியாமை – செய்வதறியாமை.

கையறுதி – கையுறுதியிலே விற்கப்பட்ட வறுதி.

கையாறு – ஒழுக்கநெறி; செயலொழிந்தயர்தல்.

கையாள் – குற்றேவல் செய்வோன்.

கையான் - கையாந்தகரை.

கையிழத்தல் – காணாமற் போதல்,

கையிறுக்கம் - சிக்கனம், உலோபம்.

கையுங்களவும் – கையும் மெய்யுமாய்.

கையுடனே – உடனே.

கையுண்ணுதல் – பிறர் கைநோக்கி வாழ்தல்.

கையுதவி - ஆளுதவி.

கையுறை - கைக்கவசம்; காணிக்கை; தலைவிக்கு அன்பு பாராட்டித் தலைவன் கொடுக்கும் தழை முதலிய நன்கொடை.

கையேற்றம் – செல்வப் பெருக்க நிலை.

கையை – தங்கை.

கையொப்பம் – கையெழுத்து.

கையொழுக்கம் – ஒழுக்கம்.

கையொறுப்பு–சிக்கனச் செலவு, இச்சையடக்குகை.

கையோங்குதல் – செழித்தோங்குதல்.

கையோடு - உடன்.
கையோட்டம் - செல்வநிலைமை
கைலாசம், கைலாயம், கைலை - கயிலைமலை.
கைவழக்கம் - கோவிலில் பூசகர் முதலியோருக்கு உரிய உரிமை; குடிமக்கள் உரிமை.
கைவளம் - கைப்பொருள்; செழுமை; கைத்தொழில் திறம்.
கைவளர்தல் - பழக்கமுறுதல்.
கைவிதை - வெந்தயச் செடி.
கைவிரித்தல் - தன்னால் இயலாமை குறிப்பித்தல்; யாசித்தற்காகக் கைநீட்டுதல்.

கொ

கொக்கரித்தல் - பேரொலி செய்தல்; குணலையிடல்; கோழி முதலிய பறவைகள் கத்தல்.
கொக்கு - ஒரு புள்: செந்நாய்; குதிரை; மாமரம்: மூலநாள்; பறவை வகை; கொக்கு வகை; குரண்டம்; புதர்; மஞ்சுகம்.
கொங்கை - கம்புத்தானியத்தின் உமி; மரக்கணு; முலை; தனம்; மரத்தின் முரடு.
கொசு - கொசுகு, கொடுக்கு; தாறு; கச்சம்.
கொச்சை - ஆட்டின் பொது; இளப்பம், இளைத்தல்; கீழ்மை: திருந்தாத பேச்சு; வெள்ளாடு; இழிவு; இழிந்தவன்; சீகாழி; கொச்சைச்சொல்; ஆடு; கொச்சை நாற்றம்; இழிந்தோர் பேச்சு: இளைப்பு.
கொஞ்சம் - அற்பம்; எளிமை; சிறு அளவு; சிறிது; இழிவு
கொஞ்சநஞ்சம் - சிறிதளவு.
கொஞ்சல் - கொஞ்சுதல்; செல்லமாகப் பேசுதல்; மழலைச் சொல்; சரசப்பேச்சு; செல்லங் கொஞ்சுகை.

கொஞ்சி - ஒரு செடி; கிஞ்ஞா; காட்டுக் கொஞ்சி; சீமைக் கொஞ்சி; பூவை மரம்.

கொடாக்கண்டன் - சிறிதும் ஈயா உலோபி.

கொடாமை - இடாமை; ஈயாமை; உலோபம்; கரத்தல்; மறுத்தல்,

கொடி - அவிட்ட நாள்; உச்சம்; கயிறு; கண்வரி; காக்கை: காற்றாடிப் பட்டம்; கீழ்த்திசைப் பாலன்குறி; குமரனாடல்; துகிற் கொடி; அட்டமங்கலத்தொன்று; இராச சின்னத்தொன்று; நீளம்; படர்கொடி; துணி காயவைக்குங் கயிற்றுக்கொடி; சித்திர மூலம்; கொப்பூழ்க்கொடி; மகளிர் கழுத்தணிவகை; அரைஞாண்; குஞ்சம்; ஒழுங்கு; சிறுகிளை வாய்க்கால்; கேது; கிழக்குத் திசை; கொடியடுப்பு; படர்புல்; அறுகம்புல்.

கொடிக்கால் - வெற்றிலைத் தோட்டம்; காய்கறித் தோட்டம்; வெற்றிலை.

கொடிச்சீலை - துகிற்கொடி.

கொடிது - கொடியது; கொடுமையுடையது.

கொடிப்பாதை - ஒற்றையடிப் பாதை.

கொடிப்பாலை - ஓர் இசை; ஒரு செடி; பாலைவகை; பாலை யாழ்த்திறவகை.

கொடிப்புல் - அறுகம்புல்.

கொடிமல்லிகை - சாதிமல்லிகை

கொடிமுந்திரி - திராட்சை.

கொடியது - கொடுமையானது; கெட்டது; கொடியில் உள்ளது; கொடியை உடையது,

கொடிவிடுதல் - மிகுதியாதல்.

கொடு - கொடுமை; கொடு வென்னேவல்; வளைவு; சொல்லிக்கொடு.

கொடுகொடுத்தல் - மிகக்குளிர் தல்; விரைவுபடுதல்;

கொடுக்கி - ஒரு செடி; தேட் கொடுக்கி; கொக்கி; கதவுத் தாழ்ப் பட்டை.

கொடுங்கோல் - அறநெறி தவறிய அரசாட்சி.

கொடுங்கோண்மை - நெறியற்ற அரசியல்.

கொடுத்து வைத்தல் - பொருளை நம்பி வைத்தல்; நல்வினை பெற்றிருத்தல்.

கொடுந்தமிழ் - செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்திருக்கும் நிலங்களில் வழங்குந் தமிழ்மொழி.

கொடுமரம் - தனுர் இராசி; வில்; ஏணி; பழு

கொடுமார் - கொடுத்தற்கு.

கொடுமை-கொடுங்கோண்மை, முரடு பொல்லாங்கு கூர்மை, குரூரம், கடுமை, வக்கிராந்த பாஷாணம், கடுமை, முரட்டுத் தன்மை, தீமை, வளைவு, பாவம், மனக்கோட்டம்.

கொடும்பாவி - பெருந்தீவினையாளன், மழையற்ற நாளில் கட்டியிழுக்கும் ஒரு வடிவம்.

கொடும்புலி - சிங்கம்.

கொடுவாய் - ஒரு விலங்கு, ஒரு மீன், வெறும்புறங்கூறல், வாள் முதலியவற்றின் வளைந்த வாய், குறளை, பளிச்சொல்.

கொடுவாள் - அரிவாள், வளைந்த வாள், மழு, வளைந்த அரிவாள், புள்ளம், குயம்.

கொடூரம் - கடுமை, குரூரம்.

கொடைமை - கொடைத் தொழில்.

கொட்டடி - மாட்டுக்கொட்டில், சிறையறை, சேலைவகை.

கொட்டம் - ஒரு மருந்து, தவறு, தொழுவம், பொல்லாங்கு, மூங்கிற் கொட்டு, இறுமாப்பு,

சேட்டை, கடுகடுப்பு, முழக்கம், நீர் முதலியன ஒழுகுதகை, மாடுகளுக்கு மருந்து கொடுக்கும் மூங்கிற்குழாய், சிறிய ஓலைப்பெட்டி, மாட்டுத் தொழுவம், ஒருவகை வாசனைப் பண்டம், கொட்டை.

கொட்டன் - ஒரு மரம், கொட்டாப்புளி, தேங்காய், பருத்த உடல் உடையவன்.

கொட்டாவி - நெட்டுயிர்ப்பு

கொட்டி - ஒரு கிழங்குப் பூடு, பார்க்குங் குறி, நீர்க்கொடி வகை, தாளம், கோபுர வாசல், வாயில், கூட்டம், ஒரு நீர்ப் பூண்டு, கோயில் வாசல், முருகனாடல், அப்பி.

கொட்டில் - ஒதுக்கிடம், கொட்டிகை, மாட்டுக் கொட்டம், வில் வித்தை பயிற்றும் இடம், சிறு குடில்.

கொட்டு - அடி, கொட்டென்னேவல், உட்டுளையான மரத்துண்டு, கொட்டகை, பனந்துண்டு, மண்வெட்டி, வாத்திய அடிப்பு, வாத்தியம், தோண்டு கருவி வகை, சொரிகை, நெற்கூடு, தாளத்தில் ஒரு வகை, பறை, முழக்கம்.

கொட்டுதல் - அடித்தல், அப்பல், குட்டல், குவித்தல், கைதட்டுதல், சிந்துதல், வாத்தியம் முழக்குதல்.

கொட்டுவான் - தேள், கொட்டுப்பிடி.

கொட்டை - ஒரு காதணி, ஒரு மரம், சும்மாடு, தலையணை, கொட்டைக் கரந்தை, நூற்குங் கொட்டை, வித்து, விதை, தாமரைக் கொட்டை, அண்டம், பலா, பூசணிகளின் பிஞ்சு, உருண்டை வடிவம், கொட்டையிலந்தை, ஆமணககு, சிறு தலையணை, பஞ்சு, பழத்தின் கொட்டை, திரள முடிந்த முடி.

கொண்டல் - ஒரு விளையாட்டு கிழக்கு, கீழ்காற்று, முன், பனிப் பருவத்தின் காற்று, முகில், கொள்ளுகை, மழை, மேடராசி, கொண்டற் கல்.

கொண்டவன் - கணவன்.

கொண்டாடல் கொண்டாடுதல் - வியத்தல். சீராட்டுதல், பாராட்டுதல்.

கொண்டாட்டம் - கூடிக்குலவிப் பாராட்டுதல்.

கொண்டி - கதவிற்குடுமி, கொழு மாட்டும் இரும்பு, கொள்ளை, பிறர் பொருள் முதலியவற்றைக் கொள்ளுதல், உணவு, கப்பம், களவு, மிகுதி, அடங்காதவன், மனவருத்தம், பகைமை.

கொண்டியம் - வெறும் புறங் கூறல், கோள், பகைமை, வருத்தம்.

கொண்டை - ஆணி முதலியவற்றின் தலை, இலந்தைக் கனி, ஐம்பாலின் ஒன்று, பட்சி பின்சிகை, மயிர்முடி, செருக்கு, திமில், தலை, பறவைச் சூட்டு.

கொண்டைக்காரன் - செருக்கன், மயிர்முடியுள்ளோன், மேன்மையுடையவன்.

கொண்டோன் - தலைவன்.

கொதி - காய்ச்சல், கொதித்தல், கொதியென்னேவல், சினம், சூடு, துன்பம், வெப்பம், வருந்து, நீர் முதலியவற்றின் கொதிப்பு, உடம்பிற் காணும் காங்கை, வருத்தம், செருக்கு, ஆசை, பொங்கு.

கொதித்தல் - சுடுக்கல், சினத்தல், நீர் கொதித்தல், சினக்குறிப்பு, சூடுடையதாதல், வருத்தமுறுதல்.

கொதிப்பு - காய்ச்சல், சூடு, துடிப்பு, சினம், பொங்குகை, வெப்பம்.

கொத்தடிமை - பழவடிமை, குடும்பத்தோடு அடிமை.

கொத்தணி - குண்டுமணி.

கொத்தலரி - ஓர் அலரி

கொத்தவால் - சந்தை விசாரணைக்காரன், நகரம் முதலியவற்றின் காவல் தலைவன்.

கொத்தழிதல் - அடியோடழிதல்

கொத்துதல் - தறித்தல், வெட்டுதல்.

கொந்தளிப்பு - பொங்கியெழுதல்.

கொந்துதல் - பறவைகள் அலகினால் கொத்துதல், மூர்க்கங் கொள்ளுதல், அச்சுறுத்தல். குத்துதல்.

கொப்பாட்டன் - மூன்றாம் பாட்டன்.

கொப்பி - கொம்மை, கும்மியாட்டம்.

கொப்பு - தொண்டை, மயிர் முடி, மரக்கொம்பு, மாதர் காதணியின் ஒன்று.

கொப்புளம் - குமிழ்ப்பு, குமிழி, கொப்புளம் போன்ற பரு. கொம்மை, மொக்குள்.

கொப்புளித்தல் - குமிழ்த்தல், நீர் முதலிய குதித்தல், வாயை நீரால் அலம்பிக் கொப்புளித்தல்.

கொப்புள் - கொப்பூழ், குமிழி, கொப்புளம்.

கொம்பு -- ஊது கொம்பு, ஏரிக்கோடி, கோல், நந்து, மரக்கொம்பு. மேன்மை, விலங்கின் கொம்பு, மரக்கிளை, நாற்று முளை, பல்லக்கு முதலியவற்றின் கொம்பு, யானை முதலியவற்றின் தந்தம், நீரை வீசுங் கருவி, எழுத்துகளின் கொம்பு

கொம்புதல் - முயலுதல், மூர்க்கங் கொள்ளுதல்.

கொம்புப்பாகல் - நீண்ட பாகல் வகை.

கொய்தல் – தெரிந்தெடுத்தல் பறித்தல், சீலை கொய்தல் அறுத்தல்.

கொலை – கொல்லுதல், உயி வதை, இமிசை, இலக்கினத் திற்கு எட்டாமிடம், உயிரை உடம்பினின்றும் நீக்கல், வருத் தம்.

கொலைக்கூடம் பூட்டுதல் – கொலைத் தண்டனை நிறை வேற்றுதல்.

கொலைஞன் – கொலைகாரன் வேலன்.

கொலைமறுத்தல் – கொலை யைத் தடுத்தல், ஒரு நூல்.

கொல் – அசைச்சொல், கொல் லென்னேவல், பஞ்சலோகம் வருத்தம், கொலைத் தொழில் கொல்லன், ஓர் இடைச்சொல் ஓர் அசைநிலை. குறுக்குத்தாழ்

கொல்லன் – கம்மாளன், அரண் மனை வாயில் காப்போன், கரு மான்.

கொல்லல் – கொல்லுதல், வெட் டல், வருத்துதல், தொலைத்தல்.

கொல்லாமை - கொலை செய் யாமை.

கொல்லை – குச்சு, சோலை, தோட்டம், புறக்கடை, பூந் தோட்டம், முல்லை நிலம், புன்செய்நிலம், புழைக்கடை, தரிசு.

கொழிதமிழ் – வடிதமிழ்.

கொழித்தல் – ஒதுக்குதல், தெரித்தல், வாருதல், தெள்ளு தல், பொழிதல், குற்றங்கூறுதல், ஆராய்தல், பாராட்டுச் சொல்லு தல், செழிப்புறுதல், கொப்பளித் தல்.

கொழுகொம்பு – கொடியேறு, கொம்பு, தஞ்சம், பற்றுக் கோடு, மரத்தின் நடுக்கொம்பு.

கொழுக்கட்டை-ஒருசிற்றுண்டி

கொழுநன் – எப்பொருட்கும் இறைவன், தலைவன், கணவன்.

கொழுந்தன் – கணவனுடன் பிறந்தான்.

கொழுந்தி – மனைவியின் உடன் பிறந்தாள், தம்பியின் மனைவி.

கொழுந்து – தீச்சுவாலை, வெற்றிலைக் கொடி, இளமையானது. மென்மை, தளிர், மருக்கொழுந்து.

கொழுப்பு – செழுமை, நிணம், மதர்ப்பு, செழிப்பு, திமிர், நில வளம், செருக்கு.

கொழுமை – கொழுப்பு; வளமை செழுமை, இளமை, அழகு, நிறம், குளிர்ச்சி.

கொளுத்து – கொளுத்தென்னேவல், சந்து, மூட்டு, உடற்சந்து, சினம் உண்டாக்கு, அணிகலன்களின் பூட்டு.

கொளுத்துதல்–பற்றவைத்தல், தெருட்டுதல், அறிவுறுத்தல், போர் மூட்டுதல், வெயில் கொடுமையாகக் காய்தல், கொள்ளச் செய்தல், விளக்குதல்.

கொள் – ஒரு தானியம், குடை வேல், கொள்ளென்னேவல், ஒரு மருந்துப் பச்சிலை, முதிரை, வாங்கிக்கொள், பிடி, வைத்திரு, பெறு, சிறு நிறையளவு.

கொள்கலம் – அணி, ஆடை, சாந்து முதலியன பெய்கலம், இரப்போர் கலம்

கொள்கை – அறிவு, குணம், கோட்பாடு, நட்பு, செய்கை, பெறுகை, ஒழுக்கம், விரதம், நிகழ்ச்சி, இயல்பு, செருக்கு.

கொள்முதல் கொள்விலை – வாங்கின விலை.

கொள்ளல் – ஏற்றல், பற்றுதல்.

கொள்ளி – எருமை நாக்கி, கொள்ளிக் கட்டை, பொறா

மையும் முன்சினமும் உள்ள வன், மகன்.

கொள்ளிக்கண்ணன் – கொடியவன்.

கொள்ளுதல் – உள்ளே கொள்ளுதல், கொள்ளல், ஏற்றுக் கொள்ளுதல்.

கொள்ளை – ஒரு நோய். பிறர் பொருளைக் கவர்கை, பற்றுதல், சூறையாடுதல், மிகுதி, கூட்டம்

கொறித்தல் – ஒவ்வொன்றாகப் பொறுக்கித் தின்னுதல்.

கொற்றம் – அரசியல், வெற்றி, வீரம், வன்மை.

கொற்றவர் – அரசர், வெற்றி யுடையோர்.

கொற்றவன் – அரசன், வெற்றி யுடையவன்.

கொன்றைமரம் – இதழி, கடுக்கை, தாமம், மதலை.

கொன்றைவேந்தன் – ஒளவை யார் இயற்றிய ஒரு நீதி நூல்.

கொன்னை – திருத்தமற்ற பேச்சு, பேச நாத்திரும்பாமை, திக்கிப் பேசுகை, குழறுகை. கொன்னை

கோ

கோ – அம்பு, அரசன், வானம், ஆண்மகன், இடியேறு, இரக்கக் குறிப்பு, இலந்தை, உரோமம், எருது, கண். ஓரெழுத்து, கிரணம், கோவென்னேவல், சந்திரன், சூரியன், திசை, கோமேதக யாகம், தேவலோகம், நீர், பசு, பசுப்பொது, பூமி, பொறிமலை, தாய், மேன்மை. வக்சிராயுதம், வாணி, வெளிச்சம், சக்கரவர்த்தி, பெருமையிற் சிறந்தோன், தகப்பன், தலைமை, மலை, குசவன், சொல், இரசம், சாறு, இரங்கற் குறிப்பு, சுவர்க்கம், அரசியல், இரங்கல், தொடு, வெந்நீர், ஒழுங்காக்கு.

கோகிலம் - இலந்தைத, கரி, உலக்கை, கலப்பை, கிளி, குயில், குரங்கு, சிறுகுறிஞ்சா, பல்லி.

கோசம் - ஆண்குறி, உறை, கருவூலம், கருப்பை, கற்பாஷாணம், சத்தியம், சாதிக்காய், செல்வம், தெரு, பண்டாரம், மதிலுறுப்பு, முகை, முட்டை, மேற்போர்வை, பஞ்சகோசம், நூல், கவசம், பொன், தொகுதி, பல பண்டம்.

கோசரம் - அடங்கல், அறியத்தக்கது, இராசி, ஊர், மகிழ மரம், பூந்தாது, ஒரு பாடை, உணர்வு, அடக்கம், பொறியுணர்வு, குறித்த காலத்தில் கிரகங்கள் இருக்கும் நிலை. தங்குமிடம், இருக்குமிடம், கோசலம், காநீர்.

கோடரி - கோடாலி, துர்க்கை, நிருவாணி, மரம் வெட்டுங்கருவி.

கோடல் - கொள்ளல், மனங்குன்றல், வளைதல், வெண்காந்தள், காந்தள், முறித்தல், கொள்ளுகை, பாடங்கேட்கை, மனத்துட் கொள்கை, வளைவு, முறிக்கை, வெண்கிடை, கொள்ளப்படுதல். செங்காந்தள், மாறுபடல், வழுவுதல், கோடுதல்.

கோடாமை - மனக்கோட்டம் கொள்ளாமை; கோணாமை; திரியாமை; சலியாமை; நேர்மை

கோடானுகோடி - பலகோடி.

கோடி - இருபது கொண்டது; இளமை; கோடியென்னேவல்; சீலை; நூறு லட்சம்; புதுச்சீலை; புதுமை; முடியுறுப்பு; முனை; மூலை; வாள்வினை; விற்குதை: வீட்டின் பின்பக்கம்; எட்டுப் பங்கு கொண்டது, அழகு செய்; புதுப்பி; குறிப்பு; கடலுட் செல்லுந் தரை முனை; வீட்டின் புறக் கோடி; எல்லை; கலிங்கு; குறிப்பு.

கோடு - அரணிருக்கை; அறை; கூட்டம்; ஊது கொம்பு;

கோடென்னேவல்; சங்கு; சுழி; திரள்; நத்தை; பக்கம்; நீர்க் கரை; மரக்கொம்பு; மலையின் உச்சி; வஞ்சனைவட்டம்; வரம்பு; வரி; வரி சூழ்ந்தவிடம்; வளைவு; விலங்கின் கொம்பு; நடுநிலை நீங்குகை; யானை பன்றி ஆகியவற்றின் தந்தம்; நீர்வீசுங் கொம்பு; யாழ்த்தண்டு; பிறைத் திங்கள்; குலை; மயிர்முடி; மலை; மலைச் சிகரம்; மேட்டு நிலம்; ஆட்டம் முதலியவற்றிற்காக வகுத்த தானம்; குளம்; காலவட்டம்; ஆடைக்கரை; முனை; கொடுமை; கறை; கோடு; தவறு; வீணைத்தண்டு; கீற்று; எழுத்தின் கொம்பு; நடுநிலைகோணு; நெறி தப்பு.

கோடை - ஒளி; ஒரு கிழங்குப் பூண்டு; காற்று; குதிரை; ஒரு மலை; கோடைக்கானல்; முதிர் வேனில் பருவத்தின் காற்று; வெண்காந்தள்; வெயில்; வேனிற் காலம்; கோடைப் பயிர்.

கோடைக்காற்று - முதிர்வேனிற் பருவத்தின் காற்று: மேல் காற்று.

கோடைக்கானல் - கோடை மலை.

கோட்டம்-அநீதம்; அழுக்காறு; ஆன்கொட்டில்; ஒரு மருந்து; இடம்; கடற்கொந்தளிப்பு; குராமரம்; குளம்; கூட்டம்; கோணல்: கோயில்; சுடுகாடு; தேவலோகம்; பசுமடம்; தொழுவம்; நாடு; பசுக்கூட்டம்; மருதநிலத்தூர்; மாவினால் இடுங்கோலம்; வயல்; வளைவு, வாசனைப் பண்டம்; வீணை; வணக்கம்; நடுநிலை திறம்புகை; மனக்கோணல்; பகைமை; பொறாமை; நகரம்; தோட்டம்; கரை; யாழ்; அறை; பாசறை; சிறைச்சாலை; மாறுபாடு; பச்சிலை; மேய்ச்சல் நிலம்

கோட்டான் - ஒரு புள்; கூகை.

கோட்டை – அரண், இருபத்து நான்கு மரக்கால் கொண்ட ஓர் அளவை, நெல்லை உள்ளே பெய்து கட்டிய நெற்கோட்டை, மதிலரண், இஞ்சி, காடு, வீட்டின் உள்ளிடம், நெல், அரலை, காட்டுத் துருக்கம், அருப்பம், ஆவரணம், கவை, வல்லை, அழுவம், பரிவேடம்.

கோட்பறை – நெய்தற் பறை, செய்திகளை நகரத்தார்க்குத் தெரிவிக்கும் பறை.

கோணல் மாணல் – தாறுமாறு

கோணி – அத்தி, இருதூணி என்னும் ஓரவை, ஒரு சரக்கு, கந்தை, பன்றி, பதினாயிரங் கோடா கோடி, சாக்குப்பை, எட்டு மரக்கால் கொண்ட ஓர் அளவு, சாக்குத் தைக்கும் சணல் நூல்.

கோணிப்பை – சாக்கு.

கோணுதல் - வளைதல், மாறுபடுதல், கோணலாயிருத்தல்.

கோதாட்டு – சீராட்டு, வருத்துகை, வஞ்சிக்கை, குறும்பு விளையாட்டு, அலைக்கழித்தல், வஞ்சித்தல், குற்றமுள்ள விளையாட்டு

கோது – ஓடு, குற்றம். சக்கை, கோதுகம், உள்ளீடற்றது, பழம் முதலியவற்றின் தோல், பயனின்மை, நெறி தவறுகை.

கோதுமம் – கோதுமை.

கோதை – ஒழுங்கு, ஒரு கட்பறை, காற்று, கௌதமநதி, சத்தி சாரணை, சேரன், நெற்சுமை, பூமாலை, பெண், பெண்மயிர், ஆண்டாள், பூதம், உடும்பு, வில்லாளர் கையிற் பூணும் தோலுறை.

கோதையர் – மாதர்.

கோத்திரம்-காடு, குடை, குலம், செல்வம், தெரு, நெட்டிப்புல், மலை, பூமி, வரகு, வயல், வழி, உம்பல், குடி, தக்கை.

கோபம் - சினம், தம்பலப்பூச்சி, வெறுப்பு, ஒருவகைத் துகில், உடம்பெரிச்சல், இந்திரகோபம்.

கோபாலர் - அரசர், இடையர்.

கோபி - கருநொச்சி, கோபி யென்னேவல், சினமுள்ளோர், நன்னாரி, கோபி சந்தனம், இடைச்சி, கோபி, சின, கண்டி, வெகுள், ஒருவகை மண்.

கோபுரம் - கோயிலின் வாயில்.

கோப்பழித்தல் - சீரழித்தல்.

கோப்பு - உல்லாசம். கோத்தல், பெருமைக் குணம், ஒழுங்கு, சீர், பெருமை, அமைப்பழகு.

கோமகள் - அரசன் மகள், தலைவி, அரசி.

கோமகன் - அரசன் மகன், அரசன், தலைவன்.

கோமளம் - இளமை, இளமைச் செவ்வி, குருடு, மகிழ்ச்சி, பசு, மென்மை, அழகு, கறவைப் பசு, மாணிக்க வகை.

கோமாரி - மாடுகளின் கால்களி லும் வாயிலும் காணும் நோய் வகை.

கோமான் - அரசன், குரு, தலை வன், பன்றி, பெருமையிற் சிறந்தோன், சிறந்தோன், மூத் தோன்.

கோமுகி - பசு முதலியவற்றின் முகமாகச் செய்யப்பட்ட நீர் விழும் வாய்.

கோமுறை - அரசனது நெறி தவறாத ஆட்சி.

கோயில் - அரசன் மனை, இலிங்க சம்புடம், சிதம்பரம், சீரங்கம், தேவாலயம், விபூதிப் பை, கடவுளிருக்குமிடம், வீர சைவர் அணியும் இலிங்க சம்பு டம்.

கோரடம் - கருங்காலி.

கோரப்பல் - பாம்பின் நச்சுப்

பல், கோர தந்தம், விகார மான பல்.

கோரம் - அச்சம், உட்டணம், குதிரை, கொடுமை, கோளக பாடாணம், விரைவு, நஞ்சு, வட்டில், வள்ளவு, அச்சந் தருவது, விகாரமானது, நரக வகை, அறிவின்மை, ஒருவகை மந்திரம், பூவரும்பு, வம்பு.

கோரரூபம் - அச்சந் தரத்தக்க வடிவம்.

கோரிக்கை - விருப்பம், மன்றாட்டம், வேண்டுகோள்.

கோருதல் - நினைத்தல், விரும்புதல், வேண்டிக்கொள்ளுதல்,

கோரை - ஒரு கிழங்கு, ஒரு புல், புல்வகை, துளை, பழுது, எருவை, பஞ்சாய், கனம், முத்தக்காசு.

கோரோசனை - ஒரு மருந்து, ஆவின் வயிற்றினின்று எடுக்கப் பெறும் மஞ்சள் நிறமுள்ள வாசனைப் பண்டம்.

கோலம் - அலங்கரிப்பு, அழகு, இலந்தைக் கனி, உருவம், ஒப்பனை, ஓராயுதம், ஒரு துலாம், கலிங்கநாடு, சனி, சாயல், தழுவல், தெப்பம், தொடை, தொய்யில், நீரோட்டம், பறவை, பன்றி, பாக்கு, பாம்பு, பீர்க்கு, மருட்பன்றி, மா முதலியவற்றால் இடுங் கோலம், மாதிரி, நிறம், தன்மை, ஆபரணம், அலங்காரம்

கோலாகலம், **கோலாலம்** - கோலாலம், இடம்பம், கூக்குரல்.

கோலாட்டம் - ஒரு வகை விளையாட்டு.

கோல் - அஞ்சனக் கோல், அம்பு, அளவுகோல், ஊன்றுகோல், எழுதுகோல், குதிரைச் சம்மட்டி, கோலென்னேவல், செங்கோல், தடி, துலாக்கோல், தூண்டில், தெப்பம், புள்ளி, மரக்கொம்பு, மரக்கோல், சித்திரந் தீட்டுங்

கோல், முத்திரைக்கோல், தீக்கடைகோல், திரட்சி, முட்கோல், அழகு, சவுக்கு.

கோவலன் - இடையன், கண்ணன், சிலப்பதிகாரக் காப்பியத் தலைவன்

கோவிதன் - அறிஞன்.

கோவியம் - பசுவின் சாணம்.

கோவில் - கோயில், அரண்மனை, ஆலயம், சிதம்பரம், சீரங்கம்.

கோவை - அணிவடம், ஒழுங்கு, நூல் வரிசையில் ஒன்று, கொவ்வை, கோர்த்த மாலை, கோத்தல், நிரை, வரிசை, கோக்கை, கோத்தவடம், ஏற்பாடு, அகப்பொருட் கோவை, ஒரு பழைய பொன் நாணயம், கொடிவகை, தொடர்ச்சி, தொடுத்த பூமாலை.

கோழி - உறையூர், ஒரு புள், பன்றிக்கிழங்கு, குக்குடம், விட்டில், கோழியவரை, ஆண்டலை, காலாயுதம், குருகு.

கோழிக்கொடியோன் - ஐயன், முருகன், செங்குந்தன், சோழன்.

கோழியான் - முருகக் கடவுள்.

கோழை - அச்சம், கண் முதலியவற்றின் குழி, கபம், குறைவு, கொடுமை, தவறு, நாணம், உமிழ்நீர், மனத்திட்பமின்மை, இரக்கம், கூச்சம், சிலேத்துமம், பழுது.

கோழைத்தனம் - அச்சத்தனம்

கோளகம் - திப்பிலி, பட்டுச்சீலை, உருண்டை வடிவு, தாளகம், மிளகு.

கோளம் - வட்டம், உருண்டை, சிவலிங்கம்.

கோளரி - அரிமா, சிங்கம்.

கோளன் - கோளுரைப்போன், குறளை கூறுவோன்.

கோளார்த்தம் - பூகோளத்தின் பாதி.

கோளாறு - குழப்பம், தாறுமாறு, குற்றம், சண்டை, முறைபிறழ்வு, மாறுபாடு.

கோள் - இடையூறு, காவட்டம், புல், கிரகம், குணம், கொலை, கொள்ளல், கோட்பாடு, தீமை, நட்சத்திரம், நாள், பழமொழி, புறங்கூறல், பொய், வலி, கொள்ளுகை, துணிவு, மதிப்பு, வலிமை, தன்மை, அநுபவம், குறளை, பாம்பு, நஞ்சு, இராகு, முகில், ஒளி, பரிவேடம், குலை, கொழு, இயல்பு, இயற்கை, உட்கொள்ளல், விழுங்கல், ஏற்றுக் கொள்ளுதல், கோட்சொல்.

கோன் - அரசன், இடையன், தலைவன், எப்பொருட்கும் இறைவன்.

கோன்மை - அரசாட்சி.

கௌ

கௌ - ஓர் எழுத்து, கௌவென்னேவல், கிருத்தியம், கொள்ளு, தீங்கு, வாயாற் பற்று.

கௌசிகன் - இந்திரன், ஒரு முனிவர், விசுவாமித்திரர், பாம்பாட்டி.

கௌதாரம் - உடும்பின் குட்டி.

கௌபீனம் - கோவணம்.

கௌரவம் - மேன்மை.

கௌரவர் - குருகுல வேந்தர்.

கௌவல் - கௌவுதல், பற்றுதல்

கௌவுதல் - கவர்தல், வாயாற் கௌவுகை.

ங

ங - ஓர் எழுத்து, குறுணிக்குறி, குறுணியைக் குறிக்கும் குறி, தமிழில் மூன்று எண்.

ஙகரம் - குறுணியளவு.

ச

சகசம் - விருப்பம், இயற்கை, வட்டில், உண்மை, ஒற்றுமை, இயற்கையானது, சகடம்,

சுபாவம், உடன்பிறந்தது.

சகடம் – அசுத்தம், உரோகணி, ஊர்க்குருவி, ஒரு யோகம், தமரத்தை, பண்டி, வட்டில், வண்டி, தேர், சகடயூகம், சக்கரம், துந்துபி, ஓர் அசுரன், சகடாசுரன்.

சகதி - சேறு, பொல்லாநிலம், பூமி.

சகபதி – அரசன், கடவுள்.

சகபாடி – உடன் படிப்போன், கற்றுச் சொல்லி, கூடப்பாடுவோன், சகலன்.

சகப்பிராணன் – காற்று.

சகமோகம் – உலக வாஞ்சை, மண்ணாசை.

சகலம் – எல்லாம், துண்டு, தோல், சகலாவத்தை.

சகலன் – மனைவியுடன் பிறந்தாள் கணவன்.

சகவாசம் – உடன் வாழ்தல், நட்பு.

சகவாழ்வு – உலக வாழ்வு.

சகாப்தம் – கி. பி. எஅ – இல் தொடங்கும் சாலிவாகனன் ஆண்டுக் கணக்கு.

சகாயம் – உதவி, துணை, நயம், நன்மை, விலை நயம், சவுக்கியம்.

சகித்தல் – பொறுத்தல்.

சகிப்பு – பொறுதி, மன்னிப்பு.

சகுனம் - கிழங்கு, செம்போத்து, பறவை, நிமித்தம், பேரரத்தை.

சகோதரத்துவம் – உடன்பிறப்புத் தன்மை.

சக்கட்டை – இளப்பம், சாமர்த்தியமின்மை.

சக்கரப்பொறி – இயந்திரப் பொறி.

சக்கரம் – ஆணையுருளை, இயந்திரம், ஊர், ஒரு சித்திரகவி, கடல், காசு, கிரகநடை. சுற்று,

வாழ் நாள், சுழல் காற்று, தேர் உருளை, ஓர் அளவை, பிறப்பு, பூமி, பெருமை, மலை, வட்டம், மலை மல்லிகை,

சக்கரவர்த்தி – தனியாட்சிசெய் வோன்.

சக்கரவாணம் – வாண வகை யில் ஒன்று.

சக்கிரபுட்பி – குப்பைமேனி.

சக்கிலி – கண்ணில்லாதவன், சக்கிலியன், செம்மான்.

சக்தி – சக்தி, ஆற்றல், அரசனது ஆணைப் பத்திரம்.

சங்கடம் – ஒடுக்க வழி, தொந் தரவு, நெருக்கம், மிதவை, முதல் தலை வாய்தல், வருத் தம், இரட்டைத் தோணி.

சங்கதி – வரலாறு, தொடர்பு, செய்தி.

சங்கத்தமிழ் – தெளி தமிழ், சங்கம் ஆராய்ந்த தமிழ்.

சங்கநிதி – சங்குருவாய்க் கிடக் கும் நிதி, வட்டக் கிலுகிலுப்பை, செல்வவகை, குபேரன்.

சங்கமம் – இயங்கு திணைப் பொருள், ஒரு கவி, கலத்தல், கட்டுகை, சைவம், நிலை யின்மை, புணர்ச்சி, ஆறு கூடு மிடம்.

சங்கம் – அழகு, ஐக்கம், ஒரு நிதி, கணைக்கால், கூடுதல், கூட் டம், கைக்குழி, சங்கபாஷாணம், சங்கு, சவை, தாலம்ப பாஷா ணம், தேறினவன், கோடா கோடி, நெற்றி, நெற்றியெலும்பு, படையிலொரு தொகை, புணர்ச்சி, புலவர். மதுரைத் தமிழ்ச்சங்கம் ஆறு கூடுமிடம், விருப்பம், சேர்க்கை, அன்பு, சங் கமம், சபை, சைன பௌத்தர் களின் சங்கம், கைவளை, சங்க நிதி, இசங்கு, ஒரு பேரெண்.

சங்கரன் – நன்மை செய்பவன், சிவன், இழிஞன்.

சங்கராபரணம் - ஒரு பண்.

சங்கரி - பார்வதி.

சங்கரித்தல் - அழித்தல்.

சங்கரிப்பு - அழிப்பு, கொலை.

சங்கற்பம் - மனவுறுதி, துணிவு, கொள்கை, சங்கற்பனை.

சங்காரம் -- அழிக்கை, ஒடுக்குகை, அடக்குகை.

சங்கிராந்தி-உத்தராயண நாள், பொங்கற் பண்டிகை.

சங்கீதம் - இசைப்பாட்டு.

சங்கு - இயங்கு, இராச சின்னத் தொன்று, ஒன்றிப்பு, ஒரெண், கடிகார ஊசி, கணைக்கால், கூடுதல், கைவளை, நெற்றி, படைக்கலம், ஒரு செடி, பாஞ்ச சன்னியம் என்னும் நீர்வாழ் சங்கு, ஐம்படை என்னும் அணியின் ஒரு உரு, சங்கினாற் செய்த வளை, குரல் என்னும் இசை, மிடறு, ஒரு பேரெண், தூண், ஆணி, ஆப்பு, இப்பி, ஊரி, முனை, கூனல், சங்கை, நாழிகையறிய நடப்பெறுங்கோல்.

சங்கை - அச்சம், அளவு, ஐயம், களம், சுக்கு, சுண்டி, மதிப்பு, வழக்கம்.

சங்கோசம் - அடக்கம், வெட்கம், சுருங்குகை, கூச்சம், மஞ்சள்.

சச்சரவு - கலகம், சண்டை.

சச்சிதாநந்தம் - (சத்து, சித்து, ஆநந்தம்) உண்மை அறிவு இன்பம் என்னும் முக்குணங்களையுடைய பரம்பொருள்.

சஞ்சரித்தல் - திரிதல், நடமாடுதல், வசித்தல்.

சஞ்சலம் - அசைவு, காற்று. நோய், துன்பம், நிலையில்லாமை. மனக்கவலை நடுக்கம்

சஞ்சாரம் - ஏற்றியிறக்கிப் பாடுதல், கூடியிருத்தல், யானைக் கூடம், நடமாட்டம், யாத்

திரை, நெறி தப்பிய ஒழுக்கம்.

சஞ்சிகை – புத்தகப் பகுதி.

சஞ்சீவன் – மாமரம்.

சஞ்சீவி – உயிர் தரும் மருந்து.

சடம் – ஆறு, உடல், குங்குமம், கொடுமை, சடத்தீயினொன்று, தகரம், பொய். வஞ்சமனம், அறிவற்ற பொருள், ஒருவகை வாயு, சோம்பல்.

சடராக்கினி – உதராக்கினி, மூலாக்கினி.

சடலம் – உடல்.

சடாட்சரம் – ஆறெழுத்து மந்திரம், இது முருகனுக்குரியது.

சடைச்சி – சடாமாஞ்சில்; சடையென்னேவல்; பிரபை; பின்னல் மயிர்; வேர், வேதபாடபேதம்; நெட்டி.

சடைத்தல் – கிளைத்து நெருங்குதல்

சட்சமயம் – ஆறு சமயம்.

சட்சுவை - ஆறுசுவை.

சட்டதிட்டம் - ஒழுங்கு,

சட்டம் – எழுதும் ஓலை; கட்டளைத் திட்டம்; கட்டில் முதலியவற்றின் சட்டம்; திருத்தம்; நாவிச் சட்டம்; பூரணம்; மரச் சட்டம்; கம்பியிழுக்குங் கருவி; நகையின் உம்மச்சு; நியாய ஏற்பாடு; செப்பம்; நேர்மை; புனுகுச் சட்டம்; திட்டம்; மாதிரிச் சட்டம்.

சட்டம்பி – உவாத்தியாயர்; எசமான்.

சட்டாம்பிள்ளை – வகுப்புத் தலைமை மாணவன்.

சட்டி – ஆறாந்திதி! ஆறு; ஒரு பாண்டம்; தாமரை; அறுபது; சட்டியென்னேவல்.

சட்டை – அங்கி; கணிப்பு; சிறகு; பாம்பின் தோல்; பொதி; மதிப்பு; ஒரு வகைக் கீறை.

சண்டமாருதம் - பெருங்காற்று

சண்டாளம் - துரோகம்: புலைத் தன்மை

சண்முகன் - ஆறுமுகன், முருகன்.

சதகம் - தான்றிமரம்; நூறு செய்யுட் கொண்ட பிரபந்தம்; நூற்றாண்டு.

சதக்கினி - நூற்றுவரை கொல் கூடிய பொறி.

சதசதப்பு - ஈரப்பற்று.

சதம் - நூறு; அறுபடு பயிர், இலை: இறகு; எல்லாம்; தாழ்தல்; நித்தியம்; நிலைமை; போதல்; இறுதி.

சதா - எப்பொழுதும்; மரக்கலம்; மரத்தினுட் பழுது.

சதி - அழிவு: அனுமரணம்; உரோகிணி; கற்புடையாள்; விரைவு; சோறு; தாழ்வாரம்; தாளாவொத்து; பார்வதி; மனைவி; வஞ்சனை; வட்டம்: இறந்த கணவனோடு மனைவி உடன்கட்டையேறுதல்.

சதிர் - இலகு; எல்லை; குறைந்த விலை; சதுர்; பெருமை; பேறு; அழகு; நிலைமை; செட்டு; நாட்டிய சபை.

சதுக்கம் - சதுரம்; சத்திரம்; தலை; தலையுருமால்; திண்ணை; நாற்தெருக் கூடுமிடம்; நான்கு கூடியது,

சதுமுன் - நான்முகன்.

சதுரகராதி - பொருளகராதி; பேரகராதி, தொகையகராதி; தொடையகராதி என்று நாற் பிரிவுகள் உடையதாக 18 ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் இயற்றிய அகராதி.

சதுரங்கசேனை - நால்வகைப் படை.

சதுரம் - அகலம் நீளம் ஒத்த நாற்கோணம்; சதுரக்கள்ளி;

சமர்த்து; நாகரிகம்; யானைப் பந்தி; விரைவு; விவேகம்.

சத்தம் - ஒலி; சொல்: ஏழு.

சத்தி - இந்துப்பு, உபாயவழி; கக்கல்; கந்தகம்: குடை; குமட்டிக் கொடி; கைவேல்; சத்தி சாரணை; சத்திசாரம்; சத்தி யென்னேவல்; சவுக்காரம், சிவ தத்துவம் ஐந்தில் ஒன்று; சூலம்; தேரிடக்கியம், சுரோணிதம்; நிமிளை; நீர் முள்ளி, நெல்லிக் காய்க் கந்தகம், பார்வதி, பெண். பெண்கலை, பெலம், பேய்ப் புடல், பொன்னிமிளை, மறியல்; மூன்று வலிமை; வேம்பு; விருதுக் கொடி; வெண்குடை.

சத்திய நிருவாணம் - பிறவிய றுத்தல்.

சத்தியம் - ஆணை, குறிஞ்சா, சபதம், மெய், உண்மை, பிரமாணம்.

சத்திய வாசகம் - மெய்மொழி

சத்திரசாலை - அறச்சாலை, ஆயுதசாலை.

சத்திரம் - அன்னசாலை, இரண மருத்துவம், கத்தி, கவிழ்தும்பை, கைவிடாப்படை, கைவேல் குடை, பாணம், மடம், வேள்வி, வெண்குடை.

சத்து - அவுபலபாஷாணம், அறிவு, கற்பூரசிலாசத்து, சாரம், நன்மை, பிரமம், பெரியோர், சத்து பலன், மாவு.

சத்துரு - பகைவன்.

சத்துவம் - சாத்துவீகக் குணம், சுபாவம், நன்மையையே நோக்குந் தன்மை, உளதாந்தன்மை, சாரம், செந்து.

சந்தகம் - இடியப்பம், மகிழ்ச்சி

சந்தடி - இரைச்சல், கூட்டம்

சந்ததி -வழித்தோன்றல்,கோத்திரம், சந்தானம், பிள்ளை, மகன், வித்தாரம், வமிசம்.

சந்தர்ப்பம் - சமயம், முன்பின் அசைவு.

சந்தனம் - ஒரு மரம், தேர், அரைத்த சந்தனம்.

சந்தானம் - ஐந்துருவினொன்று, கூடல், கோத்திரம், தொடர்பு, சந்ததி, குருபரம்பரை, வமிசம், சிவாகமம் இருபத்தெட்டுள் ஒன்று. அம்பு எய்கை.

சந்தித்தல் - எதிர்த்தல், கூடல், பொருந்துதல்.

சந்திப்பு - இசைவு, எதிர்கை, ஆறு, தெரு முதலியன கூடுமீடம்

சந்தியாவந்தனம் - காலை, உச்சி, மாலைகளில் வேதமந்தி ரங்களால் செய்யும் வழிபாடு.

சந்தியோகம் - மழை பெய்தல்.

சந்திரன் - திங்கள், அட்டமூர்த் தத்தொன்று, இடைகலை

சந்து - இடுப்பு, சந்தன மரம், சமயம், தூதன், தூது, தொடைச் சந்து, பல வழி கூடும் இடம், பிளப்பு, பொருத்து, முடுக்கு, சமாதானம்.

சந்து பொந்து - மூலைமுடுக்கு, பொந்துபுடைகள்.

சந்தேக நிவாரணம் - ஐயந் தீர்த்தல்.

சந்தேகம் - அசாத்தியம், ஐயம், நிலையாமை.

சந்தை - கடைவீதி, வேதம் ஓதும் இடம், குறித்த காலத்திற் கட்டும் கடைகள்.

சபதம் - ஆணை, சபிப்பு, சாபம், பிரதிக்கினை, மெய், வாக்கு நிர்ணயம், சூளுறவு, பந்தயம்.

சபலம் - இரசம், இலாபம், நடுக் கம், மின்னல், நிறைவேறல், பயனுள்ளது, நிலையற்ற உள்ளம் சித்தி,

சபிண்டீகரணம் - இறந்த பன் னிரண்டாம் நாள் செய்யப் படும் சிரார்த்தம்.

சபிப்பு - சாபம், திட்டு.
சப்தம் - சத்தம்.
சப்பட்டை - தட்டையானது, சிறகு, தோட்பட்டை, பதர், மடையன், சப்பை, கெட்டவன், சப்பல்.
சப்பரம் - ஒருவகைத் தேர்.
சப்பாணி - கை கொட்டல், நடக்க முடியாதவன்.
சப்பாத்து - செம்பரத்தைச் செடி, பாதரட்சை, சப்பாத்திக் கள்ளி.
சப்புதல் - மெல்லுதல், குதப்புதல், உறிஞ்சிக் குடித்தல், சுருங்குதல்.
சமட்டுவண்டி - சயிக்கிள்வண்டி
சமணம் - புறச்சமயம் ஆறில் ஒன்று.
சமதம் - பொறுமை.
சமத்தன் - வல்லவன்,
சமத்து-ஆற்றல், திறமை, நாட்டின் உட்பிரிவு, சமத்துவம், சமநிலை.
சமநிலை - நடுவு நிலைமை, நிறை ஒத்த நிலை, சாந்தம் என்னும் சுவை.
சமம் - அறுவகைச் சமாதிகளுள் ஒன்று, அஃதாவது அந்தக்கரணத்தைத் தண்டித்தல், இந்திரிய நிவர்த்தி, உவமை, எல்லாம் ஒப்பம், சரி, தாளப் பிரமாணத்தொன்று, நடு நியாயம், பொறுமை, போர், மனோலயம், மோட்சம், நடுவுநிலை, முதுவேனில்.
சமயதத்துவம் - மதத்தின் அடிப்படையான உண்மை.
சமயம் - எல்லை, காலம், தருணம், வேளை, மதம், உடன்படிக்கை, தீட்சை, மரபு.
சமரசம் ஒன்றிப்பு, சமாதானம், தொகை நிலை, வித்தியாசமின்மை.
சமர்த்தன் - ஆற்றலுள்ளவன்.

சமர்த்து - பலம், ஆற்றல்.
சமர்ப்பணம் - காணிக்கை.
சமன் - ஒப்பு, காலன், சமம், நடு, நமன், துரியோதனன் தம்பியரில் ஒருவன்.
சமாதானம்-அமைதி, தடைக்கு விடை, உடன்பாடு.
சமாதி-அட்டயோகத்தொன்று, சாவு, சமப்படுதல், சவக்குழி, கல்லறை, மனத்தைப் பரம்பொருளோடு ஐக்கியப்படுத்தி நிறுத்துகை.
சமாவர்த்தனம் - பிரமசரியம் முடிக்குங் கிரியை.
சமானம் - உவமை, ஒப்பு.
சமிஞ்ஞை - குறி.
சமித்தல் - அடக்கல், பொறுத்தல், ஏங்கிப்போதல், அழிதல், சுவறுதல்.
சமித்து - தீ வளர்க்கும் சுள்ளிகள், கஞ்சா.
சமீபம் - அருகு, அண்மை.
சமு - சமூகம், படை, படையிலொரு தொகை.
சமுகம் - கூட்டம், சந்நிதி, முன்னிலை, ஒரு சாதி அல்லது இனத்தார்.
சமுசயம் - அச்சம், ஐயம்.
சமுசாரம்-வாழ்க்கை, குடும்பம்
சமுதாயம் - கூட்டம், சங்கம், பொதுவானது, மக்களின் திரள், பொருளின்திரன், உடன்படிக்கை
சமுத்திரம் - ஓர் எண், படையினொரு தொகை, அது பிரளயம் மூன்றுகொண்டது, கடல், மிகுதி, பத்து லட்சம் கோடா கோடி.
சமூகம் - கூட்டம், திரள்.
சமூலம் - வேர் முதல் இலையீறாக எல்லாம்.
சமைதல் - இருதுவாதல், உண்டுபண்ணப்படுதல், ஒழியல், பாகமாதல், எத்தனமாதல், அமை

தல், பூப்படைதல், ஆயத்த மாதல்.

சம்பத்து - செல்வம், தள பாடம்.

சம்பந்தம் - இணக்கம்

சம்பந்தம் பேசுதல் - மணம் பேசுதல்,

சம்பவம் - அழிவு, இணக்கம், ஒன்றின் காரணம், ஓரளவை, சம்பவிப்பு, கலப்பு, பிறப்பு, நிகழ்ச்சி.

சம்பளம் - எலுமிச்சை, கரை, கூலி, களஞ்சியம். செம்மறிக் கடா, பொறாமை, வழிச்சேறற்கு வேண்டும் பொருள், வழியுணவு, வழிப்பொருள்.

சம்பாத்தியம் - தேட்டம்

சம்பாவனை - மரியாதை, வெகுமானம்.

சம்பாவிதம் - நேரிடக்கூடியது.

சம்பிரதாயம் - தொன்று தொட்ட வழக்கம், குரு உபதேசம், சாமர்த்தியம்.

சம்மட்டி - கூடம், ஒரு பூண்டு, சுத்தியல் வகை, குதிரையோட்டுங் கருவியில் ஒன்று.

சம்மதம் - உடன்பாடு, நட்பு, கொள்கை.

சம்மேளனம் - கூட்டம்

சயம் - ஆம்பல். காசநோய், கூட்டம், கெடுதல், கை, சர்க்கரை, காரம், சிதைவு, சூரியன் நட்டம், மாலை, படுக்கை, வெற்றி.

சயனம் - உறக்கம், படுக்கை, புணர்ச்சி.

சரக்கு - கறிச்சரக்கு, சாராயம், பொருள், மருந்துச்சரக்கு, வியாபாரப்பொருள், பொன், தகுதி, திறமை, சம்பாரச் சரக்கு.

சரசம் - இனிய குணம், தடாகம், தேக்கு மரம், பரிகாசம், வெண்ணெய், இன்பப் பேச்சு, காமச் சேட்டை.

சரசுவதி - கலைமகள்.

சரணம் - அபயம், அரசு, கால், புகலிடம், பாதம், சிந்து முதலிய சொய்யுள் அடி, பெருங்காயம், மயில், வணக்கம், மயில்தோகை, மருதநிலத்தூர், வீடு, கீர்த்தனத்தின் மூன்றாம் உறுப்பு, வேதப்பகுதி, அடைக்கலம்.

சரணம் புகுதல் - அடைக்கலமாதல்.

சரணாகதி-அடைக்கலம்புகுகை

சரதம் - உண்மை, மெய்மை, உறுதி.

சரம் - அசைவு, அம்பு, இருவகைத்தோற்றத்தில்ஒன்று. அது மூச்சுள்ளது, ஐந்து; சர ராசி; சுவாச நடை; மூச்சு; நாணல்; நோவு; பாவேடு; மணிவடம்; மாலை; இயங்குதிணை; கொத்து கூரைச்சரம்; தனிமை; யுத்தம்

சராசரம் - விண்; நடையுள்ளதும் இல்லதும்; உலகம்; அசையும் பொருள் அசையாப்பொருள்

சரி - ஒப்பு; கூட்டம்; கைவளை; சமன்; சரியென்னேவல்; நிதானம்; பசு; பிசகின்மை; மலைச்சாரல்; சம்மதிக் குறிப்பு; வழி; நடத்தை.

சரிதம் - சரித்திரம்; சுபாபம்; நடைவாசம்

சரிதல் - சாய்தல்; நழுவுதல்; குலைதல்; பின்னிடல்; கீழே விழுதல்.

சரிதை - ஒழுக்கம்; கதை; நான்கு பாதத்தில் ஒன்று; பிச்சை; வரலாறு.

சரித்திரம் - இயல்பு; ஒழுக்கம்; கதை; நடக்கை; வரலாறு.

சரியை - ஒழுக்கம்; பிச்சை; சிவனைச் சகளத் திருமேனியராகக் கோயிலில் வைத்து வழிபடுகை,

சரிவு - சாய்வு, சரிந்து விழுகை; நகரம்; ஆறு முதலியவற்றின் ஓரம்; மகளிர் முன்கைவளையல்.

சரீரம் - உடல்; ஆள்.
சருகு - உலர்ந்த இலை; வெற்றிலை.
சருக்கம் - நூற்பிரிவு.
சருமம் - தொல்; தோலாலாகிய பாய், பரிசை, மரப்பட்டை.
சருவசங்கபரித்தியாகம் - முற்றத்துறத்தல்.
சருவசாட்சி-கடவுள், கதிரவன்
சருவஞானி - கடவுள்.
சருவவியாபகம் - எல்லாவற்றினுமிருத்தல்.
சருவவியாபி - கடவுள்.
சரை - கிழத்தன்மை, சருகினால் கட்டும் கவசம், நரைமுதிர் வயது, வைக்கோல் முதலியவற்றால் செய்யும் பொருள், நெல்.
சர்ச்சை - ஆராய்ச்சி, சொற்போர்.
சர்ப்பம் - பாம்பு.
சர்வம் - முழுதும்.
சலக்கோவை - நீர்க்கோவை.
சலதரங்கம் - நீர் அலை, பல கிண்ணங்களில் பல அளவில் நீர் வார்த்து சுருதி அமைத்துக் கொண்டு சிறு கழியால் தட்டி வாசிக்கும் ஒருவகை வாத்தியம்
சலநிதி - கடவுள், கடல்.
சலப்பிரவாகம் - நீர்ப்பெருக்கு.
சலம் - அசைவு, ஒருவாசனை, குளிர், சலம் சாதித்தல், தணியாக் கோபம், நீர், பன்றி முள், வைராக்கியம், நடுக்கம், சுழற்சி, தீச்செயல், மாறுபாடு, பிடிவாதம், பொய், வஞ்சனை, துக்கம், ஒரவஞ்சகம், இலாமிச்சை, மூத்திரம்.
சலனம் - அசைவு, கலக்கம், காற்று, சஞ்சலம், போதல், மான், முடிவு.
சலனன் - காற்று.
சலாகை - இரும்புக்கம்பி, சிறு நாராசம், வாகுவலயம், காந்தம், நாணய வகை, ரணவைத்தியக் கருவி, வரிச்சல்.

சலாபம் - முத்துக் குளித்தல்.

சலித்தல் - அசைவு கொள்ளுதல், ஒலித்தல், துன்பப்படுதல், சோர்தல், வெறுத்தல், சினங் கொள்ளுதல்.

சல்லாபம் - சரசப்பேச்சு

சல்லி - கல் முதலியவற்றின் குண்டு, பொய், மூன்று சின்னங் கொண்ட காசு, ஒருவகைப்பறை, சிற்றோடு, சிறு காசு, மெலிந்த உடம்புடையவன், துளை, போக்கிரி.

சவடால் அடித்தல் - இடம்பங் காட்டுதல், வீண்கர்வம் காட்டுதல்.

சலம் - விரைவு, நீர், பேய், பிணம், மூங்கில்.

சவரம்-சாமரம், மயிர் கழிக்கை.

சவரி - ஒருவகைக் கீரை, கவரி, தென்னை நார், வேடர்குலப் பெண், சாமரம், கவரிமான், மயிர்க்கற்றை.

சவலை - இளமையுள்ளது, பிள்ளை, மெலிவு, அடிகுறைந்தும் மிக்கும் வரும் பாட்டு, மனக் குழப்பம், வருத்தம், உறுதியற்றது, இசைப்பா வகை, தாய்ப் பாலில்லாத குழந்தையின் மெலிவு, மின்னல்.

சவிதா - சூரியன்.

சவுக்கு - அடிக்குங் கயிறு, குதிரைச் சாட்டை, சவுக்கை.

சவுக்கை - ஒருவகை மரம், ஆயத்துறை, இளைத்துப் போதல், இளைப்பாறுமிடம், சதுக்கம், காவற்கூடம், சுங்கச் சாவடி, விலை மலிவு, சதுரத் தின்னைக் கொட்டகை.

சவுத்தல் - விலை நயத்தல், விலைப்படாமலிருத்தல், அலுத்துப்போதல், மெலிதல், விளைவு குன்றிப்போதல், முறுமுறுப்பு அற்றுப்போதல்.

சவ்வாது – ஒருவகைப் பூனையின் வாசனைத் திரவியம்.

சளசளத்தல் – வீணாகப் பேசுதல், தர்க்கம் முதலியவற்றில் தளர்ச்சியடைதல்.

சளப்புதல் – பிதற்றுதல்.

சளம் – பொய், மூர்க்கம், வஞ்சனை, துன்பம்.

சளைத்தல் – சோர்தல்.

சன்ளுப்படுதல் – தொந்தரவுக்குள்ளாதல்.

சறுக்கல் – வழுக்கல், வழுக்கலிடம், கலிங்கு.

சறுக்கு – வழுக்குகை, நழுவுகை, நெம்புதடி, சாக்குப்போக்கு, தடை.

சற்கருமம் – நல்வினை.

சற்குரு – ஞானாசிரியர்.

சற்சங்கம் – நல்லோர் கூட்டம்.

சற்று – சிறிதுபோது.

சனனபூமி – பிறந்த இடம்

சனனம் – பிறப்பு.

சனாதன தர்மம் – தொன்றுதொட்ட அறவொழுக்கம்.

சனிதம் – பிறந்தது, பெண், பிறப்பு, மருமகள்.

சனித்தல் – பிறத்தல்.

சனிப்பு – பிறப்பு.

சனியன் – தொல்லை கொடுப்பது.

சன்ம சாபல்யம் – பிறவிப் பேறு.

சன்மம் – பிறப்பு, தோல்.

சன்மாந்தரம் – முற்பிறவி, மறுமை.

சன்மார்க்கம் – நல்லொழுக்கம், ஞானநெறி, நன்னெறி.

சன்மானம் – வெகுமதி.

சன்னதம் – ஆவேசம், தெய்வங்கூறல், மிகுகோபம், வீறாப்பு.

சன்னம் – குறுணி, சிறு முத்து, சிறுமை, சிற்றரும்பு, நேர்த்தி, மறைக்கப்பட்டது, மென்மை, நுண்மை, நேர்மை, நுண்ணிய பொடி, ரவைக்குண்டு, மெல்லியதாய் அரைக்கப்பட்ட சுாரை, குரல் இழைவு.

சன்னி – சுரதோஷம், சன்னி நோய், பேருள்ளது.

சன்னி பாதம் – இறங்குதல், ஒரு நோய், கலப்பு, கூட்டம், கூத்தினொரு விகற்பம்.

சா

சா – ஓர் எழுத்து, சாவென்னேவல். பேய், இறப்பு, சோர்தல், சாதல்.

சாகசம் – ஒரு பறவை, கொடுமை, திடன், பகை, மெய்ம்மை, யானை, வீரம், வலாற்காரம், துணிவு, பாசாங்கு.

சாகபட்சிணி – இலையுணவு கொள்ளும் உயிர்.

சாகரம் – கடல், பதினாயிரங் கோடி, கோடாகோடி, யானையின் கர்ணமதம், விழித்திருக்கை.

சாகா மிருகம் – அணில், குரங்கு

சாகாமை – அழியாமை.

சாகியம் – கூட்டம், நட்பு, சேர்க்கை, சம்பந்தம்.

சாகுபடி – பயிர்ச் செய்கை.

சாக்கியம் – கூட்டம். சமண மதம். புத்த மதம்.

சாக்குருவி – ஆந்தை, சாக்குறி காட்டுங் குரற்குருவி.

சாக்குறி – மரண அடையாளம்

சாங்காலம் – மரணகாலம்.

சாசனம் – அரசனாணை, ஆணை, ஒழுங்கு, இறையிலி நிலம், உறுதிப் பத்திரம், தண்டனை, கட்டளை, வெண்கடு

சாடுதல் – அசைதல், அடித்தல், கடிந்து கொள்ளுதல், கொல்லுதல், சாய்தல், முறிதல்.

சாடை– அற்பம், ஒப்பு, குறிப்பு. கோள், சயிக்கை, சாயல், சாய்வு, தாட்சணியம், போக்கு

சாட்சி – நடந்ததைக் கண்டவர், உடன் உண்ணும் விருந்து. சாட்சியம், சைதனியம்.

சாட்டி – சவுக்கு, சாட்டை, அறுவடையானபின் உழாது கிடக்கும் நிலம், உரமிடப்பட்டிருக்கும் நிலம்.

சாட்டு - ஒப்பிக்கை, புற்றவை, போக்கு, சாட்டென்னேவல்.

சாட்டுதல் – அடித்தல், போக்குச் சொல்லுதல், சார்த்துதல், குற்றஞ் சுமத்துதல்.

சாட்டை – கசை, கயிறு, மரத்தால் செய்யப்பட்ட ஒருவகைக் குயக் கருவி.

சாணக்கியம் – தந்திரம்.

சாணம் – சாணி, தழும்பு, சந்தனக்கல், சாணைக்கல், சாதிலிங்கம்.

சாணை – அம்மி, சாணைக்கல், சிறு குழந்தைகளுடைய படுக்கைச் சீலை.

சாண் – ஒன்பதங்குல அளவு.

சாதகப்பட்டிகை – சாதகம் எழுதிய பத்திரம்.

சாதகம் – எருக்கு, ஒரு பிரபந்தம், சாதகப்புள், துணைக்காரணம், பயிற்சி, பூதகணம், பிறப்புக் குறிப்பு, பிறவிக்குணம், சனனம், சவுகரியம், மறைப்பு.

சாதகன் – மெய்காப்பாளன், பயிற்சி உள்ளவன், யோகவழி நிற்போன். நிர்வாண தீட்சை பெற்றவன், மாணாக்கன், இறப்புவரை இல்லற ஒழுக்கத்தில் நிற்பவன்.

சாதம் – உண்மை, மகிழ்ச்சி, சோறு, சுத்தம், சேறு, பிறப்பு.

பூதம், மேன்மை, தோன்றுவது, இளமையுடையது, கூட்டம்.

சாதனம் – அடையாளம், அழித்தல், ஆண்குறி, இடம், உறுதி, ஊர், ஏது, ஐக்கம், கருவி, சித்தியாதல், செல்வம், சேனை, தகுதி, முயற்சி, மெலிவு, வீடு, துணைக் காரணம் அனுமான உறுப்புகளுள் ஒன்றாகிய ஏது, பயிற்சி, உருத்திராக்கம் முதலிய சின்னம், இலாஞ்சனை, நகரம், ஆதாரப் பத்திரம்.

சாதனை – சலஞ்சாதித்தல், பயிற்சி, பொய்.

சாதாரணம் – இலேசு, பழக்கம், பொது, பொதுமுறை, எல்லோரும் அறிந்தது.

சாதி - ஆடாதோடை, உயர்வானது, கள், குலம், சாதிக்காய், சாதிமரம், சாதியென்னேவல், சிறுசண்பகம், சீந்தில், தாளப்பிரமாணம் பத்தின் ஒன்று, தேக்கு மரம், தேர்ப்பாகன், பிச்சி, பிரம்பு, பிறப்பு, மரப்பொது, புழுகுச் சட்டம், போர் வீரன், திரள்

சாதித்தல் – நிறைவேற்றுதல், நிலை நாட்டுதல், விடாது பற்றுதல், வெல்லுதல், தேய்த்தல், மந்திர சக்தி பெறுதல்.

சாது – அருகன், சற்குணத்தோன், சற்குணம், சாந்தம், தயிர், பேதைமை, மேன்மை.

சாதுரியம் – கல்வித்திறம், சாமர்த்தியம், நாகரிகம்.

சாத்தியம் – அனுகூலம், சாதிக்கத்தக்கது, விளைபொருள் உரிமை, அனுமான உறுப்புள் துணியப்பட வேண்டும் பொருள், யோகம் இருபத்தேழில் ஒன்று.

சாத்திரம் – கலை.

சாத்திரி – கணிதன்.

சாத்துதல் – அணிதல், பூசுதல், தரித்தல், அடைத்தல், அடித்

தல், பெயர்த்து நடுதல், தூலைப் படித்து முடித்தல்.

சாத்துவிகம் - முக்குணத் தொன்று, அஃது, அருள், ஐம் பொறியடக்கல், ஞானம், தவம். பொறை, மேன்மை, மோனம், வாய்மை என்னும் எண்குணம்.

சாந்தம் - அமைதி, கலவை, குளிர்ச்சி, சந்தணம், சாணி, தண்ணெனவு, தயவு, மலைப் பக்கம். பொறுமை. நவரசங்க ளுள் ஒன்று.

சாந்தி - ஆற்றுதல், ஓமம், கழிப்பு, சாந்தம், தணிவு, அமைதி, பரிகாரம், பூசை, குற்ற நீக்கத்திற்குச் செய்யும் செயல்.

சாந்து - கலவைச் சாந்து; சந் தனம்; சாந்தகுணம்; சுண்ணச் சாந்து; பராகம்; பூந்தாது; வாசனைத் தூள். மலம்.

சாபம் - குட்டி; சபிப்பு; தனுர் இராசி; வட்டத்திற் பாதி; வில்; கேடுசூழ் மொழி; விலங் கின் குட்டி, தவத்தோர் சபித் துக்கூறும் மொழி.

சாப்பறை - நெய்தல்; நிலப் பறை; பிணப்பறை.

சாமம் - அறுகு; இரா; ஏழரை நாழிகை கொண்ட காலம்; ஓர் உபாயம்; கருமை; சமாதா னம்; பச்சை; பஞ்சம்; பல வீனம்; பாதியிரா; பொன்; சாவு: மூன்றாம் வேதம்; சாமம்; நடுச்சாமம்.

சாமானியம் - பொது; முழுதும் பெறுதற்கெளியது.

சாமி - அருகன்; கடந்த ஞானி; கடவுள்; கந்தன்: கற்புடையாள், குரு; சாமை; தலைவன்; தலைவி; தாய்; பொன்; மூத் தோன்.

சாமுத்திரிகம் - அங்கவிலக் கணம்.

சாம்பல் - ஒடுக்கல்; சாம்பர், நாவல் மரம்; பழம்பூ; எரிபட்ட நீறு; ஒருவகைப் பூச்சி.

சாம்புதல் – அடித்தல், இழுத்தல்; ஒடுங்குதல்; கூம்புதல்; வாடுதல்; உணர்வழிதல்; கெடுதல்.

சாயல் – அழகு; ஒப்பு; சாய்தல்; நிழல்; நிறம்; நுண்மை; மக்கட்படுக்கை; மஞ்சள்; மாதிரி; மேன்மை; மென்மை.

சாயுச்சியம் – ஒன்றிப்பு; ஒரு பதவி; அது கடவுளோடு ஒன்றுபட்டிருத்தல்.

சாயை – சாயாதேவி; நிழல்; நிறம்: மனைவி.

சாய்தல் – அசைதல்; அழிதல்; தளர்தல்; வருந்துதல்; வற்றுதல்; இறத்தல்; திரும்புதல்; நுண்மை; நடுநிலைமை திறம்புதல்; சார்தல்; சயனித்தல்; தோற்றோடுதல்; திரண்டு செல்லுதல்.

சாய்த்தல் – சாயச்செய்தல்; கெடுத்தல்; மெலிவித்தல்; முறித்தல்; மெய்ப்படுத்துதல்.

சாய்ப்பு – இறப்பு; சரிப்பு; சார்மானம்; தாழ்வாரம்; தாழ்வு; நடத்தல்; பத்தி; மட்டவெற்றிலை; மலைச்சரிவு; சாய்வான கூரை.

சாய்வு – சரிவு; ஓரம்; தாழ்வு; அழிவு.

சாரங்கம் – ஆபரணம்; இரா; இராகம் முப்பத்திரண்டின் ஒன்று; ஓர் இசை; கற்பூரம்; குயில்; குறிஞ்சா; சங்கு; சாதகப்புள்; சிங்கம்; புடைவை; பூமி; மயில்; மான்; மேகம்; வண்டு; யானை; வானம்பாடி; திருமால்; வெளிச்சம்; வில்.

சாரணர் – ஒற்றர்; கூத்தாடிகள், தூதுவர்; புலவர்; சமண முனிவர், பாசறைச் சேவையாளர்.

சாரதி – தேர்ப்பாகன்; திருமால், வாகனம் செலுத்துபவன்.

சாரம் – இரசம்; இலுப்பை; இனிமை; உருக்கு; சத்து; நடை; நிலமுகிப்புள்; பாலாடை; மரவயிரம்; மேடு; மேலேறக் கட்டும் மரம்; கிரக இயக்கம்; இனிமை; மருந்து வடித்தெடுத்த பகுதி; பயன், ஆற்றல்.

சாராயம் - காய்ச்சி வடித்து மது.

சாரி – அரசருக்குச் செங்கோல் செல்லல்; உலாப்போதல்; சூதாடு கருவி; சூறைக் காற்று; வட்டமாயோடுகை; ஊர் மீது செல்லுகை; தடவை: நடை; கூட்டம்.

சாரித்திரம் – ஒழுக்கம்; கதை; வரலாறு.

சார்பு – அடைக்கலம்; அணைவு; இடம்; உதவி; கடவுள்; கிட்டுகை: குணம்; சேர்பு; தயவு; பற்று; தன்மை; துணை; புகலிடம்; பிறப்பு; நிதானம்; ஒரு தலைப்பட்சம்.

சார்பெழுத்து - சார்ந்துவரும் எழுத்து.

சார்மானம் – சார்பு.

சார்வு – சார்பு; ஆசைப் பெருக்கம்; இளவோலை; இடம்; ஒட்டுத் திண்ணை; புகலிடம்; சூழ்ச்சி.

சார்வோலை – முதிர்ந்த குருத்தோலை.

சாலமாலம் - வஞ்சகம்.

சாலம் - அரண்; ஆச்சாமரம்; இளம் பூவரும்பு; இறும்பு; யசுர் வேதம்; கடம்பு; கூட்டம்; சவை; செடி; தாழ்வாரம்; பலகணி: பெருமை; மரப்பொது; மாய வித்தை; வலை; வலைபோன்ற தோரணம்; விகற்பம்; விலங்கின் கூட்டம்; அகலம்.

சாலி – அருந்ததி; கவசம்; நாவி; நெல்; நெல்மணி; புழுகு சட்டம்; மிக்கோன்; செந்நெல்; நெற்பயிர்ப்பொது; வேலமரம்.

சாலிநெல் - செந்நெல்.

சாலிவாகன சகாப்தம் - கி. பி. 78 ஆம் வருடத்துச் சித்திரை மாதத்தில் தொடங்கிச் சாலி வாகனன் பேரால் வழங்கும் ஆண்டு.

சாலுதல் - நிறைதல்; ஒவ்வுதல்; பொருந்துதல்

சாலை - அரண்மனை; அறத்தின் சாலை; அறை; இரு பக்கமும் மரங்கள் செறிந்த பாதை; குதிரைப் பந்தி; கூடம்; வெளி மண்டபம்; தொழில் மண்டபம்; பொதுமண்டபம்; பள்ளிக்கூடம்.

சால்பு - மன அமைதி: இசைவு; ஊக்கம்; கல்வி; நற்குணம்; மாட்சிமை; மேன்மை; சான்றாண்மை; தன்மை.

சாவகாசம் - வசதி; விரைவின்மை.

சாவசம் - மலேயா நாட்டு மொழி

சாவடி - அறச்சாலை; வழிப் போக்கர் தங்கும் இடம்; ஊர்ப் பொதுக் கட்டிடம்.

சாவணம் - ஒரு கருவி; குழாய்; நாளம்: நாணல்.

சாவதானம் - கவனம்; மிருது; விழிப்பு.

சாவி - பதர்; திறவுகோல்; அச்சாணி.

சாவோலை - மரணச் சீட்டு.

சாளரம் - சன்னல்; பலகணி.

சாறல் - குளிர்காற்று; சாறுதல்;

சாறு - ஆணம்; கள்; மரத்தின் குலை; கொத்து; பூசை; சாரம்; திருவிழா; பிழி; சாறென்னேவல்; திருமணம்.

சாறுதல் - களதானியம் பெருக்குதல்; வழுக்குதல்; சரிதல்.

சாற்றுதல்-சொல்லுதல்: விளம்பரப்படுத்தல்; விற்றல்; நிறைத்தல்; அடித்தல்; உணர்த்துதல்.

சானகி - ஓர் அரக்கன்; மூங்கில்; கொடிக்கொற்றான்; சீதை.

சான்றவர் – அறிஞர்.

சான்றாண்மை – ஊக்கம், ஞானம், பொறுமை, பெருந் தன்மை.

சான்று எடுத்துக்காட்டு, சாட்சி

சான்றோர் – அறிஞர், அறிவு ஒழுக்கம் முதலியவற்றிற் சிறந் தோர்.

சி

சி – ஒரு பெண்பால் விகுதி.

சிகரம் – இலவங்கம், உயர்ச்சி, கோபுரமுடி, சுக்கு. தலை, தலைச் சீரா, நீர்த்துளி, மயிர் முடி, மலை, மலைமுடி, வட்டில், வீடு.

சிகாமணி– முதன்மையானவன், தலையணி, சிறந்தோன்.

சிகிச்சை – பரிகாரம், மருத்துவம்.

சிகித்துவசன் – ஓர் அரசன், முருகன்.

சிகிலம் – சேறு.

சிகை–சிரணம், குடுமி, கொப்பு, நுதி, சுடர், படைத்தசோறு, மயிர்முடி, கவளம், பந்தம், மயிற்கொண்டை.

சிக்கல் – இளைத்தல், மாட்டிக் கொள்ளுதல், ஓர் ஊர், தாறுமாறு, முட்டுப்பாடு.

சிக்கனம் – செட்டு, வீணாக்காமை, அளவறிந்து செலவழித்தல்.

சிக்குதல் – அகப்படுதல், பின்னப்படுதல், இறுகக் கட்டுதல், சிக்குப்படுதல், கிடைத்தல், அகப்பட்டுக் கொள்ளுதல்.

சிங்கம் - ஆடாதோடை, உயர்ந்தோன், இராசசின்னத்தொன்று, அரிமா, ஓர் இராசி, ஒரு விளையாட்டு, வேளாளரின் ஒரு பட்டப் பெயர், மிக்க வன்மையுள்ள விலங்கு.

சிங்காரம் - அணி அலங்காரம், திருத்தம், இன்பச் சுவை.

சிசுத்துவம்-குழந்தைத் தன்மை

சிச்சீ - இகழ்ச்சிக் குறிப்பு.

சிட்டபரிபாலனம் - நல்லோரைக் காத்தல்.

சிட்டித்தல் - படைத்தல்.

சிட்டை - ஆடைக்கரை வகை, பெருஞ் செலவுகளுக்கு விவரங் காட்டும் தனிக் கணக்குப் புத்தகம்,

சிணுக்கம் - மூக்கால் அழுதல், உடன்பாடன்மையைக் குறிக்கும் முகக்குறி.

சிணுக்கு - அழுகை, உழலை மரம், சிக்கு, சிணுக்கென்னேவல்.

சிணுங்கல் - அழுதல், கொஞ்சல்

சிண்டுதல் - சருவுதல், தொடுதல், நெருங்குதல்.

சிதகுதல் - உருவுதல், எழுதினதை அழித்தல்.

சிதடு - பேதைமை, உள்ளீடின்மை, குருடு.

சிதம்பல் - பலனழிதல், கெட்டுப்போதல்.

சிதர்த்தல்- சிந்துதல், பிரித்தல், வெட்டுதல்.

சிதள் - கறையான், செதுக்குத்துண்டு, புண்ணசறு, மீன் செதில்

சிதறுதல் - சிந்துதல், இறைத்தல், பயனிலதாதல், எல்லாருக்குங் கொடுத்தல்.

சிதாகாசம் - அறிவுவெளி.

சிதிரம் - கோடாலி, தீ, வாள்.

சிதைத்தல் - குலைத்தல், அழித்தல்.

சிதைவு - குறைவு, கேடு, பதனழிவு.

சித்தசுத்தி - மனத்தூய்மை.

சித்தப்பிரமை - மனத் தடுமாற்றம், பைத்தியம்.

சித்தம் - உட்கரணம் நான்கின் ஒன்று, உண்மை, உப்பு, உள்ளம், துறவு, எப்போதும், முடிப்பு, முருங்கை, மனம், முடிந்த மனக்கொள்கை, திண்ணம், மூலப்பகுதி, தகுதியானது.

சித்தயோகம் - நல்வேளை.

சித்தர் - சித்தி பெற்றவர்கள், அருளடைந்தோர்.

சித்தலயம் - மனவொடுக்கம்.

சித்தாந்தம் - முடிந்த முடிவு. சைவசமய விகற்பம், தருக்க முடிவு, உறுதியானது, மதம், சைவசித்தாந்தம், வானசாத்திரம் கூறும் நூல்.

சித்தி - கைகூடுகை, அறிவு, ஊறுசெய்தல், சித்தித்தல், சித்தியென்னேவல், செல்வாக்கு, நித்தியயோகத்தொன்று, நிறைவேற்றம், நிலப்பனை, பெலம், பொன்னாங்காணி, மகிழ்ச்சி, மறைவு, மோட்சம், வெட்டல், சிறியதாய்.

சித்திரம் - ஓவியம், வியப்பு, அற்பம், ஆகாயம், ஆமணக்கு, ஒரு கவி, கொடுவேலி, சித்திரப்பாவை, சித்திரிக்கப்பட்டது, சிறப்பு, சிறுகுறிஞ்சா, சிற்பநூல் முப்பத்திரண்டின் ஒன்று, கொடிக்கதை, பேரழகு, மெய்போற்பொய்கூறல், காடு.

சித்திரித்தல் - ஓவியந் தீட்டல், கொத்துவேலை செய்தல்.

சித்து - அரூபம். அறிவு, யாகம், அறிவுப்பொருள், ஆன்மா, சித்தி, வெற்றி, ஒருவகை வரிக்கூத்து.

சிந்தனை - ஆராய்வு, எண்ணம், தியானம், நினைவு, விருப்பம், கவனம், கவலை.

சிந்தாமணி - ஒரு மருந்து, தேவமணியில் ஒன்று, சைன முனிவர் இயற்றிய சீவகசிந்தாமணி, அஃது ஐம்பெருங் காப்பியங்களுள்

ஒன்று, 'விரும்பிய, அனைத்தை யும் கொடுக்கவல்ல தெய்வமணி.

சிந்தித்தல் - மனனஞ் செய்தல், நினைத்தல், விரும்புதல்

சிந்திப்பு - நினைப்பு.

சிந்தை - கருத்து, குறிப்பு, மனம், துன்பம், அக்கறை, கவலை, எண்ணம்.

சிப்பந்தி - வேலைக்காரன்.

சிமிக்கி - கம்மலில் தொடுத்து அணியப்படும் முத்துக்கட்டிய காதணிவகை, கொடிவகை.

சிமிட்டுதல் - அணாப்புதல், சாடை தோன்றக் கண்சிமிட்டு தல், வஞ்சித்தல், கண்ணிமைத் தல், தந்திரம் செய்து ஏமாற் றுதல்.

சிமை - குடுமி, மலையுச்சி.

சிம்மம் - சிங்கம்.

சிரங்கு - ஒரு குருநோய், ஒரு புண், சொறி.

சிரஞ்சீவி - நெடுங்காலம் வாழ் வோன், காகம், திருமால், இலவு.

சிரசு - தலை, முதல்.

சிரத்தை - அன்பு, முதன்மை, நம்பிக்கை, ஊற்றம், விசுவாசம்.

சிரமம் - இரைச்சல், இளைப்பு, களைப்பு, சிலம்பகம், வருத்தம், உழைப்பு, ஆயுதப் பயிற்சி.

சிரம் - ஆமணக்கு, உயர்ச்சி, கழுகு, கூகைநீறு. திபிப்லி, மூலம், தலை, நெடுங்காலம், மேன்மை, உச்சி.

சிரறுதல் - மாறுபடுதல், சிதறு தல்.

சிராய்த்தல் - உராய்ந்து ஊறு படல்.

சிரித்தல் - நகைத்தல், பரிகாசம் பண்ணல்.

சிரிப்பு - நகை, பகிடி, பழிப்பு.

சிரைத்தல் - மயிர்கழித்தல்.

சிரோமணி - தலைமணி,

உயர்ந்தமணி, பண்டிதர் பட்டப்பெயர்.

சிலந்தி - ஒரு பூச்சி, கிரந்திப் புண், பரு, விஷக்கட்டி, மரவகை, கோரைவகை.

சிலப்பதிகாரம் - ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று.

சிலம்பம் - சூழ்ச்சித்திறன், அஞ்சச் செய்கை, கழி வீசுதல் முதலிய படைக்கலப் பயிற்சி.

சிலம்பு - ஒலி, காற்சிலம்பு, பூசாரிகள் கைச்சிலம்பு, மலை, பக்கமலை, மகளிர் காலணி வகை, குகை, சிலம்பென்னேவல்.

சிலாக்கியம் - போற்றத் தக்கது, சிறந்தது, உரிமை, புகழ்.

சிலாப்பி - வேலைக்கள்ளன்.

சிலிர்த்தல் - சில்லிடுதல், தளிர்த்தல்.

சிலுகு - சண்டை, தடை, துன்பம், தப்பிதம், குழப்பம், சிலுகென்னேவல்.

சிலுத்தல் - பதமாதல், சோறு பதனழிதல், கணிதல், விள்ளுதல், குலுங்கக் காய்தல், கொஞ்சமாய்ச் சொரிதல்.

சில் - அற்பம், ஆரவாரம், ஒலிக்குறிப்பு, தலைப்பணி, தேர், பண்டி முதலியவற்றின் உருள், வடம், மூக்குக்கண்ணாடி, சிறுதுண்டு, நுண்மையான.

சில்காற்று - தென்றற் காற்று.

சில்லறை - சிறுசெயல், சிதறிய தொகை, எஞ்சியது, அற்பமானது.

சில்லாட்டு - சில்லறை, சிறு காரியம்.

சில்லு - ஓடு, ஒரு மரம், சில்.

சிவகதி - முத்தி.

சிவசமயம் - சைவ மதம்.

சிவஞானம் - தெய்வ அறிவு, பதி உணர்வு.

சிவபதம் – சிவபக்தர்கள் தத்தம் பரிபாகத்திற்கு ஏற்ப அடையும் (1) தான் ஆள் உலகிருத்தல். (2) தன்பால் இருத்தல், (3) தான் ஆம் பதம் பெறல், (4) தான் ஆகுதல் என்ற நால்வகைச் சிவ பதவி.

சிவப்பு - இலிங்கம், சினக் குறிப்பு, செம்மை நிறம்.

சிவம் – உப்பு, உயர்வு, ஒரு குளிகை, ஒரு வாசனை, கடவுள், குறுணி, மகிழ்ச்சி, சிவதத்துவம் ஐந்தினொன்று, சிவலிங்கம், தண்ணீர், நன்முகூர்த்தம், நித்தியயோகத்தொன்று, நன்மை, பசு, பாதரசம், முத்தி, முற்றத் துறத்தல், யோனி, வெண்காரம், வேதம், மங்களம், நிர்க் குணப்பிரமம்.

சிவனார் வேம்பு - ஒரு செடி.

சிவன் - கடவுள், சிவபெருமான்

சிவாயநம - சைவர்களால் போற்றப்படும் ஐந்தெழுத்து.

சிவிகை – தண்டிகை, பாண்டில் பூண்டவூர்தி, பல்லக்கு

சிறகு கதவு – இரட்டைக் கதவு.

சிறகுகோழி – காட்டுக்கோழி,

சிறங்கை - கைந்நிறையளவு.

சிறத்தல் – அருமை, சிறப்பாதல், சிறப்பு, திறப்படல், மிகுதல், மேன்மைப்படல்.

சிறந்தோர் - அழகுள்ளோர், துறந்தோர், பெருமையிற் சிறந்தோர்.

சிறப்பித்தல் – அலங்கரித்தல். புகழ்தல்.

சிறப்பு – அருமை, அலங்காரம், மதிப்பு, திருவிழா, தலைமை, அழகு, உயர்ச்சி, பெருமை, மிகுதி, மேன்மை, ஒன்றிற்கே உரியது, செல்வம், சன்மானம், மோட்சம்.

சிறியர் – அற்பர், கீழ்மக்கள், குறள் வடிவோர்.

சிறுகாற்று - மிருதுவாக வீசுங் காற்று.

சிறுகுதல் - குறைதல், சினத்தல், சுருங்குதல்.

சிறுசொல் - பழிச்சொல், இழிசொல்.

சிறுதலைமை - தலை வணக்கம்

சிறுதானியம் - புன்செய்த் தானியம்.

சிறுத்தை - புலி.

சிறுமை - அற்பம், இடைஞ்சல், இளமை, எளிமை, கீழ்மை, குறைவு, வறுமை, துன்பம், நோய்.

சிறுமைப்படுதல் - கீழாந் தன்மையடைதல்.

சிறை - அடிமை, அழகுள்ளவள். இடம், இலகு, கட்டுப்பாடு, காவல், சிறைச்சாலை, தடை, நீர்க்கரை, பக்கம். மதில், விபசாரி, வரம்பு அணை, நீர்நிலை

சிறைசெய்தல் - அடிமைப் படுத்தல்.

சிற்பம் - அறுதொழிலில் ஒன்று. அற்பம். சிறிசு, சிற்பநூல். நுண்மை, திறமை, சிந்திக்கை.

சிற்றறிவன் - ஆன்மா,

சிற்றறிவு - சொற்ப அறிவு.

சிற்றுணர்வு - சிற்றறிவு, கேவலமான அறிவு.

சிற்றுண்டி - சிற்றுணவு, பலகார வகை.

சினத்தல் -- கோபித்தல்.

சினம் - கோபம், நெருப்பு, வெயில், வெண்மை, போர்.

சினவுதல் - கோபித்தல், பொருதல். சினக்குறிப்பு.

சினைத்தல் - தோன்றுதல், அரும்புதல், சிரங்கு புடைத்தல்

சின்னப்படுதல்- பழுதடைதல், சிதைவடைதல், பின்னமுறுதல், இகழ்ச்சிப்படுதல்.

சின்னம் - அடையாளம், ஈனம், ஒரு காசு, காளம், சங்கு, சிறுமை, தட்டு. துண்டு, பராகம், பெண் குறி, முறம், விசித்திரம்.

சீ

சீக்கிரம் - அம்பு, காரம், குரூரம், சினம், விரைவு. நோய் முதலியவற்றின் வீறு, உறைப்பு, குதிரை பூட்டிய பெட்டி வண்டி.

சீசீ - இகழ்ச்சிக்குறிப்பு.

சீடன் - மாணவன்.

சீட்டு - எழுத்துக்குறிப்பு. பத்திரம். கூட்டுச்சீட்டு நிதி, விளையாட்டுச் சீட்டு, பட்டி.

சீதம் - அகில், ஆமம், குளிர்ச்சி, உயிர் வேதனையின் ஒன்று, சந்தன மரம், சீரணித்தது, சோம்பு, நறுவிலி, நீர், மாரி காலம், முகில், பற்பாடகம்.

சீதவாதம் - குளிர், முடக்கு, குளிர்ந்த காற்று.

சீதனக்காணி - சீதனமாகப் பெற்ற பூமி.

சீதனம் - மணமகள் கொண்டு வரும் சீர்வரிசை.

சீதேவி - இலக்குமி, திருமகள், மகளிர் தலைக்கோல உறுப்பு, செங்கழுநீர்.

சீப்பு - எலும்புக்கோவை, கதவின் தாள், தோளெலும்பு, மயிர் சீவுஞ்சீப்பு, வாழைக்குலைச்சீப்பு, விலா எலும்பு, மதகிலுள்ள அடை பலகை, நெய்யுங் கருவியின் ஓர் உறுப்பு, பாளம்.

சீமந்தம் - முதற் கருப்பத்தில் ஆறு அல்லது எட்டாம் மாதத்தில் கருக்கொண்ட பத்தினிக்குச் செய்யப்படும் சடங்கு.

சீமாட்டி - செல்வி, தலைவி.

சீமுதன் - இந்திரன், உளவன். ஓர் அசுரன், சிவன், துன்புறுவோன், நரகாசுரன், சாரதி.

சீர்கேடு - ஒழுங்கீனம், நிலை

குலைவு, அவலட்சணம்.

சீர்தூக்கல் – ஆலோசித்தல், ஒப்புநோக்குதல், நிறையளவை வரையறுத்தல்.

சீவகாருண்யம் – உயிர் மீது அருள்.

சீவகாலம் – வாழ்நாள்.

சீவசாட்சி – அறிவுக்காதார மாக இருப்பது, பரப்பிரமம்.

சீவனம் – அமுதம், அலுவல், உயிர் வாழ்தல், தைத்தல், நீர், மூளை, புசிப்பன, வெண்ணெய்.

சீவனாம்சம் – விதவை முதலி யோருடைய வாழ்க்கைக்கென்று கொடுக்கும் பொருள்.

சீவன் – அனுபவிக்கப்படுதல், உயிர், உயிர்தரும் மருந்து, காந் தம், சீந்தில், சீவியம், முயற்சி, வியாழம், வைடூரியம், சீவான்மா.

சீவியம் – ஆயுள், வாணாள்.

சீறல் – அதட்டல், இரைதல், சினத்கல், சினக்குறிப்பு, பெருங்காயம், விரைவு

சீற்றம் – சினம், பெருஞ்சினம்.

சு

சு – ஓர் எழுத்து, அதட்டும் ஓசை, நன்மை, சுகம் முதலிய வற்றைக் காட்டும் ஓர் உப சருக்கம், வியப்புக் குறிப்பு.

சுகந்த பரிமளம் – மிகுந்த வாசனை.

சுகந்தம் – அரத்தை, கந்தகம், ஈரவெண்காயம், கிழங்கு, சந் தனம், சீரகம், நறுமணம், கருங் குவளை, வாழை.

சுகிர்தம் – அதிட்டம், அறம், இன்பம், சன்மார்க்கம், தயவு, சுசி, நன்மை, நெய், நல்வினைப் பயன்.

சுக்கல் – சிறுதுண்டு.

சுக்கு – சுக்கான்கல், சுண்டி, துண்டு, வேர்க்கொம்பு, அது

திருகடுகத்தொன்று, பஞ்ச மூலத்துள் ஒன்று.

சுக்குமாந்தடி - சிறு தெய்வங்களின் கையிலிருக்குங் குறுந்தடி.

சுங்கம் - ஆடுதின்னாப் பாளை, ஆயம், இறை, களவு, பொதுக்கு, கீழறுக்கை, இறக்குமதிப் பண்ட வரி.

சுசனம் - நல்லசனம், காற்று.

சுடரோன் - கதிரவன்.

சுடர் - தீ, ஒளி, திங்கள், ஞாயிறு, தளிர், விளக்கு, தீச்சிகை.

சுடர்தல் - ஒளி செய்தல்.

சுடலை, சுடலைக்கான் - சுடு காடு.

சுடு - வெம்மையுறல், சுடுவென் னேவல், சும்மாடு.

சுடுகாடு - ஈமம்.

சுடுதல் - தகித்தல், நீற்றுதல், வேகவைத்தல், காயச்செய்தல், வருத்துதல்.

சுடுபுண் - சுட்டதனால் உண் டான புண்.

சுணக்கம் - சோர்வு, தாமதம், பிணக்கம், சரச விளையாட்டு, வாட்டம்.

சுணக்கன் - நாய்போலத் திரிகிறவன்.

சுணங்கல் - சோர்தல், தாமதித் தல், மெலிதல்.

சுண்டுதல் - வற்றுதல், குன்றிப் போதல், தெறித்தல், நோ வுண்டாம்படி நரம்பு முதலிய இழுத்தல்.

சுதந்திரம் - இட்டமான ஆளுகை, உரிமை, உரிமைப் பேறு, சுயேச்சை, தன்வயம்

சுத்தம் - உண்மை, கலப்பற்றது, சுயம், குற்றமற்றது, சுசி, பவித் திரம், முழுமை, தூய்மை.

சுபக்கோள் - சுபக்கிரகம், நற் கோள்.

சுபசெய்தி - நற்செய்தி.
சுபமங்களம் - வாழ்த்து.
சுபமிருத்து - நன்மரணம்.
சுபம் - காற்று, நன்மை, நித்திய யோகத்தொன்று, பரிசம், மங்களம். போர், வாழ்த்து.
சுபாவம் - இயல்பு, உபநிடதத்தொன்று, கடரகமின்மை, தன்மை, கலப்பற்றது, கபடின்மை, மூடத்தன்மை.
சுமத்தல் - மிகுதல். தாங்குதல், மேற்கொள்ளுதல், பாரமாதல், பணிதல்.
சுமத்துதல் - ஏற்றுதல்.
சுமந்து - மேற்கொண்டு.
சுமைதி - பாரம், பொறுப்பு.
சுயம்பிரகாசம் - இயற்கை ஒளி. கலப்பற்ற ஒளி, கடவுள்.
சுயம்வரம் - தலைவி தலைவனைத் தானே தேர்ந்து வரித்தல்.
சுரண்டல் - கவருதல், பிறாண்டுதல்.
சுரத்தல் - உண்டாதல், ஊறுதல், நிறைதல், பயத்தல், மாறாமற் கொடுத்தல், பால் முதலியன சுரத்தல். இடைவிடாது சொரிதல், மிகக்கொடுத்தல்.
சுரம் - அருநெறி, இசை, இராக பேதம், உட்டுளை, ஓர் உட்பு, கள், காடு, காய்ச்சல், பாலை நிலம், வழி.
சுரிமண் - சேறு.
சுரியல்-இளைஞர் மயிர், சுரிதல், சுழலல், நீர்ச்சுழி, பெண்மயிர், மயிர், வளைவு.
சுருக்கம் - சிறுமை, சுருங்கல், குறைவு, வறுமை, உலோபம்.
சுருக்கு - உருவுதடம், கட்டு, கண்ணி, சுருக்கம், சுருக்கென்னேவல், சுருங்கப்பிடித்துக் கட்டியது, நெய்த்துடுப்பு, மடிப்பு, விரைவு.

சுருங்கல் - குறைதல், சுருங்குதல், நுழைவாயில், மாலை.

சுருதி - இசை, ஒலி, காது, மங்கலச்சொல், மந்திரம், வேதம்

சுருதிஞானம் - நால்வகைக் கேள்விகளில் ஒன்று, வேத அறிவு.

சுருள் - ஐம்பாலின் ஒன்று, சுருளென்னேவல், தாமரையுட்சுருள், நூற்சுருள், பெண்மயில், வெற்றிலைசுருள்.

சுரேசன் - இந்திரன். ஈசானன், மூருகன்.

சுலபம் - அற்பம், இலேசு.

சுலனன் - நெருப்பு.

சுலாவு - காற்று,

சுலோகம் - வடமொழிச் செய்யுள், பழமொழி, புகழ், வசனம், சொல்மாலை.

சுலோபம் - அற்பம், எளிது, எறும்பு, மூதுரை,

சுவடி - எழுதிய புத்தகம், ஏட்டுப் புத்தகம், பத்திரத் தொகுதி.

சுவடு - அங்கவடி, அடையாளம், கட்டு, கபடம், குறிப்பு, சுளுகு, தழும்பு.

சுவர் - அலங்காரம், ஆகாயம், காயத்திரியிலோர் உறுப்பு, தேவலோகம், மதில், தேர் உறுப்பு, உச்ச ஒலி.

சுவர்க்கம் - விண்ணுலகம், முலை, இன்பம்

சுவாசம் - உயிர்ப்பு, சவட்டுமண், நல்லிருப்பிடம்.

சுவாத்தியம் - ஏடாசிரியனாகப் படித்த கல்வி, காலநிலை-

சுவார்ச்சிதம் - தானே தேடியது.

சுவானுபூதி - தெய்வ அருள், தெய்வ அறிவு.

சுவிகரித்தல் - தனதாக்கல்.

சுவிசேடம் - நற்செய்தி.

சுவை - இரசம், இனிமை, உருசி, ஓர் அலங்காரம், சித்திரை நாள், சுவையென்னேவல்.

சுவைத்தல் - உருசி பார்த்தல், உண்ணுதல், முத்தமிடுதல்.

சுழல்காற்று - சூறைக்காற்று.

சுழற்றல் - உழற்றல், கிறு கிறுப்பு, சுற்றியாட்டல்.

சுழி - இலக்கணச் சுழி, உரோமச்சுழி, கபடம், சுழியென்னேவல், நீர்ச்சுழி முதலியன, விந்து, மூர்க்கம், கடல் சுழலுகை, அங்கச்சுழி.

சுழிக்காற்று - சூறைக்காற்று.

சுழித்தல் - குழிதல், சுழலுதல், நீர்ச்சுழி உண்டாதல், அங்கச் சுழியுண்டாதல், அடிபடாமல் ஒதுங்குதல், தவறிப் போதல்: அலையச்செய்தல்: செலவு முதலியவற்றைச் சுருக்குதல், முகத்தை சுருக்குதல்: சினத்தல்; மனங்கலங்குதல்: கவலல்.

சுழிமுனை - நடுநாடி: மூலாதாரத்தில் இருந்து உச்சித்துவாரம் வரைக்கும் நிற்கும் நாடி.

சுளித்தல் -சினத்தல்: முறித்தல்

சுளுகு - நுட்ப அறிவு: சாதுரியப் பேச்சு; தந்திர வார்த்தை.

சுள்ளாணி - சிற்றாணி.

சுள்ளாப்பு - அடி: உறைப்பு: விரைவு: பழிச்சொல், வெப்பம்.

சுள்ளி - அனிச்சமரம்; சிறுவிறகு: ஞாழல், மயிற்கொன்றை: மாமரம்: உலர்ந்த சிறு கொம்பு: சிறுகோல்: மரக்கிளை; எலும்பு: சிறுமை: குங்குமம்: சுப்பி.

சுறண்டி - ஒரு கரண்டி: கவர்பவன்: தூண்டிவிடுபவன்.

சுறுதி - சுறுசுறுப்பு: தீவிரம்.

சுற்றத்தார் - இனத்தார்: துணைவர், உறவினர்.

சுற்றுப்புறம் - அயல்.

சூ

ஓர் எழுத்து: விலங்குகளையோட்டுங் குறிப்பு: வியப்புச் சொல் வாணவகை, நாயை ஏவும் ஒலிக் குறிப்பு, சுளுந்து.

சூக்கும சரீரம். சூக்கும தேகம் - நுண்ணிய உள்ளுடல்.

சூக்குமம் - அணு: அற்பம்: ஓர் அலங்காரம்: கடவுள்: சீந்தில்: நுண்ணறிவு: நுண்மை; சிவாகமம் இருபத்தெட்டினொன்று.

சூடை - ஒருவித மீன்: குடுமி: கைக்கடகம்: வீட்டிறப்பு: தலை

சூட்சுமபுத்தி - நுண்ணுணர்வு

சூட்சுமம் - நுண்மை; கூரறிவு

சூட்டுதல் - அணிதல்: ஏற்றிச் செல்லுதல்: நியமித்தல்: முடித்தல்: முடிபுனைதல்.

சூதகம் - அருவருப்பு: ஆசூசம்: சிறுகிணறு: தீட்டு: பழைமை; பிறப்பு: மகளிர் பூப்பு: மாதவிடாய்: விலக்கம்: முலைக்கண்.

சூதம் - இரதம்: குறிகேட்டல்: சூதாடு கருவி: சூது: பவள மல்லிகை: பாதரசம்: புளிமா: மடைத்தொழில்: காமன் கணையில் ஒன்று; மாமரம்: விழுதல்.

சூது : - ஓரிதழ்த்தாமரை: சூதாடுகருவி: துளுவஞ்சகம்: உபாயம்: வெற்றி: உட்புரை.

சூத்திரதாரி - கடவுள்: பதுமையாட்டி.

சூத்திரப்பா - ஓர் அகவல், நூற்பா அகவல்.

சூத்திரம் - இயந்திரம், இரகசியம், உபாயம், ஒழுங்கு, தீர்ப்பு, நூல், பகுசு நூல். பூனூல், வழி நூல்.

சூரன் - வீரன், சூரியன், நெருப்பு, நாய்.

சூரியகலை - பிங்கலை, நாசியின் வலப்பக்கத்துத் துவாரம்.

சூரியவாதம் – கதிரவனைக் கடவுளாகக் கொள்ளும் சமயம்

சூரியன் – ஞாயிறு, சோழன், உபநிடதங்களுள் ஒன்று. செம்பு மலை.

சூரை – ஒரு செடி, ஒரு பயிர், கள், ஒரு மீன், தூதுளை, நெற்றிப்புல்.

சூலம் - இரேவதி நாள், ஓராயுயுதம், கழு, சதுரக்கள்ளி, சாமரம், சூலை, துகிற்கொடி, சாவு, இடிதாங்கி, நித்யயோகத் தொன்று.

சூலை – உளைவு நோய்.

சூல் – கருப்பம், முட்டை, சூலென்னேவல்.

தெளிவு - அறிவு; குணவலங்காரம்; கொழுப்பு; தீர்க்கம்; துணிவு: மனத்தேற்றம்; வெளிச்சம்; விளக்கம்; சாறு; ஞானம்: ஆராய்ந்து கண்டது; நம்பிக்கை.

தெள்ளத்தெளிதல் - நன்றாகத் தெளிதல்.

தெள்ளுதமிழ் - செந்தமிழ்.

தெறித்தல் - அட்டாதுட்டி பண்ணல்: அதைத்தல்; சிந்தல்; பாய்தல்; முறிதல்.

தென்படுதல் - கிடைத்தல்; கண்முன் தோன்றுதல்.

தென்றமிழ் - செந்தமிழ்.

தே

தே - ஓர் எழுத்து; கடவுள்; அருள்: கொள்ளுகை; தெய்வம்; நாயகன்; மாடு துரத்தும் ஒலிக் குறிப்பு.

தேககூறு - உடலின் இயல்பாயுள்ள நிலை.

தேகத்தியாகம் - உயிரைக் கொடுத்தல்; உடற்பற்றுவிடல்.

தேகம் - உடல்: கமுகு.

தேகவியோகம் - சாவு.

தேகாத்மவாதம் - உடம்பே ஆன்மா என்று கூறும் சாரு வாக மதம்.

தேக்கு - ஒரு மரம்; கமுகு; தித் திப்பு: தெவிட்டு: நிறைவு: தேக் கென்னேவல்.

தேங்கல் - நிறைதல்; அச்சக் குறிப்பு; மிகுதல்; குலைதல்.

தேசம் - இடம்; உறைப்பு; கட் டளை; கூர்மை; நாடு; பங்கு; பிரபை.

தேசாந்தரம் - அயல்நாடு; பூமத் திய ரேகையின் தூர அளவு.

தேசாந்தரி - துறவி.

தேசி - எலுமிச்சை; ஓர் இரா கம்; பர தவுறுப்புள் ஒன்று; பெருங்குதிரை; அழகு; ஒளி ரும் அழகுள்ளவள்.

தேசிகன் - அரசன்; அழகன்; உபாத்தியாயன்; குரு; தேசாந் தரி; வணிகன்; வேதம் ஓது விப்போன்; வேதாந்ததேசிகன்

தேசிக்காய் - எலுமிச்சங்காய்.

தேசு - அழகு; உறைப்பு; ஒளி; காங்கை; கீர்த்தி: கூர்பலம்: பொன்; மகத்துவம்; மனக்கதி; மூளை; விந்து; வீரியம்; புகழ்.

தேடாமை - விசாரியாமை.

தேடுதல் - ஈட்டுதல்.

தேட்டம் - ஆராய்வு: கவலை; தேடுதல்; தேடிய பொருள்: பேரவா: விருப்பம்: சேகரிக்கப் பட்ட பொருள்.

தேதி - திகதி.

தேமல் - படர்சுணங்கு; ஒருவகை உடற்புள்ளி: மேகப் படை: சுணங்கு: தோலைப் பற்றி வரும் நோய்வகை: உத்தி; திதலை; துளாங்கு; பொறி; படர்தாமரை.

தேம்பல் - அழுகை: இளைத்தல்: தேய்தல்: பழம்பூ: மெலிதல்; வாடல்.

தேயு - தீ.

தேய்தல் - உறைதல், குறைதல், மெலிதல்.

தேய்த்தல் - அழித்தல், உரைத்தல். குறைத்தல், கொல்லல், துலக்கல்.

தேய்பிறை - அபரபக்கத்துத் திங்கள்.

தேய்மானம் - சிக்கனம், தேய்வு, பொன்னை உரைத்தலால் உண்டாகும் குறை, சோம்பல்

தேரர் - பௌத்தர், பௌத்த முனிவர்.

தேரை- தவளையினொருபேதம், தூண்டிலில் உணவு, தேங்காய் நோய், கல்லின் குன்றம்.

தேர் - இரதம், உரோகினி நாள், தேரென்னேவல்.

தேர்ச்சி - ஆராய்தல், எண்ணல், கல்வி, தெளிவு, பயிற்சி

தேர்ச் சில் - தேர் உருளை.

தேர்தல் - அறிதல், ஆராய்தல், சொல்லல், தெளிதல், உறுதி செய்தல்.

தேர்ந்தவன் - அறிஞன்.

தேர்முட்டி - கோவில் தேர் நிற்கும் இடம்.

தேர்வடம் - தேரிழுக்குங்கயிறு.

தேர்வு - ஆராய்வு, தெளிவு, பயிற்சி, தேர்ந்தெடுத்தல்.

தேவகோடி - ஒரு பெரிய எண்.

தேவசாட்சி - ஆணை, தெய்வ முன்னிலை.

தேவசேனாதிபதி - முருகக் கடவுள்.

தேவதேவன் - சிவன், நான்முகன், திருமால்.

தேவநாயகன் - கடவுள், தேவர் தலைவன்.

தேவநீதி - தெய்வ தண்டனை.

தேவபூமி - தேவலோகம்.

தேவயானம் - விமானம்.

தேவயானை - முருகன்தேவி, சுக்கிரன் மகள், இந்திரன் பட்டத்துயானை.

தேவரகசியம் - கடவுளர் மட்டும் அறிந்த செய்தி.

தேவர் - உயர்ந்தோர், தீக்கடவுள் முதலிய தேவர், அட்டவசுக்கள், திருவள்ளுவர், திருத்தக்க தேவர், அரசர், துறவிகள் முதலியோருடைய சிறப்புப் பெயர், மறவர் சாதியினர் பட்டப் பெயர், நான்முகன், திருமால் முதலிய தேவர்.

தேவனம் - அழகு, ஒளி, சூதாடு கருவி, தாமரை, துக்கம், துதி, தோழி, நந்தனவனம், பொழுது போக்கு, கோவில்

தேவன் - அகம்படியன், அரசன், அருகன் ஈட்டிக்காரன், கடவுள், கொழுந்தன், மடையன்.

தேவாரம் - சமயாச்சாரியார் மூவர் அருளிய பாடல்கள், பூசனை, திருகாராதனக் கடவுள்.

தேவி - அரசி, காளி, சீதேவியார், தலைவி, துர்க்கை, தேவப் பெண், பதுமினிப் பெண், பார்வதி மனைவி.

தேவை - வேண்டுந் தன்மை, இராமேசுரம், காரியம், நிர்ப்பந்தம், விருப்பம், அவசரம், அடிமைத்தனம்

தேள் - ஒருசெந்து, அனுடநாள், தெறுக்கால், விருச்சிகராசி.

தேறல் - கள், தங்கல், துணிதல், தேறுதல், தேன், உறுதி, கட்டெளிவு.

தேறாமை - தெளியாமை.

தேறு - தெளிவு, சுத்தம், தேறென்னேவல், தேற்றாமரம், உறுதி, மஞ்சள் முதலியவற்றின் தேறு, கொட்டுகை, துண்டு, நிச்சயம்.

தேறுதல் - அதிகப்படுதல், தங்கல், துணிதல், துன்பந் தீர்த்தல்,

தெளிதல், நம்புதல், உறுதி, விறைத்தல்.

தேறுநர் - கற்றோர், சேர்ந்தோர், நம்பினோர்.

தேற்றரவாளன் - திடப்படுத்துகிறவன், திடனுடையோன்.

தேற்றல் - அறிவித்தல், தீர்ந்தல், தேறப்பண்ணுதல்.

தேனுகம் - பெண் யானை.

தை

தை - ஓர் எழுத்து; ஒரு திங்கள்; தாளக்குறிப்பின் ஒன்று; தைக் கத்தக்கவை; தையென்னேவல்; பூசநாள்; மகரராசி; அலங்காரம்; மரக்கன்று.

தைத்தல் - அடைத்தல்; அறைதல்; கணக்குப் பூட்டுதல்; தையல் செய்தல்; படுதல்; பொருத்துதல்; முள்முதலியன ஊடுருவுதல்; மாலை தொடுத்தல்; அலங்கரித்தல்; பதித்தல்.

தையல் - கட்டழகு; தைப்பு; பெண்; தையல்: வேலை; அலங்காரத்துணி; புனையப்படுவது.

தைலம் - சத்து; காரம்; தயிலம்; எள்ளெண்ணெய்; கூட்டெண்ணெய்; ஆமணக்கெண்ணெய்.

தைலிகன் - வாணிபன்.

தொ

தொகுதல் - கூடுதல்; சுருங்குதல்; நெருங்குதல்; ஒன்றாதல்; அடுக்கிவருதல்; மொத்தமாதல்; ஒடுங்குதல்; வீணாதல்; குட்டையாதல்

தொகுதி - அளவு; கூட்டம்; பகுதி; வரிசை; சேர்க்கை; சாதி; மொத்த எண்.

தொகுத்தல் - அளவு படுத்தல்; ஒழுங்காக்குதல்; கூட்டல்; சம்பாதித்தல்; சுருக்குதல்; தொக்கு நிற்கச் செய்தல்.

தொகுத்துரை – பொழிப்புரை.

தொகுப்பு – தொகுத்தல்.

தொகை – கணக்கு வகை நான்கின் ஒன்று; கூட்டம்; சுருக்கம்: தொக்கு நிற்றல்; கூடுதல்.

தொங்கட்டான் – தொங்கலாயுள்ள அணிவகை; உடையைத் தளர்வாகக் கட்டுகை.

தொங்கல் – ஆண்மயிர்; ஆபரணக் கடைப்பூட்டு; காதணி; குதித்தல்; தங்கல்; தொங்குதல்; பீலி; பீலிக்குஞ்சம்; பீலிக்குடை; பூமாலை; மயிர்; மயில்தோகை; முந்தல்; முலைமூடும் உத்தரீயம்; முனை; வெண்குடை.

தொங்குதல் – குதித்தல்; தங்குதல்; தூங்குதல்; அண்டிக் கிடத்தல்: திடமாதல்; கிடைத்தல்; சாதல்; முடிவு பெறாது தாமதித்திருத்தல்; உதவியற்றிருத்தல்.

தொடக்கம் – ஆதி, செல்வம்; துவக்கம்; வருக்கம்.

தொடங்கல் – முயலல்.

தொடராமுறி – விடுதலைப் பத்திரம்.

தொடர் – கோவை; சங்கிலி; தொடரென்னேவல்; தொடர்பு; நூல்; பஞ்சிநூல்; பழைமை; பிசின்; பூமாலை; வாசம்; விலங்கு.

தொடர்ச்சி – உரிமை; ஒழுங்கு; தொடர்பு; பற்றுதல்; பூத்திரள்; முயற்சி; வழக்கு.

தொடர்பு – உறவு: ஒழுங்கு; நண்பு; சேர்மானம்; தொடர்ச்சி; பழைமை; பா; பாட்டு; முறைமை.

தொடர்வட்டி – வட்டிக்குவட்டி

தொடுதல் – அணிதல்; இணைந்திருத்தல்: உண்ணல்; எய்தல்; தீண்டல்; தொடங்கல்; தோண்டல்; பிடித்தல்.

தொடுத்தல் – அணிதல்; அறிமுகமாதல்; உருவாக்கல்; கட்டல்; கோத்தல்; செலுத்தல்; சேர்த்தல்; தொடங்கல்; பற்றல்; பாத்தொடுத்தல்; பிணைத்தல்; பொருத்தல்; வில்வளைத்தல்; வைத்தல்.

தொடுவாய் – ஆறுங் கடலுஞ் சேரும் இடம்.

தொடுவான் – அடிவானம்; பிணையடி மாடுகளைத் தொடுக்குங் கயிறு.

தொடை – அம்பு; உத்திரந் தாங்குங் கட்டை; செய்யுளைத் தொடுத்தல்; துடை; தொடர்ச்சி; நாணி; பூங்கொத்து; பூமாலை; மதில்; மாலை; வீணை முதலியவற்றின் நரம்பு; கட்டு

தொட்டால்சுருங்கி- ஒருவகைச் செடி; தொட்டால் வாடி.

தொட்டில் – சிறு கட்டில்; தொட்டி.

தொட்டு – தொடங்கி, பற்றயெனெச்சம், தோண்டி, தொடர்தல், தொடங்கி, செறிந்து, தோண்டுங் கருவி,

தொண்டு – அடிமை. ஒன்பது, ஒரு பூடு, பணி, பழைமை, கடவுள் வழிபாடு, ஒழுக்கங் கெட்டவன்(ள்) ஒடுக்கவழி, உருவு, சுருக்கு.

தொண்டை – ஆதொண்டைச் செடி, இனியகுரல், கொவ்வைச் செடி, பெருங்குரல், மிடறு, யானைத் துதிக்கை.

தொத்து – அடிமை, ஒட்டு. சார்பு, பழைமை, பூங்கொத்து, திரள், சம்பந்தம், பற்று, வைப்பாட்டி, தொத்துநோய்க் குணம்.

தொந்தரவு – வருத்தம்.

தொந்தி – சதைமடிப்பு, தொப்பை, பெருவயிறு, நோய் வகை.

தொப்பி - கள், குல்லா.

தொப்பை-தொந்தி, தோற்பை, கொப்புளம்.

தொய்தல் - இளகல், இளைத்தல், தளர்தல், துவளுதல், வளைதல், பயன் குறைதல்.

தொய்யப்போடுதல் - ஒரு பயனுக்காகக் காரியத்தைச் சிறிது தாழ்த்துதல்

தொய்யவிடுதல் - கயிறு முதலியவற்றைத் தளரவிடுதல், காரியத்தை நிறுத்தி வைத்தல், விலையேறுதற் பொருட்டு விலைப் பொருள்களை நிறுத்தி வைத்தல்.

தொய்யாது-உழாது, கெடாது.

தொய்வு - இளைப்பு, ஈளை, சுவாசமுட்டு, தொய்தல்.

தொலித்தல் - உரித்தல்.

தொலை - உவமை, எல்லை. துலை தூரம், தொலையென்னேவல.

தொலைதல்-ஒழிதல், கெடுதல், சாதல், நீங்குதல், முடிதல்.

தொலைதூரம் - தொலை வெட்டு, மிகுதூரம்.

தொலைத்தல் - அழித்தல், கொல்லல், நீககுதல், சிதைத்தல், கெட்டுப் போக்குதல், சேதப்படுத்தல், முற்றுப்பெறச் செய்தல்.

தொலைவு - அழிவு, தூரம், தோல்வி

தொல்லை - தொந்தரவு, பழைமை, துன்பம், செயல்.

தொழல் - தொழுதல்.

தொழுல் - அலுவல், செயல், தன்மை, வினைச்சொல், வேலை.

தொழில்முடக்கம் - தொழில் செயய மறுத்திருக்கை.

தொழிற்படுதல்-காரியப்படுதல்

தொழுகை - தொழுதல்.

தொழுதல் - கும்பிடுதல், வணங்கல்.

தொழுநோய் - குட்டநோய்.

தொழுவம் - தொழுவோம், பட்டி.

தொள்ளாயிரம் - ஒன்பது நூறு

தொனி - ஒலி, தொனியென்னே வல்.

தொனித்தல் - ஒலித்தல், குறிப் புப் பொருள் தோன்றுதல், சொல்லுதல்.

தொனிப்பு - ஒலி, கூச்சல்.

தொன்மரம் - ஆலமரம்.

தொன்மை - பழைமை, பாவின் எண்வகை வனப்பின் ஒன்று.

தொன்றுதொட்டு - அனாதி காலமாய்.

தொன்று - பழைமை, பழையது, ஊழ்.

தொன்னை-இலையாற் செய்த ஏனம்.

தோ

தோகை - இறகு, தொங்கல், பெண், பெண்மயிர், மயில், மயில் தோகை, முன்தானை, வால், கொய்சகம், ஆண்குறியின் நுனித் தோல்.

தோகையர் - பெண்கள்.

தோடு - அணை, இலை, ஓலை, காதணியின் ஒன்று, கூட்டம், பழத்தினோடு, வளையம்.

தோடை - குளஞ்சி மரம், ஆடா தோடை, கிச்சிலி வகை.

தோட்டம்-கொல்லை படப்பை, சோலை, துடவை.

தோணி - அம்பு, இரேவதிநாள், ஓடம், சிறுவழுதுணை சேறு, நீர், மதிலின் சித்திரம், மரக் கலம் மிதவை, நீர்த்தொட்டி.

தோண்டுதல் - அகழ்தல், குடை தல், முகத்தல், விவரம் விசா ரித்தல்.

தோம்பு - சிவப்பு, நில விவரக் கணக்கு.

தோயல் - கலத்தல், குளித்தல்.

தோய்தல் – உறைதல், கலத்தல், புணரல், முழுகல்.

தோய்த்தல் – ஆயுதங்களைக் காய்ச்சி நனைத்தல், உறையிடுதல், ஊறவைத்தல், துவைத்தல், நனைத்தல்.

தோரணம் – கோபுரவாயில், புடைவைத் தோரணம், மகரிகை, மாவிலை முதலியவற்றால் செய்யுந் தோரணம்: வாகனம், அலங்காரத் தொங்கல், அலங்கார வளைவுள்ள வாயில்.

தோரியம் – கூத்து, வாச்சியம்.

தோரை – இரத்தம், ஒரெண், ஒரு பனை, குளநெல், கை, சரமணிக்கோவை, மயில் விசிறி, விரலிறை, வெண்மை கலந்த சிவப்பு.

தோல் – அபசயம், அழகு, எண்வகை வனப்பினுள் ஒன்று, சருமம், துருத்தி, தோலென்னேவல், தோற்பரிசை, புறணி மூங்கில், யானை, பக்கரை, விதையின் மேற்றோல், உடம்பு.

தோழமை – நட்பு.

தோழன் – நண்பன்,

தோழி – பாங்கி.

தோள் – கை, புயம், தொளை, தோண்டுதல், மொய்ம்பு, வாகு.

தோற்கடித்தல் – புறங்காண்டல்

தோற்பு – தோல்வி.

தோற்றம் – உதயம், உயர்ச்சி; எண்ணம், ஏற்றமொழி, கணிப்பு, காட்சி, துலக்கம், துவக்கம், தோன்றுதல், பிரபலியம். பிறப்பு, புகழ்ச்சி, பலன், பொலிவு, மகன். முதன்மை, மூலம், மேன்மை, வார்த்தை, படைப்பு, தன்மை.

தோற்றல் – தோல்வி, தோறல், பிறத்தல், முளைத்தல், வீண் எண்ணம்.

தோற்றுதல் – உண்டாதல், பிறத்தல்.

தோன்றல்-ஆண்மகன், அரசன், பொழிப்புணர்ச்சியில் எழுத்துத் தோன்றல், தோற்றம், உயர்ச்சி, தலைவன், தமையன், தோன்று தல், பெருமையிற் சிறந்தோன், மகன், வெளிப்படல்.

தோன்றுதல் - பிறத்தல், முளைத்தல், விளங்குதல், வெளிப்படல்.

தௌவல் - இளம் பருவமானது, குந்தி நடத்தல், கெடுதல், கேடு.

ந

ந - இன்மைப் பொருள், எதிர் மறைப்பொருள், பிறிதின் பொருள் இவற்றைக் காட்டு மோர் உபசருக்கம், ஓர்எழுத்து, மிகுதிப் பொருள் உணர்த்தும் இடைச்சொல்.

நகச்சுற்று- நகக்கண்ணில் வரும் ஒரு நோய்.

நகட்டுதல் - அரைத்தல், நகரச் செய்தல், இடம் விட்டுப் பெயரச் செய்தல், காலந் தாழ்த்து தல், ஆவலுடன் உண்டுவிடுதல்

நகம் - உகிர், நாகணம், பங்கு, பூமி, மரம், மலை, அடிக்குளம்பு.

நகரம் - ந என்னும் எழுத்து, பட்டணம், மருதநிலத்தூர், பேரூர், அரண்மனை, கோயில், வாழிடம்.

நகரை - ஒருவகை மரம், ஒரு வகை அரிசி.

நகர் - கோயில், நகரம், நகரென் னேவல், மருதநிலத்தூர், வீடு.

நகுலம் - கீரி, விலங்குவ்கை.

நகை - அணிகலம், இகழ்ச்சி, இகழ்ச்சி மகிழ்ச்சி, தோன்றக் கூறும் அறங்காரம், இன்பம், எயிறு, ஒளி, களிப்பு, சிரிப்பு, நகையென்னேவல், பல், பூ, மொட்டு, மலர்ச்சி.

நகைச்சொல் - நகைத்துப்பேசுதல், பரிகாசம் பேசுதல்.
நகைப்பு - சிரிப்பு, பரிகாசம்.
நக்கல் - நால்வகை உணவில் ஒன்று, சோறு, எச்சில், உண்டல், தீண்டுகை, சிரிப்பு, பரிகாசம், ஒளி.
நங்கூரம் - மரக்கலத்தை நிறுத்தி வைக்கும் கருவி.
நசியம் - மூக்கிலிடும் மருந்து.
நகை - அன்பு, ஆசை, ஈரம், ஒழுக்கம், குற்றம், பரிகாசம், விருப்பம்.
நச்சு - ஆசை, சிறுமை, தொனுப்பு, நச்சென்னேவல், தொந்தரை, அலப்பல், அலட்டு, நஞ்சு.
நச்சுச்சொல் - தீச்சொல்.
நச்சுப்பிச்சு - ஓயாத்தொந்தரவு
நச்சுவிறகு - கள்ளி, எருக்குமுதலிய நஞ்சுச் சாரமுள்ள விறகுகள்.
நஞ்சன் - தீயவன்.
நஞ்சு - தீமை, நஞ்சுக்கொடி, விடம், தீயது.
நடத்தல் - இயற்றுதல், காரியம் பலித்து வருதல், சம்பவித்தல், செலுத்தல், செல்லுதல் போகல்.
நடத்தை - ஒழுக்கம், நடக்கை, செல்வாக்கு, சுபாவம்.
நடப்பு - சலுகை, நடக்கை, போக்கு வரவு, தீய காமத் தொடர்பு, தற்காலம், செல்வாக்கு, செல்லுதற்குரிய இடம்
நடவு - நடவுதல், நடவென்னேவல், நாற்று நடுகை.
நடனசாலை- கூத்துப்பயிலிடம்
நடித்தல் - கூத்தாடுதல், நாகரிகம் பண்ணுதல்.
நடிப்பு - கூத்து, நாகரிகம்.
நடு - அரை, இரை, ஊடு, தொழில், நடுவென்னேவல், நீதி,

பி, மிதம், மையம், வானத்தின் ...சி, இடுப்பு, நடுநிலை.

...க்கம் - அச்சம்.

...டுச்சாமம் - பாதியிரவு.

...டுச்செல்வம் - இடையில் வந்த செல்வம்.

...டுச் சொல்லுதல் - நியாயஞ் சொல்லுதல், சான்று கூறுதல்.

...டுதல் - நாட்டல்.

...டுநிலை - நீதி.

...டுவன் - நமன், நியாயாதிபதி, நடுநிலைமையுடையோன்.

...டை - ஒழுக்கம், கூத்து, செலவு செல்வம், தொடர்பு, நடத்தை, பழக்கம், முறை, வழக்கம், வழி, வாயிற்கடை, கோயில், நீண்டநாள்.

...ட்டம் - அம்மணம், அழிவு, கலைஞானம் அறுபத்துநான்கில் ஒன்று, கூத்து, கேடு, நட்டோம்.

...ட்டாமுட்டி-ஒருநூல், கீழ்மை, ...டுத்தரம், வெறுவிலி, வஞ்சகம்.

...ட்டாறு - நடு ஆறு.

...ட்பு - நண்பு, சுற்றம், கேள், தொடர்பு, நண்பன். யாழின் நான்காம் நரம்பு, கேண்மை, காதல்.

...ணுகுதல் - இணைதல், கிட்டல், சார்தல்.

...ண்பகல் - நடுப்பகல்.

...ண்பன் - குறிஞ்சிநிலத் தலைவன், தோழன், கணவன்.

...ண்பு - நட்பு, உறவு.

...தி - ஆறு, வணக்கம்.

நத்தாசை - பேராசை.

நத்து - ஓர் அணிகலம், ஒரு பறவை, சங்கு, நத்தெென்னேவல், மூக்கணி.

நத்தை - ஒரு பூண்டு, கடுகு, கருநத்து.

நந்தவனம் - நந்தனவனம்.

நந்தி – அட்டாதசஉபபுராணத்தொன்று, இடப இராசி, எருது, ஓர் அரசன், ஒரு மலை, சிவன், சிறு பறை, செக்கான், நந்திதேவன், நாகம்,

நபி – முகமது, தீர்க்கதரிசி.

நம – வணக்கம்.

நமசம் – இணக்கம்.

நமன் – இயமன், சுற்றத்தான், நம்மவன்.

நம்பல் – ஆசைப்பெருக்கம், நம்புதல், விசுவாசித்தல், விரும்பல்.

நம்பிக்கைத் துரோகம் – இரண்டகம்.

நம்பிரான் – கடவுள், தலைவன்

நம்புதல் – நம்பல்.

நயத்தல் – அதிகப்படல், ஆசைப்பெருக்கம், சிறத்தல், சினேகித்தல், நன்மைப்படல், பலன்படல், பின்செல்லுதல், மதித்தல், மலிவாதல், விரும்பல், அன்பு செய்தல், நீதி செய்தல்.

நயத்தவிலை – மலிந்தவிலை.

நயம் - அதிகம், அருள், அ... சாட்சி, இலாபம், இன்பம், சரி, நடத்தம், நன்மை, நீதி, பலன், மலிவு, மிகுதி, மேன்மை, பக்தி, அன்பு, பயன், நுண்மை

நரம்பு – இலை முதலியவற்றில் நரம்பு, தந்தி, நாடி, நாணி, நார், வில்நாண், தசைநார், இரத்தக்குழாய், யாழ் நரம்பு

நரர் – மனிதர்,

நரலோகம் - மண்ணுலகம்.

நரன் – அருச்சுனன், மனிதன், இருடி, இயக்கன்.

நரித்தலை – முழங்கால் மூட்டு

நரிப்பு – வியப்பு, இகழ்வு, நரு... கம், நரித்தன்மை.

நரியன் – கள்ளத்தனம் உள்ளவன், சூதன்.

நரை - வெளுத்தமயிர், இடப இராசி, கருமைகலந்த வெண்மை, சுரை, சாமரை, சிரை, நரை யென்னேவல், நாரை, வெண்மை, மூப்பு, வெள்ளைக் குதிரை.

நரைத்தல் - வெளுத்தல்.

நரையன் - ஒரு பருந்து, நரை நிறம் உள்ளது, வல்லூறு.

நலக்குதல் - அழுக்காக்குதல், கசங்கச் செய்தல்.

நலதம்பு - வேம்பு.

நலப்பு - நன்மை.

நலம் - அழகு, இன்பம், உபகா ரம், உயர்வு, கண்ணோட்டம், சுக்கு, நன்மை, பயன், விருப்பம், புகழ், செம்மைநிறம், எருத்து விதை.

நலிதல் - சரிதல், தவறுதல், மெலிதல், வருந்தல், அழிதல், தோற்றல், உச்சாரணத்தில் ஓசை நடுநிலையாதல்.

நலிவு - அழிவு, மெலிவு, வருத் தம்.

நல்லது - செம்மை, நன்மையா னது.

நல்லது பொல்லாதது - நன்மை தீமை, சுபாசுப காரியங்கள்.

நல்லவர் - அறிஞர், நண்பர், பிறருக்குத் தீமை செய்யாதவர், நல்லோர், பெண்கள்.

நல்லவை - மேன்மையானவை.

நல்லறம் - நல்வாழ்க்கை; மேன் மையான தருமம்; சமய தருமம்; நல்லொழுக்கம்.

நல்லாப்பு - நன்மை.

நல்வினை - இரு வினைகளில் நன்மையைச் செய்யும் வினை.

நவக்கிரகம் - ஒன்பது கோள்கள்

நவநிதி - கச்சபநிதி; கற்பநிதி; சங்கநிதி; பதுமநிதி; மகாநிதி; மகாபதுமநிதி; முகுந்தநிதி; நந்த நிதி; நீலநிதி ஆகிய ஒன்பது வகைப்பட்ட குபேரநிதி,

நவம் – ஒன்பது: கார்காலம்; கேண்மை; சாரணை; நண்பு; புதுமை; பூமி.

நவலோகம் – பொன்; இரும்பு; செம்பு; ஈயம்; வெள்ளி: பித்தளை; தரா; துத்தநாகம்; வெண்கலம்.

நவிலல் – சொல்லுதல்; கற்றல்; பெரிது ஒலித்தல்; செய்தல்; தாங்குதல்: பழகுதல்; விரும்புதல்; குறித்தல்; மிகுதல்.

நவீனம் - புதுமை.

நவைத்தல் – கொல்லுதல்.

நழுவர் - வழுவுதல்; விலகல்; பிடிகொடாதுபேசுகை; மறைந்து செல்லுகை.

நள – ஐந்தாவது ஆண்டு

நளினம் – இங்கிதம், தாமரை; நிந்தை; நீர்; நீலம்; பரிகாசம்; நயச்சொல்.

நள்ளுதல் - நட்புக்கொள்ளுதல், செறிதல், விரும்புதல்

நறுக்குதல் – துண்டித்தல், நொறுக்குதல், வெட்டுதல்.

நற்றிறம் – நீதிநெறி, நோன்பு.

நன்கு – அழகு, இலாபம், நன்மை, மிகுதி.

நன்குணர்தல் – கற்றறிதல்.

நன்கொடை – உதவிப்பொருள்

நன்சொல் – இன்சொல்.

நன்மார்க்கம் – நல்வழி.

நன்மை - அதிட்டம், உதவி, நன்கு, பயன், நலம், மேம்பாடு, அழகு, சிறப்பு, ஆக்கம், நல்வினை, மிகுதி, புதுமை.

நன்றி – நன்மை

நன்றிகேடு. நன்றியீனம் – செய்நன்றி மறக்கை.

நன்று – சுகம், நல்லது, நன்மை, பெருமை, வாழ்வு, சிறப்பு, பெரிது, அறம், இன்பம், நல்வினை.

நன்னாரி - பாற்கொடி.

நன்னிறம் - வெண்மை.

நன்னூல் - பவணந்தி முனிவர் செய்த இலக்கணநூல், அறிவு நூல், நல்லநூல்.

நா

நா - அயலார், அயல், சுவாலை, திறப்பு, மணி முதலியவற்றின் நாக்கு, நடுநாக்கு, பொலிவு, துலைநா பூட்டின் தாள், நாத சுரத்தின் ஊதுவாய்.

நாகசாபம் - நல்ல பாம்பைக் கொல்வதால் ஏற்படும் பழி வினை.

நாகதாளி - ஒருவகை மரம்.

நாகபடம் - ஒருவகைக் காதணி, பாம்பின் படம்.

நாகமாதா - துளசி.

நாகம் - வான், மேகம், நல்ல பாம்பு, நாகலோகம், நாவல், புன்னை, மலை, துத்தநாகம், குரங்கு, ஈயம், ஒலி, ஒருகரணம், கந்தகம், தேவலோகம், நற்புடவை, நாகப் பச்சை

நாகரீகம் - கண்ணோட்டம், பிலுக்கு, நகரவொழுக்கம் மரியாதை, நகரசம்பந்தமான செப்பம்.

நாகரீகர் - நகரத்தார், சதுரர், கண்ணோட்டமுள்ளவர், காமுகர், ரசிகர்.

நாகலோகம் - கீழ்ஏழ் உலகின் ஒன்று, தேவலோகம்.

நாகன் - பத்து வாயுக்களுள் ஒன்று

நாக்குறுதி - சொல்வன்மை.

நாங்கள் - நாம்.

நாசகாலம் - அழிவு காலம்.

நாசம் - அழிவு, மரணம், விடுதல்

நாசி - சலதாரையின் வாய், மூக்கு, மூக்குத்துளை, மாளிகையின் மேலுள்ள ஓர் உறுப்பு, கதவு

நிலையின் மேல் சட்டம், இசைக் குற்றவகை.

நாசிகாபீடம் - மூக்குள் வளரும் சதை வகை.

நாடகத்தமிழ் - முத்தமிழில் கூத்துப் பற்றி வழங்கும் தமிழ் இலக்கியப் பகுதி.

நாடகம் - கதை நடிப்பு, நாடகத் தமிழ்.

நாடி - தாது, ஆண்மயிர், இருபத்து நான்கு நிமிடங் கொண்டது, இலை நரம்பு, உட்டுளை, தாடி, துவாளிப்பு, நரம்பு, நாசி, நாழிகை, பூவிற்றாள், மூக்கு, யாழ் நரம்பு, நாட்டிலுள்ளவள், இரத்தக்குழாய், சுவாசக்குழாய், மோவாய்.

நாடு - இடம், உலகம், ஊர், நாடென்னேவல், பக்கம், பூமி.

நாடுதல் - தேடுதல், விசாரித்தல், விரும்புதல், ஆராய்தல், தெரிதல், அளத்தல், கிட்டுதல், மோப்பம் பிடித்தல், நினைத்தல்.

நாட்கூலி - அற்றைக்கூலி.

நாட்கூறு - முற்பகல்.

நாட்செலவு - நாள் கழிகை, அன்றாடம் செலவாகும் பணச் செலவு.

நாட்டம் - அசைவு, ஒருபண், கண், நோக்கம், வாள், விருப்பம், பார்வை, ஆராய்ச்சி, சோதிடநூல், அழகு, ஐயம், நிலைநிறுத்துகை.

நாட்டாண்மை - ஊரதிகாரம், காரிய நிர்வாக சக்தி.

நாட்டுக்குற்றம் - ஊருக்குத் தீது செய்வன, அவை, கள்வர், கிள்ளை, தன்னரசு, தொட்டியார், நட்டம், பன்றி, பெருமழை, மிகுகாற்று, யானை, விட்டில், வேற்றரசு என்பன.

நாட்டுச்சிறப்பு - நாட்டுவளம்.

நாட்டுதல் - நிலைநிறுத்துதல்.

ாட்டுப்புறம் – பட்டிக்காடு.

ாட்டுப்பெண் – மருமகள்.

ாட் பொருத்தம் – நட்சத்திரப் பொருத்தம், செய்யுள் பொருத்தம்.

ாணம் – அச்சம், அடக்கம், மதிப்பு, வெட்கம், பயபக்தி, மானம், தணிகை.

ாணயம் – உண்மை, உயர்வு, ரோசம், கட்டுப்பாடு, காசு, தானம், நேர்மை, வழக்கம், ாக்குப் பிசகாமை, முத்திரை ிடப்பட்ட காசு, இயற்கை கழ்ச்சி, விலங்கின் மூக்கிலிடுங் யிறு.

ாணையம் – நாணயம்.

ாதம் – அப்பிரகம், இந்திரியம், லி, நாணயக்கயிறு, பாதிவட்ட ான மந்திர லிபி. வாச்சிய ைசை, இசைப்பாட்டு, சோணி ம், தலைவணையுடைமை.

ாதரூபம் – சிவன் வடிவத்தில் ஒன்று.

ாதன் – அரசன், அருகன், எப்பொருட்கும் இறைவன், கடவுள், ஆசிரியன், கணவன், குரு, சிவன், தலைவன், முனிவன், மூத்தோன்.

நாதாந்தம் – ஞானநெறிகளில் ஒன்று, பஞ்ச கருத்தாவில் ஒருவன்.

நாமகீர்த்தனம் – கடவுள் திருப்பெயர் ஓதுகை.

நாமகள் – கலைமகள்.

நாமம் – அச்சம், வியப்பு, இணக்கம், ஐயம், சினம், உறுதி, நிந்தை, நினைப்பு, மாய்மாலம் இவைகளைக் காட்டுஞ் சொல், புகழ், தும்பை, நிறைகோலின் நடு, பெயர், வைணவர் இடும் நாமம், பாசி.

நாம் – அச்சம், பால்பகா உயர்திணைத் தன்மைப் பன்மை.

நாம்பன் – இளவெருது.

நாயகன் – தலைவன், கணவன், தந்தை, அரசன், எப்பொருட்கும் இறைவன், சிவன், நடத்துவோன், பாளையக்காரன், கதா நாயகன்.

நாயகி-பெருமையிற் சிறந்தவள், மனைவி.

நாயக்கன் – படைத்தலைவன், ஒரு சாதியான், வடுகருள் ஒரு சாரார், சாதிப்பெயர், வன்னியர், வேடர், இருளர் முதலிய தமிழ்ச் சாதியரின் பெயர்.

நாயன்மார் – கடவுளர், கடவுள் தன்மையுடையவர், தலைவர், துறவோர், பெருமையிற் சிறந்தோர்.

நாயிறு – ஞாயிற்றுக்கிழமை, கதிரவன்.

நாயுருவி – ஒரு பூண்டு.

நாயோட்டம் – குதிரை நடையில் ஒன்று.

நாய் – ஞமலி, சூதாடுகருவி, தென்மேற்றிசைப் பாலன் குறி.

நாய்க்குணம் – முரட்டுத்தனம், இழிகுணம்.

நாரணன் – திருமால்.

நாராசம் – அம்பு, இருப்பாணி, எழுத்தாணி, சலாகை, விட்டம்.

நாராயணன்- திங்கள், திருமால், வருணன்.

நாரி – இடை, ஒரு பண், கள், படை, தேன், நன்னாரி, வில்லின் நாண், பன்னாடை, பார்வதி. வாசனை, பெண், யாழ் நரம்பு, இடுப்பு, சேனை.

நாரை – ஒரு பறவை.

நார் – அன்பு, கயிறு, கல்நார், தும்பு, மட்டை முதலியவற்றின் நார்.

நால் – நாலென்னேவல், நான்கு

நாவடக்கம் – மௌனம்.

நாவலர் – கற்றவர், புலவர், அமைச்சர், பார்ப்பார்.

நாவல் - இரக்கக் குறிப்பு, ஒரு மரம், நாவலந்தீவு, வெற்றியொலி, துன்பக் குறிப்பு, புதுமைக் கதை, நெற்போரிடுவோர் மகிழ்ச்சியினால் இடும் ஒலி.

நாவாய் - மரக்கலம்.

நாவிதன் - மயிர் வினைஞர்.

நாவிலை - வெற்றிலை.

நாளி - உட்டுளைப் பொருள், ஒரு படி. கொத்து, நாளிகை. பூரட்டாதி நாள்.

நாளிகை - உத்திரட்டாதி, விநாடி அறுபது கொண்டது.

நாளறுதி - நாள் முற்றும்

நாளம் - உட்டுளை, நாள், பூந்தண்டு, பொன்னரிதாரம், வட்டம்,

நாளோலை - பிறந்தநாள்.

நாள் - இராப் பகல் கொண்ட பொழுது, காலம், நன்முகூர்த்தம், பெருநாள், நட்சத்திரம், திதி.

நாள்வழிக் கணக்கு - தினசரிக் கணக்கு.

நாறல் - நாறுதல், பதனழிதல்,

நாறுதல் - மணத்தல், முளைத்தல், உண்டாதல், துர்நாற்றம் வீசுதல், தோன்றுதல், பிறத்தல்.

நாற்கதி - தேவர், நரகர். மனிதர், விலங்கு

நாற்றம் - கள், கெந்தகம், தோன்றுதல், வசம்பு, வாசனை

நானிலம் - பூமி.

நான் - யான்.

நான்முகன் - அருகன், பிரமன்.

நி

நி - இன்மை, அன்மை. அதிகம். சமீபம், நிறைவு, உறுதி. ஐயம், வன்மை, விருப்பம் முதலிய பொருள்களை உணர்த்தும் ஒரு வடமொழி இடைச் சொல், ஓர் எழுத்து.

நிகரிடுதல் - ஒப்பிடுதல்.

நிகர் - உவமை, சமானம், நிச ரென்னேவல், ஒளி, போர்.

நிகர்த்தல் - ஒத்தல், மாறுபடு தல், விளங்குதல்.

நிகழ்ச்சி - ஒளி, சம்பவம், நிலைமை, காரியம், தற்காலம்.

நிகழ்தல் - ஒளி செய்தல், நடத் தல், நிறைவேறல்.

நிகழ்வு - தொழில் நடக்கை,

நிக்கிரகித்தல் - கொல்லல், தண்டித்தல், பந்தித்தல்.

நிசம் - உண்மை, சொந்தம் நாணயம், நித்தியம், மெய்.

நிச்சயம் - உறுதி, தீர்ப்பு, நிய மம், மெய்.

நிச்சயார்த்தம் - மெய்ப்பொருள்.

நிச்சிந்தன் -அருகன், எண்ணப் அற்றவன், கடவுள்,

நிட்டூரம் - இடையூறு; கொடுமை

நிட்டூரி - கொடியவன்.

நிட்டை - அழிவு, இக்கட்டு உறுதி, சாதகம், நம்பிக்கை நன்னடை, முடிவு, வாழ்நாள்

நிதனம் - அழிவு, வறுமை தோற்றப்படாமை, மரணம்

நிதரிசனம் - கண்கூடு.

நிதார்த்தம் -உண்மை, நிசார்த் தம், நீதி, யதார்த்தம்;இயல்பு

நிதானம் - ஆதிகாரணம், சமம் சரி, சார்பு, சுத்தம், நிச்சயம் படை, பிரமாணம், மதிப்பு மெய், சாவதானம்.

நிதி - பொன் திரள், பொன் நிறைவு, பொருள், செல்வம்

நிதியம் - திரவியக் குவிய மணிப்பொது.

நித்தியத்துவம் - அழிவின்மை

நித்தியமுத்தன் - கடவுள்.

நித்தியன் - கடவுள், அழி விலான்.

நித்தியானந்தம் - வீடுபேறு.

நித்தியானந்தன் - கடவுள்.

நித்திரை – உறக்கம்.

நிந்தித்தல் – இகழ்தல்.

நிபந்தம் – கடமை.

நிபந்தனம் – கட்டுதல், கட்டுப் படுதல், காரணம், பல நூல்க ளில் இருந்து திரட்டின நூல், வீணையின் வலிக்கட்டு.

நிபந்தனை - உறுதி, ஏற்பாடு, கடமை, கட்டுப்பாடு, குண்டு, தண்டனை.

நிபுணர் – முழு ஆற்றலுடை யோர்.

நிமித்தம் – அடையாளம், கார ணம், பொருட்டு, சகுனம்.

நிமிர்தல் – உயர்தல், ஓடல், சோறு, நெருங்கல், மேட்டிமை, கொள்ளல், வளர்தல், விளைவு, மாறுதல்.

நிமிர்த்தல் – உயர்த்துதல்.

நிமிர்வு – நிமிர்தல்.

நிம்பகம் – வேம்பு.

நிம்பம் – வேம்பு.

நிம்மதி – மன அமைதி.

நியதி - ஊழ், செய்கடன், தத் துவம்.

நியமம் - செய்கடன், அட்ட யோகத்தொன்று, அவை தத்துவ நூலோர்தல், தவம், தூய்மை, தெய்வம் வழிபடல், மனம் உவந் திருத்தல், இடம், இணக்கம், கடை, வழக்கம், தெரு, நிச்சயம், நிருபம், நெடுந்தெரு, நேர்த்தி, முறைமை, விதி, வரையறுக்கை.

நியமனம் – கட்டளை, முறை, வகைப்படுத்துகை, அமைவு.

நியாயம் – இடம், கட்டுப்பாடு, சரி, சன்மார்க்கம், தருக்க நூல். தருக்கம், நடு, நீதி, போக்கு, மூலம், வழக்கு, வாய்மை; நன் நெறி, சட்டம்.

நியாயவான் – நீதித்தலைவன்.

நியோகம் - கட்டளை, தத்துவம், தொழில்.

நிரஞ்சனன்-அருகன், கடவுள். வியாபி.

நிரத்தல் - கலத்தல், நிறைதல், விரவுதல், நிரல்படக்கோத்தல், பரவுதல், நிரம்பல், வரிசையாய் நிற்றல்.

நிரந்தரம் - இடையின்மை, முடிவற்று எப்பொழுதும் இருக்கை, நெருக்கம். மந்தி, மறைவு. வெளி, இடைவிடாமை, அழிவு, சராசரி

நிரந்தரன் - கடவுள்.

நிரப்பு - குறைபாடு, வறுமை, நிரப்பென்னேவல், நிறைகுடத்தைச் சூழப்போடும்நெல், நிறைத்தல், நிறைவு, நாழி, மிடிமை, சமதளம்.

நிரப்புதல் - நிறைத்தல், பரப்புதல்.

நிரம்பல் - நிறைதல்.

நிரம்புதல் - நிறைதல், மிகுதல், முடிவுறுதல், பருவமடைதல், முதிர்தல்.

நிரல் - ஒழுங்கு, வரிசை.

நிராகரித்தல் - மறுத்தல், எறிதல், தள்ளுதல்,

நிராகரிப்பு - மறுப்பு.

நிராசாரம் - ஒழுக்கமின்மை. துர்க்குணம்

நிராசை - விருப்பமின்மை.

நிரியாணம் - சாவு, பிறவி நீங்கல், யானைக் கடைக்கண்.

நிருணயம் - ஆராய்வு, தீர்ப்பு, உறுதி.

நிருபம் - எழுதியனுப்புங் கட்டளை, காகிதம், தீர்மானம், நியமம். கடிதம்.

நிருவாகம் - உண்மை, சீர், செவ்வை, நிலைமை, பராமரிப்பு, முடிவு.

நிரூபித்தல் - ஆராய்தல், நிதானித்தல்.

நிரை - ஒழுங்கு, ஒரு விளையாட்டு, நிரையசை, நிரையென்னேவல், பசு, பசுக்கூட்டம், பசுப்பொது, படைமுன்னணி, படை வகுப்பு.

நிரைதல் - ஒழுங்கு, நிரவுதல், நிரப்புதல், ஒழுங்காக்குதல், நிரையாக்கல், முடைதல், வரிசையாதல், திரளாதல்

நிர்ணயித்தல் - உறுதி செய்தல்

நிர்மூலம் - முழுக்கேடு.

நிர்வாகம் - பொறுப்பு, பராமரிப்பு, மேற்பார்வை, நடப்பிக்கை, பொருள் கொள்ளும் முறை, முடிவு, உறுதி, நிலைமை.

நிர்விகற்பம் - வேறுபாடின்மை, சந்தேகமின்மை.

நிலம் - இடம், கன்னி, தேசம்.

நிலவலயம் - பூமி.

நிலவறை - நிலக்குகை.

நிலவு - ஒளி, திங்கள் ஒளி, திங்கள், நிலவென்னேவல்.

நிலா - நிலவு.

நிலாமுற்றம் - நிலாக்காலத்தில் உலாவுவதற்கு அமைத்தவிடம்.

நிலுவை - இறுத்து மிஞ்சின தொகை.

நிலை - ஆபரணத்தில் தொங்கணி; இடம்; உலகம்; உறுதி: கதவு நிலை: குணம்; சாலை; தொழில்; நிலைக்கல்; நிலைபரம்; நிலைபேறு; நிலப்பரப்பு; நிலையென்னேவல்; நிற்குந்துணை; நேரம்; பரப்பு; பூமி; பொழுது; மார்க்கம்; முறைமை;

நிலைக்களம் - நின்றவிடம்.

நிலைக்குடி - ஊரில் இருக்கும் பழைய குடி.

நிலைத்தல் - நிலைபெறுதல்.

நிலைநிறுத்துதல் - உறுதியாக்குதல்.

நிலைபேறு - அசையாமை;

உறுதி; தூண்; நிச்சயம்: மானம்; மோட்சம்; நிலைப்பிடம்.

நிலைப்பாடு - உறுதிப்பாடு.

நிலைப்பு - உறுதி: திரங்கொள்ளுதல்; தொடர்ந்தேற்றி: நிலை: மாறாமை; முயற்சி.

நிலைமை - இயல்பு: உறுதி; குணம்; நிலை; மெய்; திதி; திண்மை; புகழ்.

நிலைமொழி - பதப்புணர்ச்சிக்கண் முதல் நிற்கும் மொழி

நிலையகம் - இருப்பிடம்; மனை.

நிலையம் - இருப்பிடம்; இலக்கு: குறித்தவிடம்; கூத்து: தேவர் கோயில்; பூமி; மருதநிலத்தூர்; வீடு.

நிலையாமை - அநித்தியம்; உறுதியின்மை.

நிலையுடைமை - உறுதி.

நிலைவரம் - நிலைபரம்; உறுதி;

நில்லாமை - உறுதிப்படாமை; தவறுதல்.

நிவர்தல் - உயர்தல்.

நிவாரணம் - தடை நீங்கல்; விடுதல்: நட்டஈடு.

நிவிர்த்தி - ஒழிப்பு; துறவு: விடுதலை; நிவாரணம், போக்கு.

நிவேசம் - உடுப்பு: உட்படுதல்; ஒப்புவித்தல்; கலியாணம்: பாளையம்: பெரியோர் உறைவிடம்; வீடு.

நிவேதனம் - ஒப்புவித்தல்; கொடுத்தல்: பேசுதல்; கடவுளுக்குப் படைக்கும் அமுது.

நிழல் - காற்று: கிருபை; குளிர்; சாயை; செல்வம்; தஞ்சம்; துன்பம்; தோற்றம்; நிழலென்னேவல்; நீதி; விம்பம்.

நிறத்தல் - நிறங்கொள்ளுதல்; நிறம் முற்றுதல்; சோபித்தல்; பயனளித்தல்.

நிறம் - ஒளி; குணம்; சரீரம்; மார்பு; வண்ணம்; வர்ணம்; சாயம்; இயல்பு; இசை; நடு விடம்; உயர்நிலை; தோல்.

நிறுத்துதல் - ஆட்படுத்துதல்; நாட்டுதல்; நியமித்தல்; நிலைப் படுத்தல்: நிற்கச் செய்தல்.

நிறுவனம் - தாபனம்; அமைப்பு.

நிறுவுதல் - நிறுத்தல்; உருவாக் கல்.

நிறை - அழிவின்மை; இடை; உறுதிப்பாடு; கற்பு; துலாராசி; நியாயம்; நிறுத்தல் அளவு; நிறையென்னேவல்; நிறைவு; நீர்ச்சால்; நூறுபலம்; மாட் சிமை: வரையறை.

நிறைகுடம் - பூரண கும்பம்.

நிறைகோல் - தராசுக்கோல்.

நிறைதல் - குறைவறல்.

நிறைமொழி - உறுதிச்சொல்; பெரியோர் வாக்கு.

நிறையறிகருவி - தராசு.

நிறைவு - முழுமை; மாட்சிமை; திருப்தி; மகிழ்ச்சி; மோட்சம்.

நிறைவேற்றம் - முடிப்பு.

நினைவு - எண்ணம், கருத்து, நினைப்பு, நோக்கம்.

நினைவு கூர்தல் - ஞாபகங் கொள்ளுதல்.

நினைவுகேடு - மறதி.

நீ

நீக்கம் - நீக்கல், நீளம், பிரிவு.

நீக்கல் - அகற்றல், கொல்லல், நீக்கம், நீளல், மாறுபாடு, மாற்றம்.

நீக்குதல் - அகற்றுதல், கழித் தல், குலைக்குதல், நீத்தல், பிரித்தல்.

நீங்கல் - பிரிதல்.

நீங்கள் - முன்னிலைப் பன்மைப் பெயர்.

நீங்காமை - பிரியாமை.
நீசத்தனம் - இழிதன்மை.
நீசம் - ஈனம், உச்சத்திற்குஏழாமிடம், கொடுமை, இழிவு, தாழ்ச்சி, மஞ்சள்.
நீச்சல் - ஆழம், நீந்தல்.
நீடிப்பு - நீடித்தல்.
நீடு - நெடுங்காலம், நீண்ட காலம், நெடுந்தொலை, சிறப்பு, உயர்வு, பெருமை.
நீடுழி. நீடுழிகாலம் - மிகப்பல காலம்.
நீட்டித்தல் - தாமதித்தல், நெடும்பொழுது செல்லல்.
நீதவான் - நீதித்தலைவன்.
நீதி - நியாயம், முறைமை, மெய்.
நீதிநெறி - சன்மார்க்க முறை.
நீதிபரன் - அரசன், கடவுள், நீதியினின்றுந் தவறாதவன்
நீதியற்றவன் - அநியாயக்காரன்
நீத்தல் - பிரிதல், துறத்தல், தள்ளுதல், வெறுத்தல்.
நீரகம் - கடல் சூழ்ந்த இடம், பூமி.
நீரரண் - நான்குஅரணில் ஒன்று.
நீராஞ்சனம் - ஆலாத்தி.
நீராட்டுதல் - முழுக்காட்டுதல்.
நீராம்பல் - ஆம்பல்.
நீராவி - கேணி, புகை, தடாகம்
நீராளம் - நீர்த்தன்மை, நீர் மிகுதி, நீருடன் கலந்த உணவு
நீர் - கடல், குணம், சாறு, தன்மை, நீரென்னேவல். நீவிர், புனல், அட்டமூர்த்தத் தொன்று, பஞ்சபூதத்தொன்று, பூராட நாள்.
நீர்க்கோப்பு - சலதோசம்.
நீர்த்தாரை - சலதாரை, ஆண் குறி.
நீர்ப்பாடு - விடக்கிராணி, நீரிழிவு, நீர்க்துறைவு.

நீர்மை - ஒப்புரவு, குணம், நிலைபரம், சிறந்த குளம், நீரின் தன்மை, அழகு, ஒளி.

நீலகண்டம் - மயில்.

நீலகண்டன் - சிவன், திருநீல கண்டநாயனார்.

நீலமணி - கண்ணில் உள்ள கரு மணி, மரகதமணி.

நீலம் - இருள், ஒரு நிறம், கருங் குவளை, காற்று, நஞ்சு, நவம ணியில் ஒன்று, நீலக்கட்டி, துரிசு, கண்ணிலிடும் மை.

நீளம் - தாமதம், தொலை, நெடுமை.

நீள் - உயரம், ஒளி, நீளம், நீளென்னேவல்.

நீறணிந்தோன் - சிவன்.

நீறு - சாம்பர், சுண்ணம், துகள், நீறென்னேவல், புழுதி, திருநீறு, நீற்றின சுண்ணாம்பு.

நீறுபடுதல் - அழிதல்.

நீற்றறை - சுண்ணாம்புச் சூளை.

நு

நு - ஆயதப் பொது, ஐயம், நிந்தை, நேரம், புகழ்.

நுகம் - நுகத்தடி, பாரம், நடுவு நிலைமை, வலிமை, காவின் கணைய மரம்.

நுகர்ச்சி - அநுபவம், உணவு, உண்டல்.

நுகர்தல் - அனுபவித்தல், புசித் தல், விழுங்கல், செய்தல்.

நுங்கு - நுங்கென்னேவல், பனங் காயின் நுங்கு.

நுடங்குதல் - ஆடல், துவளல், முடங்கல், தள்ளாடுதல், வளை தல், நுட்பமாதல், அடங்குதல், ஈடுபடுதல்,

நுட்பம் - எளிது, ஓர் அலங்கா ரம், அது குறிப்பாற் கருத்தறி வித்தல். நுண்மை, கரந்துறை கோள்களுள் ஒன்று, நுண்ணிய

ஆராய்ச்சி தோன்ற எழுதப் பெற்ற உரை.

நுட்பவுரை - நுண்ணியதாய் விளக்கும் உரை.

நுணவை - தணக்க மரம்.

நுணாவுதல் - தடவித் தெரிதல், நாவால் தடவியுணர்தல்.

நுணித்தல் - குணம் நுணுக்கம், கூர்மையாக்குதல், பொடியாக்கு தல், நுணுகி ஆராய்தல்.

நுணுக்கம் - அடக்கம், சூட்சம், கூர்மை, நுண்மை.

நுண் - அணு, நுண்மை

நுண்மை - கூர்மை நுட்பம், மிகுதி, சிற்றுண்டி, இரகசியம்.

நுதல் - சொல், நுதலென்னே வல், நெற்றி, புருவம், மேலிடம்

நுரை - குமிழி, நீர் முதலியவற் றின் நுரை, நுரையென்னேவல், வெள்ளை, வெண்ணெய்

நுரையீரல் - மார்பின் இருபுறத் துள்ளதும், அசுத்தக் காற்றை வெளியிட்டுச் சுத்தக் காற்றை உட்கொண்டு இரத்தத்தைச் சுத்திகரிப்பதுமான உறுப்பு.

நுழை - நுண்மை, நுழையென் னேவல், நுழைவாயில், பலகணி, துவாரம், சிறுவழி, குகை, புத்தி நுட்பம்.

நுழைவாயில் - சிறுவாயில்.

நுளம்பாடி - மைசூர் ராச்சியத் தின் பகுதியாய் நுளம்ப வேந்த ரால் ஆளப்பட்ட ஒரு நாடு.

நுளம்பு - கொசுகு, மின்மினி.

நுள்ளான் - ஓர் எறும்பு.

நுனித்தல் - கூர்ந்து நோக்குதல், கூராக்குதல்.

நுனை - முனை.

நூ

நூ - எள், யானை, ஆபரணம், ஓர் எழுத்து, நூவென்னேவல்.

நூங்குதல் - பெருமையாயிருத் தல், மிகுதியாயிருத்தல்.

நூதனன் - புதியவன்.

நூப்பு - தணிப்பு.

நூர்த்தல் - அணைத்தல், ஆற்றல்.

நூலிழந்தாள் - அமங்கலி.

நூல் - ஆண்குறி, ஆலோசனை, இழை, எண்ணம், எற்று நூல், கல்வி நூல், குறியைப் பற்றிய நரம்பு, சாத்திரம், நூலென்னேவல், பஞ்சு நூல்; பூனூல், மங்கல நாண். ஆயுதவகை.

நூழிலாட்டுதல் - கொல்லுதல்.

நூழில் - கொன்று குவிக்கை, தொளை, மிடைந்த போர், கொடிப் பிணக்கு, யானை, அலை, செக்கு, திரை.

நூறாயிரம் - இலட்சம்.

நூறு-ஓர் எண், நூறென்னேவல்,

நூற்பழக்கம் - கல்விப் பயிற்சி

நூற்பா - மிகுந்த பொருள்களை உள்ளடக்கி நிற்கும் இலக்கணச் சூத்திரம் முதலியன.

நூற்றல் - நூற்குதல்.

நூனுட்பம் - நூலினது நுண்மை

நூனெறி - நூல்வழி, நூல்களிற் கூறிய வழி, நூல் கூறும் முறைமை.

நூன்முகம் - பாயிரம்.

நூன்முடிவு - நூற்பொருளினது நோக்கம்.

நெ

நெகிழ்ச்சி - இளக்கம், தளர்ச்சி

நெகிழ்வு - குறைவு, தளர்வு, நுகைவு, பிரிவு, மலர்தல், விட்டு நீங்குதல்.

நெக்கல் - உருகுதல், கரைதல், நுகைதல்.

நெஞ்சடைப்பு - மார்படைப்பு,

நெஞ்சம் - மனம், மார்பு.

நெஞ்சு - மனம், துணிவு, தைரியம், தொண்டை, மார்பு, இருதயம்.

நெஞ்சுத்துணிவு - மனவுறுதி.
நெஞ்சுரம் - மனக் கடுமை, மனோ தைரியம், தடித்தனம்.
நெஞ்செரிச்சல் - பொறாமை.
நெஞ்செரிதல் - எரிச்சற்படல், பொறாமைப்படல்.
நெடில் நீளம்; நெட்டெழுத்து, மூங்கில்.
நெடுங்கடல் - அளந்தறியப் படாத கடல்.
நெடுங்கணக்கு - அரிவரி, பழங் கடன், அரிச்சுவடி, நெடுநாள் கணக்கு, வராக் கணக்கு.
நெடுங்கேடு - தீராதகேடு.
நெடுந்தகை - பெரியோன்.
நெடுந்துயில் -நீண்ட உறக்கம், இறப்பு
நெடுமி - நீண்ட மரம், உயர்ந்து வளர்ந்த பெண், பனை, மழை.
நெடுமை - உயரம், நீளம், அமிதம், நீட்சி, பெருமை ஆழம்
நெடும்புகழ் - மிகு புகழ்.
நெடுவிரல் - ஆடாதோடை.
நெட்டி - ஒருவகைப் புல், கிடைச்சி, சடை, நெட்டு, நெட்டை, முளி, உடற்பொருத்து. எலும்பு, சோம்பு.
நெட்டெழுத்து - உடல்வாசகம். கையொப்பம், நீட்டு, நெடிலெழுத்து
நெய் - இரத்தம், சித்திரை நாள், நறுநெய், நிணம், நெய்யென்னேவல்.
நெய்தல் - ஆடை முதலியன நெய்தல். ஆம்பல், இரங்குதல், ஐவகை நிலங்களில் ஒன்று, சாப்பறை, புலந்தோர் புலம்பல்.
நெய்தற்றிணை - நெய்தல் நிலம்.
நெய்யல் - நெசவு.
நெரி - நெரியேன்னேவல், நெரிவு, புடைவை முரிப்பு, புரி, மடிப்பு.

நெரித்தல் – நசுக்குதல், நொறுக்குதல், கைவிரல்களைச் சுடக்குதல், நிலைகெடச் செய்தல், குவித்தல்.

நெரிப்பு – நெரிதல்.

நெரிவு – நெரிதல், பகை.

நெருக்கம் – இடைஞ்சல், இடைவிடாமை, ஒடுக்கம், கிட்டுமானம். கொடுமை. நெருங்குதல், செறிவு, வேலைச் சங்கடம், அவசரம், துன்பம், கையிறுக்கம், மரணத்தறுவாய்.

நெருக்குதல் – கடினம் பண்ணுதல், நெருங்கச்செய்தல்.

நெருடன் – வஞ்சகன்.

நெருப்பு – தீ

நெருப்புக்கொள்ளி – தீயன். கொள்ளிக்கட்டை,

நெல் – சாலி, நெற்பயிர்.

நெளிப்பு – இறுமாப்பு.

நெறி – ஒழுங்கு, கற்பு. கோவில், ன்மார்க்கம். சுளுக்கு, செவ்வை, ரம்புத் திரட்சி, நீதி, முறை, ழி, விதம்

நெறிப்படுதல் – ஒழுங்குபடுதல், ல்லொழுக்கத்தில் நிலைபெறுதல்; ஒன்றில் வழிபடுதல், உள்ளடங்குதல்.

நெறிகேடு – முறைத்தவறு.

நெறிமை – நீதி.

நெறியிலார் – கீழ்மக்கள்.

நெற்றி – உச்சி; நுதல்; படைவகுப்பு; முயற்சி: முன்பகுதி; உச்சி; கட்டிடத்தின் மேநிலை; முகப்பு.

நே

நேசம் – அன்பு; தகுதி; ஆர்வம்

நேசித்தல் – அன்பு வைத்தல்.

நேத்திரம் - கண்; பட்டாடை; மயிற்பீலிக்கண்,

நேபம் - நீர்.

நேமிநாதன் - அருகன்; கடவுள்; திருமால்; வருணன்.

நேயம் - அன்பு; எண்ணெய்; நன்மை; நிலப்பனை; நெய்; உறவு: பக்தி.

நேரம் - அபராதம்; காலம்; குற்றம்; சமயம்; தண்டிப்பு; நற்சமயம்; பகலிற்பாதி.

நேராக்குதல் - இணக்குதல்; முடிவுபடுத்துதல்; அழித்தல்.

நேரிடுதல் - எதிர்த்தல்; எதிர்ப்படுதல்; சம்பவித்தல்; கைகூடுதல்; தொடங்குதல்

நேரிழை - பெண்.

நேர் - உடன்பாடு; உண்மை; உவமை; ஒப்புரவு; கற்பு; சரி; செவ்வை; தகுதி; நீதி, நீளம்; நுட்பம்; நேரசை; நேரென்னேவல்; பாதி: முன்; மேல் வரிசை.

நேர்சீர்-ஒழுங்கு; மனஒற்றுமை.

நேர் சொல்லுதல் - உண்மை கூறுதல்.

நேர்ச்சி - இணக்கம்; உடன்பாடு: நட்பு; தகுதி; நேர்.

நேர்தல் - ஈதல்; உடன்படல்; எதிர்த்தல்; கிட்டல்; சம்பவித்தல்; பொருதல்; மெலிதல்; வேண்டுதல்.

நேர்த்தி - சிறப்பு; திருத்தமுள்ளது; நேருதல்; நேர்ந்தபொருள்.

நேர்த்திக்கடன் - வாக்குப்பண்ணியது.

நேர்படுதல் - இணங்குதல்; சந்தித்தல்; உடன்படுதல்; நட்புச் கொள்ளல்; வாய்த்தல்.

நேர்ப்படுதல் - இணங்குதல்.

நேர்பாடு- உடன்பாடு: தற்செயலான நிகழ்ச்சி; நேர்த்திக் கடன்; உபாயம்.

நேர்மை – இணக்கம்; செவ்வை; நிதானம்; நுண்மை.

நேர்வு – உடன்பாடு; எதிர்தல்; கூடுதல்; கொடை; சம்பவிப்பு, சருவுதல்; பொருதல்.

நை

நை – இகழ்ச்சிக் குறிப்பு; ஓர் எழுத்து; நையென்னேவல்.

நைதல் – இரங்கல்; கெடுதல், தளர்தல் துக்கித்தல்; துன்புறல்; நசிதல், வதங்கல்: மனம் வருந்தல்; வாடல், நசுங்குதல்; நிலை கெடுதல்.

நைமித்திகம்–சிறப்பு வழிபாடு:

நையாண்டி – இகழ்ச்சி. சரசம், நாடோடிப்பாட்டு வகை, கேலி, சிரிப்பு வார்த்தை.

நைவேதித்தல் - படைத்தல்.

நைவேத்தியம் - காணிக்கை.

நொ

நொ – ஓர் எழுத்து, துன்பம், நொவ்வென்னேவல், நோய், வருத்தம்.

நொச்சி – ஒரு செடி, சிற்றூர், மதில்.

நொடி – கால நுட்பம், கைந்நொடி, சொல், நொடியென்னேவல், பள்ளம், விடுகதை.

நொடித்தல் – அழித்தல், சொல்லல், சுடக்குதல், இங்கிதத்தால் அழைத்தல், பழித்தல்.

நொடியவிழ்த்தல் – விடுகதை விளக்குதல்

நொண்டி – கால் முடவன், ஒரு நூல்.

நொதுமல்–அயல், நொய்ம்மை, உதாசீனம், விருப்பு வெறுப்பு இன்மை, மென்மை.

நொய்து – மிருது, மெல்லிது, விரைவு.

நொள்ளாப்பு - வருத்தம்.
நொறுக்குதல் - பொடியாக்குதல், நையப்புடைத்தல்.
நொறுங்கல் - நொறுங்கினது.
நொறுவை - சிற்றுண்டி.

நோ

நோ - இன்மை, ஒரெழுத்து, சிதைவு. துக்கம், துன்பம், நோவென்னேவல், பலவீனம், நோய்.

நோக்கம் - அருமை, அழகு, உயர்ச்சி, எண்ணம், கண், காவல், புன்மை, தோற்றம், பார்வை, விருப்பம், அறிவு.

நோக்கல் - காண்டல், பார்த்தல்

நோக்காடு - வறுமை, நோய், மனநோய்.

நோக்கு - அழகு, எண்ணம், கண், தயவு, நோக்கென்னேவல், பார்வை, விருப்பம், விநோதக் கூத்து.

நோக்குதல் - பார்த்தல், விரும்புதல், கடாட்சித்தல், காத்தல், தயவு செய்தல்.

நோஞ்சல் - மெலிதல்.

நோட்டக்காரன் - நாணயம் பரிசோதிப்போன்.

நோட்டம் - கண்திட்டம், விலை

நோதல் - கேடு, துக்கித்தல், துன்புறல், நோயடைதல்.

நோப்படுதல் - மெலிதல்.

நோய் - துன்பம், வருத்தம், வியாதி, குற்றம், அச்சம், துக்கம், நோவு

நோலாமை - தவமின்மை, பொறாமை.

நோவாளி - நோவுள்ளோன், மிடியன்.

நோற்பு - தவம், பொறுத்தல், விரதம்.

நோற்றல் - தவஞ்செய்தல், பொறுத்தல்.

நோனார் - தவமில்லார், பகைவர், பொறாமையுள்ளோர்.

நோன்பு - உபவாசம், தவம், விரதம்.

நௌ

நௌ - மரக்கலம், கோணி.

ப

ப - இருபதிலோர் பாகத்தைக் காட்டுங் கீழ்வாயிலக்கக்குறி; ஓர் எழுத்து; காற்று; சாபம்; பெருங்காற்று.

பகடி – விகடம்; கூத்து; பரிகாசம்; ஆசியக்காரன்; வினை; வெளிவேடக்காரன்.

பகட்டு – அதட்டு; இறுமாப்பு; சூழ்ச்சி; பகட்டென்னேவல்; பார்வை; ஒளி; மயக்கம் மினுக்கம்; வெருட்டு; வெளிவேடம்; ஆடம்பரம்.

பகர்தல் – சொல்லுதல்; விலைகூறல்; கொடுத்தல்; ஒளிர்தல்.

பகலவன், பகலோன் – கதிரோன்.

பகல் – ஒளி; கதிரவன்; தினம்; நடு; பகற்காலம்; பகுதல்; பிரிதல்; பிளத்தல்; பகுக்கை; நடுநிலை; நுகத்தாணி; முகூர்த்தம்; நாள்; மத்தியானம்; இளவெயில்.

பகவன் – அரன்; அரி; அருகன்; கடவுள்; குரு; நான்முகன்; புத்தன்.

பகிரங்கம் – வெளிப்படை; மறைப்பின்மை.

பகிரண்டம் – அண்டத்தின் வெளி: பேரண்டம்.

பகிர்– பகிரென்னேவல்; பகுப்பு; வெடிப்பு.

பகுதி – பகுப்பு; இயல்பு; குடியிறை; சொல்முதனிலை; பங்கு; படை; பிரிவு; மூலப்பிரகிருதி;

திறை; வேறுபாடு: வருவாய், மந்திரி: கூட்டம்; சந்தம்.

பகுத்தல் – ஈதல்; தறித்தல்; பங்கிடல்; தெளிவாய்க் கூறல்.

பகுத்தறிதல் - பிரித்தறிதல்.

பக்கத்தார் – அயலவர்; பிற சுற்றத்தார்; இனத்தவர்; உழை யிருப்பவர்: அமைச்சர்; கட்சிக் காரரர்.

பக்கம் – அம்பிறகு, அருகு, அவயவம், இடம், இராசயானை, இறகு, உணா, எதிரிடை, ஒரு கையணி, கனிவு, சமீபம், சுத்தம், செட்டை, சேனை, தகுதி, நட்பு, நாரை, பட்சம், பதினைந்து திதி கொண்ட காலம், புட்பொது, புறம், பாரிசம், அன்பு, கூறு, வகுப்பு, வமிசம், வீடு, தன்மை, கோட்பாடு, ஒளி, உணவு, புத்தகத்தின் பக்கம்,

பக்குவம் – தகுதி, திராணி, பருவம், முதிர்ச்சி, ஆற்றல், ஆன்மபரிபாகம், ருதுவாகுகை, மன்னிப்பு.

பங்கம் – அசைவு, அச்சம், அலை, இடர், ஈனம், எத்து, குழைசேறு, குளம், துண்டு, தூசு, தோல்வி நோய், பங்கு, பந்தயம், பயம், பழுது, பாவம், பிளப்பு, பிரிவு. பின்னம், புழுதி, முடம், வத்திரம், விகாரம், வெட்கம், வேறுபாடு.

பங்கயன் – கதிரவன், நான்முகன்

பங்காளி – கூட்டாளி.

பங்கீடு – உபாயம், திட்டம், பங்கு, பங்குசெய்தல்.

பசப்பு – ஏய்ப்பு, பசலை, பச்சைநிறம், பொன்மை.

பசலை – பசத்தல், கீரை வகை, கோழிக்கீரை, பப்பாளி, உரம், குழந்தை, காட்டு மஞ்சரி.

பசி - பசித்தல்.

பசிதம் - சாம்பர், திருநீறு.

பசுஞானம் - தத்துவ ஞானம், ஆன்மசொருப ஞானம், சிற்றறிவு.

பசுபதி - சிவன்.

பசுமை - ஈரம், உண்மை, குளிர்மை, சாரம், சிறப்பு, செல்வம், நன்மை, பொன்னிறம், செழுமை, இளமை, செவ்வி, மயிர்.

பசை - பிசின், அன்பு, ஆசை, இலாபம், ஈரம், ஒட்டும் பசை, குழைவு, சாரம், செந்தளிப்பு, தளைவு, பசையென்னேவல், பத்தி, பற்று, விருப்பம், பயன், இரக்கம், செல்வம்.

பச்சாத்தாபம் - கழிவிரக்கம், கழிந்ததற்கு இரங்குகை, இரக்கம்.

பச்சை - தோல், பசுமை, பயறு, அவியாதது, இளமை, இன்பம், ஒரு நிறம், மரகதம், வெற்றிலை.

பச்சைப்பெருமாள் - ஒருவகை நெல், திருமால்.

பஞ்சபூதம் - தீ, நீர், காற்று, நிலம், ஆகாயம்.

பஞ்சம் - ஐந்து, கறுப்பு, சிறுவிலைக்காலம், பஞ்சப்பொழுது.

பஞ்சாங்கம் - ஆமை, குதிரை, சோதிடத்திற்குரிய ஐந்துறுப்புக்களாகிய கரணம், திதி, நட்சத்திரம், யோகம், வாரம் ஆகியன.

பஞ்சாயத்து - ஐவர் கூடிய நியாயசபை.

பஞ்சான்மா - அந்தர ஆன்மா, சீவான்மா, தத்துவ ஆன்மா, பூத ஆன்மா, மந்திர ஆன்மா என்பன.

பஞ்சி - வெண்துகில், வெண்திரி, செம்பஞ்சுக் குழம்பு, நார், சடைந்தது, சோம்பல்; பெருந்

தூறு, பஞ்சாங்கம், பஞ்சு, வருத்தம், இலவு.

பஞ்சு - சீலை, பருத்திப் பஞ்சு முதலியன.

படகு - தெப்பம், சிற்றோடம்; படவு.

படங்கு - ஆடை, கூடாரம். இடுதிரை, பெருவரிச்சல், பெருங்கொடி, மெய்போற் பேசுதல், மேற்கட்டி, பதங்கம், அடிப்பாகம்.

படம் - எழுத்துப் படம், காற்றாடி, சீலை, திரைச்சீலை, பாம்பின்படம், யானை முகபடாம், விருதுக்கொடி, பாதத்தின் முற்பகுதி.

படர்தல் - கிளைத்தோடுதல், வருந்துதல், நினைத்தல், செல்லுதல்.

படலை - கட்டுக்கதவு, தார் மணி, பரந்த வடிவு, பரந்த வாய்ப்பறை, பூமாலை, வெளிக்கதவு, இலை மாலை, தழை, கூட்டம், குதிரைக் கிண்கிணி மாலை, படர்கை, பரந்த இடம், குலையிலுள்ள சீப்பு.

படனம் -படித்தல் மனப்பாடம்.

படி - ஒப்பு, ஓர் அளவு, குணம், குதிரையங்கபடி, சம்பளம், சோபானம், தரம், தாழ்வாரம், நாழி, நீர்நிலை, நூறு பலங்கொண்ட நிறை, பகை, படியென்னேவல், பூமி, வாயிற்படி, விதம், வேடம், முறைமை, உருவம், நித்தியக் கட்டளை, தகுதி, படிக்கல், வம்ச பரம்பரை.

படிதல் - அமருதல், கையெழுத்துத் திருந்தி அமைதல், கலத்தல், குளித்தல், கூத்து, திருந்தல். அடியில் தங்குதல், கீழ்ப்படிதல், மூழ்குதல். வசமாதல், கண் மூடுதல், அமுங்குதல், தணிதல், அனுபவித்தல்.

படித்தல் - கற்றல், சொல்லு தல், துதித்தல், பழகுதல்.

படிப்பினை - படிப்பு, போதனை.

படிப்பு - அறிவு, கல்வி, சொல் லல், பழக்கம், புத்தி, வாசனை, வாசிப்பு.

படிமம் - கண்ணாடி, வெண்மை, வடிவம், பூதம், விரதம், தூய்மை, வெறியாட்டு, படிமக்கலம், பிர திமை.

படிவம் - வழிபடு தெய்வம், உருவம், தவவேடம், தோற்றம், விரதம், உடல் உறுப்பு, உடல், பத்திரம்.

படினம் - பக்குவம், மேன்மை, வெற்றி, கல்வி.

படுகாடு - சுடுகாடு

படுக்கை - அடிப்பட்டை, படுத் தல், பல்லணம், மக்கட் படுக்கை. விலங்கின் படுக்கை.

படுதல் - உண்டாதல், உதித் தல். தோன்றல், அகப்படுதல், இறத்தல், அழிதல், மறைதல், துன்புறுதல், தொங்குதல், ஒலித் தல், உடன்படுதல், பொறுத்தல் தங்குதல், தாழ்தல், பொருதல், வீழ்தல், சம்மதித்தல், சாய்தல், பெய்தல், பெரிதாதல்.

படுத்தல் - செய்தல். நிலைபெ றச் செய்தல், சேர்ப்பித்தல், வளர்த்தல், பரப்புதல், அகப்ப டுத்தல், அழித்தல், வீழ்த்துதல், கிடத்தல்.

படை - அடுக்கு, ஆயுதம், கலப்பை, கல்லணை, செதிள், தானை. திரள், நித்திரை, நிரை. படையென்னேவல். போர், போர்ப்படை, மெத்தை, மேகப் படை.

படைத்தல் - சிருட்டித்தல், உண்டாக்கல். பரிமாறுதல், பெற் றிருத்தல், நிவேதித்தல்.

படைவீடு - ஆயுதசாலை, பாசறை, குமரக் கடவுள் இருப் பிடம், கோயில், இராசதானி.

பட்சணம் - உண்கை, சிற்றுண்டி

பட்சம் - பக்கம், அன்பு, கட்சி, உருக்கம், செட்டை, தரம், நேசம், பதினைந்து நாள் கொண் டது.

பட்சி - பறவை: பட்சியென் னேவல்.

பட்டடை - அடைகல், கழுத் தணி, குவியல், தலைதாங்கி, தாங்குபலகை, தாபரம், தானிய உறை, கொல்லன் களரி, ஆணி முதலியன செல்லுதற்கு அடியி லிருந்து தாங்குங் கருவி, தோணி தாங்கி, வாகனத்தட்டு, குடிவா ரம்.

பட்டது - நேரிட்டது, சம்பவம், உலர்ந்தது, அழிந்தது, அகப்பட் டது, தோன்றியது.

பட்டம் - பருவம், ஆயுதம், எழு தும்படி செய்த தகடு, கடுதாசிப் படம், கவரிமா, குளம், சதுக்கம், சீலை, தீர்க்கம், நாற்காலி, நெற் றிப்பட்டம், பட்டினம், பரிசை, மனிதர் படுக்கை, வழி, வாள், விலங்கின் படுக்கை, நீர்நிலை, மேலாடை, பட்டப்பெயர், காற் றாடி, உயர்பதவி, படகுவகை, மாதர் நுதலணி, சட்டங்களை இணைக்க உதவும் தகடு, பெருங் கொடி, பொன்.

பட்டயம் - வாள், பட்டா, தாமிர சாசனம்.

பட்டாங்கு - உள்ள நிலைமை, உண்மை, சாத்திரம், ஊழ், சித்திரவேலையமைந்த சேலை, மெய்போல் பேசும் கேலிப் பேச்சு முதலியன.

பட்டாணி - உருதுமொழி பேசும் முகம்மதிய சாதி, ஒரு செடி, கடலைக் கொடிவகை.

பட்டி - அட்டவணை, ஆட்டுக் கிடை, இடம், ஒரு செடி, களவு, கள்வன், சிற்றூர், சீலை, தெப்பம், நெகிழ்ச்சி, பசுக்கொட்டில், படல், பலகறை, பிள்ளை, மந்தை, வெற்றிலைச் சுருள், வேசி, நில அளவு வகை, பட்டி மாடு, நாய், புண் கட்டும் சேலை, மடிப்புத் தையல்.

பட்டிமண்டபம் - வித்தியா மண்டபம், திருவோலக்கம்.

பட்டியல் - வரிச்சல், தூணின் கீழ் வைக்குங் கல், வியாபாரச் சரக்கின் விலையட்டவணை, தொகுப்பு.

பட்டினம் - ஊர், நெய்தல் நிலத்தூர், காவிரிப்பூம் பட்டினம், சரீரம்.

பட்டு - சிற்றூர், பட்டுநூல், கட்டியம், உல்லாசம், பட்டாடை, மடிப்பு, மேற்போர்வை, கோணிப்பட்டை, இருந்தேத்தும் மாகதர், கள்ளிவகை.

பட்டை - ஆபரணத்தில் ஓர் உறுப்பு, காறை, சலாகை, தோள் மூட்டு, நீர் இறைக்கும் கூடை, பட்டு நாடா, போதிகை, மரத்தோல், வாழைப் பட்டை, பொடிப்பட்டை, மரவுரி, தகடு. பட்டைச் சாதம்.

பட்டோலை - அட்டவணை, அரசர் விடுந்திருமுகம், காரியக் குறிப்பெழுதும் ஓலை, பேரேட்டின் மொத்த வரவு செலவுக் குறிப்பு, ஒருவர் சொல்ல எழுதிய ஓலை.

பணப்பேய் - பொருளாசை மிகுந்தவன்.

பணம் - பொற்காசு, கிரகம், பருமை, பாக்கியம், பாம்பின் படம், பாம்பு, பொக்கிசம், வாணிகச் சரக்கு, விலை, வேலை, திரவியம், வீடு.

பணயம் - ஈடாக வைத்த பொருள், அடகு.

பணி - அணிகலன், ஈகை, எருமை, ஏவல், கட்டளை, செய்கை, சொல், தொண்டு, தொழில், பட்டாடை, பணியென்னேவல், வார்த்தை, வேலை, வேலைப்பாடு, பணிகை, பறக்கை, மலர்களால் அலங்கரிக்கை, வகுப்பு.

பணிதல் - தாழ்தல், இறங்குதல், அடங்குதல். வணங்குதல்.

பணித்தல் - ஏவுதல், கட்டளையிடுதல், குறைத்தல், கொடுத்தல், சொல்லல், தாழ்த்தல், அருளிச் செய்தல், ஆணையிடுதல்.

பணிவிடை - கட்டளை, குற்றேவல், வேலை.

பணிவு - தாழ்வு, பதுங்குகை, வணக்கம்.

பணையம் - பந்தயப் பொருள், ஈடு, காலணி வகை.

பண் - அமைவு, இசைப்பாட்டு, ஊழியம், சீர், செவ்வை, தகுதி, நிந்தை, பண்ணென்னேவல்.

பண்டகசாலை - களஞ்சியம்.

பண்டமாற்று- ஒரு பொருளைக் கொடுத்து மற்றொரு பொருளை வாங்குவது.

பண்டம் - அறிவு, உணவுப் பொருள், கலைக்கியானம், தானியம், பொருள், பொன், வயிறு, உடல், பழம்.

பண்டிகை - திருவிழா, பெருநாள்

பண்டிதன் - சுக்கிரன், புதன், புலவன், வைத்தியன்.

பண்டு - பழைமை, முற்காலம், நிதி, தேட்டம்.

பண்டை - கல்வி, ஞானம், பண்டு.

பண்ணுதல் - செய்தல்.

பண்ணை - குளம், நீர்நிலை, படகு, மனை, மகளிர் கூட்டம், மகளிர் விளையாட்டு, மரக்கலம்,

வயல், விலங்கின் படுக்கை, விலங்கின் மேற்சேணம், தோட்டம்.

பண்ணைவீடு – பெரிய மிராசுதாரரின் வீடு, மடைப்பள்ளி, பண்டசாலை.

பண்படுதல் – சமைதல், உதவுதல், ஏவல் செய்தல், சீர்திருந்தல், சொற்படி செய்தல்.

பண்பு - குணம், தகுதி, விதம், இயல்பு, மனத்தன்மை, அழகு, முறை,செய்கை, பண்புப்பெயர்.

பண்மை – தகுதி.

பதங்கம் - பாதரசம், சந்தனம், சாம்பிராணி முதலியவற்றில் எடுக்கும் பதங்கம், பதங்கமம், விட்டில்.

பதநீர் - புளிப்பு ஏறாதபடி சுண்ணாம்பு இடப்பட்ட கலயத்துள் இறக்கிய இனிப்பு நீர்.

பதப்படுத்துதல் சீர்படுத்துதல்

பதப்பேறு – வீடுபேறு.

பதமை – அமைதி, இணக்கம், தாழ்மை, மிருது, மெல்லோசை.

பதம் - பக்குவம், உணவு. அளிழ், அடையாளம், அழகு, அறுகம் புல், ஆடை, இடம், இன்பம், ஈரம், உண்டல். எழுத்தானாய பதம், ஒளி, ஒரு மொழியிற் பிரகிருதியாய் நிற்பது, கால், காவல், குழைவு, கூர்மை, சொல், சோறு, தின்றல், நாழிகை, பதவி, பாவினோர் உறுப்பு, பூரட்டாதி, பொருள், பொழுது, முயற்சி, வரிசை, வழி, வேடம்.

பதம்பார்த்தல் – சோதனை செய்தல், சுவையறிதல்

பதர் - அறிவீனன், அற்பம், பலனற்றது, உள்ளீடற்ற நெல், பயனின்மை. குற்றம், உபயோகமற்றவன்

பதவம் – அறுகு.

பதவி - இடம், உலகம், ஒழுங்கு, கதி, செல்வம், நிலை, நிலைபரம், வழி, வீடுபேறு.

பதவுரை - சொல்தோறும் உரைக்கும் பொருள்.

பதறல் - தளம்புதல், திடுக்கிடல், நடுங்கல், விரைதல்.

பதற்றம் - பதறுதல்.

பதனி - பதநீர்.

பதனிடுதல் - தோல் முதலியவைகளை மெதுவாக்குதல்.

பதாதி - அமைதியின்மை, ஏதுமற்றவன், காலான், படையளவில் ஒன்று.

பதார்த்தம் - கறி, சொற்பொருள், சோறு ஒழிந்த கறி முதலிய உணவுப் பொருள், திரவியம் முதலிய எழுவகைப் பொருள், சைவ சமய முப்பொருள்.

பதி - அரசன், இடம், ஊர், எப்பொருட்கும் இறைவன், ஒளி, கடவுள், குரு, கொழுநன், சிவன், தலைவன், பட்டினம், பதித்தல், பதியென்னேவல், பதிவு, பூமி, மூத்தோன், வீடு, வேர்.

பதிகம் - பத்துப் பாடல்கள் கொண்டு முடிவு பெறும் ஒரு வகைப் பிரபந்தம், பாசி, பாயிரம்.

பதிஞானம் - கடவுளறிவு.

பதிதல் - அழுந்துதல், ஊன்றல், ஒடுங்குதல், கீழ்ப்படிதல், தங்குதல், தாழ்தல், பணிதல், பள்ளமாதல்.

பதிநூல் - கடவுளது தன்மையை விளக்கும் நூல்.

பதிப்பு - பதித்தல்.

பதிவு - குனிவு, சாய்பு, பதிதல், அழுந்துகை, பள்ளம், கணக்குப் பதிகை, மனம் ஊன்றுகை.

பதுக்குதல் - மறைத்தல்.

பதுமநிதி - தாமரை உருவாய்க் கிடக்கும் பொன்.

பதுமம் - ஈயம், ஒரு குளிகை, கோடாகோடி, சோதி நாள், தாமரை, பதினென் புராணத்

தொன்று, பதுமாசனம், பதும ரேகை, மதுமநிதி.

பதைப்பு – இரக்கம், பதற்றம்.

பத்தர் – தட்டார், தேவதொண்டர், தொட்டி, குடுக்கை, தட்டார் பட்டப் பெயர்களுள் ஒன்று, அடியார், அன்புடையார், வியாபாரிகள், ஆன்மாக்கள்.

பத்தன் – அன்புடையோன், தட்டான், தொண்டன்.

பத்தி – அடைப்பு, அன்பு, ஒழுக்கம், ஒழுங்கு, தொண்டு, நடை, நம்பிக்கை, நிரை, பங்கு, பதாதி, முறைமை, வரிசை, வழிபாடு, விசுவாசம், வீட்டிறப்பு, பாத்தி.

பத்தியம் – இளைக்கம், இதம், கடு, பாடல், மருந்திற்கு இசைந்த உணவு, கவனம், இலஞ்சம், கடுக்காய், அவுரி, படிப்பணம், பூவாது காய்க்கும் மரம், செய்யுள்.

பத்திரம் – அதிட்டம், அம்பிறகு, அம்பு, அழகு இரும்பு, இலை, இறகு, உடைவாள், உறுதிப் பத்திரம், எருது, குறிச்சி, குற்றுவாள், செல்வம், திரட்சி, திருமுகம், நன்மை, மடை, மலை, முடியுறுப்பு, பாதுகாப்பு, சவுக்கியம்.

பத்திரன் – சிவன், வீரபத்திரன்

பத்திரி – அம்பு, இலை, காளி, குதிரை, பறவை, சாதிப் பத்திரி, கொத்தளம்.

பத்திரிகை – இலை, ஒற்றை, ஓலையுறுதி, திருமுகம், செய்தித்தாள்.

பத்தை – சிறுதுண்டு, மண்ணோடு கூடிய பசும்புல், துண்டு, குயவன் அறுக்குங் கருவி.

பந்தம் – அழகு, உண்டை, உறவு, ஏற்பாடு, கட்டு, கயிறு, கை விளக்கு, செய்யுள் உறுப்புள் ஒன்றாகிய தளை, திரட்சி, தீக்

கொளுத்தும் பந்து, தொடர், பெருந்துருத்தி, மதில், மயிர்முடி, முடிச்சு, முறை, விலங்கு, பாசம், பற்று, தீத்திரள், பொன்.

பந்தயம் - போட்டி, போட்டிப் பொருள்.

பந்தி - ஒழுங்கு, ஒரு பண், கீர்த்தி, யானை கட்டுமிடம், கூட்டம், சபை, பந்தியென்னே வல்.

பந்திபோசனம் - உடன் உண்ணுகை.

பந்து - உறவு, எறியும் பந்து, திரட்சி, திரிகை.

பயப்பாடு - அச்சம், பயன் படுகை.

பயம் - அச்சம், அமிர்தம், குளம், சுதை, நீர், பயன், பால், பலன், இன்பம், பழம், அரசிறை

பயல் - பையல், பள்ளம், சிறு பிள்ளை, இழிஞன், பாதி.

பயனிலை - பயன் முடிவு.

பயனுரைத்தல்- உரைசொல்லல்

பயன் - அகலம், சொல்லுரை, நீர். பலன், பால்.

பயித்தியம் - மதிகேடு.

பயிராதல் - பயிர் உண்டாதல், சினையாதல்.

பயிர் - இடும்பயிர், ஒலி, பயில், குறி.

பயிலல் - சொல்லுதல், பிடித் தல், பழகல்.

பயில்வு - செய்கை, பயிற்சி.

பயிற்சி - பழக்கம்.

பயிற்றுதல்- படிப்பித்தல், பழக் குதல், கற்பித்தல், பலகாற்கூறு தல், சொல்லுதல், செய்தல்.

பரகதி - வீடுபேறு.

பரஞானம் - பதிஞானம்.

பரண் - இதணம், காவல் மேடை, மேல்தட்டு, மச்சு.

பரதம் - இலட்சம் கோடி, கோடா கோடி, கூத்து, நவ கண்டத்தொன்று, பரதநூல்.

பரதவித்தல் - வருந்துதல், இரங்குதல்.

பரதாரம் - பிறர்மனை.

பரதேசி - பிறநாட்டான், மெய்ஞ்ஞானி.

பரத்துதல் - விரித்தல்.

பரத்துவம் - கடவுள் தன்மை, பரம், முன்மை.

பரத்தை - பொதுமகள், வேற்றுப்பெண், அயன்மை.

பரபதம் - மேன்மை, வீடுபேறு.

பரபரப்பு - துரிதம், சுறுசுறுப்பு, தினவு.

பரப்பல் - பரவச் செய்தல்.

பரப்பிரமம் - கடவுள்.

பரப்பு - அகலம், படுக்கை, பரப் பென்னேவல், பரவைக்கடல், இடவிரிவு, உலகம், தொகுதி, மிகுதி, விலாசம், வீதி, முகடு.

பரமகதி - வீடுபேறு, அடைக் கலம்.

பரமபதம் - உலகம், வீடுபேறு, திருமால்.

பரமம் - பரப்பிரமம், மிகச்சிறந் தது.

பரமன் - கடவுள், சிவன்.

பரிகாசம் - பகிடி, நிந்தனை. மிகுநகை.

பரிகாரம் - இடைக்கட்டு, தீர்ப்பு, பொருள்கள், பரிகரித் தல், வைத்தியம், பராமரிப்பு, கேடு நீங்கக் கூறும் வாழ்த்து, விலக்கு.

பரிகாரி- நாவிதன், வைத்தியன்

பரிசம் - தொடுகை, சீதனம், ஊற்றறிவு, கூத்திக்குக் கொடுக் கும் முன்பணம், பரிசதீட்சை.

பரிசில் - ஈகை, கொடை.

பரிசீலனை - சோதனை.

பரிசு - தன்மை, விதம், கொடை, பெருமை, கங்கை.

பரிசுத்தம் - தூய்மை, புனிதம், மாசின்மை, முழுமை.

பரிசோதித்தல் - ஆராய்தல்.

பரிச்சயம் - பழக்கம்.

பரிட்சை - ஆராய்வு.

பரிணமித்தல் - நிலைமாறுதல், வேறுபடல்.

பரிணாமம் - வேறுபாடு.

மங்கலம் - கலியாணம். சுபம், சேகரிப்பு, சோபனம், தருமம், பொலிவு, வாழ்த்து, ஆக்கம், நன்மை, தாலி, நற்செயல், சிறப்பு, மங்கல வழக்கு. தகனப்பலி.

மங்கலவாரம் - செவ்வாய்க்கிழமை

மங்கலவேள்வி - திருமணத்தில் வளர்க்கப்படும் ஓமத்தீ.

மங்கலன் - செவ்வாய், நாவிதன்

மங்கலியம் - தாலி.

மங்கல் - ஒளியின்மை. கெடுதல்; தோற்றக் குறைவு, இருள் நேரம், கண் மறைப்பு.

மங்களம் - மங்கலம்.

மங்களாதேவி - திருமகள்.
மங்கு - கேடு, சாடி, வங்கு.
மங்குங்காலம் - மரணவேளை.
மங்குசனி – ஒருவனுடைய வாழ் நாளில் முதலில் வந்து தீமை செய்யும் ஏழரையாண்டுச் சனி
மங்குதல் – ஒளி மழுங்குதல், கெடுதல், தோற்றங் குறைதல், நிறங்குன்றுதல், வாட்டமுறுதல், சாதல்,
மங்குல் – ஆகாயம். இரவு, இருள், மேகம். மூடுபனி, திசை, விண்.
மங்குளம் – இருள், கலக்கம், மந்தாரம்,
மங்கை – கற்றாழை, பதின் மூன்று வயதுப் பெண், பெண்.
மங்கைபங்கன் – சிவன், மாதி ருக்கும் பாதியன்.
மசக்குதல் - மயக்குதல், குழப் புதல், கசக்குதல்.
மசக்கை – சூதகக்கட்டு, கர்ப் பிணிகட்கு மயக்கம் முதலிய வற்றையுண்டாக்கும் ஒருவகை நோய்.
மசம்-அளவு, கொசுகு, கோபம், தொனி.
மசிதல் - வழுவழுப்பாயிருத்தல், விட்டுக்கொடுத்தல்.
மசித்தல் – குழையச் செய்தல்.
மசியல்–கடைந்து செய்த உணவு முதலியன.
மசிர் – மயிர், அறுகு
மஞ்சணம் – பற்பொடி.
மஞ்சம் – கடல், கட்டில், சப்ப றம், ஆசனம் இவற்றிற்குரிய பீடம்.
மஞ்சனச்சாலை – நீராடும் இடம்.
மஞ்சனநீர் – அபிடேக நீர்.
மஞ்சனம் – குளித்தல், முழுகல்.
மஞ்சாடி – இரண்டு குண்டுமணி எடை, மரவகை, வயிரநிறை, செவ்வள்ளி, நுணாப்பட்டை.

மஞ்சு - அழகு, ஆபரணம், இளமை, கட்டில், களஞ்சியம், பனி, முகடு, முதுகு, மேகம், யானை முதுகு, வலி, வெண் மேகம், மூடுபனி.

மஞ்சுகம் - கொக்கு, அன்னம்.

மஞ்சுளம் - அழகு, மிருது.

மஞ்சூரம் - கடலை.

மடக்கம் - அடக்கம், முடக்கு, வளைவு.

மடக்கல் - அடக்கல், தடுத்தல், வளைத்தல், ஒடுக்கல், ஊழிக் காலம், இயமன், சிங்கம், இடி.

மடக்கு - ஓரலங்காரம், ஓர் ஏனம், பேரகல், மடக்கென்னே வல், மடங்கடிப்பு, முடக்கு, மூலை முடுக்கு, செய்யுளில் சொல் சீர்கள் பொருள் வேறுபட்டு மாறி மாறி வருதல், திருப்பு, வளைவு, மடிப்பு, மடக்குக் கத்தி, தடை, தாறுமாறு, நில அளவு வகை, ஒரு தடவையில் உட்கொள்ளக் கூடிய நீர்.

மடக்கொடி - பெண்.

மடங்கக்கூறுதல் - திரும்பக் கூறுதல்

மடங்கல் - இடி, இயமன், காலன், கீழ்ப்படிதல், சிங்கம், தாழை, மீளல், முடங்கல், யுக முடிவு, நோய், வளைகை, கோணம், மழுங்கிப் போகை, அடக்கம், ஒடுக்கம், முடிவு, முற்றி வளைந்து சாய்ந்த கதிர்.

மடங்கு - அளவு, இழைக்கயிறு, பங்கு, மடங்கென்னேவல், நோய்.

மடத்தனம் - அறியாமை.

மடந்தை - பெண்.

மடப்பிடி - பெண் யானை.

மடம் - அறியாமை, அழகு, மென்மை, அறப்புறம், இரதம், கோயில், இணக்கம், காவடி, சத்

திரம், மடமை, முனிவர் வாசம், இளமை.

மடல் – ஈஞ்சு கமுகு தாழை தெங்கு பனை முதலியவற்றின் மடல். ஒரு பிரபந்தம், ஓலை மடல், காதின் மடல், கைச் சீப்பு, சிறு வாய்க்கால்; பனை மட்டைக் கங்கு, பூவிதழ், நீற்றுக்கலம், கண்ணிமை, கை.

மடவியர் – பெண்கள்.

மடவை – கடவுமரம், துடுப்பு, அவைக்கால், மீன்வகை.

மடவைக்கெண்டை – ஒருவகை மீன்.

மடன் – அறியாமை, அறிவிலான், உன்மத்தன்.

மடி – அடங்கல், கேடு, சீலை, சோம்பல், சோறு, தாழை, நோய், மடங்குதல், மடிந்தது, மடியென்னேவல், வயிறு, வலையினருகு, மடித்த தொடையின் மேற்பாகம், ஆடை. தீட்டில்லா நிலை, அடக்கம், துர்க்கந்தம், விலங்குகளின் முலை, பொய்.

மடிக்குதல் – சூழ்ச்சியாய் வெல்லுதல், மடக்குதல், முடக்குதல்.

மடித்தல் – மடிக்குதல், மடக்குதல், வளைத்தல், அழித்தல்.

மடிபிடித்தல் – நிர்ப்பந்தித்தல், வழக்காடுதல்.

மடிப்பு – மடக்கு, மடித்திருப்பது, மோசம், வஞ்சகம்.

மடிப்புக்காரன் – தீது செய்வோன், வஞ்சகன்.

மடு– ஆற்றினுட் பள்ளம், குளம், மடுவென்னேவல், நீர்நிலை.

மடுவங்கரை – குளக்கரை.

மடை – ஆபரணக் கடைப்பூட்டு, சோறு, துவாரம், தேவதைகட்குப்படைப்பது, சமையல் வேலை, மதகுப் பலகை, ஆயுத மூட்டு, ஆணி, நீர் பாயும்மடை, மதகு, வாய்க்கால், நீரணை.

மடைகோலுதல் - வயலுக்கு நீர் பாய்ச்சுதல்.

மடைத்தனம் - அறிவீனம்.

மடைப்பள்ளி - கோயில் முதலியவற்றின் அடுக்களை, ஒரு சாதி, அரண்மனை உக்கிராணத் தலைவன்.

மடையன் - அறிவிலான், சமையற்காரன்.

மட்டக்கோல் - கொத்து வேலைக் கருவிகளில் ஒன்று, மட்டப் பலகை.

மட்டப்பலகை - சமனறி கருவி.

மட்டம் - அளவு, எல்லை, உத்தேசம், ஒப்புரவு, கரும்பு நெல் வாழை முதலியவற்றின் கன்றுகள், வராதிருத்தல், கேடகம், சமம். மூன்றொத்துடைய தாளம், சமநிலை, அளவுகோல், ஒப்பு, சிறுமை. சிறு குதிரை.

மட்டி - ஒழுங்கின்மை, கடன் மட்டி, படைக்கலம், மட்டியென்னேவல், மதிகேடன், மூடன், மக்கு, பரும்படி, மட்டிக்காரை, சிப்பிமீன், ஆய்தல், மண்டலிக்கை.

மட்டு - அவதி, அளவு, எல்லை, கள், மிதம், தேன், மணம்.

மட்டை - தென்னை பனை முதலியவற்றின் மட்டை, மடல், தேங்காயின் மேல் ஒடு. வெற்றிலைக் கட்டு, பந்தடிக்கும் மட்டை, உடற்குறை, ஒரு பாம்பு, மூடன்.

மட்பகை - மட்கலம் அறுக்குங் கருவி, குயவன், மட்பகைவன்.

மணத்தல் - கலத்தல், பொருந்துதல். கமழ்தல், மணம்புரிதல், கூடுதல், வேட்டல், நேர்தல், விளங்குதல், புணர்தல், அணைத்தல், கூடியிருத்தல்.

மணம் - திருமணம், கூட்டம், மகிழ்ச்சி, வாசனை, கூடுகை, எண்வகை விவாகம், நறுநாற்றம், மதிப்பு, நன்னிலை.

மணம்பிடித்தல் - எழில் பிடித்தல், வாசனை பிடித்தல், மோப்பம் பிடித்தல், வாசனையால் இழுக்கப்படுதல்.

மணல்வாரி - மண்தோண்டி, நெல்வகை, புல்வகை, சின்னம்மைவகை.

மணவறை - திருமண மண்டபம்

மணவாட்டி - மனைவி, மணமகள்.

மணவாளன் - கணவன், மணமகன்.

மணவினை - திருமணச்சடங்கு.

மணவோலை - விவாக அழைப்புப் பத்திரிகை.

மணாளன் - கணவன்.

மணி - அடிக்கும் மணி, அழகு, இரண்டரை நாழிகை கொண்ட நேரம், உருத்திராக்கம், மணி ஓசை, கண்விழி, கறுப்பு, சங்குமணி முதலியன. துளசி, நவமணிப்பொது, நன்மை, நீர்க்கலசம், நெல் முதலிய தானியம், பருக்கைக்கல், பொன் முதலிய வற்றாலாகிய மணி, மருந்துக்கல், முத்து, யானை மணி, இரத்தினம், நீலமணி, சிறந்தது, உருண்டை, ஆண் குறியின் நுனி.

மணிக்கூடு - மணி தூங்கு மாடம்; கடிகாரம் அமைந்த கோபுரம்; வட்டில்: சாயப்பூடு வகை.

மணிபூரம் - கொப்பூழ், இரைக்குடர்.

மணிமாடம் - சிறந்த மாளிகை.

மண் - அணு: ஒப்பனை; கழுவுதல்; சுட்டசாந்து: துகள்; நிலம்; பூமி; மண்ணென்னேவல்; மலை; மாட்சிமை.

மண்கலம் - ஓடு; மட்பாண்டம்

மண்கல் – செங்கல்.

மண்டலம் – இயந்திரம்; இரு காலும் பக்கம் வளைய நிற்கும் நிலை; உண்டை; குவியல்; கதிரவன் மண்டலம் முதலியன. தேயம்; நகக்குறி: நாடு; நாற்பது நாள் கொண்டது; நாற்பத்தெட்டு நாள்; பிரதேசம்; பூமி; வட்டம். உபநிடதங்களுள்ஒன்று: வட்ட வடிவம்; பாம்பு முதலியவற்றின் சுற்று: நாட்டின் பெரும் பகுதி; கூட்டம்; பரிவேடம்.

மண்டி – இருகால் முடக்கி நிற்கும் நிலை; கலங்கல் நீர்: களஞ்சியம்: காலை முடக்கி முழந்தாளில் நிற்கை; வண்டல்: தானியம் மிகுதியாக விற்கும் இடம்; பண்டசாலை

மண்டை – இரப்போர் கலம்: வாயகன்ற ஏனம்: தலையோடு; தலை: தலைப்பக்கம்: ஓரளவை: வேசை.

மண்ணுணிப்பாம்பு – பாம்பு வகை; மண்ணில் உண்டாகும். புழுவகை.

மண்மகள் – பூமிதேவி.

மண்மகன் புதல்வர் – வேளாளர்.

மண்மகன் – குயவன்.

மதத்தல் – கொழுத்தல்: செருக்குதல்: வெறித்தல்: மதங்கொள்ளுதல்.

மதனன் – காமன்.

மதம் – கொள்கை; அறிவு; கருத்து: கொழுப்பு: மகிழ்ச்சி; சமயம்: உடன்பாடு: செருக்கு: தாது: நோக்கம்: பெருமை; பைத்தியம்; மதாளிப்பு; பதினென் குற்றத்துள் ஒன்று; யானை மதம்; வலிமை: விருப்பம்; வெறி: கஸ்தூரி; தேன்.

மதர் – களிப்பு; செருக்கு; மதரென்னேவல்; மிகுதி; மகிழ்ச்சி: பாய்ச்சல்.

மதலை – வீட்டின் கொடுங்கை; கொன்றைமரம்; மரக்கொன்றை; தூண்: பற்றுக்கோடு; பிள்ளை; மரக்கலம்; மழலைமொழி; குழந்தை; பாவை.

மதவெறி – அகங்காரம்; இரத்த வெறி; காமவெறி; குடிவெறி; மார்க்கவெறி.

மதனம் – ஈ, கடைதல்: காமம்; தேன்மெழுகு; மருக்காரை: மனக் கலக்கம்; மௌனம்; வசந்த காலம்: அழிக்கை.

மதன் – அழகு; அறியாமை: செருக்கு; வலி; கலக்கம்: காமன்; மாட்சிமை.

மதாளிப்பு – செழிப்பு.

மதி – இயற்கை அறிவு; பகுத்தறிவு: கற்கடக இராசி; சங்கை; சந்திரன்; ஞாபகம்: நிதானம்; மதியென்னேவல்; மாதம்; முன்னிலையசைச்சொல்: வணக்கம்: விருப்பம்; காசியபரின் மனைவி; பிண்டி; பேரன்; அதிமதுரம்.

மதிகேடு – அறிவின்மை.

மதித்தல் – எண்ணல்; கடைதல்; கணித்தல்: கருதல்; கொழுத்தல், வரையறுத்தல்,

மதியம் – கணிசம்; சந்திரன்; நடு: மத்தியானம்; மாதம்; மதிப்பு.

மதில் – இஞ்சி; மதிள்.

மதிற்சுற்று – சுற்றுமதில்; பிராகாரம்.

மது – அசோகு, அதிமதுரம், அமுதம், உருசி, ஓர் அரக்கன், கள், சித்திரை மாதம், சீனி, தேன், நீர், பால், மகரந்தம், வசந்தகாலம்.

மதுப்பிரமேகம் – நீரிழிவு.

மதுமா – மாமாரம்.

மதுரம் - இனிமை, நஞ்சு, துத்தநாகம், அதிமதுரம், ஒரு கவி, கொடிமுந்திரிகை, சமனிசை, செஞ்சந்தனம், தித்திப்பு, மதுரை, முளை.

துவம் – கள், வண்டு.
ந்தகம் – யானையின் நெற்றி; தலை: தலைக்கோலம்; உச்சி; நெற்றி; யானையின் கும்பத் தலம்; மலை நெற்றி; தரிசு நிலம்.
ந்தளம் – ஒரு பறை.
த்திமதானம் – ஏழை குருடர் தலியோர்க்குக் கொடுக்குங் கொடை.
த்திமம் இடை; குறைவு: நடு; நடுத்தரம்; மட்டமானது: சம சை; 'ம' என்றசுரம்; இடை றுப்பு; சராசரி அளவை; இலய கை: அசுவகதி.
ந்தகதி – தாமத நடை.
ந்தமாருதம் – சிறுதென்றல்.
ந்தம் – அழித்தல்: அற்பம்: சீரணம்: உலக அழிவு: ஒரு நாய்; கடைதல்; கண்ணோயில் ன்று; கூர்மையின்மை; சோம ல்; பீழை; மத்து; மென்மை: டிவெறி; தாமதம்; அறிவு முக்கம்; தென்றல்.
ந்தவாரம் – சனிக்கிழமை.
ந்தாரம் – ஐந்தருவினொன்று: சம்பரத்தை; மப்பு; முள் ருக்கு; மேகமூட்டமான நிலை.
ந்தி – ஆடுதின்னாப்பாளை: ருங்குரங்கின் பெண்: குரங்கு; பெண் குரங்கு: பெண்முசு; மந்தி யென்னேவல்; வண்டு; சூரியன்.
ந்திரம் – ஆலோசனை; அரண் னை; உபநிடதம் முப்பத்திரண் டில் ஒன்று; உள்; எண்ணல்; ஒரு நாடு; கடல்; கள்ளு; குகை; குதி ரைக் கூட்டம்; குதிரைப் பந்தி, கோயில்; நாப்புடை பெயராது உச்சரித்தல்; பொருப்பு; வீடு: வேதம்; வித்தியாதரர் உலகம்; மந்திரிகள் சபை; எண்ணும் வேத மந்திரம்; மண்டபம்; உறைவி டம்; யானை வகை.

மந்திரி – குபேரன்; சுக்கிரன்; தந்திரி: திராய்: புதன்; மந்திரி யென்னேவல்; வருங்காரியஞ் சொல்வோன்; வியாழன்.

மந்திரித்தல் – செபித்தல், மந்திர சக்தியால் அடக்குதல், மந்திரத்தால் தியானித்தல்: ஆலோசித்தல்.

மப்பு – மந்தம்; மந்தாரம்; மயக்கம்.

மமகாரம் – அகந்தை; எனதென்கை; மமதை.

மயக்கம் – முக்குற்றத்துள் ஒன்று; உன்மத்தம்.

மயங்குதல் – அறிவு கலங்குதல்; மருளுதல்; பரவசமாதல்; மாறுபடுதல்; வருந்துதல்; தாக்கப்படுதல்; சந்தேகமடைதல்; தயங்குதல்; கலத்தல்; நெருங்குதல்.

மயானக்கிரியை – ஈமச்சடங்கு.

மயானம் – இடுகாடு, சுடுகாடு.

மயிர்மாணிக்கம் – ஒரு செடி; கோரோசனை.

மயிலம் – குப்பைமேனி; மயிலிறகு; ஓர் ஊர்.

மயில் – செங்கத்தாரி; மயூரம்: மலாப்பூர்; பஞ்சபட்சியில் ஒன்று. மயிற்கொன்றை; மயிலடிக் குருத்து; பறவை வகை; மயூராசனம்.

மயூரகம் – துருசி; நாயுருவி; மயில்.

மயூரம் – நாயுருவி; மயில்; மயிற் கொன்றை; மாயூரம் என்னும் ஊர்.

மரகதம் – பச்சை நிறம், பச்சை மணி.

மரக்காயர் – தமிழ்த்துலுக்க வகையினர்; மரக்கலம் ஓட்டுபவர்.

மரணம் – சாவு.

மரணயோகம் – கெடுதியைக் குறிக்கும் நாசயோக வகை.

மரணித்தல் – மரணமடைதல்.

மரபு - குணம்; பழமை; முறைமை; வமிசம்; வழக்குமுறை; இயல்பு; பரம்பரை; இலக்கணம்; நல்லொழுக்கம்; பெருமை; மேம்பாடு; நியாயம்; வழிபாடு; பருவம்.

மரபுப்பெயர் - தொன்று தொட்டு வழங்கும் பெயர்.

மரம் - விருட்சம், மூலிகை, மரக்கலம், பறைவகை.

மராளம் - அன்னம், பாம்பு, மாதுளை.

மரித்தல் - சாதல், நினைத்தல்.

மரியாதை - கௌரவமான நடக்கை, சாதியாசாரம், நேர்மையானஒழுக்கம், சன்மானம், வரம்பு, நீதி, விதம்.

மருகன் - மருமகன், உடன்பிறந்தார் மகன், வழித்தோன்றல்.

மருங்கு - பக்கம், கண்ணோட்டம், குலம், கூறு, நூல்இடை, விலாப்பக்கம், எல்லை, இடம், சுவடு, சுற்றம்.

மருட்சி - அறிவின்மை, மயக்கம்

மருட்டல் - எத்துதல், மயக்குதல்.

மருட்டு - ஏய்ப்பு, மயக்கு, மயக்கென்னேவல்.

மருது - மருத மரம்

மருத்துவச்சி - பிரசவம் பார்ப்பவள்.

மருத்துவம் - ஒருவகை யாழ், வைத்தியம், மருந்து, பரிகாரம், பிரசவம் பார்க்கும் தொழில்.

மருத்துவர் - அச்சுவினி தேவர், வைத்தியர்.

மருந்துசாலை - மருந்துக்கடை, வெடிமருந்துக் கிடங்கு, மருந்துப்புரை.

மருப்பு - இஞ்சி, மரக்கொம்பு, விலங்கின் கொம்பு, யாழ்க்கோடு, யானைத்தந்தம், பிறையின் இருகோடு.

மருவல், மருவுதல் – அணைத்தல். கலத்தல், கிட்டல், சருவுதல். பொருந்துதல், தழுவுதல், புணருதல், தியானித்தல், பதித்தல்.

மருளல் – அஞ்சல், எழுத்திலா ஓசை, பேசலால் எழும் ஒலி, மயங்குதல், வெருளுதல், வியத்தல், ஒப்பாதல்.

மருள் – மயக்கம், ஆவேசம், உவமையுருபு, உன்மத்தம், ஒரு கிழங்கு, கள், குறிஞ்சியாழ்த் திறம், பிசாசம், மயக்கம், மருளென்னேவல், திரிபுணர்ச்சி, வியப்பு, புல்லுரு, புதல்.

மரை – ஒருவகை மான், தவளை, தாமரை, இரத்தினக் குற்றம், திருகுவகை, திருகுள்ளகாய்.

மர்மி – இரகசியத்தை வெளிவிடாதவன், தந்திரி.

மலங்கழித்தல் – உடல் மலத்தை வெளியேற்றுதல், ஆணவம் முதலிய மலம் நீங்குதல்.

மலடன் – பிள்ளையில்லாதவன்.

மலபந்தம் – மலச்சிக்கல்,

மலபரிபாகம் – பந்தபாசம் நீங்கிப் பக்குவம் அடைதல்.

மலம் – அழுக்கு, இரத்தம், கட்டம், கண்பீளை, கழிவு, கறள், குறும்பி, தாது, நகம், பந்தம், பவ்வீ, பாவம், மண்டி, மூக்குச்சளி, மூளை, வியர்வை.

மலர் – பூ, மலரென்னேவல், மலர்ச்சியானது.

மலர்ச்சி – அலர்ச்சி, எழுச்சி, களிப்பு, பொலிவு.

மலர்தல் – எதிர்தல், தோன்றல், நிறைதல், விரிதல், மொட்டவிழ்தல், அகலுதல், பரத்தல், மனமகிழ்தல், மிகுதல்.

மலிதல் – நிறைதல், பெருகல், விலை நயத்தல், மிகுதல், நெருங்குதல். புணர்ச்சியில்

மகிழ்தல், செருக்குதல், பரத்தல், சொல்லுதல்.

லிவு - நயம், மிகுதி, நிறைவு, தன்மை.

லை - உவமை, பருப்பதம், மலையென்னேவல்.

லைத்தல் - தடுமாறல், பொருதல், வருத்துதல்.

லைபடுதிரவியம் - மலையிலுண்டாகும் அகில், மிளகு, கோட்டம், தக்கோலம். குங்குமம் என்ற ஐவகை வாசனைப் பண்டம்.

லைப்பு - கூத்தின் விகற்பம், திகைப்பு, போர், மலைவு, அறிவு மயக்கம், மாறுபாடு, சம்பிரமம்.

ல்லர் - மற்போர் செய்வோர், வலியர்.

ல்லாத்துதல் - முதுகு கீழாக முகம் மேலாகக் கிடக்கசெய்தல்.

ல்லி - கொத்துமல்லி, மல்லிகை, மிகப் பருத்தவள், பருத்துத் தடித்தவள்.

ல்லிகை - ஒரு பூச்செடி, விளக்குத் தண்டு, பூங்கொடி, எருமை, முல்லை, இரப்போர் கலம்.

மழலை - இளமை, குழந்தைகளின் திருந்தாச்சொல், மென்மொழி, மெல்லோசை, புதுமை

மழுக்கம் - கூரின்மை, தோற்றமின்மை, மங்கல்.

மழுக்கல், மழுக்குதல் - அடித்தல், கூர்மை மழுங்கச்செய்தல்

மழுங்கல், மழுங்குதல், - ஒளி மழுங்கல். கூர்கெடுதல், பேர் குறைதல், பொலிவழிதல்.

மழுப்பன் - காரியத்தை மழுப்பிவிடுவோன், தாமதப்படுத்துவோன், குதர்க்கம் பேசுபவன்.

மழுப்புதல் - நெகிழவிடுதல், தாமதப்படுத்தல். ஏமாற்றுதல், வீண் பேச்சினாலே புரட்டுதல்.

மழை – குளிர்ச்சி, நீர், மாரி, மிகுதி, மேகம், கருகை, மேகத்தினின்று பொழியும் நீர், நீருண்ட மேகம், மழைக்கால்.

மழைக்கோளாறு – மழைத் தோற்றம், புயலெடுக்கை.

மழைப்புகார் – மழை முகில்.

மழையடைத்தல் – விடாமழை பொழிதல்.

மளமளப்பு – முறிதற் குறிப்புள்ள ஒலி.

மளிகை – பலசரக்குக் கடை.

மள்ளு – கைம்மரம்.

மறக்களம் – போர்க்களம்.

மறதி – நினைவின்மை.

மறத்தல் – அசட்டை பண்ணல், பொச்சாப்பு, விட்டுவிடல்.

மறநிலையறம் – நிரைமீட்டுப் பகைவென்று செஞ்சோற்றுக் கடன் கழியாதாரைத் தண்டித்துக் குறைவுறச் செய்தல், அரசன் பகையறுத்து நாட்டினைக் காவல் புரியும் அறச்செயல்.

மறம்–கலம்பகத்தின் ஓர் உறுப்பு, கெடுதி, கொலைத் தொழில், கோபம், சினம், நமன், பாவம், பிணவலி, வீரம், வலி; வெற்றி, போர், மறக்குடி, மயக்கம்.

மறி – அழுங்கு ஆடு குதிரை மான் இவற்றின் குட்டி, ஆடு, குதிரை, மான் இவற்றின் பெண், மறியென்னேவல், மான், மேடராசி.

மறித்தல் – தடுத்தல், திருப்புதல், அழித்தல்.

மறியல் – தடை, நிறுத்துகை, சிறை, வழக்கில் செய்யும் தடையுத்தரவு, காவற்கூடம்.

மறு – குற்றம், மச்சம், மறுவென்னேவல். மற்றை, மாசு, குறை, அடையாளம்.

மறுக்கம் – இக்கட்டு, சுழற்சி, மனக்குழப்பம், துன்பம்.

மறுதலித்தல் - மறுத்தல், வேறுபடல், மாறுபடுதல், மார்க்கத்தை விட்டு நீங்குதல்.

மறுத்தல் - கொடாமை, தவறு, நீக்கல், வெட்கம், ஆட்சேபித்தல், மாறுகூறுதல், தடுத்தல்.

மறுபிறவி - மறுபிறப்பு, புதுப் பிறப்பு.

மறுப்பு - மறுக்குதல், தடுத்தல், எதிர்த்தல்

மறுமணம் - கணவன் இறந்த பின் மீண்டும் செய்து கொள்ளும் திருமணம்.

மறுமை - மறுபிறவி, மறுவுலகம்

மறுமொழி - பதில், விடை.

மறை - அடைக்கலம், இரகசியம், இரண்டாம் உழவு, எதிர் மறுப்பு, ஒளிப்பிடம், கறை, கேடகம். சங்குச்சுரி, சொல், புள்ளி, மந்திரம், மறையென்னேவல், மறைவு, வேதம், மந்திராலோசனை, மறைக்கை, உபநிடதம், ஆகமம் களவுப் புணர்ச்சி, வஞ்சனை, விலக்குகை.

மறைதல் - ஒழித்தல், தோன்றாமற் போதல்.

மறைபொருள் - உட்பொருள்.

மறைமுதல் - கடவுள், சிவன், பிரணவம்.

மறைமொழி - வேதமந்திரம்.

மறையவர் - அந்தணர், துரும்பர், முனிவர்.

மறைவிடம் - ஒழிப்பிடம். வெளியிலிருந்து காணவியலாத இடம், கக்கூசு.

மறைவு - ஒதுக்கு, தோன்றாமை

மற்றது - அடுத்தது, பிறிது, வேறு.

மனக்கிடக்கை - உள்ளக்கருத்து மனக்கிடை.

மனக்குள்ளம் - வஞ்சகம்.

மனங்கரைதல் - நெஞ்சிளகுதல், பின் இரங்குதல், துக்கப்படுதல்.

மனத்துப்புரவு - மனச்சுத்தம்.

மனப்பூரணம் - முழுமனம், மனத்திருப்தி, மிகு களிப்பு, மனநேர்மை, மனப்பூரிப்பு.

மனவொடுக்கம் - மனவொன்றிப்பு, அமைதி, அடக்கம், மன ஒற்றுமை.

மனு - தருமநூல் பதினெட்டில் ஒன்று, மன்றாட்டு, விண்ணப்பம், மனுநீதிச்சோழன், மனுதர்ம சாத்திரம், மந்திரம், மனிதன், வார்த்தை.

மனுக்கள் - மனிதர்.

மனுநெறி - அறநூல்.

மனை - வீடு, மனைவி, இல்வாழ்க்கை, ஓர் அளவு, வெற்றிடம், குடும்பம், நற்றாய், சூதாடுபலகையின் அறை.

மனையறம் - இல்லறம்.

மனைவாழ்க்கை-இல்வாழ்க்கை

மனோரதம் - விருப்பம்.

மனோராச்சியம் - மனப்பால் குடித்தல்.

மன்மதன் - காமன்.

மன்றகம் - சபை, அவை, கூட்டம், சங்கம், கழகம்.

மன்றம் - சபை, நிச்சயம், நெடுந்தெரு, பலர்கூடும் வெளி, வாசனை, வெளி, பசுவின் தொழுவம், நியாயசபை, மரத்தடிப் பொதுவிடம், சிதம்பரம், வீடு, மெய்ம்மை.

மன்றாடுதல் - குறையிரந்து வேண்டுதல், வழக்காடுதல்

மன்றாட்டம் - வேண்டுகோள், தொந்தரவு.

மன்று- கனகசபை, சபை, நீதித்தலம், வெளி, பசுத்தொழு, மன்றம், வாசனை.

மன்னன் - அரசன்.

மன்னுயிர் - ஆன்மா, சீவன்.

மா – அசைச்சொல், அழகு, அழைத்தல், அறிவு, இடித்தமா, இடை, இலக்குமி, எதிர்மறை உபசருக்கம், ஐயவுபசருக்கம், ஓரசைச்சொல், ஓர் எண், ஓர் எழுத்து, ஒரு மரம், கட்டு, குதிரை, பன்றி, யானை, இவற்றின் ஆண், சரசுவதி, செல்வம், தாய், பரி, பிரபை, பெரிய, பெருமை, மகத்துவம், மரணம், மிகுதி, மேன்மை, வியங்கோளொடு வரும் அசைச்சொல்.

மாகந்தம் – மாமரம்,

மாகம் – ஆகாயம், மகநாள், மாசிமாதம், மேலிடம், சுவர்க்கம், திக்கு, மேகம்.

மாகாணி – வீசம், பதினாறில் ஒன்றான பின்ன எண்.

மாங்கலியம் – தாலி.

மாசம் – மாதம்.

மாசாலம் – மாயவித்தை, சிணுங்குகை.

மாசிகம் – மாத சிரார்த்தம்.

மாசு – அழுக்கு, அற்பம், கருமை, குற்றம், மழை, மறு, மேகம், இருள், பாவம், தீமை, விபரீதம், கண்ணின் காசபடலம்.

மாடம் – உப்பரிகை, உழுந்து, மண்டபம், வீடு, மாடக்கோயில், மாடக்குழி, குடிசை, ஒருநிறை.

மாடி – அரண்மனை, இக்கட்டு, இரணைப்பல், கோபம், தரித்திரம், குளிர், புடைவையோரம், மேல்வீடு.

மாடு – அகன்மணி, இடம், இரத்தினம், சீதனம், செல்வம், பக்கம், பசுப்பொது, பொன், எருது, ஏழனுருபு

மாட்சி மாட்சிமை – மகிமை, விளக்கம், இயல்பு, அழகு, பெருமை.

மாட்டுதல் – அடித்தல், இயலுதல், கடாவுதல், கட்டுதல், சம்

மதித்தல், செருகுதல், பூணுதல், மாழ்வித்தல், இணைத்தல், தொடுத்தல், கற்றுவல்லனாதல், வலிபெறுதல், அழித்தல், போக்குதல்.

மாணவன் -- பிள்ளை, மனிதன், மாணாக்கன்.

மாணாக்கன் – கற்போன்.

மாணிக்கம் – சிவப்புக்கல், செம்மணி.

மாண் – மாட்சிமை, மடங்கு, மாணென்னேவல்.

மாண்டார் – இறந்தார், பெரியோர், மாட்சிமையுள்ளவர்.

மாண்பு – அழகு, பெருமை, மாட்சிமை, நன்மை.

மாதம் – கடைதல், கராம்பு, கொல்லல், மகிழ்ச்சி, பாதை, பெருமை, மதம், மாசம்.

மாதரி – காளி, கண்ணகியைப் போற்றிய ஓர் இடைச்சி.

மாதர் – அழகு, ஆசை, இடைச்சொல், தலைவியர், பெண்கள், பொன், காதல்.

மாதவர் – முனிவர்.

மாதா – தாய்.

மாது – அசைச்சொல், பெண், விருப்பம், குற்றம், பெருமை, அழகு, காதல்.

மாதேவி - பார்வதி, செங்கழுநீர்

மாத்திரம் – அளவு, தனிமை, மட்டும், தும்பி.

மாத்திரை–கணப்போது, அளவு, பருவம், குளிகை, அற்பம், காதணி, காலநுட்பம், காலவிரைவு, குற்றுயிரெழுத்து, கண்ணிமைத்தல், மிகச் சுருக்கமான இடம், பாக்கியம்.

மாநவன் – மனிதன்.

மாந்தம் - மந்தத்தால் குழந்தைகளுக்கு வரும் கணைநோய், அசீரணம்.

மாந்தர் - ஆண்மக்கள், மனிதர்.

மாமகம் - மாமாங்கம்.
மாமணி - மாணிக்கம்.
மாயம் - அழகு, கறுப்பு, தந்திரம், தீமை, பொய், வஞ்சகம், கனவு, தூர்த்தன்மை.
மாயை - மூலப் பிரகிருதி, பொய்த்தோற்றம்.
மாய்தல் - சாதல், மடிதல் மறைதல், அழிதல், ஒளிமழுங்குதல், அறப்பாடுபடுதல்.
மாய்த்தல் - கொல்லல், மடித்தல், மறைத்தல், வருத்தல்.
மாரகம் - மரணம், மரணம் வருவிக்கிறது, மாரி, சாவு, கொடுமையான தொற்றுநோய்.
மாரகன் - கொல்வோன், அழிப்பவன், மரணத்திற்குக் காரணமான கிரகம்.
மாரடைப்பு - மூர்ச்சை, சூதகநோய், மார்பு நோவு.
மாரி - அழிவு, உவாதி, ஓர் ஒட்டுநோய், கள், கொலை, சாவு, நீர், முகில், மழை, மாரிக்காலம், புள்வகை, பூராடம், வைசூரி, மாரியம்மன்.
மாருதம் - கபற்று, வாயு.
மார்க்கம் - ஆராய்வு, உலகம், ஒரு கூத்து, கையாந்தகரை, சமயம், தெரு, மறுதலை, மார்கழி மாதம், மூலம், வழி, ஒழுங்கு, ஒழுக்கம், வம்சம், உபாயம், அகப்பொருட்டுறை, குதிரைக் கதி.
மார்த்தாண்டன் - எருக்கு, பன்றி, சூரியன்.
மார்பகம் - நெஞ்சு.
மார்பு - நெஞ்சு, வடிம்பு, முலை, தடாகம், அகலம்.
மாலிகை - மாலை, வரிசை, ஒரு மது, கழுத்தணி, நிரல்பட நிற்குங் கூட்டம், மகள்.
மாலை - அந்திப்பொழுது: அரசன் மனை, இயல்பு, இரா, ஒழுங்காயிருப்பது, ஒழுங்கு, சொல்,

பூ, பொன் முதலியவற்றாலாகிய மாலை, நோய், பெண், முறை, வரிசை, இருள், சமயம், குற்றம், பிரபந்த வகை.

மால் - அருகன், இந்திரன், கம்மாளர் கருவியின் ஒன்று, கருமை, காற்று, கொட்டில், சோழன், திருமால், பழைமை, புகர்நிறம், புதன், பெருமை, மயக்கம், மேகம், வலை, வீடு, வெற்பு, வேட்கை, காளவாய், எல்லை, இலாயம், சொத்து, அரண்மனை, ஆசை, காமம், காற்று, விட்டுணுக் கரந்தை.

மால்தொடை - துளசி.

மால்முருகு - துளசி.

மாவீரன் - அதிவீரன்.

மாளிகை - அரண்மனை, வீடு, மாடிவீடு, கோயில்

மாறல் - ஆடல், கொடுத்துவாங்குதல். தவிர்தல், மறுபுறமாக்கல், விடுதல், விற்றல், வேறாக்கல். முகாந்திரம்.

மாறாட்டம் - மயக்கம், மாறுபாடு.

மாறுதல் - விற்றல், வேறுபடுதல், குணமாதல், பின்வாங்குதல், சரிப்படுதல், நீங்குதல், முதுகிடுதல், கூத்தாடுதல், பொய்படுதல், இல்லையாதல், எண் பெருக்குதல், மறுத்தல்.

மாறுபடல் - விரோதித்தல்.

மாறுபாடு - வேறுவிதம், விரோதம், ஒவ்வாமை, புரட்டு.

மாற்றம் - சொல், பகை, விடை, வஞ்சினமொழி, மாறுபட்ட நிலை, பரிகாரம்.

மாற்றார் - பகைவர்.

மாற்று - எதிர், கிரயம், பொன் வெள்ளியின் தரம், மாற்றல், பண்டமாற்று, உவமை, பரிகாரம்.

மாற்றுதல் - மாற்றல். அழித்தல், கொடாது மறுத்தல், மற்றொன்றாதல், இடைவிடுதல்,

ஒழிதல், தாமதித்தல், வேறுபடுத்துதல், செம்மைப்படுத்துதல், நீங்குதல், மறுத்துரைத்தல், கெடுத்தல், ஒடுக்குதல், மறைத்தல், நாணயம் மாற்றுதல், பண்ட மாற்றுதல், இருப்பிடம் வேறு மாறுதல், பெருக்கிச் சுத்தஞ் செய்தல்.

மானக்கேடு - பெருமைக்கேடு, மானக்குறை, மானவீனம்.

மானம் - தன்மதிப்பு, அகங்காரம், அபிமானம், அளவு, உவமை, ஒருவிதப் பொருத்தம், கணிதம். குற்றம், நேசம், பிடிப்பு,பெருந்தன்மை, பெருமை, மரியாதை, வெட்கம், கௌரவம், கற்பு, புலவி, சபதம், அன்பு, பிரமாணம்.

மானம்பார்த்த பூமி - மழை நீராற் சாகுபடி செய்யப்படும் நிலம்.

மானவன் - மனிதன். பெருமையுடையவன். அரசன், படைத் தலைவன், வீரன்.

மானிடர் - மனிதர்.

மானியம் - அரசர்கள் நன்கொடையாக விட்ட நிலம்.

மானுடர் - மனிதர்.

மி

மிகு - பெரிய; மிக்க; உயர்ந்த; ஏண், மேலும்.

மிகுகொடையாளன் - கர்னன்: தியாகி.

மிகுதல் - அதிகப்படல்; கடத்தல்; பூரித்தல்.

மிகுதி - அதிகம்; திரட்சி, பூரிப்பு; பொலிவு; மதர்ப்பு, மீதி.

மிகுத்தல் - அதிகப்படுத்துதல்; விஞ்சுதல்; பெருக்குதல்; பெருமையாகக் கருதுதல்.

மிகை - குற்றம்; கேடு: துன்பம்; மிகுதி; வருத்தம்; சிறந்த பொருள்; மேன்மை; பெருமை:

மிஞ்சு பொருள்; அதிகப்படியானது; செருக்கு: தீச்செயல்: செய்கை; தண்டனை.

மிக்கார் - பெரியோர்; மேம்பட்டவர், மிக்கோர், பெரும்பாலோர், தீமை செய்பவர்.

மிடறு - கழுத்து; கீழ்வாய்; தொண்டை; ஒலியெழுங் கண்ட உறுப்பு, ஒருவாய் கொண்ட நீர்ப் பொருள்.

மிடி - மிடியென்னேவல்; வறுமை; துன்பம்.

மிடிமை - வறுமை.

மிடுக்கு - வலிமை, செருக்கு.

மிண்டு - மதம், சாத்துமிண்டு. மதத்தால் பிழைத்தல், மிண்டென்னேவல், முட்டு, தைரியம். துடுக்கு, இடக்கர்ப்பேச்சு, செருக்கிக் கூறும் மொழி.

மிதத்தல் - கிளர்தல், நீர் முதலிவற்றின் மேற்கிடத்தில், மேலெழும்புதல், மிகுதல், வீண் பெருமை பண்ணுதல்.

மிதப்பு - உயர்ச்சி, கிளர்வு, மேடு. மேற்படுகை.

மிதவை - சோறு, தெப்பம், குழை. கூழ், கும்மாயம்.

மிதி - அத்தாட்சி, அழகு, அறிவு, கிணற்றுமிதி, நெய்வார் கருவியில் ஒன்று, மிதித்தல், மிதியென்னேவல், படிக்கல், மிதித்துத் திரட்டப் பெற்ற கவளம், ஞானம்.

மிதித்தல் - உழக்கல், குதித்தல். அடிவைத்தல், காலால் துவைத்தல் அவமதித்தல்.

மிதியடி - பாதகுறடு, பாதுகை, செருப்பு.

மித்தியம் - பொய்.

மித்திரன் - நண்பன்.

மிரட்டல் - அதட்டல், பயமுறுத்தல், ஒட்டுதல், மயக்குதல்.

மிருகதஞ்சகன் - நாய்.

மிருகநாதன் - சிங்கம்.

மிருகம் - கத்தூரி, பன்றி, மான், மிருகசீரிடம், யானை, விலங் பொதுவேட்டை.

மிருதங்கம் - ஒலி, கலைஞானம் அறுபத்து நான்கின் ஒன்று, முழவு, மூங்கில். மத்தளம்.

மிருதாண்டன் - கதிரவன்.

மிருது - சாந்தம், நொய்மை, மந்தம், மழுங்கல், மென்மை.

மிருதை - பூமி.

மிலேச்சர் - சோனகர், மதிகேடர்.

மின்னல் - ஒளி செய்தல், மின்னல் விடுதல்.

மின்னுதல் - மின்னல்.

மீ

மீ - ஆகாயம்; உயர்ச்சி; மகிமை; மேற்புறம்: மேலிடம்.

மீகாமன், மீகான் - மாலுமி.

மீசை - மேலிடம், உதட்டின் மேற்புறத்து மயிர்.

மீட்சி - மீளுதல், திரும்புகை, கைம்மாறு, விடுதலை செய்கை.

மீட்டல் - அள்ளுதல், இரட்சித்தல், வீணைவாசித்தல், சிறையினின்று வெளியேற்றுதல், செலுத்துதல், அசையிடுதல்.

மீதி - கருஞ்சூரை, மிச்சம்.

மீளி - அரசன், திண்ணியன். நமன், பாலைநிலத் தலைவன், பெருமை, மேன்மக்கள், வலிமை, தலைவன், சேனைத் தலைவன், பெருமையிற் சிறந்தோன், வீரன். இளைஞன், பேய்.

மீளுதல் - திரும்புதல், இல்லையாதல்.

மீறல், மீறுதல் - அடங்காமற் போதல், மிகுதல், கடத்தல்.

மீனம் - ஓர் இராசி, மீன், பங்குனி.

மீன் - சித்திரைநாள். நெய்தற் பறை, மகரமீன், மச்சம், விண் மீன்.

முழு

முகங்கொடுத்தல் - இசைதல்; செவிசாய்த்தல்.

முகச்செழிப்பு - தாராளம்.

முகடு - உச்சி; சுவர்ப்புறத்து நீண்ட உத்திரம்; மலைவீடு முதலியவற்றின் உச்சி; வீட்டின் மேற்கூரை; முகட்டு வளை; அண்டமுகடு: உயர்வு: வாயில்; தலை முதுகுப்புறம்: பாழ்.

முகத்தலளவு - நாழி முதலியவற்றால் அளவு செய்தல்.

முகத்தல் - மணத்தல்; மொள்ளல்: அளத்தல்; விரும்புதல்: நிரம்பப்பெறுதல்; தாங்கியெடுத்தல்: மூக்கால் நுகருதல்.

முகத்துவாரம் - கடலும் ஆறும் பொருந்தும் இடம்; முகப்பு: வாயில்.

முகநகை - முகமலர்ச்சி.

முகநட்பு - பொய் நட்பு

முகப்படுதல் - முன்தோன்றுதல்

முகப்பு - தலைப்பு; முற்பகுதி; முகத்தல்: முகனை: மூட்டு: முன்னிலை; வீட்டு முன்கூரைக் கட்டிடம்: ஆபரணப் பொருத்துவாய்.

முகப்பூச்சு - முகமன்.

முகமறிதல் - முகப்பழக்கமாதல்

முகமன் - உபசாரமொழி.

முகமுறிவு - வெறுப்பு.

முகமூடி - பிறக்கும் பொழுது குழந்தையின் முகத்தை மூடியுள்ள பை: முக்காடு: பிணத்தின் முகத்தை மூடும் ஆடை.

முகம் - இடம்; சந்தி; தொனி; பருவின் முகப்பு: புறம்: முந்தல்: வதனம்; வாய்: வாயில்: வேதம்; முன்புறம்; கழி; நுனி: தொடக்கம்: நோக்கு; தியானம்; முகத்துதி; முன்பு: இயல்பு; கூத்து; முதன்மை; பக்குவம்: மூலம்; இந்திர கோபம்.

முகவிகாரம் - முகவேறுபாடு.

ுகாந்தரம் - ஏது; நியாயம்; ுலம்: காரணம்; வேறு விடயம்.
ுகாமை - முதன்மை.
ுகாமைக்காரன் - முன்னின்று நடத்துவோன்.
ுகிழ் - அரும்பு: காம்படி; முகி ுழன்னேவல்; குவிதல்; முகிழ்ப் றம்; தேங்காய் முதலியவற் ின் மடல்: தயிர் முதலியவற் ின் கட்டி; முகுளம்.
ுகிழ்த்தல் - அரும்புதல்; குவி தல்.
ுகிழ்நகை - புன்சிரிப்பு; புன் முறுவல்.
ுகுடம் - மூடி; மகுடம்; முடி உறுப்பு ஐந்தினுள் ஒன்று.
ுகூர்த்தம் - மூன்றே முக்கால் நாழிகை; நல்வேளை.
ுக்கல் - உண்டல்; பேசலால் எழும் ஒலி, முக்குதல்; பெரு முயற்சி; துர்நாற்றம்.
ுக்கனி வாழை மா பலா ஆகியவற்றின் கனி.
ுக்காலமறிந்தவன் - கடவுள்
ுக்காலம் - இறப்பு; நிகழ்வு; எதிர்வு.
ுக்கியம் - பிரதானம்; மேன்மை: முதன்மை.
ுக்குதல் - நிரம்பவுண்ணுதல்: மூழ்குவித்தல்; திணறுதல்.
ுக்குற்றம் - காமம் வெகுளி மயக்கம்.
ுக்கோணம் - மூன்றுமூலை வடிவம்.
ுசுக்கட்டை - கம்பளிப்பூச்சி.
ுசுட்டை - ஒருவகைக் கொடி.
ுசுமுசுக்கை - ஒரு கொடி.
ுசுமுசுத்தல் - குறட்டைவிடல்; நீர் முதலியன கொதித்தல்; தினவெடுத்தல்; உறிஞ்சுதல்.
ுச்சிரம் - சூலம்.
ுச்சி - தலை உச்சி; கொண்டை முடி; சிறுசுளகு; உச்சிக் கொண்டை; சூட்டு: வேலை யாள்; வர்ணக்காரன்.

முச்சுடர் - ஞாயிறு; திங்கள்; தீ

முடக்கம் - தடை; வளைவு; முடங்குதல்; அடக்கம்.

முடக்கொற்றான் - ஒரு பூண்டு

முடக்கு - மடக்கு; முடக்கென் னேவல்: விரலணியில் ஒன்று; வளைவு: நாக்கு: தெருவின் கோணம்; தடை; தாமதம்; கோபம்; வேலையின்மை; நோய்வகை.

முடங்குதல்- சுருங்குதல்: வழங் காமற்போதல்; தடைப்படுதல்; வளைதல்.

முடவன் - அருணன்; சனி; நொண்டி.

முடிச்சு - கழுத்தின் முடிச்சு; தீர்த்தற்கரிய தந்திரம்; முடித் தல்; முடியப்பட்டது; முட்டு; கட்டு; மயிர்முடி; சிறுமூட்டை; கணு; மகளிர் காதணி வகை.

முடிதல் - கட்டுதல்; கெடுதல்; சாதல்; தொடுத்தல்; முற்றுதல்.

முடித்தல் - அழித்தல்; கெடுத் தல்; சூடுதல்; முற்றுவித்தல்; நிறைவேற்றுதல்; கட்டுதல்: சூட்டுதல்.

முடிபு - தீர்மானம்; கருத்து; முடிவு; முற்றும்.

முடிப்பு - தீர்மானம்; முடிச்சு: முற்றான தொகை: பணமுடிச்சு; கட்டு; முடிபோடுகை; தலையில ணியும் பொருள்; சொத்து.

முடிமயிர் - தொற்று வைக்கும் மயிர்.

முடியாமை - கட்டுப்படாமை; முற்றாமை; இயலாமை.

முடியிறக்குதல் -பிரார்த்தனை யாக மயிர் கழித்தல்: அவமா னஞ் செய்தல்.

முடிவில்லாமை - என்றும் அழி யாமை.

முடிவு - கடை: சாவு; இறுதி; நிறைவு; தீர்மானம்: பயன்; இசைப் பாகுபாடு: எல்லை.

முடிவுரை - கடைக்காப்பு.

முடை - ஓலைக்குடை; தீயவாசனை; நாற்றம்; புலால்; முடையென்னேவல்; நெருக்கடி; குடையோலை; தவிடு.

முடைதல் - இளைத்தல்: நிணத்தல்; பின்னுதல்.

முட்டல் - உதைத்தல்: கிட்டல்.

முட்டாள் - பருவேலைக்காரன்: மூடன்.

முட்டி -ஆயுதப்பிடி; எட்டிமரம்; ஒரு பலம்; ஒரு செடி: ஒரு பிடி; கலசம்: கலைஞானம் அறுபத்துநான்கின் ஒன்று; கைப்பொத்து; சம்மட்டி; பிச்சை; முடக்கியகை: பேராமுட்டி; பேய்க்கொம்மட்டி; சிப்பிவகை.

முட்டியடித்தல் - திண்டாடுதல்

முட்டு - அடைப்பு; அரண்வளைதல்: கடிவாளம்: குறைவு; தடை; தளவாடம்; நெருக்கம்: பூப்பம்; முட்டுதல்; முட்டென்னேவல்; முழந்தாள்: மேடு: வருத்தம்; தீட்டு; இடையூறு: குவியல்: தாக்குகை; முட்டுப்பாடு: அருமை; மாதவிடாய்; பற்றுக்கோடு.

முட்டுக்கட்டை - மிண்டுதடி; எதிர்க்கட்டை.

முட்டுப்பாடு - இலம்பாடு; திக்குமுக்கடைதல்; தீமை; நெருக்கிடை, வருத்தம்.

முட்டை - அண்டம்: ஒரு நோய்: தவிடு: அண்டகோளம்; தேகம்; சாணங்கொண்டு தட்டியவரட்டி: சிறுகரண்டி.

முண்டம் - உடற்குறை; உபநிடதம் முப்பத்திரண்டில் ஒன்று: குற்றி: தலை; திரட்சி: நெற்றி; தலையற்றவுடல்; நிரம்பாதகருப்பிண்டம்; நிருவாணமான உடல், வழுக்கைத்தலை; பிட்டு; கணுக்காற் பொருத்து; மரத்துண்டு.

முண்டி – நாவிதன்; முண்டியென்னேவல்: மொட்டைத் தலையன்.

முண்டு – உள்வேட்டி; முரண்டுத்தனம்; மூடத்தனம்: முனைந்தெதிர்த்தல்: மரம் முதலியவற்றின் கணு: சிறுதுணி; முரட்டுத்தனம்; மடமை; திரட்சி; உடற்சந்து; சிறுகட்டை; திமில்: துடுப்பு.

முண்முருக்கு-ஒருவகை முருக்கு

முதலாளி – முதன்மைக்காரன்; மூலதனமுள்ளவன்: சொந்தக்காரன்; நிலமுடையவன்; தலைவன்.

முதலி – முதல்வன்: தலைவன்: பெரியோன்; முதலியார்: தாழை; சீமை: இலுப்பை.

முதலீடு – முதலில் இடுகை; முதலில் இட்டபொருள்: ஆண்டின் முதல் அறுவடை; வாணிகமுதல்; முதற்செலுத்துந் தொகை.

முதலெழுத்து – உயிரும் மெய்யமாகிய முப்பதெழுத்து.

முதலை – செங்கிடை; வன்மீன்; நீர்வாழ் பிராணி; இறகின் அடிக்குருத்து.

முதல் – ஆதி; ஏழின் உருபு; கடவுள்: முதலென்னேவல்: வட்டிக்குக்கொடுக்கும் பணம்; வாணிகஞ் செய்யும் முதற்பணம்.

முதல் வள்ளல் - குறிப்பறிந்து கொடுப்போர்.

முதல்வன் – அரசன்; அரன்: அருகன்; எல்லாப் பொருட்குங் காரணனான கடவுள்; முதலாளி முன்னவன்; தலைவன்: தந்தை

முதற்காரணம் – காரணத்திற்கு முதன்மையாக இருப்பது.

முதற்பொருள் – கடவுள்: மூலதனம்.

முதன்மை – முதலாவதாக நிற்பது.

முதியர் – மூத்தோர்; கற்றோர்; பெரியோர்.

முதிரை – அவரை; ஒருமரம்; காராமணி; கொள்ளு: துவரை முதலியன.

முதிர்ச்சி –முதிர்வு; மேட்டிமை: பக்குவம்: செருக்கு.

முதிர்தல் – காய்தல்; தேறுதல்: பழுத்தல்: வறத்தல்: முற்றுதல் முற்படுதல்: பக்குவமாதல்; உலர் தல்: சூழ்தல்.

முதிர்ப்பு – கலக்கம்; முதிர்ச்சி; முற்றல்,

முதுகாடு – சுடுகாடு; பிறங்கியல்; இடுகாடு.

முதுகு – உரப்பு: பின்புறம்.

முதுசொல் – பழஞ்சொல்; மூதுரை.

முதுமகன் – சனி: வயது சென்றவன்: முப்பதுக்கு மேற்பட்ட பிராயமுள்ளவன்.

முதுமை பழைமை; பழமொழி: மூப்பு: முதுமொழி: முற்றின தன்மை: முதுகாஞ்சி.

முதுமொழி – பழமொழி; அறிவுரை; பழஞ்சொல்.

முத்தன் – அரன்; அருகன்: சுத்தன்: புத்தன்; வீடுபேற்றிற் குரியோன்; வைரவன்.

முத்திபதம் – மோட்ச பதவி: ஞானநிலை.

முத்திரை – அடையாளம்: இலாஞ்சனை; தபால் முத்திரை முதலியன; அடையாளவில்லை; நூல் இறுதியில் வரும் ஆக்கியோன் பெயர்ப்பதிவு; அபிநயக் குறி.

முத்து – ஓர் இரத்தினம்; சங்கு முதலியவற்றின் முட்டை: பருப்பு: பிரியம்; மேலானது: வைசூரிக்கரு; ஆமணக்குவிதை; கண்ணீர்: முத்தம்; வெண் குருகு.

முந்துதல்– மேல் எழுதல்; விரைதல்; எதிர்ப்படுதல்; முதன்மையாதல்; சிறத்கல்; பழைமையாதல்.

முந்துநூல் –முதல் நூல், வேதம்

முந்நாடு – சேரசோழ பாண்டிய நாடுகள்.

முந்நூல் – பூணூல், முதனூல் வழிநூல் சார்புநூல் என்னும் மூவகை நூல்.

முப்பகை – காமம், வெகுளி, மயக்கம்.

முப்பால் – முப்பகுதி, ஆண்பால், பெண்பால், அலிப்பால், காய்ச்சுப்பால், திரட்டுப்பால், குழம்புப்பால், திருக்குறள், அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று பகுப்புக்கள், தாய்ப்பால், பசுவின் பால், ஆட்டுப்பால்.

முப்புடைக்காய் – தேங்காய்.

முப்புரமெரித்தோன் – சிவன்.

முப்புரம் – திரிபுரம், அவை இரும்புமதில், பொன்மதில், வெள்ளிமதில்: மண், பெண், பொன், ஆசை.

முப்புள்ளி – ஆய்த எழுத்து

முப்பொறி – மனம் வாக்குக் காயம்.

மும்மண்டலம் – பூமி, அந்தரம், சுவர்க்கம்.

மும்மலம் – ஆணவம், கன்மம், மாயை.

மும்முரம் – உக்கிரம், கொந்தளிப்பு, கடுமை, விரைவு, ஆடம்பரம், கவனம்.

மும்மை–முக்காலம், முற்பிறப்பு, மூன்றாயிருக்குந்தன்மை, மூன்று, மும்மை இம்மை மறுமை, இறப்பு, நிகழ்வு, எதிர்வு.

முயலல் – முயலுதல்.

முயற்றிசை – வடகீழ்த்திசை.

முரசு – மேளம், உத்திரட்டாதி நாள், பல்லின் ஈறு, பேரிகை, வாச்சியப்பொது.

முரடன் - முரட்டாள், மரியாதை தெரியாதவன், பிடிவாதக் காரன்.

முரடு - மரக்கணு, கரடு, பதமையின்மை, முனி, சரீரத்தின் மூட்டு, பிடிவாதம், பருமன்.

முரட்டடி - இணக்கமற்ற குணம், முரட்டுக்குணம், முரட்டுத்தனம்.

முரண் - வலி, மாறுபாடு, அறியாமை, முரனென்னேவல்.

முரண்படுதல் - மாறுபடுதல்.

முரண்மொழி - எதிர்மொழி.

முரல் - ஒருவகை மீன், முரலென்னேவல்.

முராரி - திருமால்.

முரிதல் - ஒடிதல், கெடுதல், தோற்றல், பின்னப்படுதல், வளைதல்.

முரித்தல் -ஒடித்தல், கெடுத்தல், தோல்வி, நகை, இலங்குகை, செய்தல், முறித்தல்.

முரிவு - ஒடிவு, மடிப்பு, முறிவு, ஒடிகை, சுருங்குகை. நீங்குகை, வருத்தம், ஊழ்.

முருகயர்தல் - முருகக் கடவுளுக்குப் பூசை செய்தல், வெறியாடுதல், விருந்திடலாகிய வேள்வி செய்தல்.

முருகன் - இளையோன், குமரன்.

முருகு - அகில், அழகு, இளமை, முருகன், எலுமிச்சை, எழுச்சி, காதணியின் ஒன்று, குமரன், திருவிழா, தேன், குமரன், திருவிழா, தேன், வாசனை, முருங்கை, தெய்வம், வேள்வி, பூத்தட்டு, விறகு, திருமுருகாற்றுப் படை.

முருகை - ஒருவகைக் கல்.

முருக்கு - முருக்குமரம், எலுமிச்சை, கிஞ்சுக மரம், கொலை, முருக்கென்னேவல்.

முலைக்கண் - சூதகம், முலைக் காம்பு.

முல்லை - இசை, ஐந்நிலத் தொன்று, அது காடுங் காடு சார்ந்த இடமும், ஒரு மரம், கற்பு, காமன் கணையில் ஒன்று, முல்லைக்கொடி, வனமல்லிகை, வெற்றி.

முல்லைத்தெய்வம் - திருமால்.

முழக்கம் - ஆரவாரம், ஒலி, குமுறுகை, முகிலின் ஒலிப்பு.

முழங்கல் - ஒலித்தல், குமுறல்.

முழம் - இருசாண் கொண்ட முழங்கை நீள அளவு.

முழாசு - சுவாலை.

முழி - விழி.

முழித்தல்-விழித்தல், பார்த்தல்.

முழுக்கு - மாதவிடாய், முழுகல், நீராடல்.

முழுத்தம் - முகூர்த்தம்.

முழுமனை - அறுபதடி நீளமும் நாற்பதடி அகலமுங்கொண்ட நிலம்.

முழுமூச்சு - விடாத் தீர்மானம், மூச்சுத் திணறுகை.

முழுமை - எல்லாம்.

முளை - அங்குரம், ஆப்பு, தண்டாயுதம், தறி, பருவின் முளை, மகன், முளையாணி, முளையென்னேவல், மூங்கில், முளைப்பது, இளமை. மரக்கன்று, குறுந்தறி, முனை, வித்தினின்று வெளிப்படுவது, மூலமுளை

முளைதெளித்தல் - சுபச் சடங்கில் பாலிகைகளில் நவதானியம் விதைத்தல்.

முளைப்பு - முளைத்தல்.

முள் - நுண்மை, முள்ளு

முள்ளி - முள்ளிச்செடி, முள்ளுள்ள செடி, கத்திரி வகை, மருதோன்றி, தாழை, கள்.

முறம் - சுளகு, விசாகநாள்.

முறி - அடிமை, இலை, உயர்ந்த வெண்கலம், எழுதுமுறி, ஒருவகைப் புடைவை, தளிர், துண்டு,

முறியென்னேவல், மூலைமுறி, பத்திரம்.

முறிதல் - திறைதல், முரிதல், ஓடிதல், குலைதல், தோற்றல், கெடுதல், தளிர்த்தல்.

முறுகல், முறுகுதல் - கடுமைப் படல், திருகல், முதிர்தல், வேகங் கொள்ளுதல், செருக்குதல்.

முறுவல் - எயிறு, நகைப்பு, பல், புன்னகை, மகிழ்ச்சி.

முறை - இடைச்சொல், உறவொழுங்கு, ஒழுக்கம், ஒழுங்கு, கிராமம், குணம், தரம், பழமை, புத்தகம், முறைமை, முறையீடு, வரிசை, அடைவு, ஊழ், தன்மை, கற்பு, நியமம், தடவை, ராசநீதி, கூட்டு, நூல்.

முறைகேடு - தவறு, நீதித்தவறு, தகுதியற்ற செயல், ஒழுங்கீனம், துர்நடத்தை.

முறைத்துப்பார்த்தல் - ஏற விழித்து நோக்குதல்

முறைப்பாடு - முறையீடு, அரசிறை.

முறைமை - ஒழுங்கு, கட்டளை, கிரமம்.

முறையீடு - நீதி வேண்டி முறையிடுகை.

முற்பக்கம் - முன்பகுதி, வளர்பிறை.

முற்படுதல் - எதிர்ப்படுதல்

முற்றம் - முன்றில், வீட்டுமுன்னிடம், பரப்பு.

முற்றல் - காழ்கொள்ளல், முடிதல், முதிருதல், மூப்பு, வளைத்தல், வளைவு, வெறுத்தல், வயிரங் கொள்ளுகை, திண்மை.

முற்றுகை - குறைவு, நெருக்கம், முற்றுதல், கோட்டை முதலியவற்றை வளைக்கை, சூழுகை, நிறைவேற்றுகை, நெருக்கடி.

முற்றுதல் - முடிதல், முதிர்தல், வளைதல், வைரங்கொள்ளுதல், நிறைவேறுதல்.

முனி – இருடி, புத்தன், வில், யானைக்கன்று, அகத்தி, தவத்தோன். பலாசு, முனியென்னேவல்.

முனிதல் – சினத்தல், வெறுத்தல், கோபித்தல்.

முனிவர் – அந்தணர், சடைமுடியோர், தவத்தோர், இருடிகள், பதினெண் கணத்துள் ஒரு தொகுதியினர்.

முனிவு – கோபம், வெறுப்பு, வருத்தம், முயற்சி.

முனை – துணிவு, நுனி, பகை, முதன்மை, முனையென்னேவல், போர்முனை, வெறுப்பு, பகைப்புலம், முற்படுதல், முன், முகம், தலைமை, கடலுள் செல்லும் நீண்டு இருக்கும் தரைப்பாகம்.

முனைத்தல் – எதிர்த்தல், காரியத்தில் முற்படுதல்.

முனைமுகம் – போர்முகம்.

முன் – பக்கம், பழைமை, முதல், முன்பு, முன்னென்னேவல், மேல், மனக்குறிப்பு, ஓர் உருபு

முன்சொல் – பழமொழி.

முன்பணம் – அச்சாரத்தொகை.

முன்றில் – முற்றம், வீட்டு முன்னிடம்.

முன்னடைப்பன் – அசைபோடாமற் செய்யும் மாட்டுநோய் வகை.

முன்னணி – முற்படை.

முன்னர் – ஆதி, இடம், நெஞ்சு, முன்.

முன்னவன் – கடவுள், சிவன், தமையன், முதலானவன்.

முன்னாடி – முன்னமே, முன்னாலே.

முன்னிலை – காரணம், மூவிடத்தொன்று.

முன்னிற்றல் – உதவுதல், முன்னேநிற்றல், முன்தோன்றுதல்,

துணைநிற்குதல், தலைமை வகித்தல், பொறுப்பேற்றுக் கொள்ளுதல்.

முன்னுக்கு வருதல் - வளர்ச்சியடைதல், உயர்நிலையடைதல்.

முன்னேறுதல் - முந்துதல்.

முன்னேற்றம் - வளர்ச்சியடைதல்.

முன்னையோர் - பழையோர்.

முன்னோன் - அருகன், கடவுள், தமையன், ஆனைமுகன்.

மூ

மூ - ஓர் எழுத்து, மூப்பு, மூன்று, மூவென்னேவல்.

மூக்கடைப்பான் - நீர்க்கோள் அடைப்பு, மூக்குநோய் வகை, மாட்டு நோய்வகை.

மூக்கறை - மூக்கின்மை, குறை மூக்குள்ளவன், மூக்கறையன்.

மூக்கறைச்சி - அரிதாரம், ஒரு செடி.

மூக்கு - மனிதமூக்கு, பறவை மூக்கு, வேறு உயிர்ப் பொருள்களின் மூக்குகள், நாசி, பறவையலகு, யானைத் துதிக்கை, வித்தின் முனை, இலைக்காம்பு, குறுநொய், முரட்டுப் பேச்சு.

மூச்சு - ஆண்மை, உயிர்ப்பு, சுவாசம், பலம்.

மூடபத்தி - காரணமறியாமற் செய்யும் பக்தி.

மூடம் - அறிவின்மை, எட்டு மரக்கால் கொண்ட ஓர் அளவை. ஐயம், குளிர், மந்தாரம், மயக்கம், மறைந்த இடம்.

மூடி - கொத்தமல்லிப் பூண்டு, மூடப்பெண். மேன்மூடி.

மூடை - குதிர், பொதிப்பை, மூட்டை.

மூட்டம் – ஆயத்தம், உலை முகம், கம்மாளர் கருவி. மூடியிருப்பது. விறகு, மேகமூட்டம், மூடுதழல், மூடிய தானியக்குவை. சொக்கப்பனை.

மூட்டு – எழுச்சி, கடிவாளம், கோள், பொருத்து, மூட்டென்னேவல், மூடுகின்ற பொருள்.

மூட்டுசாட்டு – கோள்.

மூட்டை - மூட்டைப்பூச்சி, சரக்குப்பை, பொதி, ஒரு சாக்களவு, பெரும் பொய்.

மூதறிஞர் - பேரறிவுடையோர்.

மூதுணர்வு – பேரறிவு.

மூதுரை – பெரியோர் வாக்கு, நீதி மொழி, வேதம், பழமொழி.

மூதேவி – சேட்டை.

மூத்திரக்குண்டிக்காய் - இரத்தத்திலுள்ள கெட்ட நீரைப் பிரித்து மூத்திரமாக்கும் உடல் உறுப்பு.

மூத்திரசுக்கிலம் – வெட்டை நோய்.

மூத்திரம் – சிறுநீர்.

மூத்தோர் - புலவோர், அமைச்சர், முதியோர்.

மூப்பன் – பறையரில் தலைவன், முதன்மைக்காரன், சாதியாரின் தலைமைக்காரன், சில சாதியாரின் பட்டப்பெயர்.

மூப்பு - தலைமை, முதுமை,

மூர்க்கம்–உக்கிரம், கடுஞ்சினம், சலஞ்சாதித்தல், நாகப்பூச்சி, கொண்ட கருத்து விடாமை, மூடத்தன்மை, பிடிவாதம், முரட்டுப்பலம். நாகபாம்பு.

மூர்ச்சை – நெட்டுயிர்ப்பு, கமகம்பத்தனுள் ஒன்று.

மூர்ச்சித்தல் - நினைவு மயங்கிக் கிடத்தல்.

மூர்ச்சை – அறிவு மயக்கம், வாட்டம்.

மூர்த்தி - அருகன், உடல், உருவம், சிவன், தலைவன், தேவன், புத்தன், பொருள், மாதிரி.

மூர்த்திகரம் - தெய்வீகம், தெய்வச் செயல்.

மூலகாரியம் - முதற்காரியம்.

மூலக்கூறு - பொருள்களின் அடிப்படையான தத்துவம்.

மூலதனம் - முதற் பொருள், ரொக்கப்பணம்.

மூலப்பொருள் - கடவுள்.

மூலம் - வேர், அடி, ஆதி, உரையில்லாப்பாடம், ஒருநாள், ஒரு நோய், காரணம், கிழக்கு, சமீபம், சொந்தம், தலைமை, பாதம், மூலாதாரம், வாயில், பிரதானம்,

மூலவாயு - குடலில் வாதத்தினால் உண்டாகும் நோய்.

மூலவெழுத்து - ஓம் என்னும் பிரணவம்.

மூலிகை - மருந்துப்பூண்டு, மருந்து வேர், செடிகொடி.

மூவாசை - மண் பெண் பொன்னாசை, சலத்தின்மேல் மூடும் சீலை.

மூழ்கல் - அமிழ்தல், கெடுதல்.

மூஷிகம் - பெருச்சாளி, கொல்லத்துக்கும் குமரிக்கும் இடைப் பட்ட நாடு.

மெ

மெதுமெதுப்பு - நுகைவு, மெதுத்தன்மை.

மெத்துதல் - மிருதல், அப்புதல், நிரப்புதல்.

மெத்தை - ஒரு பூண்டு. அமளி, சட்டை, மேல்வீடு, படுக்கை, பஞ்சணை, துயிலிடம், தோலிடும்சாதனம், மாடிவீடு.

மெய் - உடல், உண்மை, ஒற்றெழுத்து, சொல். சொற்

பொருள், உணர்ச்சி, ஆன்டா, மார்பு.

மெய்க்காவல் - பாதுகாக்கை, சிறை.

மெய்க்கொள்ளல் - நம்புதல்.

மெய்சிலிர்த்தல் - மயிர்க்கூச் செறிதல், புளகாங்கிதம்.

மெய்ஞ்ஞானம் -உண்மையறிவு.

மெய்ஞ்ஞானி - தத்துவஞானி.

மெய்ப்படுத்தல் - உண்மைப் படுத்தல்,

மெய்ப்பித்தல் - உண்மையை எடுத்துக் காட்டுதல்.

மெய்ப்பொருள் - உண்மை, கடவுள், உண்மையான செல்வம், மெய்ப்பொருள் நாயனார்.

மெய்ம்மை - உண்மை, கருத்து, நினைவு.

மெய்யுணர்வு - உண்மையறிதல், நல்லறிவு.

மெய்யுரை - நூலுக்குப் பொருத்தமான உரை, உண்மை மொழி, சத்திய வாசகம், இது வாக்கின் நற்குணம் நான்கில் ஒன்று.

மெலிதல் - இடைதல், இழைத்தல்.

மெலிவு - இளைப்பு, வருத்தம், தளர்ச்சி, களைப்பு, துன்பம், தோல்வி, கொடுமை, படுத்தலோசை.

மேகவண்ணன் - திருமால்.

மேகவாயு - ஒரு நோய்.

மேடம் - ஆடு, ஆட்டுக்கடா, ஓர் இராசி, சித்திரை, கலசம்.

மேடு - உயர்ச்சி, ஊர், திடர், வயிறு.

மேடை - உப்பரிகை, மேடாக வகுக்கப்படடது, வேதிகை, தளம், உயர்ந்த இடப்பகுதி, செய்குன்று, மாடி, மேத்தியம், பரிசுத்தம்

மேதாவி - அறிவு, உணர்வு, கிளி,

பண்டிதன், அறிவுள்ளவன்.

மேதினி – பூமி.

மேதை – அறிஞன், அறிவு, இறைச்சி, கள், தோல், நிணம், புதன், பேரறிவு, பொற்றலைக் கையாந்தகரை, மேன்மை, பேரறிவாளி, சோடச கலையுள் ஒன்று.

மேம்பாடு – புகழ், மேன்மை.

மேய்ச்சல் – விலங்குணவு, புற்தரை, தீனி.

மேய்தல் – உண்டல், மூடல், விலங்கு முதலியன உணவுகொள்ளுதல், பருகுதல், கெடுத்தல், மேற்போதல், சஞ்சரித்தல், விடனாய்த் திரிதல், அபகரித்து அனுபவித்தல்.

மேவங்கி – மேற்சட்டை, கவசம், உறை.

மேலவர்இறைவன் – இந்திரன், முருகன்.

மேலுலகம் – பூலோகம் முதல் ஏழு உலகங்கள், வானுலகு.

மேலெழுத்து – சாட்சிக் கையெழுத்து, மேல் விலாசம், அரசியற் கணக்கதிகாரி, மேலதிகாரி அனுப்பும் கடிதம்.

மேலோர் – அறிஞர், புலவர், பெரியோர், வானோர், மேலிடத்தோர், உயர்ந்தோர், முன்னோர்.

மேல்காற்று – கோடைக்காற்று.

மேல்விழுதல் – வலியப்புகுதல், ஊக்கத்துடன் காரியத்தில் முந்துதல்.

மேவாமை – பொருந்தாமை.

மேற்கட்டு – மேல்வீடு.

மேற்கோள் - உதாரணம், சனி, பார்வை, முன்னோர் வழக்கு, மேன்மை.

மேற்படல் - அதிகப் படல், மேன்மைப்படல், வெல்லுதல்,

மேற்றிசை – மேற்கு.

மேற்றிராணி - அதிகாரம், அதிகாரி, கிறிஸ்துவக் கண்காணியார்.

மேனி - அங்கம், அழகு, உடல், உருவம், காந்தி, குப்பைமேனி, நிறம், மினுக்கு, வடிவம், நன்னிலைமை, நிலத்தின் சராசரி விளைவு.

மேனிலை - மேல்மாடி, முன்னர் உள்ளது.

மேன்மக்கள் - பெரியோர்.

மேன்மை - பெருமை, மேலாந் தன்மை.

மை

மை - அஞ்சனம், இருள், எழுதுமை, ஓரெழுத்து, கறுப்பு, குற்றம், செம்மறியாடு, நீர், மலடி, மலட்டெருமை, மேகம், மேட இராசி, மையென்னேவல், வெள்ளாடு, தீவினை, மசி, மந்திரமை, வண்டிமை, கருநிறம், களங்கம், பசுமை பாவம், அழுக்கு, மலடு, இளமை, பன்மைப் பொருள் விகுதி.

மைதானம் - வெட்டவெளி.

மைத்துனி - மனைவியின் உடன் பிறந்தாள், அத்தைமகள், சகோதரன் மனைவி.

மைந்தன் - ஆண்மக்கள், மனிதர், மகன், மாணாக்கன், வீரன், திண்ணியன், கணவன்.

மையம் - நடு

மையல் - உன்மத்தம், காம மயக்கம், மோகம், பித்து, செருக்கு, யானையின் மதம்.

மையிடுதல் - மைதீட்டுதல்.

மைனா - ஒரு பறவை.

மொ

மொக்கு - பூ மொட்டு, மரத்தின் கணு, மொட்டு வேலைப்பாடு, பூக்கோளம், குத்துவிளக்கின் தகழி.

மொங்கான் – இடிகட்டை, பெருத்துக் கனத்த பொருள்.

மொசுமொசுக்கை – முசுமுசுக்கை.

மொட்டு – அரும்பு, தேரின் கூம்பு, ஆண் குறியின் நுனி, வெறுமை, இளமை.

மொட்டையடித்தல் – முழுதுங் கொள்ளையடித்தல்.

மொத்து – அடி, மொத்தென் னேவல், மூடமானவன், சுறு சுறுப்பில்லாதவன்.

மொய்த்தல் – நெருங்கல், மூடு தல், இருத்தல், சூழ்தல், துன் புறுத்தல், கெடுத்தல்.

மொய்யெழுதுதல் – திருமணம் முதலியவற்றில் நன்கொடை அளித்தல், தருமத்திற்குச் சிறு தொகை உதவுதல், கொடுத் துத் திரும்பக் கிடையாதன வற்றைச் செலவாக எழுதுதல்,

மொழி – சொல், மொழியென் னேவல், கட்டுரை, பாஷை, வாக்குமூலம், பொருள், பொருத்து, கணு.

மோ

மோ – ஓர் எழுத்து, முன்னிலை யசைச்சொல், மோத்தல், மோவென்னேவல்.

மோகம் – மூர்ச்சை, அவா, உட் பகையாறிலொன்று, உன்மத்தம், காம மயக்கம், தப்பிதம், பஞ்ச மாயையின் ஒன்று, பாதிரி, மயக் கம், மதியீனம், முருங்கை, வருத் தம், வாழை, விகாரம், எட்டி லொன்று, திகைப்பு, மோர், மாயையால் வரும் மயக்க உணர்ச்சி, மோசம்.

மோகிப்பு – மயக்கம்.

மோசம் – அவத்தம், தவறு, முருங்கை, பிசகு, வஞ்சனை, வாழை.

மோடி – காடுகாள், பிணக்கு, மேட்டிமை, மௌடி, வேடிக்கை.

வனத்தில் வாழுங் காளி
செருக்கு, ஆடம்பரம், கம்பீரம்
வஞ்சகம், கண்ட திப்பிலி, திப
பிலி மூலம்.

மோடு - உயர்ச்சி, பிளப்பு
பெருமை, முகடு, மூடத்தனம்
மேடு, வயிறு, கூரையின் உச்சி.

மோட்சம் - வீடுபேறு, விருப்பம்
விடுபடுகை, பதமுத்தி, முத்தி

மோதகம் - அப்ப வருக்கம்
இணக்கம், கொழுக்கட்டை
மகிழ்ச்சி, தோசை.

மோதல் - அடித்தல், இடித்தல்
பருத்தல்.

மோதிரம் - விரலணி.

மோதுதல் - புடைத்தல், தா
குதல், அப்புதல்.

மோப்பம் - மணத்தல், மூக்கு
வாசனை.

மௌனம் - பேசாமை.

மௌனி - பேசாதிருக்கும் வி
தம் பூண்டவன், ஆமை.

மௌனியர் - முனிவர்.

ய

யசமானன் - தலைவன்.

யதார்த்தம் - உண்மை.

யதார்த்தவாதி - உண்மை பே
வோன்.

யந்திரம் - செக்கு, திரிகை. தீ
கடைகோல், தேர், பஞ்சரை
குஞ் சூத்திரம், பொறி, மந்தி
சக்கரம், சூத்திரப்பொறி.

யமகாதகன் - மிகப் பொ
லாதவன், பேராற்றலுள்
வன், மிகச் சமர்த்தன்.

யமதூதன் - பாம்பின் நச்சு
பற்களிலொன்று. இயமகிங்கரன்
இயம தூதுவன்.

யவனர் - கம்மாளர், ஓவிய
காரர், சோனகர், யவனதேச
தார். கண்ணாளர், தோ
கருவி வாசிப்பவன்.

யா

யா - அஃறிணைப் படர்க்கைப் பன்மை வினா, அசைச்சொல், ஐயம், இல்லை. யாவை, கட்டுதல், ஒருவகை மரம், அகலம்.

யாகசாலை - வேள்விச்சாலை.

யாகம் - பலி, வேள்வி, சித்து, கிருது.

யாக்கை - உடல், கட்டு.

யாசகம் - இரப்பு, மதயானை.

யாசகர் - இரப்போர்.

யாசித்தல் - இரத்தல்.

யாது - அஃறிணைப் படர்க்கை ஒருமை வினா, இராக்கதர்கள், எது, பிசாசு, கள், ஞாபகம்

யாத்தல் - கட்டடல், பிணித்தல், விட்டுநீங்காதிருத்தல், செய்யுளமைத்தல், சொல்லுதல்.

யாத்திரை - கடலேறிச் செல்லும் பயணம், கூத்து, திருவிழா, நடத்தல், பிரயாணம், வழக்கம், இயக்கம், படையெழுச்சி, காலாட்சேபம்.

யாப்பு - கட்டு, செய்யுள், யாத்தல், உறுதி, கட்டுகை, சம்பந்தம், அன்பு, சூழ்ச்சி, பொருத்தம், பாம்பு.

யாமம் - நள்ளிரவு, ஏழரை நாழிகை நேரம், இடக்கை மேளம், தெற்கு, சாமம், இரவு, பொழுது, அகலம்.

யாம் - நாம்.

யாவரும் - எல்லோரும்.

யாழ் - அசுபதி, ஆந்தை, திருவாதிரை, நீர்ச்சுழியின் திரை, மிதுன இராசி, வீணைக்கருவி,

யாழ்ப்பாணர் - யாழ்ப்பாண நாட்டார், யாழ்வாசிப்போர்.

யாளி - சிங்க இராசி, மரக்கலப் பாய்க்கு நீர் வீசுங்கருவி, சிங்கம், யானை.

யானை - ஆனை.

யானைக்கவடு - யானைபோல் மனத்துள் மறைத்து வைத்திருக்கும் விரோதம்.

யானைநெருஞ்சி - பெரு நெருஞ்சி.

யானைமுகன் - விநாயகன்.

யு

யுகம் - இரண்டு, நீடிய காலம், இரட்டை, நுகம், நான்கு முழங்கொண்ட அளவு, ஒரு கால அளவு, பூமி, நீடியகால அளவை.

யுக்தி - கூரறிவு, பொருத்தம், அனுமானம், நியாயம், சூழ்ச்சி, ஆராய்வு, உபாயம்.

யுத்தம் - உசிதம், கூடுதல், நான்கு முழங்கொண்டது, நியாயம், பொருத்தமானது, போர்.

யுத்தி - அருத்தாபத்தி, ஆராய்வு, உபாயம், ஓர் அணி, கூடுதல், தகுதி, பொருத்தம், மேற்கோள் கூறல், யூகை, யோசித்தல், வழக்கம், விவேகம்.

யுவதி - பதினாறாண்டுப் பெண், இளம் பெண்.

யுவன் - இளைஞன்.

யூ

யூகம் - அகப்பொருளறிதல், உத்தேசம், ஒரு புல், கருங்குரங்கு, காந்தி, கோட்டான், தருக்கம், படை, உடற்குறை, படை வகுப்பு, பெண் குரங்கு, பேன், யோசிப்பு, விவேகம்.

யூகசாலி - புத்திக் கூர்மையுள்ளவன்.

யூகித்தல் - ஆராய்தல், யோசித்தல்.

யோ

யோகக்காரன் - நல்வினையாளன்.

யோகசாதனம்-யோகப்பயிற்சி, யோக சாதனை.

யோகஞ்செய்தல் - தியானம் பண்ணுதல்.

யோகநிலை - தியானத்தில் அமர்ந்திருக்கை.

யோகம் - அட்டயோகம், அதிட்டம், உபசாரம், உபாயம், உயர்ச்சி, உற்சாகம், எத்து, கூடல், கூட்டம், கூட்டல், சாவு, சிவிகை, சூத்திரம், தகுதி, தியானம், பக்கம், பலன், பொருத்தம், போர்க் கவசம், வரம், இந்திரியங்களைத் தன்வழிப்படுத்திக் கொண்டு உள்ளத்தைப் பிரமத்தில் நிறுத்தல், கிரகங்கள் முதலியவற்றின்சேர்க்கை, புணர்ச்சி, காரணப் பெயர், மருந்து, நற்சுழி, ஏமாற்று.

யோகி - அரன், அருகன், ஐயன், நிட்டை செய்வோன், முனிவன், சன்னியாசி, யோகாப்பியாசமுடையவன், உடலை வளைக்க உதவும் தசை

யோக்கியதை - நேர்மை.

யோக்கியம் - தகுதி.

யோசனை - ஆலோசனை, ஓர் எல்லையளவு, தியானித்தல், அறிவு, சிந்தனை, கருத்து, புத்திமதி, உபாயம், விவேகம், நான்கு குரோசங்கொண்ட நீட்டலளவு, ஓசை.

யோசித்தல் - ஆழ்ந்து நினைத்தல்.

யோசிப்பு - சிந்திப்பு.

யோனி - காரணம், நீர், பிறப்பு, பெண்குறி, உற்பத்திஸ்தானம், கருப்பப்பை, ஆவுடையாள், பூரம்.

யோனிபேதம் - 84 லட்சமாகக் கூறப்படும் பிறப்புவகை.

யௌ

யௌவனம் - அழகு, இளமை, களிப்பு, மகளிர் கூட்டம்.

வ

வகித்தல் - தாங்குதல், பொறுத்தல்.

வகிர் - கீறு, பிளந்த துண்டு, நரம்பு, பிளவு, வகிரென்னே வல், வழிவார்.

வகிர்தல் - வகிருதல், துண்டாக அறுத்தல், கீறுதல், பிளத்தல், கோதுதல், பங்குசெய்தல்.

வகுத்தல் - வகைப்படுத்தல், கூறுபடுத்தல், பகிர்ந்து கொடுத்தல், இனம் பற்றிப் பிரித்தல், பகுத்துக் கணக்கிடல், நியமித்தல், படைத்தல்

வகுப்பு - அழகு, பகுப்பு, பொலிவு.

வகுப்புவாரி - சாதிவீதம்.

வகுளி - ஒலி, ஓசை, சப்தம், நாதம், தொனி.

வகை - இனம், உபாயம், ஏது, கூறுபாடு, தரம், பகுப்பு, முதல், முறை, வகுப்பு, வழிவகை, சாதியினம், காரணம், தந்திரம், வலிமை, தன்மை, வியாபார முதல், உறுப்பு, கூட்டப்பின் எண்கள்.

வகைப்படுத்தல் - பங்கிடுதல்.

வகையறிதல் - செய்யும் முறை தெரிதல், கூறுபாடறிதல்.

வக்கணம் - நாகரிகம், நிந்தை, பட்டப்பேர், மார்பு, வர்ணனை, விற்பன்னம், ஒழுங்கு.

வக்கணை - உபசாரப் பேச்சு, வருணனை, நாகரிகம், ஒழுங்கு, நிந்தைப் பேச்சு, கடிதம் முதலியவற்றின் முகப்பு வாசகம், சமத்காரப் பேச்சு, மரவகை

வக்காலத்து - வியாச்சியம் முதலியன நடத்துவதற்கு வக்கீலுக்குக் கொடுக்கும் அதிகாரப் பத்திரம்.

வக்கிரசந்திரன் - இளம்பிறை.

வக்கிரம் - கலக்கம், கொடுமை, நிமிர்தல், பொய், பொறாமை,

மீளமடங்குதல், மீளுதல், வஞ்சனை, வட்டம், வளைவு, சென்ற வழி மீளுகை, நேர்மையற்ற செலவு, கோணல் வழி.

வக்கிரன் - உருத்திரன், குரூரன், சனி, செவ்வாய்.

வங்கம் – ஆற்று மடக்கு, ஈயம், கத்தரிச்செடி, கருத்து, சிறு கத்தரி, துத்தநாகம், நாடுகள் ஐம்பத்தாறில் ஒன்று, பதினெண் பாஷையில் ஒன்று, மரக் கலம், வளைவு, வெள்ளி, தகரம், வங்க நாட்டு மொழி, வழுதுணை, அலை, வறுமை.

வங்காளி – வங்காள நாட்டான், வங்கம், வாழை.

வங்கி - ஒரு தோளணி, கொடுவேலி, இருப்பில் வைக்கும் இடம்.

வசதி – இடச்சுகம், இரா, இருப்பிடம், நல்லிடம், வீடு, சினாலயம்.

வசந்தகாலம் – சித்திரை வைகாசியின் பருவம்.

வசந்தபஞ்சமி – காமனுக்குரிய தாய் மாசி மாதத்துச் சுக்கில பக்ஷத்து வரும் பஞ்சமி திதி.

வசந்தம் – இந்திரன் மாளிகை, இளவேனில், ஓர் இராகம், சுகந்தம், தென்றல் காற்று, வாசனை, சல்லாபம், சிறிய முத்து.

வசந்தருது – இளவேனிற் பருவம்.

வசம் – அமைச்சல், ஒழுங்கு, கீழ்ப்படிதல், கைவசம், நிலைவரம், பிறப்பு, ஆதீனம், ஆட்சி, நேர், நிலைமை, இயலுகை, நகல் எழுதும் காகிதம், மூலமாய்.

வசம்பு – ஒரு மருந்து, மிளகு.

வசவு – இழிவுரை.

வசனம் – அரைப்பட்டிகை, சொல், பழமொழி, புடைவை, பேச்சு, வாக்கியம், வாசகம், வீடு, உரைநடை, உரை.

வசனித்தல் - பேசுதல்.

வசி - இருப்பிடம், கழுமுள், குற்றம், கூர்மை, சூலம், தழும்பு, திரட்சி, வசியம், வாள், மழை, பிளவு, நுனி கூர்மையான கோல், தன்வசஞ் செய்வது, தாழ்ச்சி, தேற்றுகை, நீர், காயம்.

வசிகரணம் - கலைஞானம் அறுபத்து நான்கில் ஒன்று, புணர்ச்சிக் கிணக்கம், காமன் கணையில் ஒன்று, வசியென்னேவல், வாள்.

வசிகரம் - சீந்தில், வசியன், அழகு, ஆனைத்திப்பிலி, வசீகரணம்.

வசிகரித்தல் - வசப்படுத்தல்.

வசித்தல் - தங்கல், வசனித்தல், வசியஞ் செய்தல்.

வசியம் - கிராம்பு, கைவசம், மணப்பொருத்தம் பத்தினொன்று, வசமாதல், வசப்படுகை. காதல், வசீகரணம்.

வசீகரணம் - கீழ்ப்படுத்தல், வசியப்படுத்தல்.

வசீகரன்-வசியப்படுத்துவோன்.

வசை - பழிப்பு, குற்றம், நிணம், இகழ்ச்சிச் சொல், பெண்யானை. மகள், கணவனுடன் பிறந்தாள், வசைகவி, அகப்பை, மலட்டுப்பசு, பசு, பெண், மனைவி.

வசைதல் - சூழப்படல், வளைதல், வசை கூறுதல்.

வச்சிரம் - அத்திபேதி, இடி, இருதலைச்சூலம், மரத்தின்காழ், ஒரு பிசின், குலிசம், கொடுஞ் சொல், சதுரக்கள்ளி, சிற்ப நூல் முப்பத்திரண்டில் ஒன்று, தருப்பை, நித்தியயோகத் தொன்று, பசுமை, வச்சிராயுதம், வயிரமணி, வயிரம், உறுதியானது, யோகம்.

வச்சிரயாக்கை - அழியாவுடல்

வச்சிரன் - இந்திரன்.

வச்சிராயுதம் - குலிசம், வயி ரப் படை.

வஞ்சகமூடி - ஆமை.

வஞ்சகம் - அணாப்பு, குத்திரம், நரி, மடிப்பு, மறைவு, தந்தி ரம், ஏமாற்றம்.

வஞ்சகவொழிப்பு - பெயர் முதலிய சொற்களால் வருணி யத்தினது தருமத்தை மறுத்தல்.

வஞ்சகன் - தூர்த்தன், நரி, வஞ்சிப்போன்.

வஞ்சந்தீர்தல் - பழிவாங்கல்.

வஞ்சம் - கபடம், கொடுமை, சிறுமை, பொய், வடிப்பு, மாயம், வாள், பழிக்குப்பழி, வஞ்சினம், அழிவு, வம்சம்.

வஞ்சனை - ஆணை, பொய், மாயம், வஞ்சம்.

வஞ்சித்தல் - வஞ்சனை செய் தல், ஏமாற்றுதல்.

வஞ்சினம் - சபதம், சூளுரை, கடுங்கோபம், சூளுறவு.

வடகம் - உல்லாசம், ஒரு பலகா ரம், தோல், போர்வை, மேலங்கி, வற்றல், மசால் உருண்டை.

வடகாற்று - வாடை.

வடபத்திரம் - ஆலிலை.

வடமரம் - ஆலமரம்.

வடம் - ஆலமரம், ஊர், ஒரு பலகாரம், கயிறு, நாணி, மணி வடம், வட்டம், கனமான கயிறு, வில்லின் நாண், சரம், ஒழுங்கு, பலகை.

வடலி - இளம்பனை, போந்தை, சோற்றுப்பனை

வடி - கயிறு, கள், வடியென்னே வல், காற்று, மாவடு, வாரி முடிக்கை, ஆராய்ச்சி, வடிகயிறு, உருவம், சிறுதடி.

வடிதமிழ் - தெளிதமிழ்.

வடிதல் - நீளுதல். உருக்கொள் ளுதல், குறைதல்.

வடித்தல் – கூராக்குதல், தெளித்தெடுத்தல், வசமாக்குதல், வடியச்செய்தல் வடிகட்டுதல், பிழிதல், தைலமிறக்குதல், சோறு சமைத்தல், நீளமாக்குதல்.

வடிவம் – உடல், உருவு, அழகு, நிறம், மெய்ச்சொல், காந்தி.

வடிவு – அல்குல், அழகு, உருவு.

வடிவெழுத்து – வரியுங்கோடும் புள்ளியுமாகக் கட்புலனுக்கு விஷயமாம்படி எழுதப்படுகின்ற எழுத்து.

வடு – இளங்காய், குற்றம், செம்பு, தழும்பு, பிரமசாரி, மச்சம், மருதயாழ்த்திறம், வசை, வடுவென்னேவல், வண்டு, வாலிபன், வாள், மாம்பிஞ்சு, உடல், உளியாற்செதுக்கின உரு, பழி, கருமணல்.

வடுப்படுதல் – ஏறுபடுதல், குற்றமடைதல், வசைபூணல்.

வட்டணை – வக்கணை, வட்டம், தாளம், வலமிடம், சுற்றுகை, கேடகம், உருண்டை, இடசாரி வலசாரியாகச் சுற்றுகை, வட்டமான அணை.

வட்டமிடுதல் – சுற்றுதல்.

வட்டம் – குளம், கேடகம், கைம்மணி, கொள்கலம், சக்கரம், சீலை, தாழ்வு, குயவன் திரிகை, நீர்ச்சால், பரிவேடம், ரொக்க வியாபாரத்தில் கொடுக்கும் தள்ளுபடி, பீடம், வட்டவடிவு வளைதடி, வாகுவலயம், மண்டலம், சுற்று, சுற்றுப் பிரதேசம், அப்பவகை, ஆலவட்டம், நீர் எறி கருவி, எல்லை

வட்டாரம் – சுற்றுப்புறம், தானியக்களஞ்சியம், வீடு.

வட்டி – கூடை, பல்கறை, முதற் பொருட்டு வரும் ஊதியம், வட்டியென்னேவல், பெட்டி, உண்கலம்.

வட்டித்தல் – ஆணையிடல்;

ஊனிடுதல்; தாளம்போடுதல்; வட்டமாதல்; சுழலுதல்; பரிமாறுதல்; எழுதுதல்; புடைத்தல்; பிரதிக்கினை பண்ணுதல்; தோள் புடைத்தல்; சுழற்றுதல்; உருட்டுதல்; கட்டுதல்; வளைத்தல்.

வட்டிப்பு - வட்டம்; சூள்; பந்தி பரிமாறல்.

வட்டுப்போர் - சூதாட்டம்.

வணக்கம் - கீழ்ப்படிதல்.

வணங்கல் - தொழுதல்.

வணங்காமுடியோன் - துரியோதனன்.

வணிகம் - செட்டு; வியாபாரம்

வணிகர் தொழில் - வணிகர் அறுதொழில்; ஓதல்; வேட்டல்; ஈதல்; உழவு; நிரையோம்பல்: வாணிகம்.

வணிகன் - செட்டி; துலாராசி; வியாபாரி.

வணிசன் - ஒரு கரணம்; வாணிகன்.

வண்டல் - சேறு; நீர்ச்சுழி; பருபருக்கை; பொருக்கு; மகளிர் விளையாட்டு; நதிக்கரை; நீரடிமண்; சந்தனக்குழம்பு.

வண்டி - பண்டி: வயிறு; வண்டிப்பாரம்; சகடம்; அடிமண்டி.

வண்டு - அம்பு; குற்றம்; கைவளை; வைக்கோற் பழுதை; சங்கு; பூசநாள்: தேன்வண்டு: சுரும்பு; அறுகாற் சிறு பறவை; நூல்; அபிநயத்துக்குரியஅலிக்கை வகை; சிற்றொழுக்கம்; செம்மரம்.

வண்ணம் - அழகு: இசைப்பாட்டு; இராகம்; கனம்; குணம்; சந்தம்; சந்தனம்; சாந்துப்பொது; நிறம்; முடுகியல்; வடிவு; வாசனை; ஒப்பனை செயல்; நன்மை; விதம்; சித்திரம்; எழுதற்குரிய கலவை; சிறப்பு; மாலை.

வண்ணமகள் – கோலஞ் செய்பவள்.

வண்ணமாலை – அரிவரி; நெடுங்கணக்கு.

வண்ணித்தல் – புகழ்தல்.

வண்மை– அழகு; ஈகை: குணம்; புகழ்; மெய்ம்மை; வளமை; விதம்; வளப்பம்; கொடை; வலிமை.

வதக்கம் – வாட்டம்: இளைப்பு.

வதங்கல் – வாடுதல்.

வதந்தி – கட்டுக் கதை; பேச்சு.

வதனம் – முகம்; முக்கோணத்தின் மேற்கோணம்.

வதானியன் – உதாரமாகக் கொடுப்பவன்; குபேரன்.

வதி – தங்குமிடம்; வழி; வதி யென்னேவல்: கால்வாய்.

வதிதல் – தங்குதல்; துயிலுதல்.

வதில் – பதில்.

வதுகை – மனைவி: பாரியாள்: இல்லாள்.

வதுவை – திருமணம்: வதுவந்தம்; வாசனை; மணமகள்; மணமாலை: புணர்ச்சி.

வதை – கொலை.

வதைத்தல் – கொல்லுதல்; வருத்துதல்: மிக வருந்துதல்.

வத்தம் – சோறு; நெல்.

வந்தனம் - வணக்கம்; விநயம்; நன்றி கூறும் மரியாதைச் சொல்; முகம்; வந்தனை.

வந்தனை– வணக்கம்; வழிபாடு.

வந்தி – ஏணி; மலடி: வந்தி யென்னேவல்; வருத்தம்; கட்டாயம்; வணக்கம்; மங்கல பாடகன்; அரசர் புகழ் கூறும் சூதன்; பலவந்தம்; முரண்டு; சண்டை.

வந்தித்தல் – பங்கம்; பாழை: புகழ்தல்; வணங்கல்.

வந்து – காற்று; உவமை; கால்; பவனம்.

வமிசம் – குலம்; மூங்கில்.

வமிசாவழி – பரம்பரை; அட்டவணை.

வம்பு – கயிறு; அசப்பியம்; சண்டை; தீச்சொல்: நிலையின்மை: புதுமை: மிடா; முலைக்கச்சு; வாசனை; வீம்பு; வீண்பேச்சு.

வம்புதும்பு – வீண் பழிச்சொல்.

வம்புத்தனம் – நேரின்மை: மடிப்பு.

வயங்கல், வயங்குதல் – ஒளி செய்தல்; விளங்குதல்; நடத்தல்; தோன்றுதல்; மிகுதல்.

வயசு. வயது – அகவை; ஆண்டு.

வயம் – ஆடு; இரும்பு; குதிரை; நீர்; பறவை: வசம்; வலி; வெற்றி; பூமி; வேட்கை; மூலம்; சம்பந்தம்; ஏற்றது; கிராம்பு; முயல்.

வயல் – கழனி, மருதநிலம்; வெளி.

வயிரம் – கூர்மை; சலஞ்சாதித்தல்; சினம்: தண்டாயுதம்; திருவோணம்; பூண் கட்டுவது; மரவயிரம்; வச்சிரமணி; வச்சிராயுதம்; வாளியின் தகடு: நவமணியுள் ஒன்று; திண்மை; கிம்புரி; செற்றம்; மயிர்ப்படாம்.

வயிரவல்லி – பிரண்டை.

வயிரவன் வாகனம் – நாய்.

வயிரவூசி – கண்ணாடியறுக்கும் ஊசி; முத்துத் துளைக்கும் ஊசி.

வயிரித்தல் – வலுத்தல்; வயிரமாதல்; கடினமாதல்; பிடிவாதமாயிருத்தல்.

வயிரிப்பு – வயிரம்.

வயிர்த்தல் – வயிரங் கொள்ளுதல்: செற்றங் கொள்ளுதல்; வைராக்கியமடைதல்.

வயிறு – உதரம்; கருப்பப்பை; நடுவிடம்; உள்ளிடம்; மணம்.

வயிறுப்பசம் – உணவு சீரணமாகாமல் வயிறு பெருக்கை.

வயிற்றுக்கடுப்பு - சீதபேதி வயிற்றுவலி.

வயிற்றுக்கொதி - பசி.

வயிற்றெரிச்சல் - பொறாமை

வயோதிகம் - முதுமை.

வரதட்சணை - மணமகனுக்கும் பெண் வீட்டார் கொடுக்கும் பொருள்.

வரதம் - ஈதல்: வரம் அளிப்பது கடாட்சம்: குபேரன் நிதிகளுள் ஒன்று. நல்துகில்.

வரப்பிரசாதம் - கடவுளரின் அருட்கொடை.

வரப்பிரதானம் - நன்கொடை

வரப்பு - எல்லை, வரம்பு.

வரம் - அடைக்கலாங் குருவி, ஆசீர்வாதம், எறும்பு, கையிட்டுக் கொள்ளல், சூழல், தேவ வீகை, நவநிதியில் ஒன்று, மஞ்சள், மேன்மை, விருப்பம், தெய்வம் முதலியவற்றால் பெறும் பேறு, அனுக்கிரகம், வேண்டு கோள்.

வரம்பழிதல் - ஒழுங்கு கெடுதல், நீதி தவறுதல்.

வரம்பு - அணை, எல்லை, ஒழுங்கு, வழி.

வரலாறு - ஒழுங்கு, மூலம். சரித்திரம்.

வரவு - வருகை, வருவாய், வரலாறு, உற்பத்தி, வணங்குகை, வழி.

வரன் - கணவன், துறவிகளில் ஒரு பேதம், சிவன், தமையன், மருமகன், சிறந்தவன், கடவுள்

வரன்முறை - ஊழ், வரலாறு, அடிப்படையாக வந்த முறை.

வராகம் - திருமால் அவதாரத் தொன்று, பதினெண் புராணத் தொன்று, பன்றி, போர், மலை, நூற்றெட்டு உபநிடதங்களில் ஒன்று. கணித நூல், நிலப்பனை, ஒரு தேசம், போர்.

வராளம் – பாம்பு, அகி, சங்க தம், உரகம், கட்செவி, சர்ப்பம்.

வரி – அக்கினி, இசைப்பாட்டு, எழுத்து, கடல், குடியிறை, தேமல், நிறை, நீளம், நெல், வடிவு, வண்டு, வரியென்னேவல், வழி, விரலிறை, புலி, கோடு, புள்ளி. அறல், நிறம், தொய்யில், இரேகை, புள்ளி, கட்டு, வரிக் கூத்து. கடைச் சங்கத்து நூல், உயர்ச்சி.

வரிசை – ஒழுங்கு, சங்கை, நற் சீர், பரிசு, முறைமை, வெகு மானம், நிறையொழுங்கு, சிறப்பு, ராசசின்னம், மரியாதை, மேம்பாடு, தகுதி, பாராட்டு, நன்னிலை, நல்லொழுக்கம்.

வரிச்சு – கட்டு வரிச்சல், கூரை மரக்கீற்று.

வரிதல் – எழுதல், கட்டல், நிய மித்தல், பூசுதல், மொய்த்தல்.

வரித்தல் - தேர்ந்துகொள்ளுதல், நியமித்தல், எழுதுதல், கட்டுதல், கோலஞ் செய்தல், சித்திரம் எழு துதல், பூசுதல், மொய்த்தல், ஓடுதல், அழைத்தல்.

வருகாலம் – எதிர்காலம்.

வருக்கம் – இனம், வமிசம், ஒழுங்கு, குலம், ஒத்தபொரு ளின் கூட்டம், சதுரம், அதிகா ரம், குறிப்பிட்ட எண்ணை அதே எண்ணால் பெருக்கி வருந்தொகை, பிசாசு, எருக் கம்பால், தீ.

வருடம் – ஆண்டு, தண்டம், மழை, உலகின் பகுதி, வருட ருது,

வருடல், வருடுதல் – தடவல்.

வருடாயுதம் – பதினாயிரம்.

வருணம் – நிறம், சாதி, நீர், எழுத்து, கீர்த்தி, குலம், ஒளி, பொன், பொன்னுரை, மஞ்சள், மாதிரி, யானை, வாசனை, விதம், வேடம்.

வருணனை - தோத்திரம், வர்ணிப்பு, புனைவுரை, விரிவு.

வருணாச்சிரம தருமம் - நால்வகைச் சாதிக்கும், நால்வகை நிலைக்குமுரிய ஒழுக்கம்.

வருத்தப்படுதல் - துன்பப்படுதல்.

வருத்தம் - துன்பம்.

வருந்தல் - துன்புறல்.

வருபிறப்பு - மறுபிறப்பு.

வருபொருள் - எதிர்கால நிகழ்ச்சி, வருவதன் கருத்து.

வருமம் - வர்மம், வன்மம், கெட்ட எண்ணம்.

வருமானம் - வரவு.

வருவாய் - வரலாறு, வரவுகட்கான ஏது, வரும்படி, தோன்றுமிடம்.

வரைதல் - எழுதல், கொள்ளல், சித்திரமெழுதல், சுற்றிவரைதல், நீக்கல், மாற்றல், திருமணஞ் செய்தல், நிர்ணயித்தல், அடக்குதல், தனக்குரியதாக்குதல்.

வரைப்பு - எல்லை, மதில், உலகம், குளம், எழுதுகை, சுவர் சூழ்ந்த இடம், மாளிகை.

வரையறவு - வரையறை.

வரையறுத்தல் - எல்லைப்படுத்தல், வளைத்தல்.

வரையறை - அளவு, எல்லை, தீர்க்கம், அடக்கவொடுக்கம், கண்டிப்பு, திட்டம், முடிவு.

வரைவு - அளவு, எல்லை, பிரிவு மணம், மாறுபாடு, வரைதல், வரையப்பட்டது, நீக்கம்.

வர்ணம் - குங்குமம், நிறம், எழுத்து, ஓசை, சுரத்தின் எழுத்து, மஞ்சள், பூச்சுத்திரவியம், குணம்.

வர்ணவேலை - சித்திரம் எழுதும் தொழில்.

வர்த்தமானம் - சங்கதி, சிற்றாமணக்கு, செய்தி, நிகழ்காலம்,

நிகழ்வு, வர்த்தமான காலம், தற்கால நிகழ்ச்சி.

வர்மம் – உட்பகை, மருமம்.

வலக்காரம் – பலவந்தம், தந்திரம்.

வலக்கை கொடுத்தல் – உதவியளித்தல்.

வலக்கையடித்தல் – உறுதி கூறுதல்.

வலசாரி – வலமாகச் சுற்றுதல்.

வலது – செயல், வலப்பக்கம், வல்லமை, சமர்த்து.

வலமான் – வலப்பக்கம்.

வலம் – இடம், ஏழினுருபு, கனம் சேனை, மேல், வலப்பக்கம், வலி, வெற்றி, ஆணை, பிரதட்சணம்.

வலம்புரி – நந்தியாவட்டம், வலம்புரிச்சங்கு, வலமாகச் சுழித்திருப்பது, நீண்ட செடி.

வளையம் – எல்லை, கடல், குளம், கைக்கடகம், சுற்று, வட்டம், வளையம், கேயூரம், தோட்டம், பாத்தி, சக்கராயுதம், கை வளையம், தாமரையின் சுருள், நீர் நிலை.

வலாசகம் – குயில். தவளை.

வலி – இரேகை, ஓர் அணி, ஒரு நோய், குரங்கு, நறுவிலிமரம், பற்றிரும்பு. வரி, வலியென்னேவல், வல்லமை, வன்மை, வலாத்காரம்.

வலிது – வலியது.

வலித்தல் – இழுத்தல், உடன்படல், ஏங்கல், கடினமாய் வாங்கல், காய்தல், தோணி தூண்டல், நினைத்தல், மரக்கலப் பாயுயர்த்தல், மெல்லெழுத்தை வல்லெழுத்தாகச் செய்தல், வயிற்றுள் முறுக்குதல், வலிவலித்தல், வளைத்தல், வன்மையாய் உச்சரித்தல், சொல்லுதல், ஆலோசித்தல், கருத்தோடு செய்தல், அழகு காட்டுதல், தண்டால் படகு தள்

ளூதல், புகை குடித்தல், இசிவு காணுதல்.

வலிமை – வன்மை.

வலியுறுத்தல் – உறுதிப்படுத்தல்

வலிவு – வன்மை, உச்சவிசை, பலம்.

வலை – மீன் முதலிய பிடிக்கும் வலை.

வலைவீசுதல் – வசப்படுத்த முயலுதல்.

வல்சி – அரிசி, உண்டல், சோறு, உணவு, நெல்.

வல்லடி – வல்லபம், பலவந்தம், கொடுமை.

வல்லபம் – கதியுள்ள குதிரை, வல்லமை, அருஞ்செயல், கொடுஞ்செயல்.

வல்லமை – வல்லபம், வலிமை, பலம்.

வல்லவைமன் – விநாயகன்.

வல்லாரை–ஒரு பூண்டு, கேட்டை நாள்.

வல்லான் – வல்லவன்.

வல்லிசை – உச்சவிசை, பாம்பு, வல்லோசை.

வல்லுநர் – வல்லோர்.

வல்லுயிர் – அரிதாய்ப் பிழைத் திருக்கும் உயிர்.

வல்லுவம் – அடைப்பை, கைப் பை.

வல்லுனர் – வல்லோர், வல்ல வர், வல்லார்.

வல்லூறு – இராசாளி.

வல்லேறு – இடி.

வல்லை – ஒரு நோய், கடுப்பு, காலவிரைவு, கோட்டை, பெருங்காடு, முருக்கு, மேடு, வட்டம், வருத்தம, வலிமை.

வல்விலங்கு – யானை, களிறு.

வல்வினை – வலிய வினை, வலிய தாகிய ஊழ், தீவினை, கொடுஞ் செயல், வலியதாகிய தொழில்

வழகு – மென்மை, அழகு.

வழக்கச்சொல் - இயற்சொல்.

வழக்கம் - ஈகை, நடைபடி, வழங்குதல், பழக்கம், பொது வானது, பிரயோகிக்கை.

வழக்கறிதல் - நடையறிதல்.

வழக்காளி - தொடர்ச்சிக் காரன்.

வழக்கு - செய்கை, ஈகை, இயங்குகை, நீதிவழக்கம், ஒழுக் கம், நெறி, உலக வழக்கு, செய் யுள் வழக்கு, இயல்பு வழக்கு, தகுதி வழக்கு.

வழங்கல், வழங்குதல் - ஆட்சி பண்ணுதல், இயங்குதல், ஈதல், உலாவல், சொல்லல், நடத்தல், மழைபொழிதல், நடைபெறுதல், கூத்தாடுதல், கொடுத்தல், சொல்லுதல்.

வழி - இடம், ஏழினுருபு, கார ணம், திரட்சி, நடவை, பழைமை, பின், மகன், மார்பு, முறைமை, வழியென்னேவல், கிளை, நெறி, உபாயம், சந் ததி, பின்பு, மார்க்கம், சுற் றம், மலைப்பக்கம்.

வழிக்கரை - வழியருகு.

வழித்துணை - பயணத்தில் உடன் வருவோன், பாரம்பரிய மாக உதவிவரும் குடும்பத் துணை, கட்டுச் சோறு.

வழித்தோன்றல் - மகன், வம் சத்துதித்த பிள்ளை.

வழிபடல், வழிபடுதல் - வணங் குதல், பின்பற்றுதல்.

வழிபாடு - வணக்கம், வழியிற் செல்லுகை, பின்பற்றுகை, பூசனை, வழக்கம், சமயக்கோட் பாடு.

வழிபார்த்தல் - வகைபார்த்தல், சூழ்ச்சி தேடுதல்.

வழிமொழிதல் - வழிபாடு கூறு தல், அனுமதித்தல்.

வழிவழி - பரம்பரை.

வழிவிடுதல் - பயணம் அனுப்பு தல், செல்வழித் திறத்தல், நெறி

தவறுதல், மரணத் தறுவாயில் பிராயச்சித்தச் சடங்கு செய்தல்.

வழு – இன்மை, ஈனக்கேடு, தப்பு, வழுவென்னேவல், தவறு, பழிப்புரை.

வழுகுதல் – வழுவுதல், தவறு தல், நழுவுதல்.

வழுக்கல் – இழுக்கல், மோதல், சறுக்கல், தவறு செய்தல், தப்பு தல், மறத்தல், அசைதல், ஒழி தல், அடித்தல்.

வழுதலை – கத்தரி, பொய்க்கழு

வழுதி – பாண்டியன்.

வழுது – பொய், வைக்கோல்.

வழுதுணை – கத்தரி, கண்டங் கத்தரி.

வழுத்தல், வழுத்துதல் – சொல் லல், துதித்தல்.

வழுவல் – இளநீர் வழுவல், சாய் தல், தப்புதல், வழும்பு.

வழுவழுப்பு – கொழகொழப்பு, வழுக்குந்தன்மை, மென்மை, பளபளப்பு.

வழுவாமை – நேர்மை தவ றாமை.

வழுவிலி – குற்றமற்றவன்.

வழுவை – யானை, தந்தி, குஞ் சரம், வேழம்.

வளப்பம் – கொழுப்பு, நன்மை, மாட்சிமை, வளமை.

வளமை – உதவி, கொழுப்பு, செல்வப் பொலிவு, நன்மை, மாட்சிமை.

வளம் – அழகு, செல்வம், செவ்வை, பக்கம், பதவி, பல பண்டம், மாட்சிமை, வலி, வழி, செழுமை, மிகுதி, பயன், வருவாய், நன்மை, வெற்றி, உணவு.

வளர்தல் – உயர்தல்.

வளர்த்தி – வளர்ச்சி.

வளவளப்பு – பயனற்றசொல்.

வளவு – கொல்லை, வளைவு வீடு.

ளன் - வளம், வளப்பம், செழுமை.

ளாகம் - இடம், ஒரு நகரம், சூழ்ந்திடல், திணைப்புலம், உயர்படிப்புச் சூழல்,

ளி - ஓதம், காற்று, சூறைக் காற்று.

ளை - உத்திரம், கங்கணம், ளங்கம், சக்கரம், சங்கு, நுழை வளை, புற்று, வளையென்னே வல், சாமரை, குவளை.

வளைதல் - கட்டல், சுற்றுதல், சூழ்தல், தடுத்தல், வாருதல்.

வளைப்பு - உழவுசால், மதில், வளைத்தல்.

வளையம் - எல்லை, குளம், கைவளை, தாமரையுட்சுருள், வட்டம்.

வளையல் - கைவளை, வளை வுள்ளது.

வளைவு - பணிதரவு, வட்டம், வணக்கம், வணங்கல், வளைந் தது.

வள்ளம் - ஒருவகைச் சிறு தோணி, நாழிகை வட்டில், மரக்கால், வட்டில், உண்ணும் வட்டில்.

வள்ளல் - வரையாது கொடுப் போன், வலியன், வள்ளைக் கீரை.

வள்ளி - அணிகலம், ஒருவகைக் கூத்து, ஒரு கொடி, கைவளை, வள்ளியம்மை, படர்கொடி, தண்டு, தொய்யிற் கொடி, குறிஞ்சி நிலப்பெண், சந்திரன்.

வள்ளித்தண்டு - பிரம்பின் வட் டம்.

வள்ளுவன் - புரோகிதன், வருங் காரியஞ் சொல்லுவோன், வள்ளு வச் சாதியான்.

வறட்சி - நீர்ப்பசையறுகை, உடற்காங்கை, சொறி.

வறட்டல் - காயச் செய்தல், வறுத்தல்.

வறளுதல் - காய்தல்.

வறிஞர் - தரித்திரர்.

வறிது - அறியாமை. குறைவு, சிறுமை, பயனின்மை, வீண், சிறிது, உள்ளீடற்றது, வெறு விதானது, தரித்திரம், இயலாமை.

வறுகுதல் - பிறாண்டுதல்.

வறுங்கோடை - மழையில்லாத கோடை.

வறுமை - வெறுமை.

வறுமொழி - வீண்சொல்.

வற்பு - உறுதி, வலிமை, வற்பம், உறுதிப்பாடு.

வற்றல் - காய்ந்தது.

வற்றுதல் - காய்தல், வடிதல்.

வனபோசனம் - தோட்டம் முதலியவற்றில் நடத்தும் விருந்து.

வனப்பு - அலங்காரம், அழகு, இளமைநிறம். பலவுறுப்புத் திரண்டவழிப் பெறுவதொரு செய்யுள் அழகு.

வனம் - அழகு, ஊர் சூழ்ந்த சோலை, காடு. குடியிருப்பு, சுடுகாடு, துளசி, நீர், புற்று, மலையருவி, மிகுதி, வழி, வீடு, உறைவிடம்.

வனரம் - குரங்கு; வானரம்; மற்கடம்.

வனராசன் - சிங்கம்.

வனலட்சுமி - வாழை.

வனவன் - வேடன்.

வனி - சுரம்.

வனிதை - பெண்; மனையாள்.

வனைதல் - அலங்கரித்தல்; செய்தல்; உரு அமையச் செய்தல்; சித்திரம் எழுதுதல்.

வன்கண் - கொடுமை; கொடும்பார்வை; பொறாமை; வீரத்தன்மை; வைரம்; மனக்கொடுமை; பகைமை.

வன்சிறை – கடுங்காவல்; மதில்: கொடுமைக்குள்ளாக்கும் அடிமைத்தனம்.

வன்சொல் – கடுஞ்சொல்.

வன்மம் - தீராப்பகை. வலிமை.

வன்மனம் – கல்நெஞ்சு.

வன்மி – பகைஞன்; பகைவன்; மேவலன்.

வன்மித்தல் – வைரங்கொள்ளுதல்; கல்நெஞ்சு படைத்தல்; தீராப்பகை காட்டுதல்; சபதம் செய்தல்.

வன்மீகம் – புற்று.

வன்மை - கடினம்.

வன்னம் - எழுத்து; நிறம்.

வன்னி – ஒரு மரம்; கிளி; சேங்கொட்டை: நெருப்பு; குதிரை; பிரமசாரி; கொடுவேலி; தணக்கு; வன்னியன், வன்னியூர்.

வன்னிசகாயன் - காற்று.

வன்னிப்பு - வருணனை.

வன்னிமாரகம் - நீர்.

வன்னிமித்திரன் - காற்று.

வா

வா – ஓர் எழுத்து; வாவென்னேவல்.

வாகடம் – வைத்திய நூல்.

வாகனம் – ஊர்தி; சீலை; ஏறி நடத்தப்படுபவை

வாக்கியம் – புறத்தது; வாகனம்; வெளி; வசனம்.

வாகீசர் – திருநாவுக்கரசர்.

வாகு – அழகு; ஒழுங்கு; தோள்; பக்கம்; ஒளி; சாமர்த்தியம்; தொட்டால் வாடி.

வாகுசன் – அரசன்: புரவலன். வேந்தன்; காவலன்; சத்திரியன்;

வாகை – உண்மை; நல்ஒழுக்கம்; ஒரு மரம்; தவம்; நலன்; மாட்சிமை மிகுதி; முயற்சி: வெற்றி; மரவகை; அகத்தி; வெற்றி மாலை; பண்பு.

வாக்கு – சொல்; திரும்பின பார்வை; நேரிலக்கற்ற வளைவு; பக்கம்; முப்பொறியில் ஒன்று; மெய்மை; வாக்கென்னேவல்; வாய்விதம்; திருத்தம்; தன்மை; புகழ்ச்சொல்; செல்வாக்கு; அசரீரி.

வாக்குக் குற்றம் – சொற்குற்றம்; சொற்தவறு; சொற்பிழை.

வாக்குநாணயம் - பேச்சுறுதி.

வாக்கு மாறுதல் - பேச்சுத் தவறுதல்.

வாக்குவல்லபம் - பேச்சுவன்மை

வாக்குவாதம் – சொற்போர்.

வாங்கல் – அடித்தல். அழைத்தல்; ஆழம்; இழுத்தல்; ஏற்றுக்கொள்ளல்: நீளம்; பெற்றுக்கொள்ளல்; போதல்; வளைத்தல்; வளைவு; நீக்குதல்; குலைதல்: குறைதல்; பின்வாங்குதல்; விலைக்குக் கொள்ளுகை; மனத்தாபம்; தூரம்,

வாங்குதல் – வாங்கல். வளைத்தல், வளைதல், நாண்பூட்டல், இழுத்தல், மூச்சு வாங்குதல், விலைக்குக் கொள்ளுதல், பெறுதல், வெட்டல், அடித்தல், வைதல், பின்வாங்குதல், உட்கொள்ளுதல், வரைதல், செலுத்துதல், தழுவுதல்.

வாசகம் - வசனம், மொழி, பேச்சு, பிறர் கேட்கச் செபிக்கை, கடிதம், தோத்திரம், சொற்தொடர், செய்யுள், வாய்பாடு, வார்த்தை, செய்தி, திருவாசகம்.

வாசம் – அம்பு, அரிசி, இருப்பிடம், இலாமிச்சை, இறகு, உணவு, ஊர், சரசுவதி, சீலை, நாள், நீர், நெய், பூமணம், பேச்சு, மந்திரம், மருத நிலத்தூர், யோசனை, வாக்கியம், வாக்கு, வாசனை, வேகம், வசிக்கை, மணம், வாசனைப் பண்டம், வஸ்திரம்.

வாசல் வித்துவான் – ஆஸ்தானப் புலவன்

வாசவன் - இந்திரன், பஞ்சவா சம் விற்போன்.

வாசனை - அறிவீனம், அறிவு, இடம், நம்பிக்கை, மணம், பற்று, நல்மணம், சேர்க்கைக் குணம், மாத்திரையாய் மெலிதாய் வந்து தாக்கும் பிராரத்துவம்,

வாசாஞானம் - அநுபவமில்லா மல் ஞானம் பேசுதல், வாசக ஞானம்.

வாசி - அசுவினிநாள், அதிகம், அம்பு, அளவு, இசைக் குழல், இசைப்பாட்டு, இருப்பிடம், குதிரை, சுவாசம், சௌக்கியம், தன்மை, திட்டம், நிமித்தம், நியாயம், பறவை, பாணம், மிகுதி, வட்டிக்கு மேல் அதிகமா கக் கழித்தெடுக்கும் கழிவுப்பணம், வாசஞ் செய்கிறவன், வாசியென் னேவல், வேறுபாடு, வட்டம், இயல்பு, தகுதி, நல்ல நிலைமை.

வாசிகன் - தூதன்.

வாசித்தல் - படித்தல், மணத் தல்.

வாசினை - வாசித்தல்.

வாஞ்சனை - வாஞ்சை, வாஞ் சனம், விருப்பம்.

வாஞ்சித்தல் - ஆசைப்படுதல்.

வாஞ்சினம் - விரும்பியது.

வாஞ்சை - ஆசை.

வாடகை-குடிக்கூலி, கொல்லை, தெரு, வாகனசாலை, வீட்டுக் கூலி, கூலி, சுற்றுவட்டம்.

வாடல் - சாதல், மெலிதல், வதங்கல்.

வாடிக்கை - வழக்கம்.

வாடுதல் - வாடல், உலர்தல், மெலிதல், மணமழிதல், பொலி வழிதல், கெடுதல், நீங்குதல்.

வாடை - இடைச்சேரி, இடை யர் வீதி, காற்று, குடிக் கூலி, தெரு, நிறை, மணம், வடகாற்று, வடக்கு, வரிசை, வாசனை,

வீட்டுக்கூலி, குளிர் காற்று, சிறு கிராமம், வழி, வாடகை.

வாடைக்கொண்டல் - வடகீழ் காற்று.

வாட்டம் - குறைவு, சாய்வு, சோர்வு, தெரு, மெலிவு, வதக்கம், வழி, வாடல், ஒழுங்கான சாய்வு, வடிவழகு, நீட்டம், அனுகூலம்.

வாட்டுதல் - வாடப்பண்ணுதல், வருத்துதல், உலர்த்துதல், வதக்குதல், கெடுத்தல், ஆடை வெளுத்தல்.

வாணம் - அம்பு, தீ, பாணம், மத்தாப்பு முதலியன.

வாணாள் - வாழ்நாள்.

வாணி - அம்பு, ஒருவகைக்கூத்து, கலைமகள், சொல், சொல்லல், கல்வி, நாதந் தோன்றுமிடம், சரஸ்வதி, நதி.

வாணிகம் - இலாபம், வியாபாரம்.

வாணிகன் - செட்டி, துலாராசி

வாதவைரி - ஆமணக்கு.

வாதாடல் - வழக்காடல்.

வாதாட்டம் - சொற்போர்.

வாதி - காற்று, தருக்கி, முறைப் பாட்டாளன், வாதஞ் செய்வோன், வாதியென்னேவல், எடுத்துப் பேசுபவன், வழக்குத் தொடுப்போன்.

வாதித்தல் - தருக்கித்தல், பேசுதல், வருத்தப்படுத்துதல், வாதாடுதல், தடுத்தல்.

வாத்தியம் - கஞ்சக்கருவி, துளைக் கருவி, தோற் கருவி, நரம்புக் கருவி என்னும் இசைக் கருவிகள்.

வாந்தி - சத்தி பண்ணல்.

வாமதேவன் - சிவன்.

வாமபாகம் - இடப்பக்கம்.

வாயடித்தல் - மருட்டிப் பேசுதல்

வாயடைத்தல் - பேசக் கூடாமலிருத்தல்.

வாயிலாளர் – வாயில் காப்போர்

வாயில் – ஐம்பொறி, கடை, கதவு, உபாயம், காரணம், திறம், தூது, வாய்தல், வாசல், ஐம்புலன், துவாரம், இடம்.

வாயு – காற்று.

வாயொடுங்குதல் – பேச்சடங்குதல்.

வாய்க்கரிசி – லஞ்சம், மனமில்லாமற் கொடுப்பது, பிணத்துக்கிடும் வாய் அரிசி.

வாய்க்கால் – நீரோடுங் கால், மகநாள்.

வாய்த்தல் – சேர்தல், நன்கமைதல், கிடைத்தல், சித்தித்தல், சிறத்தல், பொருந்தல், மாட்சிமை, நன்கமைதல், செழித்தல், சேர்தல், மதர்த்தல், இலபித்தல்.

வாய்நீர் – உமிழ்நீர்.

வாய்பாடு - வாயில் ஆட்சிப்பட்டு வரும் பேச்சு, குறியீடு, மரபுச் சொல், பெருக்கல் முதலியன காட்டும் அட்டவணை, வழக்கம், சொல்வன்மை.

வாய்போக்குதல் – எளிதில் வாக்குக் கொடுத்தல்.

வாய்ப்பாடம் – ஏடு பாராமற் சொல்லும் பாடம்.

வாய்ப்பிறப்பு – வாய்மொழி.

வாய்ப்பு - சித்தி, சிறப்பு, தகுதி, நயம், பேறு, வளமை, அனுகூல நிலை, நேர்பாடு, நன்கமைந்தது, பொருத்தம், அழகு, செழிப்பு, ஆதாயம், செல்வம்.

வாய்ப்பூட்டு - பேசாமல் தடுத்தல்.

வாய்மலர்தல் – பேசுதல், சொல்லுதல்.

வாய்மை – மெய், சொல், வலி, உண்மை

வாய்மொழி - வாயினாற் சொல்வது.

வாய்விடல் - பேசுதல், வெளி விட்டுத் தெளிவாகச் சொல்லு தல், வெளிப்படுத்துதல், மலர் தல். சத்தமிடுதல், வஞ்சினங் கொள்ளுதல், கொட்டாவி விடுதல்.

வாய்வைத்தல் - ஊதுதல்; சிறிது பயிலுதல்.

வாரம் - அன்பு, உரிமை, இசைப் பாட்டு, ஏழு நாட்கள் கொண் டது, கடல், கரை, சமயம், சிறு வரம்பு, சுரிதகம், தடவை, தடை, திரள், தாழ்வாரம், திரை, தெய் வப்பாடல், நாடகவகை பத்தி னொன்று, நாள், பக்கபாதம், பக்கம், பங்கு, பஞ்சாக்கத்தி னொன்று, பின்பாட்டு, பாத்தி ரம், மலைச்சாரல், வாயில், குடி யிறை, வரம்பு.

வாரி - இசைக்குழல், கடல், கதவு, கலைமகள், சீப்பு, தடை, தானியம், நீர், மடை, மதில், மதிற்சுற்று, மிகுதி, யானை கட் டுங் கயிறு, வழி வாயில், வாரி யென்னேவல், விளைவு, வெள் ளம், வருவாய், தோணிப்பலகை, குப்பை வாருங்கருவி, பகுதி.

வாரியிறைத்தல் - வீணாக்குதல்

வாருகோல் - துடைப்பம்.

வாருதல் - கவர்தல், கொழித் தல், கொள்ளல், திருடல், வரன்றல், வாரல்.

வார்தல் - உயர்தல், ஒழுகல், நீளல், வாருதல், நெடுமையா தல், நேராதல். ஒழுங்குபடுதல், மயிர்கோதுதல்.

வார்த்தல் - வார்க்குதல், ஊற் றுதல், உருக்கிவார்த்தல்.

வார்த்தை - செய்தி, வசனம்,

வார்ப்பு - வார்த்தல்.

வாலவயது - இளவயது.

வாலறிவன் - கடவுள், மெய் யறிவுடையோன்.

வாலறிவு - பேரறிவு, ஞானம், மூதறிவு.

வாலை – இளையது, திராவகம் வடிக்கும் பாத்திரம், பாலப் பருவத்திலுள்ள இருதுவாகாத பெண், சத்தி பேதங்களுள் ஒன்று.

வால் – இளமை, சுத்தம், தோகை, மிகுதி, வெண்மை, தூய்மை, நன்மை, பெருமை, நீளமானது, நீண்டு தொங்கும் உறுப்பு.

வாவி – குளம், நடைக்கிணறு, ஆற்றோடை, நீர்நிலை.

வாழாவெட்டி – கணவனோடு சேர்ந்து வாழப்பெறாதவள்.

வாழிப்பு – மதர்ப்பு, மதர்வு, செழிப்பு, வளமை.

வாழையடி வாழை – இடைய றாது தொடர்ந்து வருஞ் சந்தானம்.

வாழைமலடி – ஒரே பிள்ளை யைப் பெற்றவள்.

வாழ் – முறைமை, ஒழுங்கு, சிரமம்.

வாழ்க்கை – ஊர், செல்வம், மனைவி.

வாழ்க்கைத்துணை – இல்லாள்

வாழ்தல் – சிறந்திருத்தல்.

வாழ்த்தல் – நல்லுரை கூறல்.

வாழ்த்து – ஆசி, துதி, மங்களம் பாடுகை.

வாழ்த்துரை – வாழ்த்து.

வாழ்வாளன்–வாழ்வுடையோன்

வாழ்வித்தல் – வாழச்செய்தல்.

வாழ்விழத்தல் – அமங்கலியா தல், தாரம் இழத்தல்.

வாழ்வு – முறைமை, வாழ்தல், நல்வாழ்க்கை, சீவனம், உறை விடம், உயர்ந்த பதவி, செல் வம்.

வாள் – அரிவாள், ஈர்வாள், ஒளி, பட்டயம், விளக்கம்,

கூர்மை, கொல்லுகை, கொடுமை, கத்தி, கலப்பை, கொழு, கத்தரிகை, கயிறு, நீர், கச்சி.

வானம் - அத்திபாரம், ஆகாயம், உலர்ச்சி, உலர்ந்தது, போதல், மழை, வாசனை, கோபுரத்தினோர் உறுப்பு, உயிரோடிருத்தல், அக்கினி, முகில், மரக்கனி, சுவர்மாடம்.

வானம்பாடி - ஒரு பறவை.

வானம்பார்த்த பூமி - பாசன வழியில்லாது மழையால் விளையும் பூமி.

வானரம் - குரங்கு.

வானவூர்தி - ஆகாய விமானம்.

வானோர் - தேவர்கள்.

வான்மீன் - நட்சத்திரம்.

வி

விகடகவி - பகிடிப்பாட்டு, பரிகாசப்பாடல், ஆசியக்கவி பாடுவோன், விகடக்காரன்.

விகடம் - அழகு, தொந்தரை, பெரியது, வேறுபாடு, வரிக்கூத்துவகை, பயங்கரமானது, பரபரப்பு, மிகுதி, பிராந்தி, ஆசியம்.

விகற்பக்காட்சி - பொருளின் வேறுபாடுகளைக் கண்டறியுங் காட்சி

விகற்பம் - ஐயம், தவறு, பிழை, வேற்றுமை, மனக்கோணல், வேறுபாடு, மனமாறுபாடு, இனம்.

விகற்பித்தல் - வேறுபடுத்தல்.

விகாரம் - அலைந்து திரிதல், கவலை, காமக்கவலை, வேறுபாடு, அவலட்சணம்.

விக்கல் - விக்குதல்.

விக்கிரகம் - உடல், கருங்கல், சாயல். பங்கு, போர், விரிவு, விகுதி, உருவம், கடவுளின் அருச்சனா பிம்பம், பகை.

விக்கினம் - இடையூறு, தடை, தீமை.

விசமம் - சமமின்மை, வைராக்கியம்.

விசயம் - அடைக்கலம், ஆராய்வு, ஐயம், சர்க்கரை, சிவாகமம் இருபத்தெட்டிலொன்று, கதிரவன் மண்டலம், தேவ விமானம், வெற்றி.

விசனம் - மனவருத்தம், துன்பம், அபாக்கியம், கலகம், பாவம், பேராசை, விசிறி, துக்கம், விடாமுயற்சி, தனிமை

விசாகம் - அனிலநாள், வைகாசி

விசாரணை - ஆராய்ச்சி, விசாரிப்பு.

விசாரி - கலக்கமுடையோன், விசாரியென்னேவல்.

விசாரிப்பு - மேல் விசாரிப்புக்காரன், விசாரணை.

விசாலம் - அகலம், ஒரு பறவை, ஒரு மான், கடம்பு, பெரியது, விரிவு.

விசித்திரம் - அதிசயம், எதிர்ப்பேச்சு, பலநிறம், பேரழகு, வேடிக்கை, வேலைப்பாடு, பலதிறப்பட்டது, இறுமாப்பு, மேன்மை.

விசிறுதல் - வீசுதல், விசிறியால் காற்றெழுப்புதல், வலை முதலியவற்றை விரித்தெறிதல், சொரிதல், போக்குதல்.

விசும்பு - ஆகாயம், திசை, தேவலோகம், முகில், வீம்பு.

விசுவரூபம் - உலகமெல்லாம் அடங்கிய பெருவடிவம்.

விசுவாசம் - உண்மை, நம்பிக்கை, பக்தி, அபிமானம், சிரத்தை, தெய்வநம்பிக்கை,

விசுவாசி - வேங்கை, நம்பிக்கையுள்ளவன், நாய், செய்நன்றி மறவாதன்.

விசுவாசித்தல் - நம்புதல்.

விசேடம் - சிறப்பு, மேன்மை, வகை, விசேட அலங்காரம், விதம், வித்தியாசம்.

விசை - தரம், பொறி, முறை, வலிக்கை, விசையென்னேவல், விரைவு, வேகம், நீண்டு சுருங்குந் தன்மை, பலம், யந்திரம், பக்கம், பற்றுக்கோடு, மரவகை

விசைக்காற்று - செல்லும் விசையினால் உண்டாகுங் காற்று.

விஞ்ஞாபனம் - விண்ணப்பம்.

விஞ்ஞானம் - அறிவு, வாத்தியம், வேலை, உண்மையறிவு, சிவபிரானது ஞானசத்தி.

விடங்கு - அழகு, அணி.

விடம் - நஞ்சு, அதிவிடையம், எத்து, தாமரை நூல், தேள், நீர், மலை, பாஷாணம், கேடு விளைவிப்பது, தூர்த்தத்தனம்.

விடலை- ஆண்மகன், இளவாண் பொது, திண்ணியன், பாலை நிலத்தலைவன், மணவாளன், 16 வயதிலிருந்து முப்பது வயதிற் குட்பட்டவன், வீரன், பெருமையிற் சிறந்தேன்.

விடாக்கண்டன் - பிடிவாதமாக நின்று ஒன்றை நிறைவேற்றுபவன்.

விடாய் - ஆசை, சோர்வு, தாகம், களைப்பு, விடுமுறை நாள்.

விடாய்ப்பு - தாகம்.

விடிதல் - அனுகூலமாதல்.

விடியல் - வைகறை, விடிகாலை, வயிற்றுப்போக்கு.

விடியற்காலம் - வைகறை, விடியற்புறம்.

விடிவெள்ளி - பின்னிரவில் தோன்றும் சுக்கிரன்.

விடுகதை - நொடி.

விடுதலை - இட்டம், தன்னிட்டம், நீக்குதல், முடிவு, விடுந் தலைப்பு, ஒய்வு, பந்த நீக்கம்' சுதந்திரம்.

விடுதல் - அனுப்புதல், எறிதல், ஒழிதல், நீக்கல், நீங்குதல், விலக்குதல், பிரித்தல், பந்தம் விடுத்தல், நிறுத்துதல், வெளிவிடுதல், சொரிதல், கொடுத்தல், சொல்லுதல், வெளிப்படக் கூறுதல், பிதிர்தல்.

விடுதி - ஆறியிருத்தல், உத்தரவு, தங்குமிடம், விடுதலம், தனித்து.

விடுத்துவிடுத்து - அடிக்கடி, துருவித்துருவி.

விடுப்பு - ஆராயுங்குணம், பூராயம், வேடிக்கை, விநோதமானது, நீக்கம், விருப்பம்.

விடுமுறை - ஓய்வு நாள்.

விடை - இடபம், இடபஇராசி, எதிர்மொழி, எருது, குதிரை, வருத்தம், வலிமை, விடுதல், உத்தரம், அனுமதி, விடைக்கோழி, அசைவு, மிகுதி, எருமைக்கடா, இளம்பாம்பு.

விடை கொடுத்தல் - உத்தரவு கொடுத்தல்.

விடைதல் - அபராதஞ் செலுத்துதல், கோபம், சினம், பிரிதல், பிளத்தல், கோபங்கொள்ளுதல்.

விடைத்தல் - மிகுதல், தடுத்தல், வருத்துதல், சினத்தல், பிரித்தல், குற்றப்படுத்துதல்.

விட்டில் - ஒரு பறவை, ஒரு வண்டு, நாட்டுக்குற்றம் ஏழில் ஒன்று, வெட்டுக்கிளி, சிறு பூச்சிவகை, கொலை.

விண் - வானம், மேலுலகம், முகில்.

விண்ணப்பம் - மன்றாட்டம், பெரியோர்முன் பணிந்துகூறும் அறிவிப்பு, மனு, கடவுள் திருமுன்பு பாசுரம் முதலியன ஓதுகை.

விண்ணாங்கு - ஒருவகை மரம்.

விண்ணாணம் - இடம்பம், நாணம், நாகரிகம், விஞ்ஞானம்.

விண்ணோர் - தேவர்.

விதப்பு - அதிசயம், விரைவு, நடுக்கம், மிகுதி, சிறப்பித்து எடுத்துச் சொல்லுகை, விவரம், ஆசை.

விதவை - கைம்பெண், குழம்பு, கூழ், சோறு.

விதானம் - இளைப்பாற்றி, உபாயம், ஒழுங்கு, ஒரு பண், கற்பனை, குவியல், கூட்டம், சாரமின்மை, செயல். மந்தம், மாதிரி, முறைமை, வணக்கம், வன்மம், விகுதி, விடுதி, விதம், விரிவு, ஏற்பாடு, ஊழ், தொகுதி, பயனின்மை, ஒய்வு.

விதி - அறிவு, உண்மை, ஊழ், கட்டளை, காலம், குணம், சூத்திரம், செய் தொழில், செல்வம, நியமிப்பு, நான் முகன், மெய். விதம், விதி யென்னேவல், வேதாகமமுறை, சட்டம், தீர்ப்பு, கடமை, ஒழுக்க முறை, புண்ணியப் பயன்.

விதித்தல் - உண்டாக்கல். சொல்லல், செய்தல், நியமித் தல், செய்யுமாறு ஏவுதல், தண்டம் முதலியன அமைத் தல், ஏற்படுத்துதல்.

விதிமுறை - நெறிப்படி.

விதிர்த்தல் - அசைத்தல், அஞ்சு தல், நடுங்கல், சிதறுதல், சொரி தல், தெறித்தல், உதறுதல்.

விதிர்ப்பு - அச்சம், நடுக்கம்.

விதிவிலக்கு - முறையினின்றும் நீக்குகை.

விதை - அறிவு, புத்தி, பெருமை, விதையென்னேவல், வித்து

விதைநெல் - விதைப்பதற்காக வைக்கப்பட்ட நெல்மணி.

வித்தகர் - அறிஞர், கம்மாளர், தூதர், பெரியோர், சதுரப்பா டுள்ளவர், மேலோர், பொருள் கொடுப்போர்.

வித்தியாகரன் - அறிஞன்.

வித்தியாசம் - வேறுபாடு.

வித்தியாதானம் - படிப்பித்தல்

வித்து - விதை, வித்தென்னே வல், விந்து, சந்ததி, வமிசவழி, சாதனம், காரணம்.

வித்தை - கல்வி, உண்மை, ஞானம், தந்திரத் தொழில் மாசாலம், வித்தியா தத்துவம், ஏழில் ஒன்று, இச்சாசத்தி.

விநயம் - கட்டளை, தருமம், நன்னடை, மரியாதை, வணக்கம், நயமொழி, ஒழுக்கம், பணிவு, அவையடக்கம், உபாயம்.

விநாடி - கால நுட்பம்.

விநியோகம் - பிரித்து வழங்கு தல், உபயோகம், கடவுளின் பிர சாதத்தைப் பலர்க்கும் வழங் குகை, செலவு.

விநோதம் - அவா, அழகு, தள் ளுதல், தொழில் பகை, மகத் துவம், மகிழ்ச்சி, விளையாட்டில் பொழுது போக்கல்.

விந்து - குறி, தாது, நீர்த்துளி, நெற்றித் திலகம், புருவத்தின்நடு, புள்ளி, வட்டம், பொட்டு, சுக்கி லம், துளி, பாதரசம், சுத்த மாயை.

விந்தை - அழகு, கல்வி, துர்க்கை, வியப்பு, சாலவித்தை, வீரலெட்சுமி, பார்வதி, இலக் குமி, வேடிக்கை, ஓரகத்தி.

விபகரித்தல் - வழக்குச் சொல் லல்.

விபசாயம், விவசாயம் - பயிர்த் தொழில்.

விபசாரம் - தீய நடத்தை, சோரம் போகை.

விபரம் - விரிவு.

விபரீதம் - மாறுபாடு, வியப்பு.

விபுணன் - சிறந்தோன், வெற்றி யையுடையோன்.

விபூதி - செல்வம், திருநீறு, அட்டமாசித்தி, சாம்பல்.

விமரிசம், விமரிசனம் – ஆராய்வு, கேள்வி, பாவனை, யூகம்.

விமலம் – அழகு, அழுக்கின்மை, சிவாகமம் இருபத்தெட்டில் ஒன்று, வெண்மை, பரிசுத்தம், தெளிவு.

விம்பம் – உருவம், ஒளி, கொவ்வை, சந்திர சூரியர்களின் மண்டலம், சாயை, சிவாகமம் இருபத்தெட்டில் ஒன்று, நிழல், வட்டம், வடிவம், விக்கிரகம்.

விம்மல் – அழுதல், இறுகிப் பொலிதல், ஏங்கல், ஒலித்தல், கலக்கம், பருத்தல், மகிழ்ச்சி, தேம்பியழுகை, துன்பம், வீங்குகை, உள்ளப் பூரிப்பு, யாழ் நரம்போசை.

வியத்தல் – அதிசயப்படல், போற்றல், நன்கு மதித்தல், பாராட்டல்.

வியப்பு – அதிசயம், மெய்ப்பு.

வியர்ப்பு – சினம், வியர்வை.

வியாக்கியானம் – பேருரை.

வியாசம் – உவமை, கட்டுரை, தந்திரம், தரும நூல் பதினெட்டினொன்று, பகுக்கை.

வியாதி – நோய்.

வியாபகம் – எங்குமிருப்பது, சாதாரணம், சுயதன்மை, வியாபித்தல்.

வியாபாரம் – வணிகம்.

வியாபித்தல் – எங்குமிருத்தல்.

வியோகம் – சாவு, பிறவி நீக்கம்.

விரகதாபம் – காமவருத்தம்.

விரசம் – நிந்தை, வெறுப்பு.

விரட்டுதல் – மிரட்டுதல், பயமுறுத்துதல், துரத்துதல். அவசரப்படுத்துதல்.

விரதம் – ஆணை, காமநோய், அருவருப்பு, நோன்பு. ஒழிகை.

விரதம் பிடித்தல் - பட்டினி கிடத்தல்.

விரயம் - மிகு செலவு.

விரிதல் - அகலுதல், அலர்தல், ஒளி செய்தல், பரவல், விசாலித்தல், பரத்தல், மலர்தல் முற்றுதல், அவிழ்தல், பிளவு கொள்ளுதல்.

விரியல் - ஒளி, பரவல், மலர்தல், விரிந்தது.

விரிவு - அகலம்.

விருட்சம் - மரம்.

விருது - அடையாளம், கொடி, வமிசம், விரதம், வெற்றி.

விருத்தம் - அறிவு, ஆமை, ஒவ்வாநியாயம், ஒவ்வாமை, ஓரளவைப் பிரமாணம். கடினமானது, கிழத்தன்மை, குவியல், கூட்டம், சிற்பநூல் முப்பத்திரண்டில் ஒன்று, சூதுதாயத்தொன்று, சூழ்ந்தது, செய்தி, தடை, தெரிந்து கொள்ளப்பட்டது, தொழில், நடக்கை, நூதனம், படித்தது, பழைமை, பாவினத்தொன்று, பெருமையுடையது, பெலன், விருத்தாந்தம், வெறுப்பு, வேறுபாடு, முரண், குற்றம், விருத்தி

விருத்தாந்தம் - இளைப்பாற்றி, கதை, காரியம், சுபாவம், செய்தி, முழுமை, வரலாறு.

விருத்தி - இலாபம், ஏறுதல், ஒழுக்கம், ஓரலங்காரம், ஒருரை, குவியல், கூட்டம், சித்தி, செல்வம், தரித்தல், தொழில், தொண்டு, இனாம், நிலம், விவரம், வளர்ச்சி, சீவனம், விரிவுரை.

விருந்தினன் - விருந்தாளி, புதியவன், அதிதி.

விருந்து - புதுமை, உணவளித்துப் போற்றுதல், விருந்துண்போன்.

விருந்தோம்பல்– வேளாண்மை, மாந்தர் இயல்பில் ஒன்று, புதி தாய் வருபவரை உண்டி முத லியவற்றால் உபசரிக்கை.

விருப்பம் - ஆசை.

விருப்பின்மை – அவாவின்மை.

விருப்புவெறுப்பு – வேண்டுதல் வேண்டாமை

விரைதல் – விரைவு, விரைவு செய்தல், வெயில். வேண்டல், முற்படுதல், மனங்கலங்குதல்.

விரைவு – வேகம், வெம்மை, உபசாரம், வேண்டுதல்.

விரோதம் – மாறுபாடு, எதிர், ஒவ்வாமை, பகை, போர். வன்மம், வேற்றுமை.

விரோதித்தல் – பகைத்தல்.

விலக்கம் – மாற்றம், விலகியி ருக்கை, மாதவிடாய். ஊரை விட்டு நீங்குகை.

விலக்கற்பாடு – ஒழிவு, கழிவு• விலக்கு, தவிர்வு.

விலக்கு – தவிர்ப்பு, மறிப்பு, வழு, விலக்கென்னேவல்.

விலங்கு – தடை, மாட்டப்படும் தளை, மிருகம், விலங்கென் னேவல், வேறுபாடு, குன்று, குறுக்கானது, மாவும் புள்ளும், மான்.

விலங்குதல் – எறிதல், துலங் கல், விலகல்.

விலங்குநர் – தடுப்போர்.

விலா – பழு.

விலாங்கு - ஒருவகை மீன்.

விலாசம் – அழகு; நாணக் குறிப்பு; பத்திரிகையின் புறவெ ழுத்து; பொழுதுபோக்கு; விளை யாட்டு: வினோதம்; வேடிக்கை; கூச்சம்; நாடகநூல்; முகவரி: வியாபாரக்குறி; வாழை; தீபம்.

விலை – கிரயம்; விற்றல்.

விலைபோதல் – கிரயமாதல்.

விலைப்படுத்தல் – விற்குதல்.

விலைப்பட்டி – விலைக்குறிப்பு; விற்பனைக் கணக்கு.

விலைப்பண்டம் – விலைப் பொருள்.

வில் – ஒளி; சேரன்கொடி; தனு; மூலநாள்; வில்லென்னேவல்.

வில்லங்கம் – தடை; பலபந்தம்: முட்டு; வியாச்சியம்; துன்பம்.

வில்லாண்மை – வில்லாற்றல்.

வில்வம் – வில்வ மரம்.

விவகரித்தல் – நியாயஞ் சொல்லுதல்.

விவகாரம் – வழக்கு; பிணக்கு; தொழில்; வளமை

விவசாயம் – தொழில்; முயற்சி; வேளாண்மை.

விவரணம் – விபரம்.

விவரம் – உட்டுளை; குகை; குறை; பிரிவு; வகை; விருத்தாந்தம்; துவாரம்; இடைவெளி; வரலாற்றுக் குறிப்பு; விவேகம்.

விவரித்தல் –பகுத்துச்சொல்லல்

விவாகம் – மணம்.

விவாதம் – சொற்போர்.

விவேகம் – ஆராய்வு; பகுத்தறிவு: புத்தி; மனக்கூர்மை.

விவேகி – சூரியன்.

விழலுக்கிறைத்தல் – வீண் பாடுபடுதல்.

விழா – திருவிழா; மங்கலச் சடங்கு.

விழி – கண்; கண்மணி; விழியென்னேவல்; மிண்டை.

விழித்தல் – பார்த்தல்; உருட்டிப் பார்த்தல்; கண் திறத்தல்

விழிபிதுங்குதல் – வேலை மிகுதியால் வருந்துதல்.

விழிப்பு – எச்சரிக்கை: துயிலொழிவு; தெளிவு; செய்வது தெரியாமல் திகைத்தல்.

விழுக்காடு – குறைவு; வீதம்; தூக்கம்; வசக்கேடு; விதம்;

வீழ்கை; கீழ்நோக்கான பாய்ச்சல்; பங்கு; தற்செயல்: மேல் வருவது.

விழுதல் - சாதல்; வீழல்.

விழுது - ஆல் முதலியவற்றின் விழுது: வேர்த்தொகுதி; ஆழம் பார்ப்பதற்கான கயிறு; நிணம்; நெய்வார் கருவியின் உறுப்பு: இறுகிக் கட்டியான நெய்; வெண்ணெய்.

விழுப்புண் - போரில் முகத்திலும் மார்பிலும் பட்டபுண்.

விழுமியோர் - பெரியோர்.

விழைதல் - அவாவுதல்; புணர்தல்; விரும்புதல்; ஒத்தல்; நன்கு மதித்தல்; நெருங்கிப் பழகுதல்

விளக்கம் - தெளிவு

விளக்கு - இருளைப் போக்கும் ஒளிவிளக்கு; ஒளி; சோதிநாள்; விளக்கென்னேவல்.

விளக்குதல் - விளக்கல்; பிரசித்தப்படுத்துதல்; சுத்தமாக்குதல்: துலக்குதல்; துடைப்பத்தாற் பெருக்குதல்.

விளத்துதல் - விவரித்தல்; விலக்குதல்.

விளாப்பு - பிறருக்குப் பங்கில்லாதது.

விளி - அழைப்பு; எட்டாம் வேற்றுமை; ஏழிசையின் ஒன்று; கொக்கரிப்பு; கூப்பிடு.

விளித்தல் - அழைத்தல்; சொல்லுதல்; அழித்தல்; பேராரவாரஞ் செய்தல்.

விளிம்பு - அருகு; கண்ணிமை; கரை; ஓரம்.

விளைதல் - உண்டாதல்.

விளையாட்டு - பொழுதுபோக்கு

விளைவித்தல் - விளையச் செய்தல்.

விளைவு - பயன்; மேகம்; வயல்; முதிர்ச்சி; கருத்தோற்றம், விளைகை; முதுகை; பழம்; கைகூடுகை; ஆக்கம்; நிகழ்ச்சி.

விளைவுகாலம் - தானியம் விளைந்திருக்குங் காலம்.

விறகு - எரிகட்டை; கறல்; சமிதை

விறுவிறுத்தல் - கொதித்தல்.

விறைத்தல் - மரத்துப் போதல்; பிரமித்தல்; குளிர் முதலியவற்றால் நடுங்குதல்; கருவங்காட்டுதல்.

விறைப்பு - திமிர்; பிரமிப்பு; முறைப்பு.

வினாவுதல் - கேள்வி கேட்டல்.

வினாவெழுத்து - வினாப் பொருள் தரும் எழுத்து; எ ஏ யா முதல்நிலை வினா; ஆ ஏ ஓ கடைநிலை வினா.

வினியோகம் - ஈதல்.

வினை - இரண்டு; ஊழ்; கருத்து; கள்ளம்; தொழில்; போர்; வஞ்சகம்; செய்தற்குரியது; பரிகாரச் செயல், தீச் செயல்: முயற்சி; தந்திரம்; தொந்தரவு.

வினைச்சொல் - இடம் கருவி கருத்தா செய்யப்படு பொருள் செயல் காலம் எனும் இவைகளை விளக்கி நிற்குஞ் சொல்.

வினைஞர் - கம்மாளர், கூத்தர், சூத்திரர், செயலாளர், மருத நிலமாக்கள், தொழில் செய்வோர்

வினைப்பயன் - முன் வினைப் படி வந்த பலன்.

வினைப்பெயர் - தொழிற் பெயர்.

வினையாளர் - ஏவல் செய் வோர், ஒரு தொழிலில் தலைப் பட்டோர்.

வினோதம் - அவா, அழகு, எதிரிடை, தள்ளுதல், தொழில், பொழுதுபோக்கல், மகத்துவம், மகிழ்ச்சி, விளையாட்டு, இயற்கைக்கு மாறானது.

விஷமம் - தீச் செயல், குறும்பு.

விஷயம் - புலன், சிறப்பியல்பு, செய்தி.

வீ

வீ - ஓரெழுத்து, கருப்பந்தரித்தல், சாவு, கொல்லுதல், நீக்கம், பறவை, பூ, போதல், விரும்புதல், வீயென்னேவல், மகரந்தம்

வீக்கம் - ஒருநோய், ஆசை, கட்டு, பூரிப்பு, மிகுதல்; வீங்குதல், பருமை, புண் முதலியவற்றின் புடைப்பு. செருக்கு, இடையூறு, மூடுகை, இறுக்கம்.

வீங்கல் - உறங்கல், பருத்தல், மிகுதல், வீக்கம், வீங்கலால் ஏக்கங்கொளல்.

வீசம் - அவசியம், ஒரெண், ஒரு கணிதம், ஒரு மந்திரம், கொட்டை, சத்தியம், சுக்கிலம், நெல்லிடைப் பொன், மாகாணி, முளை, மூலம், விதை, மூளை.

வீசுதல் - வீசல், எறிதல், அடித்தல், வரையாது கொடுத்தல், களைதல், செய்யாதொழிதல், காற்று முதலியன அடித்தல், துர்நாற்றம் அடித்தல்.

வீஞ்சுதல் - மிகுந்த விலை கேட்டல்.

வீடு - ஒன்று, மனை, மோட்சம், விடுதல், வீடென்னேவல், வினை நீக்கம், முடிவு.

வீட்டுக்கு விலக்கு - மகளிர் மாதவிடாய் வீட்டுக்குத்தூரம்.

வீட்டுவேலை - குடும்பவேலை, வீடு கட்டுந் தொழில்.

வீணை - ஓசையாழ், கலைஞானம், அறுபத்து நான்கினொன்று, மின்னல்.

வீண்செலவு - பயணற்ற பணச் செலவு.

வீண்சொல் - பயனில் சொல்.

வீண்பாடு - பயனற்ற வேலை, பயனற்ற முயற்சி.

வீதம் - அவிழ்த்துவிடப்பட்டது. இட்டமானது, சமாதானம், பங்கு, முறை, விதம், வேறு வேறாய்ப் பகுத்த பகுப்பினளவு.

வீதி - ஒழுங்கு, கடைவீதி, குதிரை, சுத்திபண்ணல், தெரு, நாடகவகை பத்தினொன்று, நேரோடல், பிரபை, மேடை, வரி, வழி, விசாலம், வையாளி வீதி.

வீரசுவர்க்கம் - இறந்தவீரர் அடையும் சுவர்க்க பதவி, துறக்க நிலை.

வீரதத்துவம் - வீரத்தன்மை.

வீரப்பாடு - வெற்றி.

வீரம் - ஒரு மருந்து, கஞ்சி, சிவாகமம் இருபத்தெட்டினொன்று, பெலன், மலைமிளகு, மேன்மை, வலி, வீரத்தனம், வீரியம்.

வீரம் பேசுதல் - தன் வல்லமையைத் தானே புகழ்தல், ஆண்மைத் திறங்கூறுதல்.

வீரன் - அருகன், ஓமாக்கினி, கூத்தாடி, திண்ணியன், தீ, வீட்டுமாசாரி.

வீராதிவீரன் - மிகுவீரன்.

வீராவேசம் - வீரவெறி.

வீரியம் - சுக்கிலம், தைரியம், பறைப்பொது, பிரபை, மகத்துவம், வலி, விந்து, வீரம்.

வீழ்தல் - விருப்பு, விரும்புதல், ஆசைப் பெருக்கங், மேவல், விழுதல், நீங்குதல்.

வீழ்த்தல் - விழச்செய்தல், வீணாகக் கழித்தல், தாழவிருத்தல்.

வீழ்நாள் - இழந்த நாள், பயனற்ற நாள்.

வீறாப்பு - இறுமாப்பு. சினப்பு.

வீறு - ஒளி, தனிமை, நல்வினை, பெருமை, மருந்துச்சத்து, விளக்கம், வீறுதல், வீறென்னேவல், வெறுப்பு, வேகம், பகுப்பு, வெற்றி.

வீற்றுவீற்று - வெவ்வேறு.

வெ

வெஃகல் -- ஆசைப் பெருக்கம், விரும்பல், மிகு விருப்பம், பேராசை.

வெகுசனம் - சனக்கூட்டம்.

வெகுட்சி - சினம், கோபம், வெகுளி.

வெகுமதி - நன்கொடை.

வெகுமானம் - வெகுமதி, பாசாங்கு, பெருமதிப்பு, உபசாரம்.

வெகுளாமை - சினவாமை.

வெகுளி - சினம். வெறுப்பு.

வெஞ்சினம் - கடுஞ்சினம்.

வெடி - அச்சம். இடி, கள். துப்பாக்கி முதலியவற்றில் பிறக்கும் ஒலி, நறுமணம், நறும்புகை, புகை, வெடியென்னேவல், வெளி.

வெடிபடுதல் - அஞ்சுதல், பேரோசையுண்டாதல், சிதறுதல், சூடுபடுதல்.

வெடித்தல் - பிளத்தல், விள்ளுதல்.

வெடுவெடுத்தல் - கடுமையாயிருத்தல்.

வெட்கக்கேடு - மானபங்கம்.

வெட்டல் - கொலைசெய்தல், தறித், நால்வகை ஊறுபாட்டினொன்று, வெட்டுதல்.

வெட்டவெளி - வெளியரங்கம், திறந்த வெளியிடம்.

வெட்டிச்சோறு - தண்டச் சோறு.

வெட்டிப்பயல் - வீணன்.

வெட்டிப்பேசல் - கண்டித்துப் பேசுதல்.

வெட்டிப்பேச்சு - வீணுரை.

வெட்டிரும்பு - இரும்பு வெட்டும் உளி.

வெட்டு - ஓர் ஊறுபாடு, துண்டிப்பு, எழுத்து முதலியன பொறிக்கை, மயிர்வெட்டுகை.

வெட்டுதல் - தோண்டுதல், தானிய அளவில் தலைவழித்தல், தலைமயிரைக் கத்தரித்தல், துணி முதலியன துண்டித்தல், மறுத்துரைத்தல், கடிந்து பேசுதல், ஆட்டக்காயைப் பயனற்றதாக நீக்குதல், வெட்டல், சீட்டு வெட்டுதல்.

வெண்கலம் - நாள், செம்பும் வெள்ளீயமும் கலந்து உருக்கி உண்டாக்கும் கலப்புஉலோகம்.

வெண்கவி - பொருளாழம் இல்லாத பாட்டு, வெண்பா.

வெண்பதம் - இளம்பதம்.

வெண்புழுக்கல் - இளம் புழுக்கல், இளம்புழுங்கலரிசி, வெண் சோறு,

வெண்மை - அறிவின்மை, இளமை, வெள்ளை.

வெதுப்பு - சுரம், வெதுப்பென் னேவல், வேம்பு.

வெப்பம் - ஆசை, மனத்துயர், சூடு.

வெப்பு - ஒருநோய், மனத்துன்பம், வெம்மை, கொடுமை, தொழுநோய்

வெயில் - ஒளி, கதிரவன், கதிரவன் ஒளி, வெம்மை.

வெய்யில் - கதிரவன், ஒளி, ஞாயிறு.

வெருட்சி - அச்சம், மயக்கம், மருட்சி.

வெருட்டல் - அச்சுறுத்தல், மயக்கல், வேகமாகச் செல்லத் தூண்டுதல்.

வெருட்டு - அச்சுறுத்தல், வெருட்டென்னேவல்.

வெருவலர் - பகைவர், மேவலர், ஒன்னார்.

வெருளி - அச்சமுடையது, வெருட்சி.

வெருள் - அச்சம், வெருளென்னேவல், உன்மத்தம், மயக்கம், பயம், மனக்கலக்கம், மனந்திகைத்தல்.

வெருள்வு - வெருட்சி.

வெலவெலத்தல் - களைத்தல், கைகால் உதறுதல், வியத்தல்.

வெல்லல் - வெற்றியடைதல், வெல்லுதல்.

வெல்லுதல் - வெற்றி கொளல், ஒத்தல், ஒழித்தல்.

வெவ்வியன் - சினமுடையோன்

வெவ்வினை - தீவினை, போர்.

வெவ்வுயிர்த்தல் - பெருமூச்செறிதல்.

வெவ்வேறு - வேறுவேறு.

வெளி - ஆகாயம், புறம், மறைப்பில்லா வெளி.

வெளித்தோற்றம் - உள்ளொன்று புறம்பொன்றாயிருப்பது.

வெளிகொடு - வெளியே, வெளிப்படையாய்.

வெளிச்சாடை - வெளிப்பகட்டு, வெளித்தோற்றம்.

வெளித்தல் - தெளிதல், விளங்குதல், வானம் வெளிவாங்குதல், வெறிதாதல், வெளிப்படையாதல், சூழ்ச்சி முதலியன வெளியாதல், விடிதல்.

வெளிப்படுத்தல் - அறிவித்தல்.

வெளிப்பாடு - காணிக்கை, தோற்றம். வெளிப்படுதல்.

வெளிப்பு - விளக்கம், வெளியிடம், வெளித்தல், வெளிப்புறம், விளக்கமாதல், தெளிவு, வெளியானது

வெளியாடை - தோரணம், புறவுடை.

வெளியார் - அறிவிலார். புறம்பானவர், அயலார்.

வெளிவேடம் - புறக்கோலம்.

வெளுத்துவாங்குதல் - மிக நன்றாகச் செய்தல்.

வெளிறு - அறிவின்மை, நறுவல்லி, வயிரம் இல்லா மரம், வெண்மை, பயனின்மை உள்ளீடின்மை, நிறக்கேடு, இளமை, குற்றம்.

வெளுத்தல் - வெள்ளையாக்கல்.

வெள்ளம் - ஒரு பேரெண், கடல், நீர்ப்பெருக்கு, மிகுதி, உண்மை, ஈரம்.

வெள்ளறிவு - அறிவின்மை.

வெள்ளாண்மை - பயிர்த் தொழில்.

வெள்ளி - வெண்பொன், சுக்கிரன்.

வெள்ளிடை - விண், தெளிவு, வெளியிடம்.

வெள்ளிமலை – கைலைமலை.

வெள்ளெழுத்து – எழுத்துப் பார்க்வைக் குறை,

வெள்ளை – ஆழமான கருத்தில் லாதது, சங்கு, சுண்ணாம்பு, பல பத்திரன், மேற்கட்டி, வெட்டை. வெண்பா, வெண்மை. வெள் ளாடு, வெள்ளாட்டுமறி, வெள்ளி. வேங்கை.

வெள்ளைக் கமலத்தாள்-கலை மகள்.

வெள்ளைக் காகிதம் – வெண் மையான கடுதாசி, எழுதாத கடுதாசி.

வெள்ளைத் தமிழ் – எளிய நடையில் அமைந்த தமிழ்.

வெள்ளோட்டம் – ஒன்றினைப் பயன்படுத்துவதற்கு முன் செய் யும் பரீட்சை.

வெள்ளோலை எழுதாத ஓலை

வெறி - அச்சம், ஆடு, கலக்கம், கள், சினம், விரைவு, நாற்றம், பிசாசம், வட்டவடிவு, நோய், வெறியென்னேவல், வேலனா டல், வெறியாட்டு மயக்கம், மணம்.

வெறிப்பு - பஞ்சம், மயக்கம், வெறித்தல், வெறுமைத்தன்மை, கண் கூச்சம்.

வெறுத்தல் - சினத்தல், பகைத் தல், மறுத்தல். வேண்டாமை.

வெறுப்பு - அச்சம், கலக்கம், சினம், செறிவு, துன்பம், வேண் டாமை.

வெறுமை - ஒன்றுமின்மை, பய னின்மை, அறியாமை.

வெற்றிலை - தாம்பூலம்.

வே

வே - ஓர் எழுத்து, வேயென்னே வல், வேவு.

வேகம் - கடுமை, கதி, சினம், சுக்கிலம் தீவிரம்.

வேங்கை – ஒரு மரம், புலி, பொன்மலை.

வேசி – வணிகன், விலைமகள்.

வேடிக்கை – கோலம், விளையாட்டு.

வேடை – காமநோய், தாகம், வெப்பம், மரக்கலம், வேட்கை, மழையில்லாக்காலம், வணிகர் தெரு.

வேட்கை – பற்றுள்ளம்.

வேட்டி – சோமன், புடைவை.

வேண்டாமை - வெறுப்பு.

வேண்டாவெறுப்பு - பகை வேண்டாம் என்ற எண்ணம், விருப்பில்லாமை

வேண்டுதல் – வாங்குதல், வேண்டிக்கேட்டல்.

வேதநாதன் – கடவுள், நான்முகன்.

வேதமார்க்கம் – வைதிகம்.

வேதம் - சமய முதனூல், மறை, அறிவு, ஆழம்.

வேதனம் – அறிவு, ஒரு சடங்கு, கூலி, சம்பளம், சீவனம், துளைத்தல், வேதம், வேதனை.

வேதனை – அலைத்தல், நோய், துன்பம்.

வேதாகமம் – வேதம்.

வேதாந்தம் – உபநிடதம், அத்துவைதம்.

வேதாளம் – பெரும்பேய்.

வேந்தன் - அரசன், இந்திரன், சந்திரன், சூரியன், வியாழன்.

வேம்பு - வேப்பமரம்.

வேய்தல் – அணிதல், அலங்கரித்தல், சூடுதல், மாடம், மூடுதல், வீடு சூழ்தல், பொருந்துதல், மலர்தல்.

வேர் - காரணம், சினம், மூலம், வேரென்னேவல், வேர்வை, தாவர நிலப்பாகம்.

வேர்க்கொம்பு - இஞ்சி, சுக்கு.

வேர்த்தல் - மனம் புழுங்கல், வியர்வை விடுதல்.

வேர்வை - வியர்வை.

வேலன் - முருகன், வெறியாட்டாளன்.

வேலாயுதம் - வேல்.

வேலி - ஊர், ஐந்து காணி நிலம், காவல், மதில், பசுக் கொட்டில், ஓசை, காற்று.

வேலை - இளைப்பாற்றி, எல்லை, கடல், கடற்கரை, கரை, காலம், செய்பொருள், தொழில், நிகழ்காலம், நோய், பணி, பொழுது.

வேலைநாணயம் - வேலையில் நேர்மை, செய்யப்படும் வேலையின் மேம்பாடு.

வேளாண்மை - ஈகை, உபகாரம், கொடை, பூவைசியம், நெய், பயிர் செய்யும் தொழில்.

வேளாளர் - ஈகையாளர். பூவைசியர்.

வேள்வி - ஆராதனை, ஈகை, ஓமகுண்டம், மகநாள், யாகம்

வேள்விக்குண்டம் - ஓமகுண்டம்.

வேறாதல் - பிரிதல்.

வேறுபடுதல் - பிரிதல்.

வேறுபாடு - விகற்பம், வேறுபடல்.

வேற்றுமை - பதங்கள் புணரும் இருவகைச் சந்தியுள் ஒன்று, அஃது எழுவாய் முதலிய உருபுகள் பொருந்தி நிற்பது, வேறுபடல், வேற்றுமையணி.

வேனில் - கோடை.

வேனிற்காலம் -கோடைகாலம்.

வை

வை - ஓர் எழுத்து, கூர்மை, புல், வைக்கோல், வையகம், வையென்னேவல்.

வைகறை - விடியல் முதல் பத்து நாழிகை அளவு காலம், விடியற் காலம்.

வைணவர் - திருமாலை வழிபடுஞ் சமயத்தினர்.

வைதல் - இகழ்தல், ஏசல், பழித்துரைத்தல்.

வைதிகம் - வேதநெறிப்பட்டது

வைத்தியம் - பரிகாரம்.

வைபவம் - வரலாறு, பெருமை.

வைபோகம் -மகிழ்ச்சி, சீர்மை, விமரிசை, விவேகம், வயனம்.

வைப்பு - இடம், ஊர், உண்டாக்கல், பெருமை, வைத்தல், புதையல், நிலப்பகுதி, சூனியம், வைப்பாட்டி.

வைப்பு - சேமநிதி, புதையல், நிலப்பகுதி, உலகம், சூனியம், செயற்கை.

வைரம் - நவமணியில் ஒன்று, பகை, விரோதம், வீரத்தின் தன்மை, வாய்ச்சியப்பொது.

வைராக்கியம் - பகை, வெறுப்பு, அவாவற்றிருத்தல், விடாப்பிடி, மதவேசம், நிராசை.

வௌ

வௌவல் - கொள்ளையிடல், திருடல், பிடித்தல், வாருதல்.

வௌவால் - ஒரு பறவை, இதற்குப் பல்லிருத்தலால் விலங்கினத்தில் ஒன்றென்பாரும் உளர்

வௌவுதல் - கைப்பற்றுதல், ஆறவைத்தல், திருடுதல், கவர்தல், பாவம் பேய் முதலியன பற்றிக் கொள்ளுதல், மேற்கொள்ளுதல்.



NAG

ART

SC

DRAWIN

PRODUCT O

TIC

BOOK

CO